# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)
# தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி

## தரம் - 13

## ஆசிரியர் வழிகாட்டி

**(2010 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**

சிங்களமொழித் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**தொடர்பாடல் மற்றும் ஊடகக்கல்வி**
**தரம் 13 - ஆசிரியர் வழிகாட்டி**

© **தேசிய கல்வி நிறுவகம்**
முதற் பதிப்பு 2014

ISBN

ஊடகக் கல்விச் செயற்றிட்டம்
சிங்களமொழித் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**பதிப்பு:** வரையறுக்கப்பட்ட அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பாணலுவ, பாதுக்கை

# கற்றலும் கற்பித்தலும்

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்ளின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பிணியினை அகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல்/ கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைசெயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்யூசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.
  அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்
  செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களை பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்டுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தை எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்ததலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் /தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் (உளப்பாங்கு (Att tute), பகுப்பாய்வு (Anolysis), செயல் செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Accountability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றென். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# பிரதிப்பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

மனிதன் ஆதிகாலம் முதலே முறைமையான கல்விச் செயன்முறை மீது கவனஞ் செலுத்தி வந்துள்ளன. கல்வியின் இலக்குகள், கற்றல் முறைகள் தொடர்பாக அன்று முதல் இன்று வரையில் பல்வேறு அணுகுமுறைகளின் வழியே கண்டறிந்துள்ளவையும் எண்ணிலடங்கா எவ்வாறாயினும் கல்வியின் பொது எதிர்பார்ப்பு, ஒவ்வொருவரையும் பூரண ஆளுமை கொண்டதாக உருவாக்குவதாகும். அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் சமூகத்திறன்கள் நிரம்பப் பெற்ற, தமது உள்ளார்ந்த ஆற்றல்களை உச்ச அளவுக்கு விருத்தி செய்து கொண்ட தனியாள்களை உருவாக்குவதற்குப் பொருத்தமான கல்வியை வழங்குவதற்காக முன்னோடியாக எமது நிறுவனம் பங்களிப்புச் செய்கின்றது.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடும் ஆசிரிய ஆசிரியைகள், கல்வியின் குறிக்கோள்கள், கற்றல் செயன்முறை, மதிப்பீடு ஆகிய மூன்று அம்சங்களிலும் சம அளவு கவனஞ் செலுத்துவது அவசியமாகும். அதற்குத் தேவையான வழிகாட்டல் இந்த ஆசிரியர் வழிகாட்டியினால் வழங்கப்படுகின்றது. இவ்வழிகாட்டியை முனமாதிரியாகக் கொண்டு, உங்களுக்குத் தனித்துவமான மாணவர் மையக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையொன்றினை நீங்கள் திட்டமிட்டுக் கொள்ளலாம்.

மாணவரின் விருத்தி , கல்வி முறைமையில் புத்தறிவைப் பிறப்பித்தல் போன்ற பல்வேறு எதிர்பார்ப்புக்களை முதன்மையாகக்கொண்டு ஆராய்ச்சிப் பணியிலும் ஆசிரியர் ஈடுபடுவது இன்றிமையாதாதாகும். வெற்றிகரமாக ஒவ்வோர் ஆசிரியரும் ஒவ்வொரு ஆராய்ச்சியாளர் ஆவார். நீங்கள் எற்கனவே நடத்திவரும் ஆராய்ச்சிப் பணிகளை மேலும் முறையானவகையில் செய்யத் திடசங்கற்பங் பூணுவது காலத்தின் தேவையாகும். அதற்குத் தேவையான வழிகாட்டல்களைப் பெறுவதற்காக எமது பங்களிப்பை எப்பொழுதும் நாடலாம் என்பதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

ஆசிரியர் ஞானக்கண்ணுடையோராவர் என்றால் அது மிகையாகாது மாணவர்களது கடந்த காலத்தையும் நிகழ்காலததையும் மட்டுமன்றி எதிர்காலத்தையும் ஊடுருவி நோக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு. ஆசிரியர் ஒரு போதும் வழிகாட்டியாக முன்னால் செல்பவராவார். மற்றுமொரு போது மாணவர்கள் முன்னாற் செல்லல் தாம் பின்னால் செல்பவராவார். தெளிவான விளக்கத்துடன் நன்மனப்பாங்குகளுடனும் செயற்படுபவராவார். பாண்டித்தியமிக்க ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களது பல்வகைமையைக் கவனத்திற் கொண்டு அம்மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குத் தேவையான பொறுப்புகளை ஏற்று அவருக்கு வகை கூறும் வகையில் செயற்படும் நல்லாசிரியர்களாக விருத்தியடைவதற்கு மேன்மேலும் ஆற்றல் கிட்டடட்டும் என வாழ்த்துகின்றோம்.

**பீ. சனத் பூஜித்த**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பீடம்

# அறிமுகம்

தரம் 12 இன் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்திட்டத்தின் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை நிறைவு செய்து கொள்வதற்காக ஆசிரியர்களுக்குச் சரியான வழிகாட்டலை வழங்குவது இந்நூலின் நோக்கமாகும். இதனை முறையாகப் பயன்படுத்துவதற்காகப் பின்வரும் விடயங்கள் தொடர்பான விளக்கம் அனைத்து ஆசிரியர்களிடமும் இருத்தல் வேண்டும்.

(1) தரம் 12, 13 இற்கான தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்திட்டம் பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது 2008 ஆம் ஆண்டிலாகும். அதற்கு முன்பு 2006 ஆம் ஆண்டில் தரம் 10 இலும் 2007 இல் தரம் 11 இலும் இப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும், க.பொ.த உயர்தரத்தில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்ற பாடத்தைக் கற்பதற்கு அதனை க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்ற அவசியம் இல்லை. தரம் 12 இல் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பயிலும் மாணவர்களுக்கு 10 ஆம் 11 ஆம் தரங்களின் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்ற புத்தகங்களை வாசிக்கக் கொடுப்பது பயனுடையதாகும்.

(2) தரம் 12, 13 இற்கான தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடம் ஒரு சமூகவியற் பாடமாகும். கற்பித்தல், நேரசூசி அமைக்கும் போது அதனை சமூகவியற் பாடப் பரப்பின் கீழான கலைப் பாடங்களுடன் இணைக்க வேண்டும். எவ்வாறாயினும் இப்பாடத்தை அழகியல், வர்த்தக, கலைப் பிரிவுகளின் ஒரு பாடமாகத் தெரிவு செய்வதற்கு சுற்றுநிருபங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3) தரம் 12,13 இற்கான தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்திட்டம் தயாரிக்கப் பட்டிருப்பது நான்கு குறுக்குக் கலைத்திட்டக் கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டாகும். அதாவது சௌஜன்யம், அபிவிருத்தி, ஊடக அறிவு, தொடர்பாடற் தேர்ச்சி என்பவையாகும். அதன்படி கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் கருப்பொருள்களுக்கேற்ற உதாரணங்கள், மாதிரிகள், செய்முறைச் செயற்பாடுகள், ஒப்படைகள் என்பவற்றை உருவாக்குவதனூடாகக் குறிப்பிட்ட கருப்பொருள்களின் உள்ளடக்கத்தை நிறைவேற்றிக் கொள்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

(4) எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்துக்கு மாணவர்களைக் கொண்டு செல்வதும் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடைவதற்குத் தேவையான மனப்பாங்கு விருத்தியையும் வாழ்வதற்காக தொடர்பாடலையும் ஊடகத் தேர்ச்சியையும் விருத்தி செய்து கொள்ள உதவி செய்வதும் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. பாடத்திட்டத்தின் மொத்தத் தேர்ச்சிகளையும் அடைந்து கொள்ள முடிவது உரிய முறையில் சரியான அறிவைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவும் உரிய மனப்பாங்கு, திறன்களை விருத்தி செய்து கொள்வதனாலுமாகும்.

(5) மாணவர்களிடம் மொத்த வளர்ச்சி அடையப்பட வேண்டுமானால், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் வகுப்பறைக்குள்ளும் வகுப்பறைக்கு வெளியேயும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அத்துடன் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயுமான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வெளியக வளவாளர்களைப் பயன்படுத்துவதன் மூலம் உண்மையான பயனுள்ள அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்துதல் வேண்டும். இது ஆசிரியருக்கு கிடைக்கும் ஒரு மேலதிக வசதியாகும்.

(6) ஒவ்வொரு நாளும் ஆசிரியர் குறிப்பிட்ட வகுப்பறைக்குச் செல்லும் போது தயாரிக்கப்பட்ட செய்முறை ரீதியான கற்றல் - கற்பித்தல் பிரவேசங்களுடன் செல்ல வேண்டும். மாணவர்கள் ஆசிரியரின் வருகையை எதிர்பார்த்திருக்கும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும். தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தைக் கற்பது மாணவர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக அமைவதற்கு ஆசிரியர் விஷேட கவனத்துடனும், ஆக்கச் சிந்தனையுடனும் கருமமாற்ற வேண்டும். ஒவ்வொரு நாளும் பாடம் முடிவடையும்போது தான் அன்று பயன்படுத்திய ஆக்கத்திறன் வாய்ந்த முறைகள், விதங்கள் பற்றிய ஓர் அறிக்கையை வைத்திருப்பதன் மூலம் அடுத்த வருடத்தில் மேலும் ஆக்கத்திறன் வாய்ந்த முறைகளைக் கையாளக் கூடியதாக இருக்கும்.

(7) பாடத்துடன் தொடர்பான இணைந்த பாடச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்காக பாடசாலை ஊடகக் கழகமொன்றை அமைத்து நடத்த வேண்டும். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளபடி பல்வேறு இணைப் பாட விதானச் செயற்பாடுகளில் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

(8) விஷேடமாக ஊடகக் கல்வி வாரம் என்ற வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதும் ஊடக வேலைப் பயிற்சி வேலைத்திட்டத்தில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்வதும் அவசியமாகும். அதற்கான அறிவுறுத்தல்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

பொதுவாக, ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டியது புதிய செயற்பாட்டுக் கற்றல் அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காகும்.

**பந்துல பீ. தயாரத்ன**
ஊடகக்கல்விச் செயற்றிட்டத் தலைவர்

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

அரசாங்கம் மூலம் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலைப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவதோடு ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் வழிகாட்டி நூல்களை வழங்குவதன் ஊடாக கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டை மிகவும் வினைத்திறன் மிக்கதாக்குவதை நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

பாடத்திட்டத்தில் காணப்படும் தேர்ச்சிகளை நிதர்சனமாக்குவதற்காக மாணவர்களை இயக்கும் வழிகாட்டி ஆசிரியரேயாவார். ஆகையால் அப்பணியை நன்றாக உணர்ந்து கொண்டு இவ் ஆசிரியர் வழிகாட்டியின் ஊடாக கற்பித்தல் செயற்பாடு தொடர்பில் சிறந்த பரிச்சயத்தைப் பெற்றுக் கொண்டு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கற்றல் செயற்பாட்டின் உச்ச பயனை பெறும் முறை தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தும் பொறுப்பு உங்களையே சாரும்.

நிகழ்கால உலகின் சவால்களை வெற்றிக் கொள்ளக்கூடிய மாணவ தலைமுறை ஒன்றை உருவாக்கும் பாரிய பணியில் ஈடுபட்டுள்ள உங்களால் இதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் சிறந்ததோர் விருத்தியை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்.

**டபிளயூ. எம். என். ஜே. புஷ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய
பத்தரமுல்ல

# நூலாக்கக் குழு

| | |
|---|---|
| பணிப்பு: | **கலாநிதி உபாலி எம். சேதர**<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம். |
| ஆலோசனை: | **திரு.விமல் சியம்பலாகொட**<br>உதவிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம். |
| நெறிப்படுத்தல்: | **திரு.பந்துல பீ. தயாரத்ன**<br>ஊடகக்கல்வி செயற்றிட்டத் தலைவர், தேசிய கல்வி நிறுவகம். |
| வளப் பங்களிப்பு: | **பேராசிரியர் சந்திரசிறி ராஜபக்ஷ,**<br>சமூக விஞ்ஞான பீடாதிபதி, களனிப் பல்கலைக்கழகம்.<br>**தகைசார் பேராசிரியர் சுனந்த மகேந்திர,**<br>வெகுசன தொடர்பாடல் கல்வி பிரிவுத் தலைவர், களனிப் பல்கலைக்கழகம்.<br>**பேராசிரியர் தம்மிக கங்கானந்த திஸாநாயக்க**<br>தொடர்பாடல் கல்வி பிரிவுத் தலைவர், களனிப் பல்கலைக்கழகம்.<br>**கலாநிதி டியுடர் வீரசிங்க**<br>தலைவர், ஸ்ரீபாலி சபை, கொழும்பு பல்கலைக்கழகம்.<br>**கமல் வலேபொட கலைமாணி**<br>வெகுசன ஊடகப் பிரிவுத் தலைவர், கொழும்பு பல்கலைக்கழகம்.<br>**கலாநிதி மாபா திலகரத்ன**<br>சிரேஷ்ட விரிவுரையாளர், வெகுசன தொடர்பாடல் கல்விப் பிரிவு, களனிப் பல்கலைக்கழகம்<br>**கலாநிதி அஜந்தா ஹப்புஆராச்சி**<br>சிரேஷ்ட விரிவுரையாளர், வெகுசன ஊடகப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் |
| எழுத்தாளர் குழு: | **ஆனந்த பண்டார அபேசிங்க - கலைமாணி**, கைகாவலை, ம.ம.வி. மாத்தளை.<br>**டீ.எம்.கே. பீ. திசாநாயக்க - கலைமாணி,** மகாசென் தேசிய பாடசாலை, நிக்கவெரட்டிய.<br>**கங்கா இரோசினி சமரசேகர - கலைமாணி,** குருவிட்ட ம.ம.வி. குருவிட்ட.<br>**ரேணுகா பிரியதர்சன - கலைமாணி,** கடுகண்ணாவ தேசிய பாடசாலை, கடுகண்ணாவ.<br>**வாசனா பிரியங்கனி - கலைமாணி,** திருத்துவ பெண்கள் வி. பத்தேகம.<br>**அரோசா மலலசேகர - கலைமாணி,** கிரில்லவல ம.ம.வி. கடவத்தை.<br>**ஏமந்தி ரெஜினால்ட் - கலைமாணி,** பிலியந்தலை ம.ம.வி. பிலியந்தல.<br>**குமுதினி பிரேமரத்ன - கலைமாணி,** மெத்தேகந்த ம.வி. பலாங்கொட<br>**திலக் வீரரத்ன பண்டார - கலைமாணி,** ஏ. ரத்னாயக்க ம.ம.வி. வலல.<br>**குமாரி அத்தபத்து - கலைமாணி,** ராகுல தேசிய பாடசாலை, அலவ்வ. |

## தமிழ் மொழி மூல பிரதி தயாரித்தல்

**ஆலோசனையும் அனுமதியும்**

**பேராசிரியர் குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**வீ. சனத் பூஜித**
பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாளர் :** ஏ. நீலமணி
சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

**மொழி பரிவர்த்தனை :** அரச மொழி கரும திணைக்களம், ராஜகிரிய

**கணினி வடிவமைப்பு:** திருமதி. எம்.என்.எப். றிஹானா, தேசிய கல்வி நிறுவகம்
செல்வி. கமலவேணி கந்தையா, தேசிய கல்வி நிறுவகம்

**ஏனைய உதவிகள் :** எஸ். அழககோன், தேசிய கல்வி நிறுவகம்
ஆரிய திலக பர்ணான்டோ, தேசிய கல்வி நிறுவகம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| அறிமுகம் | vi-vii |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | viii |
| நூலாக்கக் குழு | ix |
| பாடத்திட்டம் (சுருக்கமானது) | xii |
| குறுக்கு (கிடை)க் கலைத்திட்டக் கருப்பொருள் | xii |
| எதிர்பார்க்கப்படும் விருத்திகள் | xiii |
| பாடசாலைகளின் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் | xiv |
| பாடவிடயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள் | 01-124 |
| கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளுக்கான முன்மாதிரி நடவடிக்கைகள் | 125-137 |
| பாடசாலை அடிப்படை நிகழ்ச்சித் திட்ட மதிப்பீடுகள் | 138-139 |

# சுருக்கமான பாடப் பரிந்துரை
# தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி - தரம் 13

| பாடத்துறை | தேர்ச்சி |
|---|---|
| 7. அபிவிருத்தித் தொடர்பாடல் | அபிவிருத்தித் தொடர்பாடலின் கொள்கை அடிப்படைத் தன்மை மற்றும் பிரசை அனுபவங் களை விமர்சித்து அபிவிருத்தித் தொடர்பாடல் சிக்கல்கள் மற்றும் சவால்களை சமநிலையில் பகுத்தாய்வு செய்தல். |
| 8. அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் | அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் ஒன்றை திட்டமிட்டுச் செயற்படுத்தி இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கும் வரையிலான முழுச் செயற்பாட் டிற்கும் உரிய தேர்ச்சியை வெளிக்காட்டல் |
| 9. சகவாழ்விற்கான தொடர்பாடல் | பொறுப்புமிக்க பிரசையாக சகவாழ்வுடனான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்குத் தொடர் பாடலைப் பயன்படுத்தக்கூடிய தேர்ச்சியை வெளிக்காட்டல். |
| 10. ஆக்கத்திறனான தொடர்பாடல் | ஊடக அறிவை பல்வேறு பிரிவுகளிலும் விமர்சித்து ஆய்வுரீதியாக கிரகிக்கும் தேர்ச்சியை வெளிப் படுத்தல். |
| 11. ஊடக விமர்சனம் | ஆக்கத்திறனான தொடர்பாடல் தன்மை, கொள்கை மற்றும் பாவனை, வடிவம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுக் கதைகள் மற்றும் வெளியீட்டு முறைகளை விமர்சித்தல், ஊடக கலாசாரத்தின் தன்மை, பரவல் மற்றும் தாக்கங்களையும் சந்தையுட னான தொடர்புகளையும் பகுத்தாய்வு செய்தல். |

## குறுக்கு(கிடை)க் கலைத்திட்டக் கருப்பொருள்கள்
## Cross – Curricular Themes



# எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிகள்

### அறிவு

1. தொடர்பாடலினதும் ஊடகத்தினதும் அடிப்படைச் செயற்பாட்டுடன் தொடர்புடைய பல்வேறு பாட விடயங்கள்.
2. சகவாழ்வுடன் வாழ்தலோடு தொடர்புடைய பல்வேறு பாட விடயங்கள்.
3. தொடர்பாடல் மற்றும் ஊடகப் பாவனையுடன் தொடர்புடைய பல்வேறு பாட விடயங்கள்.
4. அபிவிருத்திக்காக தொடர்பாடலைப் பயன்படுத்துவது தொடர்பான பல்வேறு பாட விடயங்கள்.
5. தொடர்பாடலுடனும் ஊடக ஆற்றல்களுடனும் தொடர்புடைய பல்வேறு பாட விடயங்கள்.

# எதிர்பார்க்கப்படும் விருத்திகள்

### எண்ணக்கருக்கள்

1. தொடர்பாடலினதும், ஊடகத்தினதும் செயற்பாடுகளைச் சரியான முறையில் அறிந்து கொள்வது அனைவருக்கும் அவசியமானது.
2. சகவாழ்வுடன் வாழ்வதற்குத் தொடர்பாடற் தேர்ச்சிகள் அனைவருக்கும் அவசியமாகும்.
3. தொடர்பாடல் மற்றும் ஊடகப் பாவனைக்கு ஊடக அறிவு அவசியமாகும்.
4. அபிவிருத்திக்காக தொடர்பாடலைப் பயன்படுத்துவது சவாலான ஓர் காரியமாகும்.
5. தொடர்பாடல் மற்றும் ஊடக ஆற்றல்கள் அபிவிருத்தி, தனிப்பட்டதோர் காரியமாகும்.

### ஆற்றல்கள்

1. வாழ்வதற்குத் தேவையான அடிப்படை தொடர்பாடல் ஆற்றல்கள்.
2. பிறருடன் சகவாழ்வுடன் வாழ்வதற்குத் தேவையான முறைகள் குறித்த ஆற்றல்கள்.
3. தொடர்பாடல் மற்றும் ஊடகத்தை ஊடுருவிப் பார்க்கும் மற்றும் தேர்ந்தெடுக்கும் ஆற்றல்கள்.
4. அபிவிருத்திக்காகத் தொடர்பாடலைப் பயன்படுத்தும் ஆக்கத்திறனான ஆற்றல்கள்.
5. தொடர்பாடல் மற்றும் ஊடகப் பணிகளை செயற்படுத்துவது தொடர்பான தனிப்பட்ட ஆற்றல்கள்.

### பாடப் பரிந்துரையின் பிரதான நோக்கங்கள்

1. தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டில் செயற்றிறனுடன் பங்குபற்றுவதற்குத் தேவையான அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சியை, இளம்பராயப் பிள்ளைகளிடத்தில் அபிவிருத்தி செய்தல்.
2. எதிர்காலப் பிரசைகளாகவுள்ள தற்கால இளம்பராயத்தவரிடத்தில் ஊடக மற்றும் தகவல் அறிவை வளர்த்தல்.
3. திறன்மிக்கதோர் குடும்ப அலகு மற்றும் சமூக முறைமையில் சகவாழ்க்கை வாழத் தேவையான தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்தல்.
4. முழுமையாக உயர் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சிகளுடனான மனித நேயம் மிக்க, செயற்றிறனான நபர்களை பாடசாலையிலிருந்து சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படையை உருவாக்குதல்.

**குறிக்கோள்**

உயர் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சியுடனான, சகவாழ்வுடன் வாழ்வதற்குப் பழகிய, நிலவுகின்ற தொடர்பாடல் மற்றும் ஊடகக் கலாச்சாரத்தை ஊடுருவிப் பார்த்து, தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யத் தயாரான இளம் சமுதாயத்தினரை உருவாக்குதல்.

# பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

1. பாடசாலை ஊடகக் கழகமொன்றை (School Media Club) செயற்பாட்டு ரீதியாக நடத்திச் செல்லல்.
2. அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட ஊடக வேலைப் பயிற்சி வேலைத்திட்டத்தில் ( Development oriented media work Experience programme) பங்கு பற்றல்.
3. பாடசாலை ஊடக வாரமொன்றை (Media Education week) வருடாந்தம் நடத்துதல்.
4. வருடாந்தம் ஏப்ரல் 23 ஐ மையமாகக் கொண்ட யுனெஸ்கோ உலக புத்தகத் தினத்தை (UNESCO World Book Day) க் கொண்டாடுதல்.
5. குறுக்குப் பாடத்திட்டக் கருப்பொருள்களை மையப்படுத்திய மாத விரிவுரைகள்/ கருத்தரங்குகள்/ விவாதங்கள் போன்ற இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தல்.
6. அபிவிருத்தித் திட்டமொன்றை ஆராய்வதற்கான ஒரு கல்விச் சுற்றுலாவில் ஈடுபடல்.
7. பொலிஸ் நிலையத்துடன் இணைந்து சமூக மற்றும் குடும்பத்தில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கொண்டு நடத்துதல் தொடர்பான யதார்த்த நிலையை ஆராய்தல்.
8. பாடசாலையில் "எமது பாரம்பரியப் பாடசாலை மையம்" (Our Heritage School Center) ஒன்றை நிறுவுதல்.
9. தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்திக் கருப்பொருள் ஒன்றின் கீழ், மகஜர் ஆக்கம் மற்றும் விருத்தி வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.
10. பாடசாலை நூலகத்தில் ஊடகத்துறை சார்ந்த நூல்கள், அறிக்கைகள், வாசிப்பு ஆவணங்கள், பல்லூடக உபகரணங்களைச் சேர்க்கும் திட்டமொன்றை நடைமுறைப் படுத்தல்.
11. உள்ளக நூல்நிலையமொன்றை அமைக்கும் திட்டத்தை வகுத்தல்.
12. உயர்தர ஊடகச் செய்திகள் உட்பட தகவல்களை உள்ளடக்கிய ஒரு சுவர்ப் பத்திரிகையை இரண்டு வாரங்களுக்கொரு முறையேனும் வெளியிடல்.
13. வேறு பாடசாலைகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
14. இனங்களுக்கிடையிலான சகவாழ்வை அடிப்படையாகக் கொண்ட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
15. ஊடகக் கல்வி வாரத்தில் ஒரு நாளை "பாடசாலைச் சிரிப்புத் தினம் " (School smile day) என்ற பெயரில் தொடர்பாடல் மேம்பாட்டு வேலைத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்தல்.
16. ஊடகங்களுக்கு ஆக்கங்களை/ சித்திரங்களை/ புகைப்படங்களை முன்வைத்தல்.
17. ஊடக அறிவு வேலைத்திட்டங்களை மாதாந்தம்/ வாராந்தம் நடத்துதல்.
18. ஊடகங்களுக்கான நூல்களை வழங்கும் செயலொழுங்கை பாடசாலையில் திட்டமிட்டு நடத்துதல்.
19. ஆரம்பப் பாடசாலைப் பெற்றோர்களுக்கான ஊடக அறிவை (ஊடகப் பயன்பாடு) வளர்ப்பதைக் கருப்பொருளாகக் கொண்ட வேலைத்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.
20. சுய பலத்தை அடிப்படையாகக் கொண்ட சுய வெற்றிக்காகக் கருமமாற்றல் தொடர்பான பல்வேறு தொடர்பாடல் வேலைத்திட்டங்களைப் பரீட்சித்துப் பார்த்தல்.
21. ஊடகங்களில் தொடர்பாடப்படும் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சிகள் பற்றிய கற்றலை மேற்கொள்ளல்
22. பாடத்துடன் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் தொடர்பாடற் செயற்திட்டச் சுருக்கத்தை உள்ளடக்கியதாக ஒரு வருடாந்த நூலை வெளியிடல்.
23. செய்திகள் வானொலி தொலைக்காட்சி நிறுவனங்களுடன் இணைந்து செயன்முறைப் பயிற்சியைப் பெறும் நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்குபெறல்.

## கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**1. தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல் ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகிய வற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட் பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிவு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங் களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. **வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**
   - அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
   - பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
   - அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
   - அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
   - பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. **சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**
   அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**
   அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. **''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்**
   விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

| | | |
|---|---|---|
| அலகு 7.0 | : | அபிவிருத்தி தொடர்பாடல் (பாடவேளைகள் 55) |
| **தேர்ச்சி 7.0** | : | அபிவிருத்தி தொடர்பாடலின் கொள்கை அடிப்படை, தன்மை மற்றும் பிரதேச அனுபவங்களை விமர்சிப்பதோடு, அபிவிருத்தித் தொடர்பாடற் சிக்கல்கள் மற்றும் சவால்களை சமநிலையில் பகுத்தாய்வு செய்தல். |
| **தேர்ச்சி மட்டம் 7.1** | : | அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு, அதன் அடிப்படை அடையாளங்கள், அதன் பாவனை மற்றும் வெகுசன ஊடகத்துடனான உள்ளகத் தொடர்பைப் பகுத்தாய்வு செய்தல். |

**பாட வேளைகள்** : 10

**பாட உள்ளடக்கம்** : அபிவிருத்தித் தொடர்பாடல் அறிமுகம்.

1. அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு உருவாதல்.
2. அபிவிருத்தித் தொடர்பாடலின் அடிப்படை அடையாளங்கள்.
3. அபிவிருத்தித் தொடர்பாடற் பாவனை.
4. அபிவிருத்தித் தொடர்பாடல் மற்றும் வெகுசன ஊடகம்.

## எதிர்பார்க்கப்படும் கற்றல் பெறுபேறுகள்:

1. அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கருவின் வடிவம் மற்றும் அதன் தோற்றத்தை விளக்குதல்.
2. அபிவிருத்தித் தொடர்பாடலின் அடிப்படை அடையாளங்களை ஒப்பீட்டு ரீதியாக முன்வைத்தல்.
3. அபிவிருத்தித் தொடர்பாடலின் சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பாவனையை மீளாய்வு செய்தல்.
4. அபிவிருத்தித் தொடர்பாடலின் மீது வெகுசன ஊடகத்திற்குக் காணப்படும் பொறுப்புக்கள் மற்றும் பணிகளை உதாரணங்களுடன் பகுத்தாய்வு செய்தல்.

## அறிமுகம்

ஒவ்வொரு நாடும் தேசிய அபிவிருத்தி மீது கவனம் செலுத்துகிறது என்பது வரலாற்று ரீதியில் தெரிகிறது. பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி என்பன இதன் பிரதான இரண்டு பிரிவுகளாகும். அவற்றுள்ளும் மனித அபிவிருத்தியானது மிக முக்கியமாவது, அதன் மீது பௌதீக அபிவிருத்தியும் தங்கியுள்ளது என்பதாலேயே ஆகும். அரசுகளின் அபிவிருத்தியானது ஒரே மாதிரியானதாகக் காணப்படாது. அது சில சமயங்களில் வளர்ச்சியடைந்ததாகவும், வேறு சில சமயங்களில் வீழ்ச்சியடைந்ததாகவும் காணப்படும். யுத்தம் மற்றும் மோதல்களே மானிட வரலாற்றில் இவ்வாறு அபிவிருத்தி நலிவடைவதற்கு பிரதானமான காரணிகளாயின. அதனால் ஏதேனும் ஓர் அரசின் அல்லது அரசுக்களின் பௌதீக மற்றும் மனித வளங்களும் மனித கலாசாரமும் அழிவடைகின்றன. வரலாற்று ரீதியில் முழு மானிட சமூகமும் பயங்கரமான அழிவிற்கு முகம் கொடுத்த அண்மித்த காலப் பகுதியாவது இரண்டாம் உலகப் போரேயாகும். இத்தோடு தொடர்புடைய பிரித்தானியா உட்பட நட்பு இனத்தவரும், ஜேர்மனியின் நாசிசக்காரர்கள் உட்பட எதிரிகளும் என்ற வகையில் உலகம் இரு கட்சிகளாகப் பிரிந்தது. அப்போது இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம், ஒல்லாந்து முதலான நாடுகள் இந்த ரீதியில் நட்பு இனத்தவர்களுடன் இணைந்து கொண்டன. நாசிசக்காரர்களை வீழ்த்தியதன் மூலம் இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவுக்கு வந்தாலும், யுத்தத்தின் விளைவாக முழு

உலகமும் பௌதீக மற்றும் மனித ரீதியில் குறிப்பிட்டளவான அழிவிற்கு உட்பட்டிருந்தது. மீளவும் உலக யுத்தமொன்று ஏற்படாதிருக்க ஐக்கிய நாடுகள் சபை தாபிக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மீண்டெழும் பாரிய அபிவிருத்தி முயற்சியில் உலகின் அனைத்து நாடுகளும் ஈடுபட நேர்ந்தது. இதன்போது மேலைத்தேய பேரரசுக்களே முன்னிலை வகித்தன. அவை தொழில்நுட்பப் புரட்சியில் உயர் முன்னேற்றத்தை எட்டிய நாடுகளாகும். அபிவிருத்தித் திட்டங்கள் அவர்கள் மூலம் உருவாக்கப்பட்டதோடு, உலகம் முழுவதுமுள்ள தமது அடிமை நாடுகளில் அத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலைத்தேய நாடுகளில் வெற்றியடைந்த அவ் அபிவிருத்தித்திட்டங்கள் ஆசிய, ஆபிரிக்க மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் அல்லது குறை அபிவிருத்தியடைந்த இலத்தீன் அமெரிக்க நாடுகளில் செயன்முறையில் பொருந்தவில்லை என்பதே இதன்போது நிகழ்ந்த ஆச்சரியமூட்டும் சிறு பெறுபேறாகும். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் சமூகங்களிடையே காணப்படும் மிக விசேடமான குணாம்சங்களுடன் இம் மேலைத்தேய அபிவிருத்தித் திட்டங்கள் பொருந்தவில்லை என்பது புலனானது. அதாவது, பாரம்பரிய நம்பிக்கைகள், சமயங்கள், வழிபாடுகள், மூட நம்பிக்கைகள், பல்வேறு பழக்க வழக்கங்கள், சமூக கொள்கைகள் மற்றும் சமூகப் பாரம்பரியங்களும் இதற்கு உட்பட்டன. இக்காரணத்தினால் ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அபிவிருத்திக்காக அச்சமூகங்களின் மக்களை இணைத்துக் கொள்ள வேண்டுமாயின், அவர்களை நேரடியாக அழைக்கக்கூடிய, அவர்களின் சிந்தனைகள் மற்றும் மனப்பாங்குகள் அபிவிருத்திக்காக ஈடுபடக்கூடியதுமான வித்தியாசமான முறையிலான தொடர்பாடற் பாவனைகள் தேவை என்பது தென்பட்டது. அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உருவான இத்தொடர்பாடற் பாவனையானது அபிவிருத்தித் தொடர்பாடல் எனப் பெயரிடப்பட்டது. அப் பெயரானது யுனெஸ்கோவினால் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் அபிவிருத்தித் தொடர்பாடலானது ஏதேனுமோர் நாட்டின் மக்களுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களுடனான மற்றும் அன்னியோன்ய தொடர்பாடற் செயற்பாடானது இம்மக்களிடையே காணப்பட்ட சமய, கலாசார அல்லது சம்பிரதாய குணாம்சங்களை விலக்குவதற்குப் பதிலாக அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதோடு, முழு அபிவிருத்திக்காகவும் இம்மக்களை ஒற்றுமையாக இணைத்துக் கொள்வதே அபிவிருத்தித் தொடர்பாடலின் நோக்கமாகும்.

இது இலகுவான காரியமாய் இருக்கவில்லை. அவர்களிடையே சமூகக் குழுவாகக் காணப்பட்டு வந்த அனேகமான குணாம்சங்களை கைவிடுவதற்கு அல்லது மாற்றுவதற்கு அவர்களை தூண்டுவது கடினமானமையே அதற்குக் காரணமாகும். இதனால் மக்களைத் தூண்டுவதற்காக ஊடகக் கலவையொன்றை பயன்படுத்துவது அபிவிருத்தி தொடர்பாடலின் ஓர் இலட்சணமானது. வெகுசன ஊடகத்தை பயன்படுத்திப் பிரதான தாரையுடன் ஒன்றிணைந்து பிரதேச வானொலி, பிரதேச தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் பிரதேச திருத்தங்களைப் பயன்படுத்துவதும், பிரசைகள் மட்டத்தில் சமூக தொடர்பாடல் மற்றும் இரு தொடர்பாடலைப் பயன்படுத்துவதும் திட்டமிடலோடு மேற்கொள்ள நேர்ந்தது. இதன்போது அனைத்து ஊடகங்களினதும் பாவனை பயனுடையதாய் இருந்தாலும், ஒலி ஊடகம் என்ற ரீதியில் வானொலி ஊடகத்திற்கு பிரதான இடம் கிடைத்தது. அதற்கு இரண்டு காரணிகள் செல்வாக்கு செலுத்தின. எழுத்துக்களை எழுதவோ வாசிக்கவோ முடியாதவர்களுக்கும் வானொலியை செவிமடுக்க முடிகின்றமை ஒரு காரணியாகும். வானொலியை குறைந்த தொழில்நுட்பம் மற்றும் சக்தியைப் பயன்படுத்தி இயக்க முடிகின்றமை இரண்டாவது காரணியாகும். அந்த வகையில் பிரதேச வானொலி யானது அபிவிருத்தித் தொடர்பாடலின் போது முக்கிய பணியை ஆற்றுகின்றது.

முழுமையாக நோக்குகையில் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் என்பன வெகுசன ஊடகக் கலவையாக அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்பாட்டின்போது தகவல்களை உருவாக்குதல் மற்றும் தூண்டுதல் முதலான இரு பணிகளையும் சிறப்பாக நிறைவேற்றுதல் வேண்டும். அபிவிருத்திக்காக மக்களை இணைத்துகொள்கையில் இப்பணிகள் இரண்டும் விசேடமாக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

## பாட விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்

### 1. அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு உருவாதல்

- அபிவிருத்திக்காக தொடர்பாடல் எனும் எண்ணக்கருவானது 1950 ஆம் ஆண்டின் பிற்பாதியில் யுனெஸ்கோவினால் முதல்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- அபிவிருத்தித் தொடர்பாடல் என்பது 1970 ஆம் ஆண்டிலேயே முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.
- பிலிப்பைன்ஸ் நாட்டின் அரச பல்கலைக்கழகத்தினால் 1960 ஆம் ஆண்டின் பிற்பாதியில் அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான சிறந்ததோர் வரைவிலக்கணம் வழங்கப் பட்டது.

| |
|---|
| அபிவிருத்தித் தொடர்பாடல் என்பது நாடு ஒன்றில் துரிதமான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய மனித தொடர்பாடலுக்கு உரிய கலை அல்லது விஞ்ஞானம் ஆகும். அதன் மூலம் நாட்டில் விரிவான பொருளாதாரம் அல்லது சமூக சமநிலையை ஏற்படுத்த முடியும் என்பதோடு மனித தேவைகளை விரிவான முறையில் பூர்த்தி செய்யவும் முடியும். |

- இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொழில்நுட்ப நாடுகளில் வெற்றியடைவதும், மூன்றாம் உலக நாடுகளில் வெற்றி பெறாமையும் தொடர்பான ஆய்வுகளின் பெறுபேறாக அபிவிருத்திக்கென புதிய தொடர்பாடல் முறைகளை இனங்கண்டதனால் அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு உருவானது.

**முதலாம் உலகம்:-** தொழில்நுட்ப நாடுகள் (வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, யப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, இஸ்ரேல்)

**இரண்டாம் உலகம்:-** கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சோவியத் ரஷ்யா (சோசலிஷ அரசுக்கள்)

**மூன்றாம் உலகம்:-** ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் (முன்னேற்றமடையாத அல்லது குறை அபிவிருத்தி அடைந்த அல்லது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்)

- அபிவிருத்தித் தொழிற்பாட்டிற்காக மக்களை இணைத்துக் கொள்ளப் பயன்படுத்தப் படும் சிறு உபாய வழியாக அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு உருவாகியது.

### 1. அபிவிருத்தி என்பதில் உள்ளடங்குவன,

1. பொருளாதார அபிவிருத்தி
2. சமூக அபிவிருத்தி
3. சுகாதார அபிவிருத்தி
4. கலாசார அபிவிருத்தி
5. கல்விசார் அபிவிருத்தி மற்றும்
6. சூழல்சார் அபிவிருத்தி

**2. அபிவிருத்தி தொடர்பான வரைவிலக்கணங்கள் பல உள. அவற்றுள் பின்வரும் வரைவிலக்கணங்களை மாத்திரம் கற்பித்தல் போதுமானது.**

**பேராசிரியர் விமல் திசாநாயக்க:** தேசிய அபிவிருத்தி என்பது பிரதானமாக பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, கலாசார அபிவிருத்தி மற்றும் நல்லொழுக்கம் சார் அபிவிருத்தி எனும் பகுதிகளினாலான பரிபூரணமான அபிவிருத்தியாகும்.

**டட்ளி சியர்ஸ்:** அபிவிருத்தி என்பது வறுமை, அறிவு ஞானத்தின் கீழ்மட்டம், தொழிலின்மை மற்றும் சமூக சமமின்மை முதலான துன்பங்களிலிருந்து அபிவிருத்தி அடையும் நாடுகளின் மக்களை மீட்பதாகும்.

**போல் பீ. ஸ்டீவன்:** அபிவிருத்தி என்பது நவீன உலகில் பேய் வேடம் பூண்டுள்ள சில சக்திகளைத் தாக்குதலாகும். அச் சக்திகளாவது மந்தபோஷாக்கு, நோய்கள், அறிவின்மை, சேரிகள், தொழிலின்மை மற்றும் சமூக சமமின்மை என்பனவாகும்.

**3. அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்து மேலைத்தேய கருத்துக்கள்:**

(பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் பின்வரும் கருத்துக்களை மாத்திரம் கற்பிப்பது போதுமானது)

**பேராசிரியர் சில்பர் ஷ்ராம்:**

(1) தேசிய எதிர்பார்ப்புக்களை உயர் மட்டத்தில் வைப்பதற்காக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.

(2) தேசியம் குறித்த உணர்வை உறுதிப்படுத்துவதற்கு வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.

(3) அரசினால் முன்வைக்கப்படும் அபிவிருத்தி இலக்குகள் குறித்து மக்களை அறிவுறுத்துவதற்காக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.

(4) பாரம்பரிய சமூகங்களின் புதிய திறமைகளை விரிவுபடுத்துவதற்காக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.

(5) பொதுமக்களை இயன்றளவு நிர்வாக சட்டத்திற்கு இணைத்துக் கொள்வதற்காக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.

**எவரட் எம். ரொஜர்ஸ்:**

(1) அபிவிருத்தி தொடர்பான அறிவை ஏற்படுத்துவதற்கு வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தல்.

(2) மக்கள் தொடர்பாடல் மற்றும் கல்விக்கிடையிலான தொடர்பை நன்றாகப் புரிந்து கொள்ளல்.

(3) புதிய உற்பத்திகளை வினவுதல்.

(4) தேசிய நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல்.

(5) அபிவிருத்தி தொடர்பான பல்வேறு சிக்கல்கள் குறித்து கலந்துரையாடுவதற்குத் துணைபுரிதல்.

(6) மக்கள் தொடர்பாடல் மற்றும் தனிநபர் தொடர்பாடல் என்பவற்றுக்கிடையிலான சிறந்த தொடர்பைப் புரிந்து கொள்ளல்.

4. **பாரம்பரிய சமூகங்களை அபிவிருத்தி செய்கையில் நவீன ஊடகங்கள் மற்றும் வெகுசன ஊடகங்களை விட பாரம்பரிய ஊடகம் திறனுடையதாகும்.**

5. **பாரம்பரிய ஊடகங்களின் விசேட பயன்கள் (பேராசிரியர் விமல் திசாநாயக்க)**
   - நம்பகத்தன்மையுடையதாதல்.
   - சில நவீன வெகுசன ஊடகங்களை தமக்கு ஓரளவு புதியனவாக, சமூகத்தின் சக்திமிக்க கேந்திரங்களில் வாழும் பிரபுக்களின் மனஉணர்வுகளை வெளிப்படுத்துகின்ற ஊடகங்களாகக் கருதுதல்.
   - பாரம்பரிய ஊடகங்கள் கிராமப்புற மக்களுக்கு நன்குப் பரிச்சயமான அடையாளங்கள் மற்றும் காரணிகளைக் கொண்டவையாதல்.
   - உலகின் முன்னேற்றமடைந்த பல நாடுகளில் இன்னமும் நவீன வெகுசன ஊடகங்கள் வரையறுக்கப்பட்ட குறித்த சிலருக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் பாரம்பரிய ஊடகங்களுள் கிராமப்புற சமூகத்தில் பொது ஊடகமாக மாறி இருத்தல்.
   - பாரம்பரிய ஊடகங்கள் நேயர்களின் செயற்றிறனான பங்களிப்பை பெற்றுக் கொண்டிருத்தல்.

5. **அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தலுக்கிடையிலான தொடர்பை பகுத்தாய்கையில் பின்வரும் உறுப்புக்கள் குறித்து அவதானம் செலுத்துதல் வேண்டும்.**
   - நவீன மயப்படுத்தல்
   - தொழில்நுட்பமயப்படுத்தல்
   - நாகரீகமயமாக்கல்
   - மேலைத்தேயமயமாக்கல்

- ஏதேனும் ஒரு நாட்டில் அனைத்து மக்களையும் அபிவிருத்திக்காக பயன்படுத்தக் கூடியவாறு அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு உருவானது என்பது குறித்து.
- 1980 ஆம் ஆண்டில் அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான விவாதம் மீளவும் எழுந்தது.
  - அபிவிருத்தித் தொடர்பாடலா?
  - அபிவிருத்திக்காக தொடர்பாடலா?
  - அபிவிருத்திக்காக துணைபுரியும் தொடர்பாடலா?
  - அபிவிருத்தியை துணையாகக் கொண்ட தொடர்பாடலா?
- அபிவிருத்தித் தொடர்பாடல் என்பது நாடு ஒன்றின் தேசிய அபிவிருத்தி செயற்பாட்டில் உள்ளடங்கும் ஓர் பகுதியாகும்.
- பாரம்பரிய சமூகத்தை நவீன சமூகமாக்குவதற்காக தொடர்பாடலை பயன்படுத்துவது அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு மூலம் காட்டப்படுகிறது.

2. **அபிவிருத்தித் தொடர்பாடலின் அடிப்படை இலட்சணங்கள்**
   - அபிவிருத்தியின் பயனைப் பெறுவோர் மற்றும் அபிவிருத்தியை திட்டமிடுவோர் இடையே தொடர்பொன்று கட்டியெழுப்பப்படுகின்றது.
   - அபிவிருத்தி மற்றும் தொடர்பாடலை வேறாக நோக்கினால் சுதந்திர வேறுபாடுகள் இரண்டாக இருந்தாலும், ஒன்றாகக் கொண்டால் சார்ந்த வேறுபாடுகள் இரண்டாகும்.

- அபிவிருத்தித் தொடர்பாடலின் போது ஊடகக் கலவை, தனிநபர் தொடர்பாடல், மாற்ற முகவர் அல்லது பரவல் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கிடையே உள்ள செயற்பாட்டு தொடர்பொன்று கட்டியெழுப்பப்படுகின்றது.
- அபிவிருத்தித் தொடர்பாடல் மூலம் மக்களைப் பலப்படுத்தல்.

> - தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்.
>   - தங்கி வாழும் மனநிலையை விலக்குதல்.
> - கலாசார அடையாளத்தைக் கட்டியெழுப்புதல்.
>   - அபிவிருத்திச் செயற்பாட்டைப் பரவலாக்கல்.
> - மக்கள் பங்களிப்பை வளர்த்தல்.
>   - நவீனப்படுத்தல்.
> - தொழில்நுட்பமயமாக்கல்
>   - நாகரீகமயப்படுத்தல்

- அபிவிருத்தித் தொடர்பாடலுடன் இணைந்து பங்குபற்றல் அபிவிருத்திப் பிரவேசங்களை பயன்படுத்தல்.

## 3. அபிவிருத்தித் தொடர்பாடற் பாவனை

- விசேடமாக மூன்றாம் உலக நாடுகள் தேசிய அபிவிருத்தி முயற்சிகளின்போது அபிவிருத்தித் தொடர்பாடலைப் பயன்படுத்துகின்றன.
- அவ்வவ் நாடுகளினால் தமது நாடுகளில் காணப்படும் விசேட தன்மைகளுக்கேற்ப அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள் வித்தியாசமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- ஒரு நாட்டிற்குப் பொருந்தும் அபிவிருத்தித் தொடர்பாடல் மாதிரி இன்னொரு நாட்டிற்குப் பொருந்தாமல் இருக்க முடியும்.
- அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான சீன மாதிரியை கற்பதன் மூலம், இலங்கை மாதிரி ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையொன்று உருவாகும்.

> **அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த சீன மாதிரி**
>
> - இதற்கு மாக்ஸ்வாதமே அடிப்படையாய் அமைந்துள்ளது. அதன் பிரகாரம் சமூகத்தைப் பகுத்தாயும் அடிப்படைப் பிரவேசங்கள் இவ்வாறு அமையும்.
> - அரசியல், கலாசாரம் முதலான மனித வாழ்வுடன் தொடர்புடைய அனைத்து பிரிவுகளும் மனிதர்களின் வாழ்விற்கு ஏற்ற உற்பத்தி முறைகளுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படுகின்றன.

- உற்பத்தி முறைக்கு ஏற்ப சமூக வர்க்கங்கள் மற்றும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.
- ஒவ்வொரு வரலாற்று மாற்றமும் வர்க்கக் கலவரங்களின் தாக்கத்திற்கு உள்ளானது.
- பாரம்பரிய நில உரிமையுடைய வர்க்கத்திற்குப் பதிலாக தொழில்நுட்ப புரட்சியின் பின்னர் உருவான புதிய கைத்தொழில் வியாபார வர்க்கம் மூலம் உழவர்கள் மற்றும் தொழிலாளர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்குதல்.
- தொழில்நுட்ப அபிவிருத்தியுடன் தொழிலாளர் உழைக்கும் வர்க்கம் உருவானமை.
- சமூக அபிவிருத்தியின்போது நோக்கம் சக்தியாவது தொழிலாளர் உழைக்கும் வர்க்கம் என்பதால், அவர்களது செயற்றிறனான பங்களிப்பு அபிவிருத்தி முயற்சிகளுக்கு அவசியம்.

சோவியத் ரஷ்யாவும் மக்கள் சீனாவும் மாக்ஸ் வாதத்தை பின்பற்றினாலும், அபிவிருத்தித் தொடர்பாடலுக்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது வேறு முறையிலாகும். சோவியத் ரஷ்யா முழு அரசையும் தொழில்நுட்ப மயப்படுத்த முயற்சித்தது. இருப்பினும் சீனாவில் சமூகத்தின் எல்லா பகுதிகளாலும் சமூகவாத மெய்யறிவை வளர்ப்பத னூடாகவே அபிவிருத்தி முயற்சி ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் மக்கள் சீனாவின் அபிவிருத்திச் செயற்பாட்டின்போது தொடர்ச்சியாக மக்களின் பங்களிப்பு பெறப்பட்டது. "பொதுமக்களிடமிருந்து பொதுமக்களுக்கு" என்பதே அவர்களின் வாழ்த்துச் சொல்லானது. இதன் பிரகாரம் மக்கள் சீனாவின் தலைவர் மாவோ சேதுங்கினால் அபிவிருத்திப் பணியின்போது மக்களுடன் தொடர்புடைய நான்கு அங்கங்கள் மீது கவனஞ் செலுத்தப்பட்டது.

(1) **அறியும் ஆற்றல்:** பல்வேறு சேவை தரங்கள், அவ்வப் பிரதேசங்களில் வாழும் மக்களுடன் இணைந்து அபிவிருத்திக்காக அவ்வப் பிரதேசங்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தேர்வு செய்தல்.

(2) **சாராம்சப்படுத்தல்:** பொதுமக்களுடன் அவ்வாறு விபரமாக கலந்துரையாடலுக்கு உட்படுத்திய பிரச்சினைகளின் சாராம்சத்தை பிரதான நிர்வாகக் கட்சியிடம் சமர்ப்பித்தல்.

(3) **அளவீடு:** இவ்வாறு நிர்வாகக் கட்சியிடம் அனுப்பி வைக்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான விபரங்களை மேலும் ஆழமாக விமர்சனத்திற்கு உட்படுத்தி செயற் படுத்துவதற்கு அவசியமான அனுமதியை வழங்கல்.

(4) **செயலுக்கு மாற்றுதல்:** இவ்வாறு நிர்வாகக் கட்சியின் அனுமதியைப் பெற்ற செயன்முறைகளை பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தல்.

சீன அபிவிருத்தித் தொடர்பாடல் மாதிரி மூலம் அபிவிருத்தி தொடர்பாக மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பது குறித்து மாத்திரமன்றி ஐந்து தீர்மானங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

(1) உத்தியோக வர்க்கத்தின் அதிகாரத்தைப் பரப்புவதைக் குறைத்தல்.

(2) நல்லொழுக்கத்தை உறுதிப்படுத்தல்.

(3) தொழில்நுட்பமயப்படுத்தலுக்கு அடிமையாகாதிருத்தல்.

(4) மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து தொடர்பை வளர்த்தல்.

(5) சிறிய குழுக்களுக்கு முதலிடம் வழங்கல்.

சீன அபிவிருத்தி தொடர்பாடலின் நோக்கங்கள் சில:

(1) தேசிய அபிவிருத்திக்குரிய திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

(2) தேசிய அபிவிருத்திக் கொள்கைகளை நபரிடம் கொண்டு செல்லல்.

(3) பொது சமூக மெய்யறிவொன்றை எழுப்புதல்.



அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த சீன மாதிரி

அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான சீன மாதிரி மூலம் காட்டப்படுவது சிறு குழுக்களாக அபிவிருத்தி நடவடிக்கைகளில் தொடர்புபடும் மக்கள் இறுதியில் அரசுடன் இணைந்துள்ளனர் என்பதேயாகும். அவ்வாறே தமது பிரதேச மட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கும் பணிகளில் இணைந்து கொள்ளவும், அதன் மூலம் செயற்றிறன் மிக்கதாக அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தவும் அவகாசம் கிட்டும். இதன் ஊடாக, மக்களின் எண்ணங்களுக்கு பெறுமதியானதோர் இடம் கிடைப்பதோடு, மேலிருந்து கீழாகத் திட்டங்கள் தயாரிப்பதற்குப் பதிலாக கீழிருந்து மேலாக திட்டங்கள் தயாரிக்கப்படும். தொடர்பாடல் செயற்பாடு செயற்படுத்தப்படுவது இச் செயற்பாட்டை வெற்றிகரமாக்குவதற்குத் தேவையான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காகும். இதன் பிரகாரம் பல்வேறு வேறுபாடுகளுடனான மக்கள் சீனாவின் பல்வேறு பிரதேசங்களில் வாழும் மக்கள் தேசிய ரீதியில் மக்கள் சீனாவை கட்டியெழுப்புவதற்கான தீவிர தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பங்குதாரர்களாயினர்.

- வெஸ்வெல்லின் அபிவிருத்தி தொடர்பாடல் தொடர்பான இருபடிமுறைகளிலான மாதிரியும் அபிவிருத்தித் தொடர்பாடல் பாவனை குறித்த கற்கையில் முக்கியத்துவம் பெறுகிறது.

## லசார்பீல்டின் இருபடிமுறை மாதிரி

1940 ஆம் ஆண்டு லசார்பீல்டினால் அறிமுகப்படுத்தப்பட்ட இம்மாதிரிக்கேற்ப இரண்டு படிமுறைகளினால் அபிவிருத்திச் செய்தியொன்று பயணிக்கிறது. முதலாவது படிமுறையின் போது செய்தி மக்கட் தலைவர்களிடம் முன்வைக்கப்படும். மக்கட் தலைவர்கள் என்போர் சமூகத்தில் ஏனையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதன்மையானதோர் குழுவினராவர். மக்கட் தலைவர்களினால் பெற்றுக் கொள்ளப்படும் செய்தியை மிக உணர்வுபூர்வமானதாக மக்களிடம் முன்வைத்தல் இடம்பெறும். நேரடியாகவே மக்களிடம் அபிவிருத்திச் செய்தி யொன்றை முன்வைப்பதை விட இவ் இரண்டு படிமுறைகளையும் பின்பற்றுவதன் மூலம் வெற்றிகரமான முடிவுகளைப் பெறமுடியும் என வெஸ்வெல் சுட்டிக் காட்டியுள்ளார்.

இம்மாதிரியானது கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தொடர்பாடலைப் பயன்படுத்து வதற்கு மிகவும் பொருத்தமானது.

அபிவிருத்திச் செய்தி → மக்கள் தலைவர்கள் → மக்கள்

- மக்கள் ஊடக மாதிரி மூலம் அபிவிருத்தி, செய்தி நேயர் மற்றும் மக்கள் ஊடகம் இடையே உள்ளக தொடர்பொன்று கட்டியெழுப்பப்படும்.

### மக்கள் ஊடக மாதிரி

அபிவிருத்தித் தொடர்பாடலின்போது வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்துவதன் விசேட தன்மை இம்மாதிரியில் காட்டப்பட்டுள்ளதை அதாவது பிரதான தாரையின் ஊடகத்திற்குப் பதிலாக பிரதேச மக்கள் ஊடகத்தைப் பயன்படுத்தல் இங்கு இடம்பெறும். இதன் பிரகாரம் தொடர்பாடலை மேற்கொள்பவர் மூலம் அபிவிருத்திச் சேவைகள் நேரடியாக நேயருக்கு அனுப்பப்படுவதோடு, நேயருக்கு ஊடக நிலையத்திடம் பிரதிபலிப்பை வெளிப்படுத்த முடியும். இலங்கையின் வானொலி ஊடகம் மூலம் மக்கள் வானொலி சேவைகள் ஆரம்பிக்கப்பட்டது இதன் பிரகாரமே ஆகும். மகாவலி மக்கள் வானொலி, கிராந்துருகோட்டை மக்கள் வானொலி, ரஜரட்டை வானொலி முதலானவை இதற்கு உதாரணமாகும்.

### அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான இந்திய அனுபவங்கள் நாயர் மற்றும் வைட்டின் அபிவிருத்தி தொடர்பாடல் தொடர்பான பரிமாற்ற மாதிரி

இந்தியாவின் மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் பரந்துள்ள துறைகளைப் பரீட்சித்துப் பார்த்தலின் கீழ் இம்மாதிரியைப் பயன்படுத்தி ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. அது பூனா பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இம்மாதிரியின் எண்ணக்கருக்களை உறுதி செய்தலும், அதை மேலும் தெளிவுபடுத்துவதுமே இவ் ஆய்வின் நோக்கங்களாகும்.

(1) ஒவ்வொருவருக்குமிடையே அர்த்தமுள்ள செயல்களைக் கட்டி எழுப்புவதன் மூலமே ஆய்வின் பணிக்குழுவினால் கட்டி எழுப்பல் தொடர்பான பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் உழவர்கள் செயற்றிறனுடன் பங்குபற்றியுள்ளனர்.

(2) பங்குபற்றற் பிரவேசமொன்றைப் பயன்படுத்தியதன் மூலம் கிராமவாசிகளை ஊக்கப் படுத்த முடிந்தது. அதற்காகச் செயற்றிறன் மிக்க உரையாடல்கள் பயன்பட்டன. அவ் உரையாடலில் ஆய்வாளர்களும், நிபுணர்களும், உழவர்களும் இணைந்து கொண்டனர்.

(3) பங்குபற்றற் செய்தி அபிவிருத்திக்காக மின் ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. அதன் போது வீடியோ பிரதானமானது. ஒரு சந்தர்ப்பத்தில் உழவர் பெண் ஒருவர் மூலம் அபிவிருத்தியினுள் அவர்களது பாத்திரத்தைப் பிரதிபலிக்கும் மற்றும் அவர்களின் சிக்கல்களை வெளிப்படுத்தும் ஒளிநாடா ஒன்று உருவாக்கப்பட்டது. ஒரு கிராமத்தில் ஆய்வாளர்களினால் பெண்ணொருவரின் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒளி நாடா ஒன்று தயாரிக்கப்பட்டு கிராமப் பெண்கள் கூட்டத்தின் போது காட்டப்பட்டது. அதைப் பார்த்த பெண்கள் மிக உற்சாகத்துடன் அக்கலந்துரையாடல்களில் கலந்து கொண்டனர்.

அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான நாயர் - வைட் பரிமாற்ற மாதிரியைக் கட்டி யெழுப்புகையில் பல எண்ணக்கருக்கள் உள்ளடக்கப்பட்டன.

- கீழிருந்து மேலாக அபிவிருத்தி
- கீழ்மட்டத்தின் பங்களிப்பு
- பங்குபற்றற் தீர்மானமெடுத்தல்
- பிரசைகளைப் பலப்படுத்தல்
- அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளல்
- உள்நாட்டு அறிவு மற்றும் ஊடகம்
- தன்னம்பிக்கை
- பங்குபற்றற் செய்தி அபிவிருத்தி
- ஊடக ஒருமைப்பாடு
- குழுக்களைக் கட்டியெழுப்பல்
- உள்நபர் நம்பிக்கை
- விசேட கோட்பாட்டுச் செயற்பாடு
- தொடர்புகளைக் கட்டியெழுப்பல்
- இம்மாதிரியினுள் உரையாடலை ஆரம்பித்தல், தொடர்பாடலை மேற்கொள்பவர் மற்றும் நேயர் இடையே தொடர்பானது தொடர்ச்சியாகக் காணப்படல், இவை நிலவும் சந்தர்ப்பம் குறித்து செயற்கையாக எண்ணுதல், அபிவிருத்தித் தேவைகள் மற்றும் சிக்கல்களை இனங்காணல், சந்தர்ப்ப வளர்ச்சிக்கு தேவைப்படுவது என்ன என்பது குறித்துத் தீர்மானித்தல் மற்றும் அதன் பிரகாரம் செயற்படல் இடம்பெறும்.
- இப்பரிமாற்றத்தின்போது நேயர் தனியாக எவரதும் செய்தியை பெறுபவராக மாத்திர மன்றி நேயர் செயற்றிறனான செய்தி அபிவிருத்திக்கு, மீளாய்வுக்கு மற்றும் முன்வைத்தலுக்குப் பங்களிப்பு வழங்குபவர்.
- சிக்கலுக்கு உடனடியாகப் பெற வேண்டிய தீர்வின் அடிப்படையிலேயே செய்தியைத் தெரிவு செய்யும் அடிப்படை அமைந்துள்ளதை நேயர், அபிவிருத்தி தொடர்பாடல் தொழிலைச் சேர்ந்தவர் மற்றும் ஆய்வாளர் இணைந்தே அதை தெரிவு செய்வார்.
- அபிவிருத்திச் சந்தர்ப்பத்தில் பங்களிப்பு வழங்குகையில் உயர்மட்டத்திலிருந்து கிடைக்கும் விஞ்ஞான அல்லது வேறு முறையிலான தகவல்களின் தேவைகளை மறக்க முடியாது.
- அபிவிருத்தித் தொடர்பாடலுக்குப் பரிமாற்ற பிரவேசத்தின் மூலம் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் தகவற் பாய்ச்சல் செயற்படுத்தப்படும்.
- இது தனியாக கீழ்மட்ட மக்களுக்கான சமூகம் சார்ந்தது அல்ல.
- அது தகவல்களைத் திரட்டல் மற்றும் தேசிய அறிவு மற்றும் தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காகப் பயன்படுத்தப்படும் செயற்பாடாகும்.
- இம்மாதிரியின் பங்குபற்றற் செயற்பாட்டின்போது மக்கள் அச்செயற்பாட்டின் பங்குதாரராவர்.
- இம்மாதிரியின்போது நேயர் இடையே தொடர்ச்சியாக பாத்திரம் பரிமாறிக் கொள்ளப்படும்.
- இப்பரிமாற்ற மாதிரியானது செய்திப் பரிமாற்றம் மேற்கொள்ளும் அபிவிருத்திச் செயற்பாடாகும்.
- இப்பரிமாற்றத்தின்போது கலந்து கொள்வோர் - வெளி நிபுணர்கள் - மக்களின் வளர்ச்சி மற்றும் மாற்றங்கள் நிகழும்.

## காந்தியடிகளின் அபிவிருத்தி தொடர்பாடல் பாவனை

இந்திய வெகுசன தொடர்பாடல் பாரம்பரியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியாக புனர்நிர்மாணிக்கப்பட்ட சமய மற்றும் கலாசார பேச்சு வழக்கு காந்தியடிகளினால் பயன்படுத்தப்பட்டது. காந்தியின் தொடர்பாடல் பாவனையின்போது இந்திய மக்கள் கலாசாரமும் பகவத் கீதையும் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறே இந்துப் பாரம்பரியத்தின் கூற்றுக்கள் மற்றும் அடையாளங்களும் காந்தியடிகளினால் பயன்படுததப்பட்டன.

காந்தியடிகளினால் சில சில பாரம்பரிய சொற்கள் மக்களிடையே அதீத உணர்வு ஏற்படும் வகையில் பயன்படுத்தப்பட்டன. அதன்போது அவர் கலாச்சார பாரம்பரியத்தின் பேச்சுத் தொகுதியைப் பயன்படுத்தினார். உப்பு - ராட்டினம் மற்றும் சுயஇராச்சியம் முதலான சொற்கள் அவற்றுள் பிரதானமானவையாகும்.

- உப்பு மூலம் ஆங்கில எதிர்ப்பு சமூக பாவனையே பிரதிபலிக்கப்பட்டது. அது உப்பு வரியுடன் தொடர்புபட்டது. இதனால் ஆங்கில எதிர்ப்பின் தீர்மானமாக உப்பு பாவனையிலிருந்து விலகியிருக்க மக்களைத் தூண்ட முடிந்தது.
- ராட்டினம் மூலம் உள்நாட்டு உற்பத்திகள் தொடர்பான எண்ணக்கரு கட்டியெழுப் பப்பட்டது. கையினால் துணிகளை நெய்வதற்கு ராட்டினம் பயன்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் கனமான கதர் துணிகளை தயாரித்தலை ஆங்கிலப் பேரரசுக்கு எதிரான போராட்டமாக மக்கள் ஏற்றுக் கொண்டனர்.
- அவ்வாறே அரச இராச்சியம் தொடர்பான எண்ணக்கருவையும் தீவிரமாகப் பயன் படுத்துவதற்குக் காந்தியடிகளால் முடிந்தது. வீரத்துடனான சமூகமாக இந்திய சமூகத்தை மாற்றுவதற்காகவே அவர் அதை பயன்படுத்தினார். இந்தியர்கள் அனைவரும் இராமாயணத்தை வாசித்திருந்ததோடு, அதை விரும்பினர், மதித்தனர். அது குறித்து காந்தியடிகள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இராம இராச்சியம் என்பது தர்ம இராச்சியமாகும். அது இந்து இராச்சியம் அல்ல. அரசர் இராமர் ஓர் சொர்க்கத்து அரசராவார். அதனால் இந்தியா தெய்வ இராசதானியாகும். வரலாற்று இராம இராச்சியம் என்பது நிச்சயமாக சனநாயகவாதமாகும்.

இந்தியாவில் அறிவிலிகளாக காணப்பட்ட அனேக மக்களுக்கு இவ் அரச இராச்சிய எண்ணக்கரு வானது பாரிய தாக்கத்தை உண்டுபண்ணியது.

> சுயராச்சியம் எனும் பதம் மூலம் சுயநிர்வாகம், சுய வழிகாட்டுதல் நபர்கள் மூலம் உணரப்படல் வேண்டும் என்பது கருதப்படுகிறது. அதன் பிரகாரம் கோபம் - குரோதம் முதலான உணர்வுகள் மற்றும் வன்செயல்களிலிருந்து சுதந்திரம் பெறல் என்பது சுயராச்சியத்தில் உள்ளடங்கும். அஹிம்சை இயக்கமே இதற்கு அடிப்படையானது. அதனால் பிரித்தானிய பேரரசு நிர்வாகத்தை விலக்கும் போராட்டமாக அஹிம்சை வழியே காந்தியடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான இலங்கை அனுபவங்கள்

அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த உறுதியானதோர் மாதிரி இலங்கையிடமில்லை. இருப்பினும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டுள்ளன என்பதை வரலாறுகளை நோக்கும்போது காணலாம். தற்போதும் இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் தனது நிறுவன கட்டமைப்பு மாதிரியில் கீழ்மட்ட சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி அதிகார சபையுடன் மேற்கொண்டு வரும் தொடர்பாடல் சார்ந்த தொடர்பை அவ்வாறானதோர் மாதிரியாகக் காட்டலாம். அவ்வாறே சர்வோதய இயக்கத்தைப் போன்றே, சணசவும், சுகாதார கல்விப் பணியகமும் தத்தமது அபிவிருத்தி சார் நோக்கங்களை வெற்றி கொள்வதற்கு பல்வேறு மாதிரிகளைப் பயன்படுத்துகின்றன.

இலங்கையில் அபிவிருத்திக்காக வெகுசன ஊடகம் குறித்து ஆராய்கையில் இலங்கை வானொலியே மேலோங்கி நிற்கிறது. அது ஆரம்பத்திலிருந்தே பொதுமக்கள் சேவை வானொலியாக செயற்படுவதோடு மக்களின் பல்வேறான அபிவிருத்திகளின் பொருட்டு பாரிய சேவையாற்றி உள்ளது. அவ்வாறே மக்கள் வானொலி சேவையை உருவாக்கியதன் மூலம் அவ்வப் பிரதேசங்களின் மக்களது அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வானொலி ஊடகத்தால் ஆற்றக்கூடிய ஆகக்கூடிய சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1963 ஆம் ஆண்டில் வானொலியில் மாலை சேவை ஆரம்பிக்கப்பட்டமை சிறப்பானதாகும். இதன் மூலம் கிராமிய மாலை நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. கிராமிய மட்டத்தில் விவசாய மற்றும் கிராமிய மக்கள் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான சுகாதார தகவல்கள் முதலானவற்றை வழங்குவதே இதன் நோக்கமானது. அது மாத்திரமன்றி பெண்கள் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன. அது மாத்திர மன்றி கல்வி, சமயம், கலாசாரம் முதலான பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்காக வானொலி நாடகங்கள், செய்தி, பாடல் மற்றும் சங்கீதமும் பயன்படுத்தப்பட்டன.

1970 ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி அரசு உருவாக்கப்பட்டதன் பின்னர் முன்வைக்கப் பட்ட தேசிய அபிவிருத்தி தொடர்பான ஐந்தாண்டு கால திட்டத்துடன் அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான புதிய அனுபவங்கள் இலங்கைக்குக் கிடைத்தன. இக்காலப் பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டதோடு, ஆரம்பத்திலேயே லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் அரசுடைமையாக்கப்பட்டதால் அரசின் பத்திரிகைகளும் தோன்றின. இதன் பெறுபேறாக அரச வானொலி மற்றும் அரச பத்திரிகைகள் அரசின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் அபிவிருத்தித் தொடர்பாடல் மேற்கொள்வோர் ஆகினர். இருப்பினும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உருவாக்கப் பட்ட 1967 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கூட்டுத்தாபன கொள்கைகள் வெளியீடு மூலம் இவ்வாறு காட்டப்பட்டுள்ளது.

..... அதை நாட்டின் அபிவிருத்திக்கு பலம் மிக்கதோர் துணையாகக் காட்டுவதற்கும் எதிர்பார்க்கிறோம். வானொலி மூலம் மகிழ்ச்சிக்காக வழங்கக்கூடிய இடத்தை சிறியதாக மதிக்காது ஆன்மிக மற்றும் கலாசார பெறுமதிகளை மேலும் மேலும் கூர்மையாக்கக் கூடியவாறு நடவடிக்கைகளை விரிவாக்கவும், தேசிய மலர்ச்சியை தளிர் விடச் செய்யவும் நாம் எதிர்பார்க்கிறோம்......

1973 ஆம் ஆண்டில் உருவான இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ரிஜ்வே திலகரத்ன யுகத்தில் வானொலியானது முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. அப்போது செயற்படுத்தப் பட்டு வந்த பயிர்ச்செய்கை, யுத்தம் தொடர்பான செய்தியை மக்களிடம் கொண்டு செல்வதற்கேயாகும். இதனால் வானொலி அரசின் அரசியல் வெளியீடானது என்பது குறித்து சொல்லப்படுகிறது. இருப்பினும் அரசின் அபிவிருத்தி முயற்சிக்கு வானொலியைப் பயன்படுத்தும் அபிவிருத்தி தொடர்பாடற் பணியே வானொலி மூலம் மேற்கொள்ளப்பட்டது. அது ஓர் ஊடகம் என்ற வகையில் எவ்வாறு வெற்றி பெற்றது என்பது குறித்து வேறாக ஆராய்தல் வேண்டும். இருப்பினும் அப்போதைய செய்திகள், உதய கீதங்கள், அபிவிருத்தி சார் செய்திகளைத் தாங்கிய பல்வேறு கலந்துரையாடல்கள், விழிப்புணர்வுடைய பாடல்கள், தேசாபிமான பாடல்கள் முதலானவை வானொலிக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கின. வானொலியின் நேரடி ஒலிபரப்புக்களுடன் இணைந்து வானொலி விவசாய சமூகமொன்றை உருவாக்கலும், அவற்றுடன் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் இணைந்து செயற்பட்டமையும் சிறப்பானவையாகும். இவ் அபிவிருத்தி செய்தி அரசின் லேக்ஹவுஸ் பத்திரிகை மூலமும் வெளியிடப்பட்டுள்ளது.

## நாயர் மற்றும் வைட்டின் அபிவிருத்தி தொடர்பாடல் குறித்த பரிமாற்ற மாதிரி



| | | |
|---|---|---|
| அலகு 7.0 | : | **அபிவிருத்தித் தொடர்பாடல் (பாடவேளைகள் 55)** |
| **தேர்ச்சி 7.0** | : | அபிவிருத்தித் தொடர்பாடலின் கொள்கை அடிப்படை, தன்மை மற்றும் பிரதேச அனுபவங்களை விமர்சிப்பதோடு, அபிவிருத்தித் தொடர்பாடற் சிக்கல்கள் மற்றும் சவால்களை சமநிலையில் பகுத்தாய்வு செய்தல். |
| **தேர்ச்சி மட்டம் 7.2** | : | அபிவிருத்திச் செய்தியின் தன்மை மற்றும் ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்தலைப் பரீட்சித்துப் பார்த்தல். |

**பாட வேளைகள்** : 15

**பாட உள்ளடக்கம்** : அபிவிருத்திச் செய்தி

1. அபிவிருத்திச் செய்தியை இனங்காணல்
2. அபிவிருத்திச் செய்தி ஊடகம்
3. அபிவிருத்திச் செய்தி நிர்மாணிப்பு
4. அபிவிருத்திச் செய்தி மேம்பாடு

### எதிர்பார்க்கப்படும் கற்றல் பெறுபேறுகள்:

1. அபிவிருத்திச் செய்தியில் செயல்கள் பகுத்தாய்வு செய்யப்படும்.
2. அபிவிருத்திச் செய்தி ஊடகம் வேறுவேறாகவோ ஒன்றாகவோ அதன் செயல்கள் மதிப்பீடு செய்யப்படும்.
3. கிரகிப்பாளரை அடிப்படையாகக் கொண்டு கிரகித்தல் பங்குபற்றலுடன் அபிவிருத்திச் செய்தி நிர்மாணிக்கப்படும்.
4. உறுதியான திட்டத்தின் கீழ் அபிவிருத்திச் செய்தி மேம்பாடானது பரிசீலிப்பு செய்யப்படும்.

### அறிமுகம்

அபிவிருத்திக்கான செய்தி நிர்மாணம் மற்றும் மேம்பாடு மிகக் கடினமான செயற்பாடு ஒன்றாகும். இங்கு தொடர்பாடலை மேற்கொள்பவர் அன்றி கிரகிப்பாளர் முக்கியத்துவம் பெறுகின்றமையே அதற்கு காரணமாகும். அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்பாட்டில் கிரகிப்பாளராவது அபிவிருத்தித் திட்டமொன்றில் பிரதிபலனைப் பெறுபவர் குறித்த நபரே ஆவார். அபிவிருத்திச் செய்தியை அப்பிரசைக்கு முன்வைப்பதன் எதிர்ப்பார்ப்பானது, அவர்களுக்கு இவ் அபிவிருத்தி இலக்கை விளக்கப்படுத்துவதும், அவ் அபிவிருத்தித்திட்டங்களை தயாரிக்கவும் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டிற்கு அவர்களது பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளலும் அவ் அபிவிருத்திப் பிரதிபலனை அனுபவிப்பதற்கும் அவர்களுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தலுமேயாகும்.

அந்தந்தச் சந்தர்ப்பங்களில் தோன்றும் தேவைக்கு ஏற்ற வகையில் அபிவிருத்திச் செய்தியை முன்வைப்பதற்கு நேரிடும். அபிவிருத்திச் செய்திகள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஊடக கலப்புடன் தொடர்புபடும். இதனால் குறிப்பிடப்படுவது பல்வேறு ஊடக ஒருமைப்பாட்டுடன் அபிவிருத்திச் செய்திகள் முன்வைக்கப்படும் என்பதாகும். வெகுசன ஊடகத்தைப் போன்றே புதிய ஊடகமும், பாரம்பரிய ஊடகமும் இத்தளத்துடன் இணைந்து கொள்ள முடியும். இதற்காக ஏதாவது அபிவிருத்திச் செய்தி ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்பதாக மிகவும் சரியான பூரணமான ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு நேரிடும். அபிவிருத்திச் செய்தியில் கிரகிப்பாளர்கள் குறித்து ஆய்வு நடாத்துவதும், அவர்களுக்கு முன்வைக்கப்பட வேண்டிய

செய்தியுடன் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவது யாது? என்பதைச் சரியாக பொருள் கூறுவது அவசியமானதாகும். எந்த ஊடகத்தின் மூலம் செய்தியை முன்வைப்பது என்பதை தீர்மானித்தல் மிகப் பொருத்தமானதாகும். செய்தியைத் தயாரிக்க வேண்டியது, அவ் ஊடகத்திற்குப் பொருந்தக்கூடிய வகையிலாகும். அபிவிருத்திச் செய்தியானது தகவல்களை விளம்பரப்படுத்துவதும் தூண்டப்படுவதும் நோக்கமாக இருப்பினும், அவை சாதாரண விளம்பரப்படுத்தலில் இருந்து வேறுபட்டதாகும். உயர்வுநவிற்சிக்கு அமைவாக அல்லது தேவையற்ற அல்லது தூண்டப்படும் சொற்பம் அல்லது படைக்கப்பட்ட அங்கமாக உட்செலுத்தப்படுவதன் மூலம் சாதாரண விளம்பரச் செய்தி முன்வைக்கப்படும். இதனால் நுகர்வோர் ஏமாற்றத்திற்கு உள்ளாகுவர். அபிவிருத்திச் செய்தியில் இந்த அதிஉயர்நவிற்சி அல்லது தேவையற்ற தூண்டுதல் ஏமாற்றுவது செய்யப்படலாகாது. முன்வைக்கப்பட வேண்டியது மிகச் சரியானதும் உண்மையானதுமான விடயங்களேயாகும். அதற்கிடையில் கிரகிக்கும் பிரசைகளைத் தூண்டுவதற்கு அவ் அபிவிருத்திச் செய்தி சித்தியடைதல் வேண்டும். இதனால் அபிவிருத்திச் செய்திகளை மேம்படுத்துவதற்காக ஈடுபடுத்துவதற்கு நோக்குவது, சமூகவாத, மானிடவாத அபிவிருத்திக்கான உபாய வழிகளாகும்.

## பாடப்பரப்பு விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான கைகோப்புகள்

### 1. அபிவிருத்திச் செய்தியை இனங்கண்டு கொள்ளல்.

- அபிவிருத்திச் செய்தியானது உறுதியான அபிவிருத்திச் செய்தியொன்றை முன்வைத்தல்.
- அபிவிருத்தி முயற்சியில் பலனைப் பெறும் பிரசையிடம் முன்வைக்கப்படுதல்.
- அபிவிருத்திச் செய்தியானது விற்பனைப்படுத்தல் செய்தியொன்றாகும்.
- அபிவிருத்திச் செய்தியை திட்டமிடுதல், நிர்மாணித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன அபிவிருத்திச் செய்தியுடன் தொடர்புபடுகின்றன.
- அபிவிருத்திச் செய்தி தனி வியாபாரத்தின் நோக்கங்களிலிருந்து விலகியிருத்தல்.
- அபிவிருத்திச் செய்தி பல்வேறு ஊடக கலப்பொன்றினால் நடைமுறைப்படுத்தப்படுதல்.
- அபிவிருத்திச் செய்தியில் வெகுசன ஊடகத்திற்கு அத்தோடு நபர்களுக்கு இடையிலான தொடர்பாடலுக்கு பணிகளொன்று இருப்பது.
- அபிவிருத்திச் செய்தியானது அபிவிருத்தி முயற்சியில் நடைமுறைப்படுத்துவது குறித்தும் அதில் பிரதிலாபங்களைப் பெறுவதும் பல்வேறு பகுதியினரின் பங்குபற்றலுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 2. அபிவிருத்திச் செய்தி ஊடகம்

- அபிவிருத்திச் செய்தி ஊடகத்தை வேறுபடுத்திக் காட்ட முடியாது.
- பயன்படுத்தக்கூடிய எந்தவொரு ஊடகத்தையும் அபிவிருத்திச் செய்திக்காகப் பயன்படுத்த முடியும்.
- அபிவிருத்திச் செய்தியில் வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்த முடியும்.
- பிரசையுடன் மிக நெருங்கிய சம்பிரதாய தொடர்பாடல் ஊடகத்தை அபிவிருத்தித் தொடர்பாடலில் வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும்.
- அபிவிருத்திச் செய்தியானது ஊடகக் கலப்பொன்றாக ஈடுபடுத்தப்பட வேண்டும்.
- பிரபல்யமான ஊடகத்தைத் தேர்ந்தெடுப்பதன்றி இலக்கு, பிரசைகளை வெற்றிகரமாக நெருங்கக்கூடிய ஊடகத்தைத் தேர்ந்தெடுத்தலே மிக முக்கியமானதாகும்.
- வெகுசன ஊடகத்தையும், சமூக தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் ஊடகத்தையும், நபர்களுக்கிடையிலான தொடர்பாடலுக்கு பயன்படுத்தும் ஊடகத்தையும் பல்வேறு வகையாக அபிவிருத்தித் தொடர்பாடலுக்குப் பயன்படுத்த முடியும்.

- அபிவிருத்திச் செய்தி ஊடகத்தைத் தேர்ந்தெடுக்கும் போது முக்கியமாவது, அவை பிரதிபயனை அனுபவிப்போர் மற்றும் கிரகிப்பாளர்களினால் இலகுவாக பயன்படுத்தும் ஊடகமாக இருக்க வேண்டும் என்பதாகும்.

### 3. அபிவிருத்திச் செய்திகளின் ஆக்கம்

- அபிவிருத்திச் செய்தி ஆக்கத்தில் கிரகிப்பாளர்களின் பங்குபற்றலை அடிப்படையாகக் கொண்ட செய்தி முறையைப் பயன்படுத்த முடியும்.
- அபிவிருத்திச் செய்தி ஆக்கத்தில் உயர்வு நவிற்சி, தேவையற்ற தூண்டுதல் மற்றும் போலித்தன்மை என்பவற்றைப் பயன்படுத்தலாகாது.
- கிரகிப்பாளர் பங்குபற்றலை அடிப்படையாகக் கொண்ட செய்தி ஆக்கத்திலே 9 படிமுறைகள் உண்டு.

### கிரகிப்பாளர்கள் பங்குபற்றலை அடிப்படையாகக் கொண்ட செய்தி முறையின் ஆக்கப் படிமுறை

1. அபிவிருத்திச் செய்தியின் நடாத்தலுக்கு ஏற்ப பெற்றுக்கொள்ளக் கூடிய சகல தகவல்களையும் ஆய்வு செய்யவும்.
2. கிரகிப்பாளர்களின் வாழ்க்கை முறை, பற்றுள்ளோர் மற்றும் விருப்பமுடையோரைப் பகுத்தாய்வு செய்யவும்.
3. செயற்பாட்டின் தலைப்பிற்கேற்ப கிரகிப்பாளர்களின் தேவை மற்றும் அவசியம் என்பவைகளை மதிப்பீடு செய்யவும்.
4. செய்திக்கு ஏற்ப அளவீடு செய்யக் கூடிய இலக்குகளை ஆவணப் படுத்தவும்.
5. பயன்படுத்தப்படும் ஊடகத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
6. ஆக்கபூர்வமான - தூண்டுதல்கள் உபாய வழிகளைத் தீர்மானிக்கவும்.
7. செய்தியின் விசேட உள்ளடக்கங்களை ஆவணப்படுத்தவும்.
8. பூரண மதிப்பீட்டைச் செய்யவும்.
9. செய்தியின் உள்ளடக்கத்தை மீண்டும் கவனித்துப் பார்த்து வெகுசன உற்பத்தியில் ஈடுபடவும்.

A. மொத்த பிரசைகளில் நூற்றிற்கு 2.5 வீதமான இப்பிரிவினர் குறிப்பிட்ட ஒரு மாற்றத்தை உடனடியாக ஏற்றுக் கொள்வதற்குத் தயாராகவுள்ள பகுதியினர் ஆகும். இப்பிரிவினருடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது இலகுவானதாகும். இவர்களைக் கருத்துத் தலைவர்களாக கருத முடியும்.

B. மொத்த பிரசைகளில் நூற்றிற்கு 13.5 வீதமான இப்பிரிவினர் முதலாவது குழுவினைப் பார்த்து உடனடியாக மாற்றத்தை ஏற்றுக் கொள்வதற்கு தூண்டப்படும் பிரிவினராவர். இப்பிரிவினரையும் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்காக இலகுவாக சேர்த்துக் கொள்ள முடியும். இப் பிரிவினர் பிரதான பின்பற்றுபவர்களாவர்.

C. மொத்த பிரசைகளில் நூற்றிற்கு 34 வீதமான இப்பிரிவினர் கருத்துத் தலைவர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுவோர்கள் செயற்படும் விதத்தை அவதானித்து, அந் நம்பிக்கையின் அடிப்படையில் மாற்றத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஒன்றுகூடுவர். இப்பிரிவினருக்குச் சிறந்த தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இப்பிரிவினர் முதன்மையான பல்சமூகமாகும்.

D. முதல் மூன்று குழுக்களும் நவீனமாக்குதலுக்கு ஒன்று கூடிய பின்னரே இப்பிரிவினர் நவீனமாக்குதலில் ஒன்றுகூடுவர். மாற்றங்களை உடனடியாக ஏற்றுக் கொள்ளுவதற்கு விரும்பமாட்டார்கள். அதற்காக அவர்களுக்குக் குறிப்பிடப்பட்டதொரு காலம் தேவைப்படும். அத்தோடு நடைபெறுவது என்ன என்பதை ஆய்வு செய்வர். ஒரே தடவையில் மாற்றங்களை பகுப்பாய்வு செய்வது கடினமாகும்.

E. முதற் குழுக்கள் நான்கும் நவீனமாக்குதலுக்கு இணங்கினாலும் இப்பிரிவினர் எந்த வகையிலும் அதற்கு இணங்கமாட்டார்கள். அவர்களுக்கு அது தொடர்பான பாரிய பிரச்சினைகள் காணப்படும். மாற்றங்களைச் சந்தேகப்படல் மற்றும் அதில் நோக்கங்கள் மறைந்து காணப்படுகின்றன என்பதை நம்புவதற்கு இப்பகுதியினர் தூண்டப்படுவர். எந்தவொரு சமூக குழுவிற்கும் இப்பிரிவினரோடு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த முடியாது. ஆகையால் அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சி திட்டத்தில் இவர்களைத் தூண்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை முன்வைத்தலானது பயனற்றதாகும். ஆனால் அவர்கள் சமூக குழுவொன்று என்ற வகையில் இந்த மாற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுதலை தடுப்பதற்கு அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திட்டமிடுவதற்கு நேரிடும்.

மேலே குறிப்பிடப்பட்ட பிரசைகளின் குழுக்களை வகைப்படுத்தலை எந்தவொரு முழுச் சமூகத்திற்கோ அல்லது எந்தவொரு சிறிய சமூகத்திற்கோ சாற்றுதல் செய்ய முடியும். அதாவது பாடசாலையொன்றிலுள்ள மொத்த பிரசைகளையும் இம்முறையில் வகைப்படுத்தலுக்கு உட்படுத்த முடியும்.

- அபிவிருத்திச் செய்திகளை படைக்கும் உற்பத்திக் குழுக்களின் காரணிகளும் உள்ளடக்கத்துடன் தொடர்புள்ள காரணிகளும், ஊடகத்துடன் இணைந்த காரணிகளும் தாக்கத்தைச் செலுத்தும்.

- அபிவிருத்திச் செய்திகள் நிர்மாணிப்பதில் முழுமையான கிரகிப்பாளர்கள் பிரதிபலிப்பை வெளிப்படுத்தும் விதம் தொடர்பாக கூடிய அவதானத்தைச் செலுத்த வேண்டும்.

4. அபிவிருத்திச் செய்தி மேம்பாடு

- அபிவிருத்திச் செய்தியை நிர்மாணிப்பதற்கு முன்பிருந்தே அதன் மேம்பாட்டுத் திட்டத்தை நிர்மாணித்து இருக்க வேண்டும்.
- அபிவிருத்திச் செய்தி மேம்பாட்டை சரியான திட்டம் மற்றும் கால அட்டவணையுடன் செய்தல் வேண்டும்.
- எந்தளவு திட்டமிடல் நடைபெற்றாலும் அபிவிருத்திச் செய்தி தோல்வியடைவதற்கு வாய்ப்பு இருப்பதனால், மேம்பாட்டு திட்டத்தில் அதற்கு தேவையான சந்தர்ப்பங்கள் காணப்பட வேண்டும்.
- அபிவிருத்திச் செய்திகளின் மேம்பாடானது சரியான கால அட்டவணையுடன் செயற்படுத்தப்படல் வேண்டும்.
- முன்னோடியான மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி அதன் பெறுபேறுகளின்படி முழுமையான மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவது மிகவும் சிறந்த விளைதிறனுடையதாகும்.
- அபிவிருத்திச் செய்திகள் மேம்பாட்டிற்காக அது தொடர்பான விசேட முன்னோடி ஒன்று தேவை.
- அபிவிருத்திச் செய்திகள் மேம்பாட்டுடன் இணைந்து கிரகிப்பாளர்களின் பிரதிபலிப்பை பெறுவதற்கும் மதிப்பிடுவதற்குமான தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தல் வேண்டும்.
- அபிவிருத்திச் செய்தி மேம்பாட்டு திட்டமிடல் தொடர்பாக அதனுடன் தொடர்புடைய அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| **அலகு 7.0** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் (பாடவேளைகள் 55) |
| **தேர்ச்சி** | :- | அபிவிருத்தித் தொடர்பாடலின் கோட்பாடு ரீதியான அடிப்படை, தன்மை மற்றும் வலயம் சார் அனுபவங்களை, விமர்சனம் செய்து, அபிவிருத்தித் தொடர்பாடல் சிக்கல்கள் மற்றும் சவால்களை சமநிலையில் பகுப்பாய்வு செய்தல். |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 7.3 சம்பிரதாய மற்றும் நவீன அபிவிருத்தித் தொடர்பாடல் உபாய வழிகள் மற்றும் பிரசைகள் பங்குபற்றல் முறைகளை ஆய்வு செய்து முன் உதாரணங்களை விமர்சனம் செய்தல். |

**பாடவேளைகள்** :- 15

**விடய உள்ளடக்கம்** :- அபிவிருத்தித் தொடர்பாடலில் உபாய வழிகள்

1. சம்பிரதாய அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள்
2. நவீன அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள்
3. பிரசைகளின் பங்குபற்றல் முறைகள்
4. அபிவிருத்தித் தொடர்பாடல் முன் உதாரணங்கள்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- சம்பிரதாய அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகளின் சுயவடிவம் மற்றும் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய விதம் குறித்து விமர்சனம் செய்வதோடு அதனைப் பரிசீலித்துப்பார்த்தல்.
- நவீன அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகளின் சுயவடிவம் மற்றும் அவற்றைப் பயன்படுத்தக்கூடிய விதம் குறித்து விமர்சனம் செய்வதோடு அதனைப் பரிசீலித்துப்பார்த்தல்.
- அபிவிருத்தித் தொடர்பாடலில் பிரசைகளின் பங்குபற்றல் முறை களைப் பயன்படுத்துவதன் தேவை மற்றும் அதன் தன்மையைப் பகுத்தாய்வு செய்து அவற்றைப் பரிசீலித்துப் பார்த்தல்.
- அபிவிருத்தித் தொடர்பாடல் முன் உதாரணங்களை ஒப்பீட்டு ரீதியில் விமர்சனம் செய்வதோடு அவை தொடர்பான அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளல்.

## அறிமுகம்

அதிகளவிலான மக்கள் தொகையினருக்கு தொடர்பாடல் மேற்கொள்ளும்போது பயன்படுத்தும் நவீன தொடர்பாடல் முறைகளையும் மற்றும் பிரசையினால் தமது கலாசாரத்தில் நடைமுறைப்படுத்தி வரும் சம்பிரதாய அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகளையும் இணைத்து அபிவிருத்தித் தொடர்பாடல் உபாயவழி முறைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. சம்பிரதாய தொடர்பாடல் முறைகளாக அதிகளவில் கிராமப்புற ஊடகங்களே பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு மக்கள் கலைகள் அதில் உள்ளடங்கும். அத்தோடு மக்களுக்கு உரித்தான பல்வகை பாரம்பரியக் கதைகள், மக்கள் பாடல்கள், மக்கள் நம்பிக்கைகள், மதச்சடங்குகள், கலாசாரச் சடங்குகள் போன்றவற்றையும் இணைத்துக் கொள்ள முடியும். நவீன தொடர்பாடல் முறைகளாகக் கொள்ளப்படும் வெகுசன ஊடகத்தைப் போன்றே புதிய ஊடகங்களையும் அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டத்தில் கலவையாகப் பயன்படுத்தலாம். சம்பிரதாயத் தொடர்பாடல் முறைகளாகக் கொள்ளப்படும் கிராமிய நாடகம், பொம்மலாட்டம் போன்றவற்றையும் மக்கள் விளையாட்டுக்களையும் திட்டமிடும் நோக்கங்களுடனும் அபிவிருத்தித் தொடர்பாடல் ஊடகத்திற்காகப் பயன்படுத்த முடியும். அதனூடாக விசேடமாக

பிரசைகளைச் சென்றடையும், செய்திகளை மிகவும் சுமுகமானதாக ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் விருப்பமுடையவர்கள். அவ்வாறானதொரு விருப்பம் வெகுசன ஊடகங்கள் ஊடாகக் கிடைக்கும் செய்திகளுக்கு ஏற்படாது. அபிவிருத்தித் தொடர்பாடல் உபாய வழிகளைத் திட்டமிடுகையில் மொழி மற்றும் பழக்க வழக்கங்கள் போன்றவற்றின் மீது அதிக கவனம் செலுத்த நேரிடும். பிரசைகள் பங்குபற்றல் அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைந்து அபிவிருத்தித் தொடர்பாடலை செயற்படுத்த நேரிடுவதனால், பங்குபற்றல் உபாய வழிகளைப் பயன்படுத்துவது மிக முக்கியமானதாகும். ஏதேனுமோர் அபிவிருத்தித் திட்டம் தமக்காக உருவாக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வதிலும் பார்க்க, அத்திட்டமிடலை நிர்மாணிப்பதற்குப் பிரசைகளையும் இணைத்துக் கொண்டு அதனைத் தமக்குரியதாக ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக உள்ளனர். அபிவிருத்தித் தொடர்பாடல் ஆய்வு செய்வோராக மிகவும் முக்கியமாக அமைவது அது குறித்த உள்நாட்டு முன் உதாரணங்களை ஆய்வு செய்தலாகும். கடந்த பல தசாப்தங்களில் இலங்கையில் பல்வேறு வகையில் அபிவிருத்தித் தொடர்பாடல் பாத்திரத்தை நிறைவேற்றிய அரச மற்றும் பிரசைகள் நிறுவனங்கள் காணப்படுகின்றன. இந்தப் பிரசைகள் நிறுவனங்களானது (அரச சார்பற்ற நிறுவனங்களாக இவற்றை குறிப்பிடுவது பிழையான வரைவிலக்கணமாகும்.) உண்மையிலேயே பிரசைகளுக்குரியதாகும். நாடொன்றின் அபிவிருத்தி முயற்சியில் சமூக பங்களிப்பானது சமூக நிறுனங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அரசாங்கமானது பொது மக்களின் வரிப்பணத்தின் மூலம் அபிவிருத்தியில் ஈடுபடுவதோடு, பிரசைகளின் நிறுவனம் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முயற்சியில் நிதியை உருவாக்கி உள்நாட்டு அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடுகிறது. அவற்றுள் பிரகாசிக்கும் பிரசைகளின் நிறுவனங்கள் இரண்டு என்றால் அவை சர்வோதயம் மற்றும் சணச இயக்கங்களேயாகும். சர்வோதய இயக்கம் என்பது சிறிய அளவில் சமூக அபிவிருத்திப் பணியொன்று விசாலமான தேசிய வியாபாரமொன்றாக மாறியமையாகும். அதன் ஊடாக கிராமிய மட்டத்தில் பிரசைகள் பங்குபற்றலை உச்ச அளவில் பெற்றுக் கொண்டு, தொண்டர் ஊழியர்களை ஒன்றிணைத்து, கிராமிய பொருளாதாரங்கள், சமூக மற்றும் கலாசார அபிவிருத்திச் செயற்பாடுகள் கடந்த பல தசாப்தங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு இணையாகக் கூறக்கூடிய வேறு பிரசைகள் அபிவிருத்தி நிறுவனமொன்று இலங்கையில் காணப்படுமாயின் அது சணச இயக்கம் மட்டுமேயாகும். சணச இயக்கம் பிரசைகளுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களை அபிவிருத்தி செய்யும் சிறிய பணிகள் விசாலமான பிரசைகளின் இயக்கமொன்றாக மாறியமையாகும். அது மிகச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளதோடு, கிராமிய நிதி வழங்கல் துறையின் பலம்மிக்க அமைப்பு ஒன்றாக மாறியுள்ளது. அபிவிருத்தித் தொடர்பாடலை உபயோகப்படுத்தி தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடும் அரச நிறுவனங்கள் பல உண்டு. காலத்திற்குக் காலம் அவற்றின் பெயரோ முகப்பலகையோ மாறுபடும். சில நிறுவனங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படுவதோடு மேலும் சில மூடப்படும். அதற்கிடையில் சமுர்த்தி இயக்கம் தற்போது இலங்கை முழுவதும் விசாலமான தளமொன்றாக செயல்படுவதோடு பிரசைகளைப் பலமுள்ளவராக்கி உருவாகிறது. அதற்காக அவர்களுக்கு தேவையான கல்வி, தொழில் பயிற்சி வீடு அபிவிருத்திகள் போன்றவை ரீதியாக பல்வேறு துறைகளின் ஊடாக சமுர்த்தி இயக்கம் செயற்பட்டு வருகிறது. அவ்வாறான தேசிய மட்டத்தில் பிரசைகளின் அபிவிருத்தி இயக்கமொன்று குறித்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வது அதிமுக்கியமாகும். அதே போன்று இலங்கையில் சுகாதார மட்டத்தை உயர்த்துவதற்கு தசாப்தங்களாக பல்வேறு வகையில் சுகாதாரத் தொடர்பாடலில் ஈடுபடும் சுகாதாரக் கல்விப் பணியகங்கள் மக்களின் சுகாதார அறிவை உயர்த்தி, சமூகத்தைச் சுகாதாரம் மிக்கதாக்கும் அபிவிருத்தித் தொடர்பாடல் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளது. அதனால் சுகாதாரக் கல்விப் பணியகத்தின் நடவடிக்கைகளை ஆய்வு செய்தலும் அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த பயிற்சி ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு முக்கிமானதாகும். சர்வோதய, சணச, சமுர்த்தி மற்றும் சுகாதாரக் கல்விப் பணியகம் முதலான நிறுவனங்கள் நான்கு குறித்தும் ஒருவருக்கு ஒவ்வொரு வகையிலும் தனிப்பட்ட எண்ணங்கள் காணப்படக்கூடும். அவ் எந்தவொரு நிறுவனத்திலும் வெற்றி போன்றே வீழ்ச்சியடைதலும் காணப்பட முடியும். இவ்வெற்றிகளைப் போன்றே வீழ்ச்சியையும் ஆய்வு செய்வதோடு, எதிர்கால தேசிய அபிவிருத்தி முயற்சிகளை

நோக்கி ஈடுபடும் புதிய சமூகம் ஒன்றை உருவாக்குவதில் அபிவிருத்தித் தொடர்பாடலை உபயோகப்படுத்துவதன் உபாய வழிகளைப் பரீட்சித்துப்பார்த்தல் வேண்டும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

**1. சம்பிரதாய அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள்**

- பிரசைகளினால் காலங்காலமாக உபயோகப்படுத்தப்படும், அவர்கள் விருப்பம் தெரிவிக்கும், அவர்களுக்கு நெருங்கிய தொடர்பாடல் முறைகளே இதன் மூலம் கருதப்படுகிறது.
- பிரசைகள் தொடர்பாடல் முறைகள் கிடைக்கப்பெறும் செய்திகள் பிரசைகளினால் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- நவீன தொடர்பாடல் முறைகளை விட சம்பிரதாய தொடர்பாடல் முறைகள் மூலம் அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.
    - பொம்மலாட்ட நாடகம்
    - நாட்டார்/ கிராமிய நாடகம்
    - நாட்டார் பாடல்
    - வீதி நாடகம்
    - தெவொல்
    - சொக்கரி
    - பலி
    - நாடகம்
    - நிருத்தியம்
- சம்பிரதாய அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகளில் பிரசைகளுக்கு பல்வேறு அபிவிருத்திச் செய்திகளை முன்வைக்க முடியும்
- அவ்வாறான அபிவிருத்திச் செய்தியொன்று பிரசைகளுக்கும் மிகவும் நெருக்கமானதாக விளங்கும் அத்துடன் ஏற்றுக் கொள்ளவும் படும்.

**2. நவீன அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள்**

- நவீன தொழிநுட்ப அபிவிருத்தியுடன் இணைந்து செயல்படுத்தக்கூடிய அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள் இதில் உள்ளடங்கும்.
- சம்பிரதாய தொடர்பாடல் முறைகளுடன் கூட்டிணைந்து நவீன தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்த நேரிடும்
- நவீன தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தும்போது கிரகிப்போரைச் சரியாக இனங்கண்டு அத்தொடர்பாடல் நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும்
- பயன்படுத்தும் மொழி இச்சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமானது
- நவீன தொடர்பாடல் முறைகளை அபிவிருத்திக்காக பயன்படுத்துவதை அது தொடர்பான நிபுணத்துவம் உடையோரே திட்டமிடல் வேண்டும்.
- நவீன தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றும் பிரசைகள் அவற்றினூடாகப் பெறும் செய்திகள் குறித்து மிகவும் ஆராய்ந்து பார்ப்பார்.
    - திரைப்படம்
    - வீடியோ நிகழ்ச்சிகள்
    - பத்திரிகைகள்
    - சஞ்சிகைகள்
    - விளம்பரங்கள்
    - துண்டுப்பிரசுரம்
    - புத்தகங்கள்
    - வானொலி நிகழ்ச்சிகள்
    - கலந்துரையாடல்கள்
    - கருத்தரங்குகள்

3. **பிரசைகள் பங்குபற்றல் வழிமுறைகள்**
- அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சி திட்டங்கள் திட்டமிடப்படுவது பிரசைகளுக்காக என்பதால் பிரசைகளின் பங்குபற்றலானது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவசியமானதாகும்
  - திட்டமிடல்
  - பணிகளைப் பகிர்ந்து கொள்ளல்
  - வேலை செய்தல்
  - கட்டளை
  - மதிப்பிடுதல்
- அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டமொன்றினால் பலனைப் பெறுவோர் அதன் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பங்குபற்ற வேண்டும்
- நவீன நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பிரசைகளைப் பங்குபற்றச் செய்வது இலகுவான காரியம் அல்ல
- பங்குபற்றல் வழிமுறைகளைப் பயன்படுத்துவதனால் உற்பத்தித்திறன் உயர்வடையும்
- பங்குபற்றல் வழிமுறைகளைப் பயன்படுத்துவதனால் அவ் அபிவிருத்திப் பணிகள் தமக்கானவை என்ற உணர்வு அப்பிரசைகளிடம் உருவாவதால், அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்கள் தூண்டப்படுகின்றனர்.

மக்கள் பங்குபற்றலை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரசைகளின் பங்குபற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்.

1. **கூட்டுறவுச் சங்க இயக்கம்**

சுயாதீன இயக்கம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டது. கிராமிய மக்களின் பணத்தைச் சேமித்தல் மற்றும் கடன் வழங்கல் என்பன இதன் ஆரம்பப் பணிகளாயின. கிராமங்கள் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிக்கனம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்கள் சங்கங்கள் 1940ம் ஆண்டுகளில் பரந்த பிரிவுகளில் பரவிக் காணப்பட்டது. இரண்டாம் உலகப் போர் காலத்தில் அரசாங்கத்தின் உணவுப் பண்டங்களை விநியோகிக்கும் அமைப்பாகக் காணப்பட்டது கூட்டுறவாகும். கூட்டுறவானது கட்டியெழுப்பப்பட்டது கிராம வாசிகளின் பங்கு நிதியின் சேர்ப்பிலாகும். நாடு பூராகவும் கூட்டுறவுச் சங்கம் பரந்து காணப்பட்டாலும் அவை ஒவ்வொன்றும் வேறுவேறான சங்கங்களாக செயற்பட்டன. 1956 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல்வேறு சேவைகள் கூட்டுறவு சங்க முறையால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் நோக்கமாகக் காணப்பட்டது கூட்டுறவு முறையை மேலும் முறைசார்ந்ததாக ஆக்குவதேயாகும். பல்வேறு சேவைகளாக உற்பத்திகள், விற்பனை, விநியோகம் மற்றும் கொள்வனவு செய்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் என்பன உள்ளடங்கும். 1970 ஆம் ஆண்டில் பல்வேறு சேவைகளுடன் கூடிய கூட்டுறவுச் சங்கமொன்றில் அதிகார பிரதேசமாக காணப்பட்டது தேர்தல் தொகுதியொன்றாகும். அதற்கமைய பல சிறுசங்கங்கள் பல்வேறு சேவையினாலான கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உருவாக்கப்பட்டன. இச் சங்கத்திற்காக பணிப்பாளர்களை நியமிக்கும் அதிகாரம் அரசியல் அதிகாரிக்கு காணப்பட்டதனால் அங்கு பிரசைகளின் பங்குபற்றலானது பின்னடைந்து போயின. இதன் பெறுபேறாக கூட்டுறவு இயக்கத்தை மக்களுக்கான மக்கள் இயக்கமொன்றாக அல்லாமல் அரசின் இயக்கமொன்றாக கருதுவதற்கு சமூகம் பழக்கப்பட்டது. ஆனாலும் அரசின் பங்கீட்டுணவு விநியோகமும் வேறு பங்கீட்டுணவு முறைகள் மற்றும் மானிய முறைகளைச் செயற்படுத்துவதும் கூட்டுறவினால் செயற்படுத்தப்பட்டமையினால், கூட்டுறவானது கிராம மட்டங்களிலான அமைப்பொன்றாக நாடளாவிய ரீதியில் இயங்கியது. பிற்காலத்தில் பங்கீட்டுணவு முறையானது இரத்து செய்யப்பட்டாலும் கூட்டுறவு இயக்கமானது தேசிய பொருளாதார மற்றும் சமூகத்தின் ஒரு பகுதியாகவும் இயங்கி வந்தது. ஒரு வகையில் அரசினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு இயக்கமானது உள்வாரியான வணிகத்தில் பெருமளவிலான பகுதியைக் கைப்பற்றி இருந்ததோடு, வேறு துறைகளிலும் கூட்டுறவு இயக்கம் பரந்து காணப்பட்டது. அரசினால்

கூட்டுறவு அமைச்சு மற்றும் கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்படுவதைக் காரணமாகக் கொண்டு பெரும்பாலும் கூட்டுறவு இயக்கமென்பது அரசின் இயக்கமொன்று என்ற கருத்து சமூகத்தில் காணப்பட்டது. ஆனால் அது உண்மையில் அரச அனுசரணையுடன் இயங்கும் மக்களின் இயக்கமாகும். தேசிய அபிவிருத்திக்காக பிரசைகளின் பங்குபற்றல் இயக்கமொன்று என்ற வகையில் கூட்டுறவு இயக்கத்தை மேலும் நடாத்திச் செல்வதற்குப் பிரசைகளின் பங்குபற்றலைப் பெருமளவில் பெற்றுக் கொள்வதன் மற்றும் கொடுப்பதன் செயல் ஒழுங்கொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## 2. கிராம அபிவிருத்திச் சங்க இயக்கம்

இலங்கையில் அரசியல் சுதந்திரம் ஏற்பட்டதோடு கிராம அபிவிருத்தி தொடர்பாக ஏற்பட்ட அரசியல் அவதானத்தின் பேரில் கிராம அபிவிருத்திச் சங்க இயக்கமானது 1948 ஆம் ஆண்டில் கிராம அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டதோடு ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் 1940 ஆம் ஆண்டுகளில் கிராம அபிவிருத்தி இயக்கத்தின் நோக்கமாகக் காணப்பட்டது கிராமிய ரீதியில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் அதற்காக கிராமிய மக்களின் பங்குபற்றலுடன் கூடிய இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவதுமேயாகும். இது குறித்து கிராமிய மக்கள் ஈர்க்கப்பட்டது அவர்களுக்கு கிராமிய மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் இணைந்து கொள்ளக்கூடிய இலகுவான அமைப்பொன்றாக உருவாக்கப்பட்டமையினாலாகும். இதன் பெறுபேறாக 1955 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6200 கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் ஏறத்தாழ 2200 மகளிர் சங்கங்களும் உருவாக்கப்பட்டிருந்தன.

கிராமிய மக்களின் அன்னியோன்ய பங்குபற்றல் மூலம் கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு கிராமிய தலைமைத்துவத்தை செயற்பாட்டு மட்டத்திற்கு கொண்டு வருவதன் பொருட்டு கிராமிய அபிவிருத்தி இயக்கம் துணையாகக் காணப்பட்டதோடு, அதற்காக அரசின் நேரடியான ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றது. 1956 ஆம் ஆண்டுகளில் இது எந்தளவிற்கு வியாபித்துக் காணப்பட்டது என்றால் கிராமிய மட்டங்களில் பல்வேறு வகையான நடவடிக்கைகளுக்காக செயற்படுத்தும்போது அதற்காக பயன்படுத்தப்பட்ட கிராமிய அமைப்பாக இருந்தது கிராமிய அபிவிருத்தி சங்கமேயாகும். உணவு உற்பத்தி, தெருக்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், காணி மற்றும் உள்ளூராட்சி நடவடிக்கைகள் என்பவற்றைப் போன்றே பொலிசாருக்கு உரித்தான பணிகளுக்காகவும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்புபட்டன. மிகவும் குறுகிய காலத்தில் இது கிராமிய மட்டத்தில் பிரபல்யமான இயக்கமொன்றாக மாறியது இதனூடாக கிராமிய தலைவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற பெறுமதி மிக்க சந்தர்பபத்தினாலாகும். 1970 ஆம் ஆண்டுகளில் 500 கிராமங்கள் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் விசேட அபிவிருத்திச் செயற்திட்டமொன்றிற்காக தெரிவு செய்யப்பட்டன. அத்தோடு அக்காலத்தில் காணப்பட்ட அரசினால் கிராம அபிவிருத்திக்கு கிராமிய அபிவிருத்தி சங்கங்களுக்கு விசேட இடமொன்று வழங்கப்பட்டு எல்லா கிராமங்களிலும் கிராமிய அபிவிருத்திச் சங்கம் மற்றும் மகளிர் சங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் இலக்காக 20,000 கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மகளிர் சங்கங்களை தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டதோடு, கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்களுக்கு சமாதான நீதவான் பதவியை வழங்குவதாக கிடைக்கப்பெற்ற தகவல் காரணமாக ஒழுங்கான திட்டங்களுக்கு புறம்பாக சங்கங்கள் அமைக்கப்பட்டன.

எப்படிப்பட்ட குறைபாடுகள் காணப்பட்டாலும் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினால் கிராமிய மட்டங்களில் அபிவிருத்திக்காக செய்யப்பட்ட சேவை சொற்பமானதல்ல. தேசாபிமானத்தைக் கட்டியெழுப்புதல், தேசிய பழக்க வழக்கங்களின் மேம்பாடு, பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் வீதிகளை நிர்மாணித்தல், கிணறு மற்றும் சனசமூக நிலையங்களைக் கட்டியெழுப்புதல், சிரமதான நடவடிக்கைகள் மற்றும் கைப்பணி முறைகள் மற்றும் சுகாதார அபிவிருத்தி ஆகியவை கிராமத்திற்குக் கிடைக்கப்பெற்ற பயன்களாகும். கிராமிய

அபிவிருத்திச் சங்கங்கள் மக்களின் இயக்கம் என்ற வகையில் மக்களின் பங்குபற்றலில் நடாத்தப்பட்டதோடு, மக்களின் அரசியல் அபிப்பிராயங்களிலிருந்து விளங்குவதற்கு இச்சங்கங்களுக்கு முடியாமல் போனது. அதனால் பிற்காலத்தில் இவை பொதுவாக கிராமங்களின் முன்னேற்றத்திற்காக கிராமிய சாதாரண பிரதிநிதித்துவத்தில் தாபிக்கப்பட்ட மக்களின் இயக்கத்திற்குப் பதிலாக அரசியல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டமைந்த இயக்கமாக அமைந்தது. அத்தோடு இப்பிரிவினர் கிராமத்தின் சம்பிரதாயபூர்வமான அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டவர்களாவார். அதனால் கிராமத்தில் உண்மையான வறியவர்களின் தேவைகளுக்காக இச்சங்கங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் சொற்பமானதாகும். ஆனால் பொதுவாக கிராமங்களில் அதிகளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் பிரதிபலனாக பிற்காலத்தில் கிராமிய அபிவிருத்தி சங்க இயக்கமானது இடைநிறுத்தப்பட்டது. ஆனாலும் இன்றும் அதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாமல் போகவில்லை.

## 3. பிரதேச அபிவிருத்தி சபை இயக்கம்

1971 ஆம் ஆண்டில் இவ் இயக்கமானது திட்டமிடல் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு உரித்தான அதிகார பிரதேசமானது மாகாண சபை அதிகாரப் பிரதேசமாகும். அதாவது அனைத்து மாகாண சபை அதிகார பிரதேசத்திற்கும் ஒன்று என்ற அடிப்படையில் பிரதேச அபிவிருத்திச் சபையானது தாபிக்கப்பட்டது. சகல சபைக்கும் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற வகையில் பட்டதாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். பிரதேச அபிவிருத்திச் சபையானது மக்கள் பங்குபற்றுதலை அடிப்படையாகக் கொண்டு அப்பிரதேசத்தில் அபிவிருத்தி அடிப்படைகளை மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டதாகும். அதனால் பிரதேசத்தில் காணப்படும் பல்வேறு சமூக அமைப்புகளினதும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ பங்குபற்றலுடன் சபையானது அமைந்து காணப்பட்டது. இதற்காக கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சமூக சபைகள், பிரதேச ரீதியிலான கூட்டுறவு, பெண்கள் சங்கங்கள், விவசாய சபை போன்ற பல்வேறு சமூக அமைப்புக்களின் தலைவர்கள் அல்லது செயலாளர்களும், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய சேவை உத்தியோகத்தர்கள், விவசாய ஆலோசனையாளர்கள் போன்ற அரசின் உத்தியோத்தர்களும் நியமிக்கப்பட்டனர். இதன் தலைவராக இருந்தவர் பிரதேச உதவி மாவட்ட அதிபராவார். அபிவிருத்தி உத்தியோகத்தர் அதன் செயலாளரானார். பிரதேசத்திற்கு உரித்தான உள்ளூராட்சி அமைப்பின் தலைவர் இதன் உபதலைவரானார்.

பிரதேசத்தின் வளங்களை உபயோகப்படுத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும், அதற்காகப் பிரசேத்தில் தொழிலற்ற இளம் பிரிவினரை ஒன்றிணைப்பதுவும் பிரதேச அபிவிருத்திச் சபைகளின் செயற்பாடாகக் காணப்பட்டது. இதன் மூலம் பிரதேச இயக்கங்களை அதிகளவில் ஆரம்பிக்க முடிந்தது.

பிரதேச அபிவிருத்திச் சபையானது கிராமிய அபிவிருத்தித் துறையில் மிகுந்த வரவேற்புடைய அமைப்பொன்றாகக் காணப்பட்டது. அதற்காக மக்களின் பங்குபற்றல் நிறைவாகக் கிடைக்கப்பெற்றது. 1975 ஆம் ஆண்டுகளில் இந்நிகழ்ச்சித்திட்டம் நடுத்தர வியாபாரத்தை ஆரம்பிப்பதில் ஈடுபட்டது. அதற்கென அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் ஒன்று என்ற ரீதியில் அமைக்கப்பட்டதோடு, அதன் தலைவராகியவர் அரசியல் தலைவராவார். இதன் பெறுபேறாக பிரதேச அபிவிருத்திச் சபை மீது அரசியல் வழிநடத்தல்கள் பரவியது. அதன் பெறுபேறாக பிரதேச அபிவிருத்திச் சபை மீது அரசியல் நெறிப்படுத்தல் பரவியது. அதன் விளைவாக பிரதேச அபிவிருத்தி சபை என்பது அரசியல் இயக்கம் என்ற அடையாளத்தைப் பெற்றது. அடுத்ததாக அதிகாரத்திற்கு வந்த அரசு இதனால் பிரதேச சபை இயக்கத்தைக் கைவிட்டது. இதனால் பிரதேச அபிவிருத்திச் சபையின் காட்சியானது எந்தளவிற்கு மிக உயர்ந்ததாக இருந்தாலும்

அதன் நடவடிக்கைகள் பின்னடைந்தன. மாறாக அது அரச நிறுவனமொன்றாகியமையால் மக்களின் பங்குபற்றலுடன் கூடிய நிறுவனமாக மாறியது. இதனால் பிரதேச அபிவிருத்திச் சபை முறையானது பிற்காலத்தில் இரத்தாகியது.

## 4. கிராமோதயச் சபை இயக்கம்

மக்களின் பங்குபற்றலைப் பெற்றுக்கொண்டு, கிராமிய மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக 1977 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட புதியதோர் பிரசைகளின் பங்குபற்றலிலான அமைப்பாகும். அதன் அதிகார பிரதேசமானது கிராம உத்தியோகத்தரின் பிரிவாகும். ஏதேனும் கிராம சேவை அதிகார பிரதேசமொன்றில் காணப்படும் அனைத்து பிரசைகளின் அமைப்புக்களின் தலைவர்கள் கிராமோதய சபையின் தலைவர்களாகினர். கிராமோதய சபையின் தலைவர் அதற்கு மேலுள்ள பிரதேச அபிவிருத்தி சபையின் அங்கத்தவர் ஒருவராவார். பிரதேச சபையின் அதிகார பிரதேசமாவது உப மாவட்ட அதிபர் பிரிவாகும். பிரதேச சபையின் தலைவர் அங்கத்துவ தேர்தல் மூலம் தேர்வாவதோடு உப மாவட்ட அதிபரே செயலாளராவார்.

கிராமோதய சபையின் எதிர்பார்ப்பாக அமைந்தது கிராமிய மக்களின் பங்குபற்றல் மூலம் கிராமிய மட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மிகவும் செயன்முறையாக செயற்படுத்துவதாகும். அவ்வாறு இருப்பினும் கிராமிய மட்டத்தில் பிரசைகளின் அமைப்புக்களின் அதிகாரம் கிராமிய பிரபுக்களின் கைகளுக்கு மாறியமையும் அதன் அங்கத்துவத்தின் மூலம் கிராமோதய சபை தாபிக்கப்பட்டமையினாலும் கிராமத்து மக்களின் உண்மையான பங்களிப்பை கிராமோதய சபை இழந்தது. அவ்வாறு கிராமிய மட்டத்தில் பல்வேறு பிரசைகளின் அமைப்புக்களிலும், கிராமோதய சபையிலும் பிரதேச சபையிலும் உள்ள பதவிகளுக்கு நபர்களைத் தேர்ந்தெடுக்கையில் குறுகிய அரசியல் தலையீடுகள் நுழைந்தமையினால் அது சங்கங்கள் அனைத்தும் இறுதியில் பிரசைகளின் அமைப்புகளுக்கு பதிலாக அரசியல் அமைப்புக்களின் சாயலைப் பெற்றன. இதனால் மிகவும் வெற்றிகரமான மாதிரியொன்றினால் ஆரம்பிக்கப்பட்ட கிராமோதய சபை முறையானது பிற்காலத்தில் இல்லாமற்போனது.

## 5. அபிவிருத்தி தொடர்பாடல் முன்மாதிரிகள்

- எந்தவொரு நாட்டிலும் அபிவிருத்தித் தொடர்பாடல் முன்மாதிரி காணப்படுகிறது.
- இலங்கையிலும் அரச மற்றும் பிரசைகளின் மட்டத்தில் அபிவிருத்தித் தொடர்பாடல் முன்மாதிரி காணப்படுகிறது.
- அரச முன்மாதிரிகள் இரண்டும், பிரசைகளின் முன்மாதிரிகள் இரண்டும் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.
  - சர்வோதய இயக்கம் (பிரசைகள் அமைப்பொன்றாகும்)
  - சணச இயக்கம் (பிரசைகள் அமைப்பொன்றாகும்)
  - சமுர்த்தி இயக்கம் (அரச அமைப்பொன்றாகும்)
  - சுகாதாரக் கல்வி சேவைப் பணியகம் (அரச அமைப்பொன்றாகும்)
- அரச அல்லது பிரசைகள் அடிப்படை அமைப்புக்களின் நோக்கம் உள்நாட்டு அபிவிருத்தியாகும்.
- ஒவ்வொரு அமைப்புக்களும் பல்வேறு தந்திரோபாயங்களைப் பின்பற்றுகின்றன.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகள் இவ் அமைப்புக்களினால் பயன்படுத்தப்படுகின்றன.
- பிரசை ஒருவரின் சக்தியே இவ் அமைப்புக்களின் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படையாகும்.
- இவ் அனைத்து அமைப்புக்களிலும் வெற்றிகளும் தோல்விகளும் காணப்படுகின்றன.
- சமூகம் சலனமடைவதால் அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் சிலவேளைகளில் அவசியமான இலக்கை அடைய முடியாமல் போகின்றன.

## 1. சர்வோதய இயக்கம்

கல்வியைப் பரிசீலித்துப் பார்ப்பதன் பெறுபேறாக ஆரம்பிக்கப்பட்ட சர்வோதய இயக்கத்துக்கு 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 07 ஆம் திகதி அரை நூற்றாண்டு பூர்த்தியாகியது. ஐந்து தசாப்தங்களாக இலங்கைச் சமூகத்தின் அனைத்து குழுக்களுக்கிடையிலும் நேரடியாக காணப்படுவதற்கு சர்வோதயத்திற்கு முடியுமானது அதற்கே உரித்தான பல குணாதிசயங்களினாலாகும். உள்நாட்டு சமூகம், கலாசாரம், சற்தர்ம பெறுமதிகளுடன் பிரசைகளுக்கிடையே சென்று, அவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகளை இனங்காண்பதுவும், பிரசைகளுக்கு கல்வியைப் பெற்றுக் கொடுத்து அவர்களை உயிரூட்டுதல், பிரசையை ஒழுங்கமைத்தலினால் மற்றும் பிரசைக்கு உரித்தான வளங்களை உபயோகப்படுத்தி சுயசக்தி மற்றும் ஒற்றுமையினூடாக பிரசைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பிரசைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட வழிகாட்டி, பிரசையின் நம்பிக்கையை வெல்வதற்கும் சர்வோதயத்தின் இடைவிடாத பயணத்திற்கும் காரணமாக அமைந்தது.

அத்தோடு இலங்கையின் சமூகத்தில் ஏற்பட்ட பல்வேறு சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாறுதல்கள் சமூக தேவைப்பாடு மற்றும் சவால்களை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு தேவையான சந்தர்ப்பங்களில் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் தத்துவங்களை மாற்றாமல் உபாய வழிகளை மாற்றி இனங்கள், சமயங்கள், சாதிகள், வகுப்புக்கள், கட்சிகள் மற்றும் தேச எல்லைகள் போன்ற குறுகிய எல்லகளுக்கு உட்படாமல் பின்பற்றிய செயற்பாடுகள் சர்வோதயத்தின் நீடிப்பிற்கு காரணியாகியது.

### ஆரம்பம் மற்றும் அறிவித்தல்

சர்வோதய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது, 1958 ஆம் ஆண்டில் கொழும்பு நாலந்தா கல்லூரியின் சமூக சேவை சங்கம் மற்றும் கிராமிய அபிவிருத்தி மற்றும் வீட்டுக் கைத்தொழிற் திணைக்களம் என்பன இணைந்து குருணாகல் மாவட்டத்தில் பண்டுவஸ்நுவர, ஹெட்டிபொல வருமான கட்டுப்பாட்டு பிரிவில் அமைந்துள்ள கனதொலுவ எனப்படும் சாதியென சமூகத்தினால் தாழ்ந்த ஒதுக்கப்பட்ட மக்கள் தொகுதியினரை உயர்த்துவற்காக நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் சேவை முகாம் இயக்கத்தினாலாகும். இக்கிராமத்திற்கு பாதைகள் அமைத்து, வீடுகளைக் கட்டியெழுப்பி, பாடசாலை ஒன்றை அமைத்து, கிணறுகளை அமைத்து, வீட்டு தோட்டங்களில் உற்பத்திகளை ஆரம்பித்து, பிள்ளைகளின் தலைமயிரை வெட்டி, குளிப்பாட்டி, சுத்தப்படுத்தி, சுகாதார நிலையங்களை நடாத்தி ஆரம்பிக்கப்பட்ட முகாம் இயக்கமானது 1961 ஆம் ஆண்டில் சர்வோதய சிரமதான இயக்கமாக அறிவிக்கப்பட்டது. சர்வோதய என்னும் சொல்லின் பொருள் அனைவரினதும் உதயம் என்பதாகும்.

1958 - 1968 முதலாவது தசாப்தத்தில் கல்வி மற்றும் நலன்புரி பிரவேசமும் 1969 - 1978 இரண்டாவது தசாப்தத்தில் கல்வி, நலன்புரி மற்றும் அபிவிருத்தி பிரவேசமும், 1979 - 1988 மூன்றாவது தசாப்தத்தில் சமூக மாற்றத்தை மேம்பாடு செய்யும் பிரவேசமும், 1989 - 1998 நான்காவது தசாப்தத்தில் சுயபலம், ஒற்றுமை மற்றும் சுய நிதி மூலம் முழுமையான சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதன் பிரவேசமும், 1999 - 2008 ஐந்தாவது தசாப்தத்தில் சுயசக்தி, ஒற்றுமை மற்றும் சுயாதீன நிதி மூலம் சமாதானத்தை ஏற்படுத்தி அபிவிருத்தியடைந்த சமூகம் ஒன்றை நிர்மாணிப்பதன் பிரவேசமும் முதலான பிரவேசங்களினால் சர்வோதய அபிவிருத்தி செயற்பாடு நடாத்தப்பட்டது.

### நோக்கு

சர்வோதய இயக்கத்தில் பரிபூரண நோக்கங்கள், நிலையான நோக்கு அதாவது வறுமையற்ற சமூகம் என்பதாகும். வறுமை மற்றும் செல்வந்தம் என்பன இரண்டும் இரு அந்தங்களாகும். வறுமையானது உயர்ந்து செல்லும் அளவிற்கு செல்வந்தம் உயர்ந்து செல்வதுவும், செல்வந்தம் குறைந்து செல்லும் அளவிற்கு வறுமையும் குறைந்து செல்லும்

என்பது சர்வோதய இயக்கத்தின் பகுப்பாய்வாகும். பிரசையின் அடிப்படை தேவை மற்றும் பிரசைகளின் தேவைகளை பூர்த்திசெய்யக்கூடியவாறு வளங்கள் உரிய முறையில் பகிரப்படாமை மற்றும் கைப்பிடியளவானோரிடையே செல்வம் மற்றும் வளங்களை மையமாகக் கொள்ளப்படுகின்றமையே சமூக வேறுபாடுகளுக்கு அடிப்படைக் காரணமாகும் என சர்வோதயம் நம்பியது. அனைவரினதும் உதயம் அதாவது சர்வோதயத்திற்கான வேறுபாடுகள் குறைவடைதலும், அனைவரினதும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் வளங்கள் பகிரப்படுவதுவும், அதனை மனிதத்தன்மை மற்றும் ஆன்மீக பெறுமதிகளை மனிதனிடம் கட்டியெழுப்புவதன் மூலம் நிறைவேற்ற முடியும் எனவும் சர்வோதயம் கருதுகிறது.

இதன்படி சர்வோதய இயக்கம் மூலம் பிரசையுடன் நடைமுறைப்படுத்தப்படும் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் பின்வரும் ஏழு படிமுறைகளினால் பரவியுள்ளது.

1. பிரசையின் அபிவிருத்தி
2. குடும்பமொன்றின் அபிவிருத்தி
3. கிராமத்தின் அபிவிருத்தி
4. நகரத்தாரின் அபிவிருத்தி
5. நாட்டின் அபிவிருத்தி
6. உலகத்தின் அபிவிருத்தி

## 2. சணச இயக்கம்

1906 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பண்டைய கூட்டுறவு சங்கங்கள் விசேட சிக்கனம் மற்றும் கடன் வழங்கும் சங்கங்களாக சுட்டிக் காட்டப்படுகின்றன. அவ் இயக்கம் நீண்ட காலமாக ஒழுங்கீனமாக மற்றும் இயங்காமல் காணப்பட்டதோடு, 20 ஆவது நூற்றாண்டின் இறுதிப் பாதியில் சிக்கனங்கள் மற்றும் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களாக மாறின. கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் மீள்வாழ்வு பெற்றது அவ்வாறானதே. அதனால் சணச பெயர் முழுமையான இயக்கத்தை அறிமுகப்படுத்தும் இயக்கப் பெயர் ஒன்றாக இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் பயன்படுத்தப்படும். முழுமையாக நோக்கும்போது சணச என்னும் கூட்டுறவு கொள்கைகள் மற்றும் நற்தர்மங்களிலும் நிர்மாணிக்கப்பட்டதோடு பொருளாதாரத்தின் நடவடிக்கைகளில் மக்களின் ஒத்துழைப்பும், மரபுரிமையையும் உறுதிப்படுத்துவதனால் அங்கு பிரதிபலாபம் அடிப்படையான அங்கத்துவருக்காக பொதுவாக கிராமிய பிரதேசத்திற்குப் பெருக்கெடுத்துச் செல்வதற்கும் திட்டமிடும் உபகரணமாகும்.

1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதன் பின் காணப்பட்ட அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரச நலன்புரியாளரை மறைக்கும் பொருளாதார முறைமைக்கு பதிலாக மூலதனத்தை பிரதான காரணியாகக் கொண்ட மற்றும் இலாபங்களை உச்சப்படுத்தும் நோக்கத்தை இலக்காகக் கொண்ட திறந்த சந்தை முறை 1977 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. திறந்த பொருளாதாரம் பிரவாகத்தின் கீழ் விசாலமான மூலதன உரிமையாளர்கள் பொருளாதாரத்தின் உரிமையாளராகி முழுப் பயனும் அவர்களிடையே பெருக்கெடுத்து பெரும்பாலான பிரசைகளின் பொருளாதாரத்தின் முயற்சியாளர்களானமை இந்த யுகத்தின் தனித்துப் பிரகாசிக்கும் நிகழ்வு ஒன்றாகும். 1906 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் கிராமிய அபிவிருத்தியில் பாரிய சேவையொன்றை நிறைவேற்றிய, இருப்பினும் பிற்காலத்தில் ஒழுங்கற்ற மற்றும் செயற்படாத நிலையிலிருந்த சிக்கன மற்றும் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் சணச எனும் புதிய அமைப்பின் கீழ் 1978 ஆம் ஆண்டில் உருவாகியது இப் பொருளாதார மற்றும் சமூக பின்புலத்திலாகும். இது வரையில் சணச சங்கங்கள் 8500 இற்கு கிட்டிய அளவில் இலங்கையில் செயற்திறனுடன் காணப்படுவதோடு, அவை கிராமிய மட்டத்தில் கடன் வழங்கலில் பாரிய சேவையொன்றை நிறைவேற்றுகிறது. இதன் பயன் குறித்து சர்வதேச மட்டத்தில் சான்றிதழ் ஒன்றை பெறுவது, இதுவரையில் சணச இயக்கமானது

உலகில் மிகச்சிறிய மூலதன வங்கிகளுக்கிடையில் இரண்டாம் இடத்தை கைப்பற்றியமையாலாகும். பிரசைகளின் பங்குபற்றல் இயக்கம் என்ற வகையில் சணசவிற்கு இலங்கையில் முதலாவது இடமொன்று உரித்தானது.

ஏதேனும் அரசிற்கு தனியே நாடொன்றை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் எனும் எண்ணத்தை அகற்றும் சணச இயக்கம், அபிவிருத்தி செயற்பாடுகளில் பிரசைகளின் பங்குபற்றலுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிறுவனங்களின் பலத்தில் உருவாகிய சிவில் சமூகத்தை உறுதியானதாக்கும் செயற்பாட்டின் மூலம் இலங்கையின் செழிப்பான பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பயிற்சிகளை உறுதியாக்குவதற்காக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை திட்டமிடப்பட்டுள்ளது. வீணாதல் மற்றும் ஊழல்களை குறைப்பதற்கு மக்கள் பங்குபற்றலை உச்சப்படுத்தல் வேண்டும் என்பது சணசவின் நம்பிக்கையாகும்.

அதன்படி ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் சணசவை 1000 முதல்நிலை சங்கங்களின் கூட்டுறவுக் குணங்கள் மூலம் மிகவும் வினைதிறன்மிக்க முயற்சியுடைய சங்கமொன்றாக்கி, அச்சங்கங்களுடன் இணைந்து தேசிய அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக சணச இயக்கத்தில் காணப்படும் திறனை விருத்தி செய்து கொள்வது இத்தசாப்தத்தின் நோக்கமாக காணப்படுகிறது.

## 3. இலங்கை சமுர்த்தி அதிகார சபை

1995 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை சமுர்த்தி அதிகார சபை 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் அனைத்து நடவடிக்கைகளையும் ஆரம்பித்தது. வறுமை குறைந்த செழிப்பான இலங்கையொன்றை கட்டியெழுப்புவதே இதன் நோக்கமாகும். அத்துடன் மக்கள் பங்குபற்றலின் அடிப்படையிலான அபிவிருத்தியினூடாக வறுமை குறைந்த நிலையான தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதே இதன் நோக்கமுமாகும்.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையானது ஐந்து இலக்குகளின் ஊடாக செயற்படுத்தப்படுகிறது.

1. சிறு குழுக்களை உருவாக்குவதன் மூலம் சமுர்த்தி சங்கங்களைக் கட்டியெழுப்பி கிராமிய குடும்பங்களின் சுய சக்தியை இனங்காணுதல் மற்றும் அக் கிராமிய மக்களைப் பலம் உடையவர்களாக்குதல்.
2. 2013 ஆம் ஆண்டாகும்போது பொருளாதார, பௌதீக மற்றும் சமூக அபிவிருத்தியினூடாக நகர, கிராமிய மற்றும் தோட்டத்துறைகளை அபிவிருத்தி செய்தல்.
3. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு மூலம் மாகாண ரீதியில் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.
4. சிறு அளவிலான அடிப்படைக் கடன்களைப் பலப்படுத்துவதன் மூலம் முழுமையான பொருளாதாரத்தைப் பலப்படுத்தல்.
5. இலங்கை சமுர்த்தி அதிகார சபையை தொழிநுட்ப ரீதியில் பலமான நிறுவனமொன்றாக ஆக்குதல்.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிகள் வங்கி மற்றும் நிதி, சமூக அபிவிருத்தி, விற்பனை மற்றும் கைத்தொழில், விவசாயம், மிருக பராமரிப்பு மற்றும் மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி போன்ற துறைகளில் பரவியிருந்ததோடு, அதற்காகப் பிரசைகளின் பங்குபற்றலுடன் நிர்மாணிக்கப்படும் மகா சங்கங்கள் அமைப்பு ரீதியான உதவியை வழங்குகின்றன.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிகளின் பயன்களைப் பெறுவது சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களாகும். அவர்கள் சிறு குழுக்களாக திரட்டப்பட்டிருப்பதோடு, அவர்களுக்குக் கிட்டியதாக அமைவது கிராம சேவகர் பிரிவு மட்டத்திலுள்ள சமுர்த்தி அதிகார எல்லை ஆகும். அவர்கள் வலய மட்டத்திலுள்ள வலய முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்வர். வலயம் தாபிக்கப்பட்டுள்ளது பிரதேச செயலாளர் அதிகாரத்திற்குட் பட்ட பிரதேசத்திலாகும். அதன்படி வலய முகாமையாளர்கள் பிரதேச செயலாளர் மட்டத்தில் ஒன்று கூடுவர். அதற்கு உயர் மட்டமாக இருப்பது மாவட்ட சமுர்த்தி காரியாலயமாகும். அங்கு உதவி சமுர்த்தி ஆணையாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வர். மாவட்ட மட்டமானது தேசிய மட்டத்தில் இலங்கை சமுர்த்தி அதிகார சபையுடன் இணையும். இதன்படி இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் அபிவிருத்திப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுவது கீழ் மட்டத்தில் காணப்படும் சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களுடன் செயற்படுத்தப்படும் இணைப்பினாலாகும். பயன்களைப் பெறுவதும் அவர்களேயாவர். அதனால் அபிவிருத்திக்காக இந்நிவாரண பயனாளிகள் குடும்பங்களின் பலத்தை அதிகரிப்பதற்காக தொடர்பாடல் மூலம் செய்யக்கூடிய செயல்கள் பலவாகும். இவ் அனைத்து பணிகளினதும் இறுதி இலக்காவது செழிப்பான கிராமத்தை உருவாக்குவதேயாகும்.

(1) கிராமிய அபிவிருத்திப் பிரிவு:
தத்துவம்: பொருளாதாரம், சமூக மனித உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரித்தல் மூலம் மக்கள் சமூக அபிவிருத்தி

(2) கைத்தொழில் பிரிவு:
தத்துவம்: வறுமையாளர்களின் நிலையான பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட கைத்தொழில் வேலைத்திட்டம்

(3) விவசாய அபிவிருத்திப் பிரிவு:
தத்துவம்: நீடித்த விவசாய அபிவிருத்தி மூலம் சமுர்த்தி பயனாளிகளின் வறுமையைக் குறைத்தல்.

(4) மீன்பிடி மற்றும் மிருக பராமரிப்புப் பிரிவு:
தத்துவம்: வறுமையை ஒழித்து செழிப்பான தேசத்தை கட்டியெழுப்புவதற்கு மிருக பராமரிப்பு மற்றும் மீன்பிடி அபிவிருத்தி மூலம் பங்களிப்புச் செய்தல்.

(5) சமூக அபிவிருத்திப் பிரிவு:
தத்துவம்: அனைவருக்கும் சுகமான சமூக சூழல்

(6) மகா சங்கங்கள் பிரிவு:
தத்துவம்: வறுமையை வெற்றி கொள்வதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஆக்கத்திறன் மிக்க பிரசைகளின் பொருட்டுப் பங்களிப்புச் செய்தல்.

(7) பெறுகைப் பிரிவு:
தத்துவம்: இலங்கையில் வறிய மக்களின் வறுமையைக் குறைப்பதற்கான பிரதான தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் பங்களிப்புச் செய்தல்.

(8) விற்பனை அபிவிருத்திப் பிரிவு:
தத்துவம்: விற்பனை மூலம் வறுமையைக் குறைத்தல்

(9) வங்கி நிதி நடவடிக்கைகள் பிரிவு:

தத்துவம்: வறுமையை ஒழிப்பதற்காக பிரபஞ்ச பிரார்த்தனைகளுக்கு இசைவாக்கம் அடைந்து, இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதோடு புதிய ஆக்கத்திறன் மற்றும் பல்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்தி உற்பத்தித் திறனான, நிலையான, இலாபமான மற்றும் சுயாதீன நிதி நிறுனமொன்றாக சமுர்த்தி வங்கியை உருவாக்கல்.

## 4. சுகாதார கல்விப் பணியகம்

1950 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சானது மூன்று அலகுகளைக் கொண்டமைந்தது. அதில் ஒரு அலகின் கீழ் சுகாதாரக்கல்வி அலகு உருவானது. அதன் நோக்கமாவது இலங்கையில் சுகாதாரக் கல்வியை தேசிய மட்டத்தில் மேம்படுத்தலாகும். துரிதமாக பரவும் நோய்களை நிவாரணம் செய்வதற்கு பல்வேறு வழிமுறைகளை உபயோகம் செய்து சுகாதாரக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தது. சமூக சுகாதார உத்தியோகத்தர்களின் அறிவை விருத்தி செய்வதற்காக “செபத” எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றையும், 1950 ஆம் தசாப்தத்தின் ஆரம்பத்திலிருந்து வெளியிட்டது. சுகாதார அமைச்சினால் சுகாதார துறையை மீள் ஒழுங்கமைப்பு செய்வதன் பெறுபேறாக சுகாதாரக் கல்வி அலகு 1972 ஆம் ஆண்டில் சுகாதாரக் கல்விப் பணியகமாகியது. அன்று தொடக்கம் சுகாதாரக் கல்வி எண்ணக்கருவை தேசிய மட்டம் வரை வியாபிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

சுகாதார அமைச்சின் ஊடாக இயங்கும் சுகாதார கல்வி பணியகத்திற்கு சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் விசேட இடமொன்று உரித்தானது. அதனூடாக தேசிய, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் செயல்படும் சகல நிகழ்ச்சி திட்டங்களிலும் திட்டமிடல், ஒழுங்கமைப்பு, கண்காணிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் பின்னூட்டல் செய்யும் அடிப்படை அலகாக பொறுப்பேற்பது சுகாதார கல்விப் பணியகமாகும்.

சுகாதார கல்விப்பணியகத்தின் மூலம் செய்யப்படும் செயற்பாடுகளில் சுகாதார கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் திட்டமிடல், சமூக சுகாதார கல்வி மற்றும் மேம்படுத்தல், சுகாதார கல்வி உத்தியோகத்தர்கள், தாதிகள் உட்பட வேறு உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் வேறு விசேட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திடங்களுக்காக சுகாதாரக் கல்வி, பற் சுகாதாரக் கல்வி, சுகாதார தொடர்பாடல், தொடர்பாடல் உபகரணங்களை உற்பத்தி செய்தல், ஊடகம் மற்றும் பிரச்சாரத்தின் மூலம் மக்களை அறிவுறுத்தல், சுகாதார தொடர்பாடல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் சுகாதாரக் கல்விக் கண்காட்சிகளை நடாத்துதல் என்பன முதலிடத்தைப் பெறுகின்றன.

சுகாதாரக் கல்விப் பணியகத்தின் பணிக்குழுவானது பணிப்பாளர், பிரதிபணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், பற் சிகிச்சை வைத்தியர்கள், சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரச்சாரம் செய்யும் உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்ததாகும். தமது பணிகளை ஒழுங்காக நிறைவேற்றும்போது சுகாதாரக் கல்விப் பணியகம், குடும்ப சுகாதாரப் பணியகம், கொள்ளை நோயாளர் விஞ்ஞான பிரிவு, விசேட கருத்திட்டங்கள், பயிற்சியளிக்கும் அலகுகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புடன் நெருக்கமாக செயற்படும்.

நடைமுறையில் சுகாதார கல்விப் பணியகம் பல்வேறு வகையான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்திச் சுகாதாரக் கல்வி மற்றும் மேம்பாட்டிற்காக முன்னோடியாக செயற்படும் நிறுவனமொன்றாகியுள்ளது.

**அலகு 7.0** :- அபிவிருத்தித் தொடர்பாடல் (பாடவேளைகள் 55)

**தேர்ச்சி** :- அபிவிருத்தி தொடர்பாடலின் கொள்கை அடிப்படை, தன்மை மற்றும் துறையின் அனுபவங்களை விமர்சனம் செய்தல், அபிவிருத்தித் தொடர்பாடல் சிக்கல்கள் மற்றும் சவால்களை சமநிலையில் பகுப்பாய்வு செய்தல்.

**தேர்ச்சி மட்டம்** :- 7.4 அபிவிருத்தித் தொடர்பாடலின் சிக்கல்கள் மற்றும் சவால்களை பகுத்தாய்தல்.

**பாடவேளைகள்** :- 15

**விடய உள்ளடக்கம்** :- அபிவிருத்தித் தொடர்பாடலின் சிக்கல்களும் சவால்களும்

1. அபிவிருத்தித் தத்துவம் தொடர்பான சிக்கல்கள் மற்றும் சவால்கள்
2. அபிவிருத்தி தொடர்பான மனப்பாங்கு சார்ந்த சிக்கல்கள் மற்றும் சவால்கள்
3. அபிவிருத்திக்கான தகவல் சேகரிப்பின் தோல்விகள்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- அபிவிருத்தித் தத்துவம் தொடர்பான பல்வேறு சிக்கல்கள் மற்றும் சவால்களைப் பகுத்தாய்தல்.
- அபிவிருத்தி தொடர்பான மனப்பாங்கு சார்ந்த சிக்கல்கள் மற்றும் சவால்களைப் பகுத்தாய்தல்.
- அபிவிருத்திக்கான தகவல் சேகரிப்பின் தோல்வி மற்றும் அதனால் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சவால்களைப் பகுத்தாய்தல்
- அரசியல் மற்றும் கலாசாரச் சிக்கல்கள் அபிவிருத்திக்கு சவாலாக மாறும் விதம் பற்றிப் பகுத்தாய்தல்.

## அறிமுகம்

அபிவிருத்தி என்பது ஒப்பீட்டு அமைப்பொன்றாகும். அதற்குக் காரணம் அபிவிருத்தி என்பது ஒரு நாடு கருதும் விடயத்தை இன்னொரு நாடு வேறு விதத்தில் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதாகும். ஆனால் முழுமையான வகையில் எந்தவொரு நாட்டிற்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அபிவிருத்தி எண்ணக்கருவொன்றை கட்டியெழுப்ப முடியும். மனித சமூகம் சந்தோசம், ஒற்றுமை மற்றும் ஒவ்வொருவர் மீதும் கௌரவத்துடனும், சுகாதாரத்துடனும் வாழும் ஜனநாயக சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல் அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட பல்வேறு காரணிகளின் கூட்டிணைப்பாகும். அபிவிருத்தி இலக்குகளுக்கிடையே வேறுபாடுகள் இருக்கக் கூடும் என்பதோடு, அபிவிருத்திக்காக செல்லும் பாதையிலும், செல்லும் விதத்திலும் வேறுபாடுகள் இருக்கக்கூடும். அது மட்டுமன்றி ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டை வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதோடு சமூகத்தில் அல்லது சூழலியல் அல்லது தொழிநுட்ப ரீதியில் ஏற்படும் வேறுபாடுகளினால் அவ் வெற்றிகரமான அபிவிருத்தித் தந்திரோபாயங்களை மாற்றுவதற்கு அல்லது கைவிடுவதற்கு நேரிடும். ஆனால் அபிவிருத்தி நடவடிக்கைகளை கைவிட இயலாது. ஏற்படும் புதிய நிலைகளுக்கிடையே புதிய அபிவிருத்தி உபாய வழிகளை பிரயோகிக்க நேரிடும். இங்கு முக்கியமான கட்சிதாரராவது நபர்களேயாகும். இல்லாவிடின், அந்நபர்களின் திரண்ட சமூகமாகும். ஏனென்றால் அபிவிருத்திச் செயற்பாடுகள் அச் சமூகத்திற்காக உருவாக்கப்பட்டு, சமூகத்தினாலேயே நடைமுறைப்படுத்தி சமூகத்தினாலே அதன் பயன்கள் அனுபவிக்கப்படுவதனாலாகும். அதனால்

சமூக அபிவிருத்தி தொடர்பாக வெளிப்படுவது எவ்வறான மனப்பாங்குகள்? அபிவிருத்தி தொடர்பாக அவர்களின் காட்சி யாது? அபிவிருத்தி செயற்பாடு குறித்து அவர்களின் பங்களிப்பு என்ன? போன்ற பல்வேறு கோணங்களிலிருந்தும் இதனைப் பார்ப்பதற்கு நேரிடும். நாடொன்றின் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் தொடர்புபட்ட கொள்கைகள் மற்றும் தத்துவம் உருவாக்கப்படுவது அரசியல் பொறிமுறையினாலாகும். அரசியல் பொறிமுறை என்பது மக்களினால் உருவாக்கப்படுவதாகும். பின்பு அரசியல் பொறிமுறையினால் மக்களுக்காக ஏதேனும் தீர்வுகள், முடிவுகள் எடுக்கப்படுவது மக்களின் முன்னேற்றத்திற்காகவே ஆகும். ஆனாலும் சில வேளைகளில் அவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்கள் உண்மையாகவே மக்களின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையாமல் விடலாம். அதுமட்டுமன்றி அத்தீர்மானங்களுக்கு அடிப்படையாக அமையும் அரசியல் தத்துவங்களினால் உருவாக்கப்படும் அபிவிருத்தித் தத்துவங்கள் மிகவும் யதார்த்தமாக இல்லாமல் இருக்கலாம். இங்கு ஏற்படும் இன்னுமொரு பாரதூரமான பிரச்சினை என்னவென்றால், மக்களின் மனப்பாங்கு மற்றும் அபிவிருத்தித் தத்துவங்களுக்கு இடையில் ஏற்படும் இணக்கமின்மையாகும். அதற்கு ஒரு காரணமாக அமைவது அபிவிருத்தி தொடர்பில் தகவல் சேகரிப்பின் தோல்வியாகும். அது ஒரு வகையில் மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளுக்கிடையில் காணப்படும் கலவரமாக விளங்கலாம். தகவல் சேகரிப்பின் ஆதிக்கம் மேற்கு நாடுகளினால் நடாத்திச் செல்வதனால் கிழக்கு நாடுகளுக்கு நியாயமற்ற தகவல்களைப் பரப்புவதற்கு இலகுவாகும். அதுமட்டுமன்றி பல்வேறு அரசியல் கருத்துக்கள் காரணமாக மக்களுக்கு விரும்பத்தக்கவாறான கருத்துக்களை பரப்புவதற்குப் பதிலாக மக்களுக்கு பாதகமான கருத்துக்கள் பரவக்கூடும் முழுமையாக இங்கு ஏற்படுவது தகவல்களின் தோல்வியாகும். அபிவிருத்தித் தொடர்பாடலில் இவ் அனைத்து பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்தும் அவதானத்தை செலுத்த வேண்டும்.

## பாடவிடயங்களின் குறிப்புக்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

**1. அபிவிருத்தித் தத்துவம் தொடர்பான சிக்கல்கள் மற்றும் சவால்கள்**

- நிலையான ஓர் வரைவிலக்கணம் இல்லாமை
- கிழக்கு மற்றும் மேலைத்தேய அபிவிருத்தி தொடர்பாக இரண்டு அளவீடுகள் காணப்படுகின்றமை
- கிழக்கு எண்ணக்கரு ஆன்மீக மையமாக இருக்கின்றமை
- அபிவிருத்தியானது முன்னேற்ற அபிவிருத்திச் செயற்பாடாகும்
- அபிவிருத்தி தொடர்பான கருத்துக்கள் காலத்திற்கேற்ப மாறுபடுதல்

**2. அபிவிருத்தி தொடர்பான மனப்பாங்கு சார்ந்த பிரச்சினைகள் மற்றும் சவால்கள்**

- அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கருக்களை புரிந்து கொள்ளல் தொடர்பான சிக்கல்கள்
- மாறுபாடு தொடர்பான ஐயங்கள்
- கிழக்கு சமூகங்களின் பரம்பரையான இடங்கள்
- அதிக சம்பிரதாயமிக்கது
- தீவிர சமயச்சார்பான மையம்
- சூழல் மற்றும் பூகோள நிலவரங்கள் மனப்பாங்கு மீது தாக்கம் செலுத்துதல்
- பிரசைகளின் சமூகத்தின் பொறுப்புக்கள் தொடர்பான முன்னேற்றத்திற்கான நோக்கொன்று இல்லாமை.

**3. அபிவிருத்திக்கான தகவல்களின் வீழ்ச்சியின் தன்மை**

- கிழக்கு நாடுகளின் சமூக தொடர்புகளானது சம்பிரதாய பூர்வமாதல்
- ஐரோப்பிய தொடர்புகள் தொழிநுட்ப கேந்திரமாதல்
- தகவல் சேகரிப்பில் மேலைத்தேய ஆதிக்கம்
- முன்னேற்றத்திற்கான தகவல்களைத் திரட்டுதலிலும் பாதுகாப்பதிலும் முறைகள் இல்லாமை

- தகவல்களை உபயோகிப்பதில் காணப்படும் பொறிமுறைக் குறைப்பாடுகள்
- தகவல்களை உபயோகிப்பதில் காணப்படும் பிரச்சினைகள்

**4. அரசியல் மற்றும் கலாசாரச் சிக்கல்கள் மற்றும் சவால்கள்**

- நவீன கலாசார கட்டமைப்புகள் அபிவிருத்தியடையாமை
- அரசியல் அதிகார குழுக்கள் தேசிய நோக்கங்களிலிருந்து விலகியிருத்தல்
- முன்னேற்றகரமான அரசியலானது கலாசாரத்தின் சம்பிரதாயமொன்றாக இன்மை.
- தொடர்பாடல் ஊடகங்கள் அரசியல்மயப்படுத்தப்படுகின்றமை
- ஊடகங்களை வர்த்தக மயப்படுத்தல்
- தேசிய சிந்தனை மற்றும் கொள்கையொன்று இல்லாமை.

| | |
|---|---|
| **அலகு 8.0** | :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் (பாடவேளைகள் 48) |
| **தேர்ச்சி** | :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி, இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பது வரையிலான முழுமையான செயற்பாட்டிற்கு உரிய தேர்ச்சியை வெளிப்படுத்தல். |
| **தேர்ச்சி மட்டம்** | :- 8.1 அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றிற்கான தீர்மானம் எடுத்தலுக்கு ஏற்ப தகவல்களை திரட்டல், தீர்மானத்திற்கு வருவதற்கான தேர்ச்சியை வெளிப்படுத்தல். |

**பாடவேளைகள்** :- 12

**விடய உள்ளடக்கம்** :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டப் பிரவேசம்

1. முழுமையான கலந்துரையாடல்
2. தகவல்களைத் திரட்டுவதில் முறையான கட்டளை
3. தகவல்களைத் திரட்டுதலில் உபகரணங்களைத் தொகுத்தல்
4. தகவல்களைத் திரட்டுதல் மற்றும் பரிசீலனை
5. கருத்திட்டம் தொடர்பான அடிப்படைத் தீர்மானமெடுத்தல்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கும்போது முழுமையான கலந்துரையாடலின் முக்கியத் துவத்தை ஏற்றுக்கொள்வதோடு, அது தொடர்பான அனுபவங் களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- தகவல்களைச் சேகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகளை இனங்காண்பதோடு அவற்றை ஒப்பீட்டு ரீதியாக கணிப்பிடல்
- பல்வேறு தகவல்களை முறையாகத் திரட்டி அவற்றைப் பகுத்தாய்வு செய்தல்
- பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தவதற்காகப் பொருத்தமான அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் தொடர்பான அடிப்படைத் தீர்மானமெடுத்தல் நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்தல்

## அறிமுகம்

பிரசைகளின் சிக்கல்கள் கோர்வையாகவே காணப்படும் அதனால் சிக்கல் ஒன்றுக்கு தீர்வை பெற்று கொடுப்பதற்காக நடைமுறைப்படுத்தும் கருத்திட்டத்தினூடாக மேலும் மாற்றுச் சிக்கல்கள் உருவாக முடியும். அதனால் அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றை பிரசைகள் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக நடைமுறைபடுத்தும்போது அது குறித்த தீர்மானமெடுப்பதற்கு முழுமையான கலந்துரையாடலை நடாத்துவது மிகவும் முக்கியமானதாகும். அதன்மூலம் அச்சிக்கல் கோர்வையை உரியவாறு பகுத்தாய்வு செய்துகொள்வதற்கும் அவற்றுள் எந்த சிக்கலுக்குத் தீர்வு வழங்குவதற்கு இக்கருத்திட்டத்தை திட்டமிடுவது என்பது குறித்து உயர்ந்த தீர்மானங்களை எடுக்க முடியும். முழுமையான கலந்துரையாடல் என்பது தனியே பலபேர் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தும் கூட்டு தொடர்பாடல் சந்தர்ப்பம் அல்ல. அதுவும் திட்டமிடப்பட்டதே. அதாவது முழுக் கலந்துரையாடல் யாருடைய பங்குபற்றலில் நடாத்தப்படுவது என்பதைச் சரியான முறையில் தீர்மானித்தல் வேண்டும். அதன்போது இச்சிக்கல் கோர்வையின் மத்தியில் இருப்போரும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான, வசதிகளை வழங்குவோரும், இது தொடர்பான நிபுணர்களும் கட்டாயமாக பங்குபற்றுதல் வேண்டும். அடிப்படைக் கலந்துரையாடல் மூலமாக இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள முடியாது. அங்கு செய்யக்கூடியது இறுதி

தீர்மானத்தை எடுப்பதற்கான அடிப்படையொன்றை மேற்கொள்ளலே. அதற்கமைய சிக்கல்களுக்கேற்ப தகவல்களைச் சேகரித்தல் தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ள முடியும். சேகரிக்க வேண்டிய தகவல்கள் எவ்வாறானவை? அதற்காக எவ்வாறான உபகரணங்களைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரிக்க முடியும் என்பது தொடர்பான தீர்மானங்களுக்கு வர முடியும். உரிய முறையைப் பயன்படுத்தி பயிற்றுவிக்கப்பட்ட பணிக் குழு ஒன்றை ஈடுபடுத்தி அவசியமான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு அவற்றைச் சரியாகக் கோவைப்படுத்தி பகுத்தாய்வு செய்தல் வேண்டும். அவ்வாறு தகவல்களைக் கோவைப்படுத்தல் மற்றும் பகுத்தாய்வு செய்தல் புள்ளி விபரவியல் மற்றும் விஞ்ஞான ரீதியிலான பணியாகும். எவ்வாறாயினும் அது தொடர்பான அடிப்படைத் தேர்ச்சியுடன் கருத்திட்டக் குழுவானது நடவடிக்கை மேற்கொள்வது பொருத்தமானதாகும். சேகரித்த தகவல்களைப் பகுத்தாய்வு செய்ததன் பின்னரே கருத்திட்டம் தொடர்பான தீர்மானமெடுத்தல் வேண்டும். அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டத்தில் செய்யப்பட வேண்டியது பாடசாலையில் அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய அல்லது பௌதீக ரீதியில் பார்க்கக்கூடிய ஏதாவது பணியொன்றை பூர்த்தி செய்தலாகும். இதன் மூலமாக பாடசாலையில் ஏதேனும் அபிவிருத்தியொன்று எதிர்பார்க்கப்படும். உதாரணமாக பாடசாலையினுள் வீதிக் குறியீடுகளை காட்டும் பெயர்ப்பலகை இல்லாவிடின் அவற்றை புதிதாக அமைக்க முடியும். அவ்வாறு இல்லாவிடின் ஆபத்திலிருந்து தடுத்தல் மற்றும் பாதுகாப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் தொடர்பான ஆலோசனைகளுடனான தொடர்பாடல் முறையை பாடசாலையினுள் உருவாக்க முடியும். இவை அனைத்தும் இலகுவாக செய்யக்கூடியவை அல்ல. அதனால் கருத்திட்டம் தொடர்பான அடிப்படைத் தீர்மானங்களுக்கு வரும்போது செய்ய வேண்டியது மற்றும் செய்ய முடிந்தவை தொடர்பாக அவதானத்தைச் செலுத்தலானது பொருத்தமானதாகும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. முழுமையான கலந்துரையாடல்

- சிக்கலை நன்றாக இனங்காணுதல், சிக்கலுக்கான தீர்வாக செய்ய வேண்டியது என்ன? என்பனவே முழுமையான கலந்துரையாடலின் நோக்கமாகும்.
- இதற்காகச் சிக்கலுடன் தொடர்புடையவர்களும் சிக்கலுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு வசதிகளை வழங்குவோரும் நிபுணர்களும் பங்குபற்றுதல் வேண்டும்.
- முழுமையான கலந்துரையாடல்களுக்கான சிக்கல்களுக்கான அடிப்படைத் தகவல்கள் ஓரளவேனும் இருத்தல் வேண்டும்.
- முழுமையான கலந்துரையாடலுக்காக எடுத்துக் கொள்ளும் காலம் தொடர்பாக உறுதியான தீர்மானமொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு முடியாது.
- சிக்கலுடன் தொடர்புடைய சகலரும் பூரண கலந்துரையாடலில் கலந்துரையாடல் வேண்டும்.
- முழுமையான கலந்துரையாடலை உரியவாறு எழுத்து மூலமாக அறிக்கையிடல் வேண்டும்.

### 2. தகவல்களைச் சேகரிக்கும் முறை பற்றிய தீர்மானம்

- கருத்திட்டம் தொடர்பான தீர்மானமெடுத்தலுக்கு உண்மையான தகவல்கள் அவசியம்
- தகவல்கள் சேகரித்தலை விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளல்
- தகவல்கள் சேகரித்தலுக்கு இலகுவான முறைகளைப் பயன்படுத்த முடியும்.
    - வினாக்கொத்து முறையின் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்
    - நேர்முக கலந்துரையாடலின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களைக் குறித்துக் கொள்ளல்
    - கண்காணிப்பின் மூலம் தகவல்களைக் குறித்துக் கொள்ளல்

### 3. தகவல்களைத் திரட்டுவதற்கான உபகரணங்களைத் தொகுத்தல்

- தகவல்களைக் குறித்துக் கொள்ளும் ஆவணங்களைத் தயாரித்தலைக் கவனமாக செய்ய வேண்டும்.
- இவ் உபகரணங்கள் எளியதாகவும் சுருக்கமாகவும் காணப்படல் வேண்டும்.

- தேவையற்ற தகவல்கள் கிடைக்காதவாறு உபகரணத்தைத் தயாரித்தல் வேண்டும்.
- தகவல்களை வழங்குவோரின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்கக் கூடியதாக உபகரணங்கள் திட்டமிடப்படல் வேண்டும்.
- தகவல்களைத் திரட்டுவதற்கு உபகரணங்களைத் தொகுத்தலானது விசேட காரியமாகும்.
- உரிய தகவல்கள் கிடைக்கக்கூடியதாக மாத்திரம் உபகரணத்தைத் திட்டமிட வேண்டும்.
- எளிய வினாக்கொத்து அல்லது நேர்முகக் கலந்துரையாடல் அறிக்கையொன்றை தனித்த ஒரு பக்கத்தில் திட்டமிட முடியும்.
- உபகரணங்கள் மூலம் திரட்டப்படும் தகவல்களைக் கோவைப்படுத்துவதற்கு இலகுவாக அவை திட்டமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**4. தகவல்களைத் திரட்டுதல் மற்றும் பகுத்தாய்தல்**

- திரட்டப்படும் தகவல்களை ஒழுங்கான முறையில் கோவைப்படுத்தல் வேண்டும்.
- தகவல்களைப் பகுத்தாய்வு செய்வதன் மூலம் அத்தகவல்களினால் வெளிப்படுபவை யாவை என்பதை அறிந்து கொள்ள முடியும்.
- தகவல்கள் பகுத்தாய்வு விவரத்திரட்டு என்பது விஞ்ஞான முறைப்படியான செயலாகும்.
- தகவல்களைப் பகுப்பாய்வதற்கு அது தொடர்பான விசேட அறிவு தேவை.
- எளிய தகவல்கள் பகுப்பாய்வொன்று சாதாரண அறிவினால் செய்ய முடியும்
- தகவல்களைத் திரட்டல் மற்றும் பகுப்பாய்தல் என்பவற்றை எழுத்து மூலம் செய்தல் வேண்டும்.
- பகுப்பாய்வு அறிக்கையொன்றைத் தொகுப்பதன் மூலம் சரியான விடயங்களை முன் வைக்கலாம்.
- தகவல்களைத் திரட்டுகையிலும் பகுப்பாய்வு செய்கையிலும் தமது தனிப்பட்ட பக்கச் சார்பையோ அல்லது விருப்பங்களையோ தவிர்த்தல் வேண்டும்.

**5. கருத்திட்டம் குறித்த அடிப்படைத் தீர்மானங்களை எடுத்தல்**

- கருத்திட்டம் குறித்த அடிப்படைத் தீர்மானங்களை எடுத்தலானது தகவல்களின் பகுப்பாய்வு அடிப்படையில் அமைதல் வேண்டும்.
- தகவல்கள் பிழையானால் எடுக்கப்படும் தீர்மானங்களும் தவறாகும்
- தகவல்களின் நம்பிக்கைத் தன்மை குறித்துக் கவனம் செலுத்தி அடிப்படைத் தீர்மானங்களை எடுத்தல் வேண்டும்.
- அடிப்படைத் தீர்மானங்களை எடுத்தலானது ஒன்றித்தலாகும்.
- நடைமுறைப்படுத்த வேண்டிய மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய அடிப்படைத் தீர்மானங்களை எடுத்தல் வேண்டும்.
- தெரிவு செய்யப்பட்ட அடிப்படைத் தீர்மானங்கள் இருப்பின், மீண்டும் கலந்துரையாடி அல்லது நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று அல்லது இறுதி அடிப்படைத் தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.
- கருத்திட்ட குழுவினால் மேற்கொள்ளப்படும் அடிப்படைத் தீர்மானங்கள் பாடசாலை மாணவர்களினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும்.

பிரசைகளிடத்தில் செல்லுங்கள்
அவர்களுக்கிடையில் வாழுங்கள்
அவர்களிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்
அவர்களிடத்தில் அன்பு செலுத்துங்கள்
அவர்கள் அறிந்தவற்றை கொண்டு ஆரம்பியுங்கள்
அவர்களுக்கு உரித்தானவற்றிலிருந்து கட்டியெழுப்புங்கள்
செயலானது நிறைவுபெற்றவுடன்
சிறந்த தலைவர்களைக் காணலாம்
அப்போது பிரசைகள் இவ்வாறு கூறுவர்
அது எங்களாலேயே செய்யப்பட்டது

புராதன சீன கவிதையொன்றிலிருந்து

| | | |
|---|---|---|
| **அலகு 8.0** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் (பாடவேளைகள் 48) |
| **தேர்ச்சி** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி, இறுதி அறிக்கையை முன்வைக்கும் வரையிலான முழுமையான செயற்பாட்டிற்குரிய தேர்ச்சியை வெளிப்படுத்தல். |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 8.2 அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த சிறு கருத்திட்ட ஆலோசனையொன்றைத் தயாரிப்பதற்கான தேர்ச்சியை வெளிப்படுத்தல். |

**பாடவேளைகள்** :- 12

**விடய உள்ளடக்கம்** :- கருத்திட்ட ஆலோசனைகளை தொகுத்தல்

1. இலக்கு மற்றும் நோக்கம்
2. பணி விதிமுறைகள் மற்றும் எல்லைகள்
3. கட்சிதாரர்கள் மற்றும் அமைப்பு கட்டமைப்பு
4. முறைகள் - விதிகள் மற்றும் உபாய மார்க்கங்கள்
5. வரவு செலவு மற்றும் வளங்களின் தொகுப்பு
6. நேர அட்டவணை, பொறுப்புக்கள் மற்றும் மூலப்பிரமாணம்
7. எதிர்பார்க்கப்படும் பேறுகள்
8. மதிப்பீட்டு நடவடிக்கைகள்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் ஒன்றிற்கான இலக்கு மற்றும் நோக்கங்களைக் கட்டியெழுப்பல்
- குறித்த கருத்திட்டத்தின் பணி விதிமுறைகள் மற்றும் எல்லைகளைத் தீர்மானித்தல்.
- குறித்த கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட கட்சிதாரர்களை இனங் கண்டு, பொருத்தமான கட்டமைப்பொன்றை, கட்டியெழுப்புதல்.
- குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான விதி முறைகள் மற்றும் உபாய மார்க்கங்களைத் தீர்மானித்தல்.
- குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வரவு செலவுத் திட்டங்களை மேற்கொண்டு, அதற்கான வளங்களைத் தொகுக்கும் விதத்தைத் திட்டமிடல்.
- குறித்த கருத்திட்டத்தை ஆரம்பித்து பூர்த்தி செய்வது வரையான நேர அட்டவணை, அந்தந்த பணிகள் யாருடைய பொறுப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது, அந்தந்தப் பணி மேற்கொள்ளப் பட்டதற்கான மூலப் பிரமாணமாகக் கருதப்படுவது யாது? என்பதையும் திட்டமிடல்.
- குறித்த கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதனால் பாடசாலை மாணவர்கள் பெறும் பயன் யாது என்பதை ஆவணப்படுத்தல்.
- குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக தொடர்ச்சியாக செயற்படும் மதிப்பீட்டு நடவடிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களைத் திட்டமிடல்.

## அறிமுகம்

பாடசாலை மட்டத்தில் அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்ட ஆலோசனையொன்றை தயாரிப்பதற்கு வழங்கப்படுவது எதிர்காலத்திலே தேசிய மட்டத்தில் அவ்வாறான பணியொன்றில் இணைந்து கொள்வதற்காகப் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்னேற்பாடாகும். அதன்படி பூரணமான கலந்துரையாடலில் தீர்மானமாகக் கொள்ளப்பட்டவாறு பாடசாலை மாணவர்களுக்கான அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களைத் தெளிவாக கட்டியெழுப்புதல் வேண்டும். அதனால் கருதப்படுவது யாதெனில் கருத்திட்டம் செல்வது எங்கே? எதற்காக? என்பதை முடிவு செய்வதாகும். அதன் பின்னர் அவ் இலக்கு மற்றும் நோக்கங்களை அடைவதற்கு எவ்வாறான பணிகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்? அப்பணிகளைப் பூர்த்திசெய்வதில் எல்லைகள் நிலவுதல் எவ்வாறு? என்பனவற்றை முடிவு செய்ய வேண்டும். பணிகளைப் பூர்த்தி செய்வதானது தனிப்பட்ட ரீதியாக மேற்கொள்ள முடியாததாகும். அதனால் அதற்குக் கட்சிதாரர்கள் அவசியமாவர். தமது கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட கட்சிதாரர்களை இனங்காணுதலும், அவர்களின் பங்குபற்றலை பெற்றுக் கொள்வதற்கு அவசியமான மக்களுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவசியமானதாகும். இதன்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அமைப்பை தோற்றுவிக்க முடியும். பொதுவாகக் கருத்திட்டத்திற்கு தலைமைத்துவமொன்று இருத்தல் வேண்டும். அத்தோடு அதற்குத் தேவையான ஆலோசனையும் கிடைத்தல் வேண்டும். கருத்திட்டத்தின் தலைமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் பின்பற்றுவோர்கள் சிலரும் இருத்தல் வேண்டும். இவ்விதத்திலே கருத்திட்டத்தின் அமைப்பு கட்டமைப்பானது தோற்றுவிக்கப்படுகிறது. அதன்படி இது அந்தந்த மட்டங்களின் பணிகளுக்குப் பொறுப்பாக காணப்படுபவர்களுக்கு வழங்கப்படும் பொறுப்புக்களாகும். அதனால் வரவு மற்றும் செலவு தொடர்பான திட்டமொன்றைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். அது வரவை மையமாகக் கொண்ட செலவு திட்டமாகவோ செலவை மையமாக கொண்ட வரவுத் திட்டமாகவோ இருக்க முடியும். எவ்வாறாயினும் இறுதியில் திட்டமிடப்பட்ட விதத்திலே வளங்களைத் தயாரித்துக் கொள்வதற்கு நேரிடும். வரவு செலவினைக் கட்டுப்படுத்தலும் வளங்களை உரிய முறையிலே கருத்திட்டத்தில் பயன்படுத்தலும் முக்கியமானதாகும். அது கருத்திட்டத்தின் முகாமைத்துவ பணியாகும். கருத்திட்டத்தின் இலக்கு மற்றும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டியது ஏதேனும் நேர அட்டவணையுடனாகும் அவ்வாறு இல்லாவிடில் கருத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுவது நெருக்கடிமிக்கதாகும். அதனால் உரிய நேர அட்டவணையொன்றைத் தயாரித்துக் கொள்ளலும், அதனுள் அந்தந்தப் பணிக்கான பொறுப்புகளும் அப்பணி நிறைவேறியதாக காட்டப்படும் மூலப்பிரமாணத்தையும் உள்ளடக்கிக் கருத்திட்ட முகாமைத்துவப் பத்திரமொன்றைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதன்படி முழுமையான கருத்திட்டத்தைப் பூரணப்படுத்துவற்காக எதிர்பார்க்கப்படும் முழுமையான பலனையும் ஆவணப்படுத்த முடியும். கருத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடிவது அது உரியமுறையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதன் மூலமே. அதற்காக தொடர்ச்சியான மதிப்பீட்டு நடவடிக்கையொன்று அவசியமாகும். அதனை செய்ய முடிவது தொடர்ச்சியான மதிப்பீட்டு நடவடிக்கைக்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பத்திரத்தின் மூலமாகும். அவ்வாறே இறுதியான மதிப்பீட்டின் மூலம் கருத்திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் இறுதியான மதிப்பீட்டிற்கு உட்படுத்த முடியும். அதனால் மதிப்பீட்டு நடவடிக்கை எவ்வாறானது என்பதையும் அதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் யாவை என்பதையும் குறித்த தகவல்களையும் கருத்திட்ட ஆலோசனைப் பத்திரத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. இலக்கு மற்றும் நோக்கங்கள்

- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தெளிவாக உருவாக்கிக் கொள்ளப்படல் வேண்டும்.

  உதாரணம்: பாடசாலையில் வீதிக் குறியீடுகள் முறைமையொன்றை நிர்மாணித்தல்

**நோக்கங்கள்**

1. பாடசாலை மாணவர்களுக்குப் புதிதாக இணைந்து கொள்வதற்கு மற்றும் வெளியிலிருந்து பாடசாலைக்கு வருவோருக்கு, பாடசாலையில் அந்தந்த பிரிவுகள் காணப்படும் இடங்கள் தொடர்பான சரியான வழிகாட்டியாதல்.
2. பாடசாலையில் தொடர்பாடல் கலாசாரத்தை மேலும் முன்னேற்றுதல்

**2. பணிகளின் விதிமுறைகள் மற்றும் எல்லைகள்**

- பாடசாலை அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றின் பணிகளை தெளிவாக இனங்காண வேண்டும் என்பதோடு, அதன் எல்லைகளையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

  உதாரணம்: பாடசாலையில் இனங்காணப்பட்ட 10 இடங்களுக்கான வழிகாட்டி பெயர்ப்பலகைகளை பொருத்துதல்.

**3. கட்சிதாரர்கள் மற்றும் கட்டமைப்பு**

- அனைத்து கருத்திட்டத்திற்கும் உரிய கட்சிதாரர்கள் இருத்தல் வேண்டும்.
- கட்சிதாரர்கள் தேவையான வகையில் இனங்காணப்பட வேண்டும்.
- குறைந்தபட்சம் அல்லது உயர்ந்த பட்ச எல்லைக்குள் கட்சியினரை வைத்திருத்தல் வேண்டும்.
- கட்சிதாரர்களையும் ஈடுபடுத்தி கட்டமைப்பை தோற்றுவித்தல் வேண்டும்.
- கருத்திட்டத்தின் வெற்றி மற்றும் தோல்விகளுக்கு கட்சிதாரர்களும் கட்டமைப்பும் காரணமாக முடியும்.

**4. விதிமுறைகள் மற்றும் உபாய வழிகள்**

- ஏதேனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் போது விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளுக்கு விசேட இடமொன்று கிடைத்தல்
- இலக்கு மற்றும் நோக்கங்கள் எந்தளவிற்கு அதிவிசேடமாயினும் அதனை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பிரயோகிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் உபாய வழிகள் தவறாக இருப்பின், நியமித்த இலக்கை அடைந்து கொள்ள முடியாமல் போதல்.
- விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளைத் தீர்மானிக்கும் போது அது தொடர்பான போதிய அனுபவங்கள் மற்றும் அறிவுடையோர் பங்குபற்றுதல் வேண்டும்.
- அனுபவங்கள் குறைந்த மற்றும் அறிவில் குறைந்ததும் பிழையான எண்ணங்களினாலும் சரியான ஒன்று, பிழையான முறையில் மேற்கொள்வதற்கான தீர்மானத்தை எடுக்க முடியும்.
- விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளைத் தீர்மானிக்கும் போது சரியானதை சரியான முறையில் மேற்கொள்வதற்கு அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும்.
- ஏதேனும் பணியொன்றை நடைமுறைப்படுத்தும் விதிமுறைகள் நான்கு உள்ளன.
  சரியானதை பிழையான முறையில் செய்தல்
  சரியானதை சரியான முறையில் செய்தல்
  பிழையானதை பிழையான முறையில் செய்தல்
  பிழையானதை சரியான முறையில் செய்தல்
- தேர்ந்தெடுக்கப்படும் உயர்ந்த விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளினால் இடைச் சிக்கல்கள் ஏற்படாதிருத்தல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் விதிமுறைகள் மற்றும் உபாய வழிகள் காரணமாக வேறு சிக்கல்கள் ஏற்படக் கூடியதாக உள்ள வாய்ப்புக்களை முன்னதாகவே மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- ஏதாயினுமோர் வகையில் இடைச் சிக்கல்கள் ஏற்படுமானால், அவ்விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளைத் திருத்தியமைத்தல் வேண்டும்.

- சரியானதை முழுமையாக தீர்மானித்திருப்பதனால் அது ஆற்றப்படும் சரியான முறை மற்றும் பிரவேசத்தை தொடர்ந்தும் மதிப்பிடுவதனால் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பது குறித்து அவதானமாக இருத்தல் வேண்டும்.
  உதாரணம்:

  இலக்கு : பாடசாலையில் வீதிக்குறியீடு முறைமையை தோற்றுவித்தல்

  தவறான முறை: ஊடக பாடத்துடன் தொடர்புடையோர் மட்டும் தீர்மானமெடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

  சரியான முறை: பாடசாலையில் பரந்த ரீதியில் யோசனைகளைக் கேட்டு நடைமுறைப்படுத்தல்

  தவறான உபாய வழி: ஊடக பாடத்துடன் தொடர்புடையோரின் யோசனைகள் மட்டும் அதிபரிடம் முன்வைக்கப்பட்டு அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்

  சரியான உபாயவழி: பாடசாலையில் அனைத்து தரப்பினர்களதும் யோசனைகளைச் சுருக்கமான முறையில் அதிபரிடம் முன்வைத்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்
- விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளைத் தீர்மானிக்கும்போது அவற்றுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு தடைகள் குறித்த கணிப்பீடு ஒன்றைச் செய்தல் வேண்டும்.
- தடைகள் இருப்பின், அவற்றை வெற்றி கொள்ளும் விதத்தையும் அல்லது தடைகளை தவிர்க்கும் விதத்தையும் விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளினூடாகத் தீர்மானித்தல் வேண்டும்.

5. **வரவு செலவு மற்றும் வளங்களின் தயாரிப்பு**
   - எந்தவொரு செயற்பாட்டிற்கும் வரவு செலவு மற்றும் வளத் தயாரிப்பை மேற்கொள்ளல்
   - வரவு செலவு மற்றும் வளங்களைத் திட்டமிடாமல் செயற்பாடொன்றை மேற்கொள்வதற்கு இயலாது.
   - நிதி மற்றும் வளங்களைப் பெற்றுக்கொள்வது பிரச்சினையானது அல்லவெனில் அதன்படி செலவைத் தயாரித்துக் கொள்ள முடியும்.
   - நிதி மற்றும் வளங்களைப் பெற்றுக்கொள்வது பிரச்சினையாக இருப்பின் அதன்படி திட்டங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.
   - வரவு மற்றும் செலவு என்பதில் நிதியும் வளங்கள் என்பதில் மூலதன பெறுமதி மூலம் காட்டக்கூடிய அல்லது பௌதீக மற்றும் மனித வளங்களும், மூலதன பெறுமதியாக வெளிப்படுத்த முடியாத மனித வளங்களும் உள்ளடங்கும்.
   - ஏதேனும் செயற்பாடு ஒன்றிற்காக எந்தளவு மூலதனம், பௌதீக மற்றும் மனித வளங்கள் அவசியமென்பதைச் சரியான முறையில் திட்டமிடல் வேண்டும்.
   - ஏதாவது செயற்பாடொன்றிற்காக எந்தளவு மூலதனம், பௌதீக மற்றும் மனித வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதைச் சரியான முறையில் கணிப்பீடு செய்தல் வேண்டும்.
   - கருத்திட்டத்திற்குப் பொருத்தமான முதலீட்டாளர்களின் மூலதனம், பௌதீக மற்றும் மனித வளங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
   - கருத்திட்டத்தின் வரவுசெலவு மற்றும் வளங்களைத் தயாரித்தலை ஊடுருவித் தெரியும் விதத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.
   - வரவு செலவு மற்றும் வளங்கள் தயாரிப்பானது செயற்றிட்டத்தின் பொறுப்புக் கூற வேண்டிய பணியென்பதால் அது சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.
     உதாரணம்:

     மூலதன வளங்கள் : பணமாகப் பெற்றுக்கொள்பவற்றிற்குப் பற்றுச்சீட்டொன்றை உத்தியோகபூர்வமாக வழங்கல்

     பௌதிக வளங்கள் : பௌதீக ரீதியாக பெற்றுக்கொள்பவை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிப் பற்றுச்சீட்டொன்றை வழங்கல்

     மனித வளங்கள் : மனித வளங்கள் உதவும் முறையைக் கையொப்பப்பத்திரத்தின் மூலம் ஆவணப்படுத்தல்

## 6. நேர அட்டவணை, பொறுப்புக்கள் மற்றும் மூலப்பிரமாணங்கள்

- முழுமையான கருத்திட்டச் செயற்பாடுகளாகப் பாகுபடுத்தி அந்தந்தச் செயற்பாடு களுக்கான நேர அட்டவணையொன்று காட்டப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல் குறித்த பொறுப்பை உறுதியாக பெயரிட்டு நபர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
- ஏதாவதொரு செயற்பாடு பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதியாக அறிந்து கொள்ள முடியுமான மூலப்பிரமாணம் காட்டப்படுதல் வேண்டும்.
- இதற்காக 'கான்ட்' படிவத்தை பொருத்தமான முறையில் உபயோகப்படுத்த முடியும்
- கருத்திட்டத்திற்கு ஏதாவது ஒரு விதத்தில் தொடர்புபட்ட அனைவரிடமும் கான்ட் திட்டத்தின் பிரதியொன்று இருத்தல் வேண்டும்.
- அந்தந்த செயற்பாடுகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்கும் மேற்பார்வை நடவடிக்கையொன்று இருத்தல் வேண்டும்.

கருத்திட்டத்தின் பெயர்:

கருத்திட்டத்தின் காலம்:

கருத்திட்ட பணியாளர்கள் அல்லது குழு:

கருத்திட்டத்தின் இலக்கு:

கருத்திட்டத்தின் முழுமையான ஆகு செலவு:

| இலக்கம் செயற்பாடு | | நேர அட்டவணை (வாரங்களில்) | மூலப் பிரமாணம் | பொறுப்பு | மேற்பார்வை |
|---|---|---|---|---|---|
| 1 | முழுமையான கலந்துரையாடல் | | | | |
| 2 | ஆலோசனைப் பத்திரத்தைத் தயாரித்தல் | | | | |
| 3 | அனுமதியைப் பெறுதல் | | | | |
| 4 | விளம்பரப் பலகையைத் திட்டமிடல் | | | | |
| 5 | விளம்பரப் பலகையை நிர்மாணித்தல் | | | | |
| 6 | விளம்பரப் பலகையைக் காட்சிப்படுத்தல் | | | | |
| 7 | விளம்பரப் பலகையைத் திறந்துவைத்தல் | | | | |
| 8 | ஊடகத் தொடர்புகள் | | | | |

7. **எதிர்பார்க்கப்படும் பெறுபேறு**

- முழுமையான கருத்திட்டத்தில் அந்தந்தச் செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளும் எதிர்பார்க்கப்படும் இறுதிப் பெறுபேறுகளும் வேறுவேறாகக் காட்டப்படுதல் வேண்டும்.
- எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை அடைவதே கருத்திட்டத்தின் இலக்கு
- எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளைக் கைப்பற்ற முடிவது உரிய முறையில் ஒழுங்குறுத்தல் மூலமேயாகும்.
- கருத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் இறுதிப் பெறுபேறு தொடர்பாகக் குறிப்பிட்ட அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும்.
- எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் தொடர்பாக அறிவுறுத்தலானது பொதுமக்களுடன் தொடர்புபட்ட செயலொன்றாகும்.

8. **மதிப்பீட்டு நடவடிக்கை**

- மதிப்பீட்டு நடவடிக்கை எத்தகையது? என்பது குறித்து கருத்திட்ட ஆலோசனைப் பத்திரத்தில் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
- மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பமாவது ஆலோசனைப் பத்திரத்தை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதினாலாகும்.
- மதிப்பீட்டு நவடிக்கை பூரணமாவது கருத்திட்டத்தின் இறுதி முழுமையான செயற்பாட்டு மதிப்பீட்டிலாகும்.
- மதிப்பீட்டு நடவடிக்கை தொடர்ச்சியாக முழுக் கருத்திட்ட காலத்தினுள் நடைபெறுதல் வேண்டும்
- இறுதி மதிப்பீடு நடைபெறுவது கருத்திட்ட முடிவின்போது
- தொடர்ச்சியான மதிப்பீடுகளானது இறுதி மதிப்பீட்டிற்கு வழிகாட்டும்
- மதிப்பீட்டு நடவடிக்கைகள் பொருத்தமான ஆவண முறைமையொன்று இருத்தல் வேண்டும்.
- அந்தந்த மதிப்பீட்டுச் சந்தர்ப்பங்களுக்குப் பொறுப்பான நபர்கள் பெயரிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- தனக்கு உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அந்தந்த நபர்கள் பொறுப்பை ஏற்றல் வேண்டும்.
- உரியவாறு மதிப்பீட்டின் மூலம் கருத்திட்டத்தின் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் திருத்தியமைக்க முடியும் என்றும், உறுதிப்படுத்தல் வேண்டும். (அப்பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளன.)

**அலகு 8.0** :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் (பாடவேளைகள் 48)

**தேர்ச்சி** :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி, இறுதி அறிக்கையை முன்வைக்கும் வரையிலான முழுமையான செயற்பாட்டிற்குரிய தேர்ச்சியை வெளிப்படுத்தல்.

**தேர்ச்சி மட்டம்** :- 8.3 அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் தேர்ச்சியை வெளிப்படுத்தல்.

**பாடவேளைகள்** :- 12

**விடய உள்ளடக்கம்** :-அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

1. வேலைப் பகிர்வு மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்
2. தகவல்களைத் தொகுத்தல், அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தல்
3. பிரதிலாபங்களை கணிப்பிடல் மற்றும் பின்னூட்டுகை

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்றிட்டமொன்றை நடைமுறைப் படுத்தும் போது வேலையைப் பகிர்தல் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக நுணுக்கமாகப் பகுத்தாய்வு செய்தல்
- தகவல்கள் தொகுத்தல் மற்றும் அறிக்கைப்படுத்தலுக்கான பொருத்தமான ஆவணங்களைத் தயாரித்தல் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளல்
- தகவல்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கருத்திட்டமொன்றை ஒழுங்குறுத்தும் விதம் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளல்
- கருத்திட்டத்தின் பிரதிபலன்கள் தொடர்பான பின்னூட்டுகை நடவடிக்கையொன்றைக் கையாளுதல்
- கருத்திட்டத்தின் பிரதிபலன்களை மதிப்பிடுவதற்கு பின்னரான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தல்.

## அறிமுகம்

கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதிலான வெற்றியானது அந்தந்த செயற்பாடுகளை சரியான முறையில் வேறுபடுத்தி வேலையை பகிர்ந்து கொண்டும் அந்தந்தப் பணிகளுக்கு பொறுப்பானவர்களினால் அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதன் பொறுப்பை நிறைவேற்றலிலேயே தங்கியுள்ளது. சிறிய அளவிலான அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்றிட்டமொன்றிலும் இப்பணிகளை விலக்க முடியாது. அப்படியாயின் அச்செயற்றிட்டம் வழி தவறிச் செல்லும் நிலைக்கு உள்ளாகும். அதனால் சரியான முறையில் பணிகளை வகைப்படுத்தி ஆவணப்படுத்தலும், கருத்திட்டத்தின் கலந்துரையாடலின்போது உரியவர்களுக்கு சரியான முறையில் பணிகளை வழங்குதலும் வேண்டும். தான் பொறுப்பேற்ற பணிகள் தொடர்பான பொறுப்பானது அவர்கள் அனைவருக்கும் உண்டு. அது மட்டுமன்றி முழுமையான கருத்திட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அனைவரும் பொறுப்புக் கூறல் வேண்டும். அதனால் கருதப்படும் ஒரு விடயம் யாதெனில், இது தமது பணியல்ல என எண்ணி தனது பணியில் மாத்திரமே ஈடுபடுவதை தவிர்த்தலாகும். பணியைப் பகிர்ந்து கொண்டாலும், கருத்திட்டம் வெற்றியடைவது அவ் அனைத்து பணிகளையும் ஒன்று சேர்த்து

பூரணப்படுத்துவதன் மூலமேயாகும். அதனால் பணிகளுக்கிடையே தொடர்பு காணப்படும் பணிகளை நடைமுறைப்படுத்தும்போது மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றும்போது அது தொடர்பாக சரியான முறையில் அறிக்கைகளை வைத்துக் கொள்ளல் அவசியமாகும். சில அறிக்கைகளை தாமே வைத்துக் கொள்வதற்கு முடிவதோடு வேறு சிலவற்றை மேற்பார்வை செய்வதற்காக அவ்வப்போது முன்வைக்க வேண்டும். ஏதாவது அறிக்கையொன்றை மேற்பார்வைக்காக முன்வைக்க வேண்டிய உரிய காலத்தில் முன்வைத்தலானது பணிகளுக்கு பொறுப்பானவர்களின் கடமையாகும். அவ்வாறு சரியான தகவல்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் உரிய வழியில் பயணிக்கின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு மேற்பார்வையாளருக்குச் சந்தர்ப்பங்கள் கிட்டும். இறுதியில் கருத்திட்டத்தின் முழுமையான பிரதிபலன்களை மதிப்பீடு செய்ய முடிவது அது தொடர்பான பின்னூட்டுகை செய்தலின் பின்னராகும். அதற்குக் காரணம் கருத்திட்டக் குழுவின் நோக்கிற்கு அமைய பிரதிபலன்களை மதிப்பீடு செய்வதினால் தவறுகளுடன் கூடிய வரைவிலக்கணங்கள் உருவாவதற்கு இடமுண்டு என்பதாகும். ஏதாவது செயற்றிட்டமொன்றில் பிரதிபலன்களைச் சரியாக மதிப்பீடு செய்வது அப்பிரதிபலன்களை அனுபவிப்பவர்களேயாகும். அதனால் பிரதிபலன்களை அனுபவிப்பவர்களின் எண்ணங்களைச் சரியாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய பின்னூட்டுகை நடவடிக்கையொன்றை நடைமுறைப்படுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை இறுதிப் பிரதிபலன்களை மதிப்பிடுவதற்காக பயன்படுத்த முடியும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. வேலைப்பகிர்வு மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றல்

- முழுமையான கருத்திட்ட செயற்பாடுகளை வகைப்படுத்தும் போது அவற்றில் வேலைகள் உருவாகின்றன.
- ஒவ்வொரு வேலைகளுக்கும் திறமையானவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அப்பணிகளை பொறுப்பளித்தல் வேண்டும்.
- பணிகளைப் பொறுப்பேற்றலோடு அவற்றைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பும் அவர்களுக்குக் கையளிக்கப்படுகிறது.
- பொறுப்புக்களும் பொறுப்புக் கூறலும் ஒருங்கே முக்கியமானவையாகும்.
- வேலைப் பகிர்வை எழுத்து மூலம் செய்தல் வேண்டும்
- தகுதியற்றவர்களுக்கு வேலையைப் பகிர்ந்தளித்தலின் மூலம் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளானது முடிவுறாது.
- செயலொன்றைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான காலத்தை செலவழிக்கக் கூடிய மற்றும் ஆக்கபூர்வமாக அவற்றை நிறைவேற்றக் கூடியவர்களுக்கு மாத்திரம் வேலைகளைப் பகிர்ந்தளித்தல் வேண்டும்.
- செயலொன்று உரிய முறையில் பூர்த்தி செய்வதற்கு ஆரம்ப சக்தி மிகவும் முக்கியமாகும்
- வேலையைப் பொறுப்பேற்பவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்குரிய வேலையைப் பூர்த்தி செய்ய முடியும் என திருப்தியடைவது கருத்திட்ட குழுவின் பொறுப்பாகும்.
- அந்தந்த நபர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ள விதம் குறித்துக் கருத்திட்ட குழுவின் சகலரும் அறிந்திருத்தல் வேண்டும்.
- சில செயல்களை ஒவ்வொன்றாகவும் சில செயல்களை ஒரே தடவையிலும் செய்தல் வேண்டும்.
- அந்தந்தப் பணிகளைப் பூர்த்தி செய்வதில் தாமதமானால் அடுத்த கட்ட பணியைப் பூர்த்தி செய்வதானது தாமதமடைந்து உரிய நேர அட்டவணையைப் பூர்த்தி செய்ய முடியாது போகும்.
- தமக்குச் சரியான முறையில் பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதுவிடின் வேலையைப் பொறுப்பேற்காது இருத்தல் வேண்டும்.

2. **தகவல்களைத் தொகுத்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்**

- தகவல்களைத் தொகுத்தலினூடாக கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதனை மேற்பார்வையாளர் அறிந்து கொள்ள முடிதல்
- தகவல்களைத் தொகுப்பதற்காக உறுதியான ஆவணத்தினூடாக அறிக்கையிடல் வேண்டும்.
- தகவல்களைத் தொகுத்தல் ஆவணத் தொகுதியொன்றை உருவாக்கிக் கொள்வது கருத்திட்ட குழுவின் பொறுப்பாகும்.
- அந்தந்தச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதற்கான தகவல்கள் அறிக்கைகள் ஊடாக கிடைப்பதோடு அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு அதனூடாக இலகு தன்மை ஏற்படுகிறது.
- தேவைப்படின் கருத்திட்டத்தின் நடவடிக்கையில் குறிப்பிட்ட சில வேறுபாடுகளை ஏற்படுத்துவதற்கு இதனூடாக வாய்ப்புக் கிடைக்கின்றது.

திட்டம்

ஒழுங்குறுத்தல்

நடைமுறைப்படுத்தும் விதம்

3. **பிரதிபயன்களை மதிப்பிடுதல் மற்றும் பின்னூட்டுகை**

- பிரதி பயன்களை மதிப்பிடுவதற்காகப் பின்னூட்டுகை அவசியமாகும்.
- பிரதிபயன்களை அனுபவிப்போர்களினால் உரிய முறையில் பிரதிபயன்கள் மதிப்பிடப்படுகின்றன.
- பின்னூட்டுகைக்காக உறுதியான பல முறைகளைப் பயன்படுத்த முடியும். (நேர்முகக் கலந்துரையாடல்/ கண்காணிப்பு/ நிபுணர்களின் அறிக்கைகள் போன்றவை)
- உரிய முறையில் பின்னூட்டுகை அறிக்கைகளைத் தயார் படுத்தி பிரதிபலன்கள் மதிப்பீட்டு கலந்துரையாடலை நடாத்துதல் பொருத்தமானது.
- சிலவேளைகளில் எதிர்பார்க்கப்படும் பிரதிபயன்கள் கிடைக்காமல் போகக் கூடும்.
- சிலவேளைகளில் எதிர்பாராத பிரதிபயன்களைப் பெற்றிருக்கக்கூடும்.

| | | |
|---|---|---|
| **அலகு 8.0** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் (பாடவேளைகள் 48) |
| **தேர்ச்சி** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி, இறுதி அறிக்கையை முன்வைத்தல் வரையிலான முழுமையான நடவடிக்கைக்குரிய தேர்ச்சியை வெளிப்படுத்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 8.4 அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ப இறுதி அறிக்கை தயாரிப்பின் தேர்ச்சியை வெளிப்படுத்தல். |

**பாடவேளைகள்** :- 12

**விடய உள்ளடக்கம்** :- இறுதி அறிக்கையைத் தயாரித்தல்

1. தகவல்களை ஒன்று திரட்டல் மற்றும் அறிக்கை வரைதல்
2. திறனாய்வு மற்றும் விமர்சன ரீதியிலான கலந்துரையாடல்
3. அறிக்கையைத் தயாரித்தல்
4. அறிக்கையைச் சமர்ப்பித்தல்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- திரட்டப்பட்ட தகவல்களினால் இறுதி அறிக்கையொன்றை வரைதல்
- கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெற்ற வெற்றிகள் மற்றும் ஏற்பட்ட தவறுகள் அல்லது காலங்கடந்த வேலை பற்றி தெளிவுபடுத்தும் விதத்தில் கலந்துரையாடல் நடைபெறல்
- இறுதி அறிக்கையைத் தயாரித்தல்
- இறுதி அறிக்கையைப் பாடசாலையின் முடிவு செய்யப்பட்ட பெறுநர்களுக்கு முன்வைத்தல்

## அறிமுகம்

ஏதேனும் கருத்திட்டமொன்று முடிவடைந்த பின்னர் சரியான அறிக்கையொன்றைத் தயாரிக்க வேண்டும். அது இக்கருத்திட்டத்திற்கும் பொருந்தும். அவ்வாறான இறுதி அறிக்கை மூலம் உபயோகங்கள் உரித்தாகும். இதில் ஒன்று, கருத்திட்டத்தின் பணிகளைச் சரியான வகையில் விமர்சனம் செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றமையாகும். அடுத்தது, ஏற்பட்ட தவறுகள், காலங்கடந்த வேலைகள் மற்றும் பெற்றுக் கொண்ட வெற்றிகள் தொடர்பாக மதிப்பிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தல். அத்தோடு கருத்திட்டத்திற்காக அனுசரணை வழங்கிய அல்லது தொடர்புபட்ட பல்வேறு நபர்களுக்கு அந்நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படையான எண்ணங்களை ஏற்படுத்துவதற்குச் சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்தல். நான்காவதாக, எதிர்காலத்தில் அவ்வாறான கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கு எண்ணும் வேறு நபர்களுக்கு நல்லதோர் வழிகாட்டியொன்று கிடைக்கப்பெறல். ஐந்தாவது, பாடசாலையின் பல்வேறு பணிகள் தொடர்பான இலக்கியமொன்றை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு செய்ய முடிகின்றமை. இதற்காக சுய திறனாய்வானது மிகவும் முக்கியமாகும். அந்தந்தப் பணிகளை நிறைவேற்றுகையில் தன்னால் நேரிடும் காலந் தாழ்த்தல்களை தெரிவிக்கும் மற்றும் வெற்றிகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தும் திறனாய்வு ரீதியான கூட்டமொன்றை நடாத்துதல் அவசியமாகும். இதற்காகக் கருத்திட்டத்துடன் தொடர்புடைய அனைவரும் பங்குபற்றுதல் வேண்டும். அறிக்கையானது மிகவும் சுருக்கமாகத் தயாரிக்கப்பட வேண்டும். அதனூடாக மற்றவர்களுக்கு முக்கியமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வறிக்கையை கணனி மூலம் தயாரித்துப் பிரதிகள் பலவற்றை பூர்த்தி

செய்தல் அவசியமாகும். அப்பிரதிகளைக் கருத்திட்டக் குழுவின் அனைவருக்கும், பாடசாலை நூலகத்திற்கும், அதிபருக்கும் கட்டாயமாக வழங்கல் வேண்டும். அவ்வாறே கருத்திட்டத்திற்கு அனுசரணை வழங்கிய அல்லது அது தொடர்பாக ஆர்வம் காட்டும் ஏனையோருக்கும் பிரதியொன்றை வழங்குவது பொருத்தமானதாகும். அதன் அறிக்கையை முனவைக்கும் சந்தர்ப்பத்திலேயே இதனை மேற்கொள்ளல் வேண்டும். அதற்காக நன்றாக திட்டமிடப்பட்ட கூட்டமொன்றை நடாத்துவதோடு போதியளவு கால எல்லையுடன் அழைப்பிதழ் அனுப்பப்படல் வேண்டும். அவ்வழைப்பிதழைப் பெற்றுக் கொண்டனரா என்பதையும் அழைக்கப்பெற்றவர்கள் பங்குபற்றுகின்றனரா என்பதையும் முன்கூட்டியே அறிந்து கொள்வதன் மூலம் அறிக்கையை முன்வைக்கும் சந்தர்ப்பத்தை மிகவும் உற்பத்தித்திறனுடையதாக்க முடியும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. தகவல்களைத் திரட்டல் மற்றும் அறிக்கை வரைதல்

- கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலும் முடிவடைந்ததன் பின்னரும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை வரைவானது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- அறிக்கை வரைதலுக்காகப் பொருத்தமான திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும்.
- அறிக்கையில் ஒவ்வொரு பகுதிகளையும் ஒவ்வொரு குழுக்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டு வரைதலை செய்ய முடியும்.
- தகவல்களின்படி தெளிவாகும் விடயங்கள் தவிர்ந்த கருத்திட்ட குழுக்களின் தனிப்பட்ட கருத்துக்கள் அறிக்கையில் உள்ளடக்கப்படலாகாது.
- அறிக்கையானது சுருக்கமாக வரையப்பட வேண்டும்.
- முதலில் தயாரிக்கப்படும் வரைவை பரிசீலனை செய்து திருத்தப்பட்டு இறுதி அறிக்கையை மேற்கொள்ள முடிதல்.

### 2. திறனாய்வு மற்றும் விமர்சனக் கலந்துரையாடல்

- கருத்திட்டமொன்று முடிவடைந்த பின்பு சுய விமர்சனக் கலந்துரையாடலொன்றை நடாத்துவதன் மூலம் அதன் செயற்பாட்டின் உண்மையான நிலையை அறிந்து கொள்ள முடியும்.
- கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் போது வெற்றிகளைப் போன்றே காலந் தாழ்தல்கள் அல்லது தவறுகள் நேரிடுவது இயற்கையான நிகழ்வொன்றாகும்.
- மிகவும் முக்கியமானது ஏதாவது ஒன்று நடைபெற்றது எவ்வாறு? எதிர்காலத்தில் அவ்வாறானவை நேரிடுவதை தடுப்பது எவ்வாறு? என்பதை ஆராய்ந்து பார்த்தலேயன்றி காலந்தாழ்த்தல் அல்லது தவறுகளை செய்தது யார் என்பதை ஆராய்வதன்று.
- திறனாய்வு மற்றும் விமர்சன ரீதியாக கலந்துரையாடலொன்றில் கலந்துகொள்வது ஒருவருடைய தொழில் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான ஆரம்பமொன்றாகும்.
- கருத்திட்டத்துடன் தொடர்புடைய அனைவரும் இக்கலந்துரையாடலில் பங்குபெறுதல் வேண்டும்.
- அறிக்கையிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கலந்துரையாடல் நடாத்தப்படல் வேண்டும்.
- பாடசாலையில் நடைபெறும் இக்கலந்துரையாடல் பாடசாலை அதிபரினால் நடாத்தப்படுவது மிகவும் பொருத்தமானது.
- அவ்வாறு இல்லாவிடின் கருத்திட்டத்தின் பணிகளுடன் நேரடியாக தொடர்புபடாத ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவரினால் கலந்துரையாடல் நடாத்தப்படுதல் பொருத்தமானது.

3. **அறிக்கையைத் தயாரித்தல்**

- யார்? என்ன? யாருக்கு? எவ்விடத்தில்? எச்சந்தர்ப்பத்தில்? எவ்வாறு? நடந்தது என்ன? இது தொடர்பான போதியளவு தகவல்கள் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
  - இலக்கை அண்மித்தல் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றும்போது ஒழுங்குறுத்தல் செய்யப்பட்ட விதம்
  - வரவு செலவு கட்டுப்பாடு மற்றும் வளங்களின் பயன்பாடு
  - அனுசரணை மற்றும் நிபுணர்களின் அறிவுரைகள்
  - எதிர்கொள்ள நேரிட்ட சிக்கல்கள், காலந்தாழ்த்தல்கள் மற்றும் தவறுகள் போன்றன
  - பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றிகள்
  - வெற்றிக்கு அல்லது தோல்விகளுக்கான காரணங்கள்
  - முன்வைக்கப்படும் விதந்துரைகள்
  - கருத்திட்ட குழுக்கள் பற்றிய தகவல்கள்
- அறிக்கையைச் சுருக்கமாக தயாரித்தலானது உபயோகமானது
- பொருத்தமான படிவமொன்றை பயன்படுத்தல் வேண்டும்
- அறிக்கையானது சிறிய புத்தகமாக தயாரிக்கப்படல் வேண்டும்
- தேவையான குறைந்தபட்ச பிரதிகளின் அளவிலேனும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

4. **அறிக்கையை முன்வைத்தல்**

- அறிக்கையை முன்வைத்தலானது அதற்காகவே கூட்டப்பட்ட சபையில் நடாத்தப்படல் வேண்டும்
- கருத்திட்டக் குழுவினாலேயே அறிக்கையை முன்வைத்தல் வேண்டும்.
- அறிக்கையை முன்வைப்பதற்கு முன்னர் சபையில் அனைவருக்கும் அதன் பிரதியொன்றைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்
- அறிக்கையின் தகவல்களின் மூலம் கருத்திட்டத்தின் பணிகள் உரிய வகையில் விமர்சிக்கப்பட வேண்டும்
- அறிக்கையை முன்வைப்பதன் மூலம் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் வெற்றிகரமாகப் பூர்த்தியாகும்.
- அறிக்கையின் பிரதிகள் பாடசாலையின் நூலகத்திலும் அதிபரின் காரியாலயத்திலும் அனுசரணையாளர்களிடமும் கருத்திட்ட குழுவினரிடமும் இது தொடர்பாக ஆர்வமுடையோரிடமும் விசேடமாகப் பெயர் குறிப்பிட்டு கூறக்கூடியவர்களிடம் இருத்தல் வேண்டும்.
- இவ்வறிக்கையின் பிரதியை மாணவர்களின் குழுக் கருத்திட்ட அறிக்கையொன்றாக பயன்படுத்த முடியும்.

| | |
|---|---|
| **அலகு 9.0** | :- சகவாழ்விற்கான தொடர்பாடல் (பாடவேளைகள் 50) |
| **தேர்ச்சி** | :- பொறுப்புக் கூறவேண்டிய பிரசை என்ற வகையில் சகவாழ்வுடன் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும்போது தொடர்பாடலைப் பயன்படுத்தும் தேர்ச்சியை வெளிப்படுத்தல். |
| **தேர்ச்சி மட்டம்** | :- 9.1 சிக்கலொன்றின் அனைத்து பக்கங்களையும் விமர்சனம் செய்வது சிக்கலைப் பூர்த்தியாக்குவதற்கு வெற்றி மாதிரியை கையாளும் விதத்தைப் பரீட்சித்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- சிக்கல், சிக்கலைத் தீர்த்தல் மற்றும் சமாதானம் செய்தல்

1. சிக்கல்களின் வரைவிலக்கணம்
2. சிக்கல்களின் உருவாக்கம், தொடர்புடையோர் மற்றும் சிக்கல்களின் தன்மை
3. சிக்கல்களின் முகாமைத்துவம் மற்றும் தலையிடுவோர்
4. வெற்றி - வெற்றி மாதிரி (Win - Win model)

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- சிக்கலை விளக்குதல்
- சிக்கல்களின் உருவாக்கம், தொடர்புடையோர் மற்றும் சிக்கலின் நிலைப்பாட்டை விமர்சித்தல்
- சிக்கல்களின் முகாமைத்துவத்தின் தன்மை மற்றும் தலையிடுபவர் களின் பாத்திரத்தைத் தெளிவுபடுத்தல்
- வெற்றி - வெற்றி மாதிரி தன்மை மற்றும் அதன் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தும் விதத்தைப் பகுத்தாய்வு செய்தல்

## அறிமுகம்

வாழ்வில் சிக்கலானது யதார்த்தமானதாகும் ஒரு வகையில் அது வாழ்க்கைக்குப் பாதகமானதாக இருப்பதோடு, இன்னொரு வகையில் வாழ்வதற்குத் தேவையான சக்தியை வழங்குகிறது. மனிதர்கள் ஏதேனும் ஓர் இடத்தில் இருக்கின்றனரா? அங்கு சிக்கல்கள் ஏற்படுவது இயல்பு. அது தனிநபரில் இருந்து ஆரம்பித்து உலகளாவிய ரீதியில் பரவும். சிக்கல் ஏற்படுவது எதிரான இரண்டு கருத்துக்கள் அல்லது பல கருத்துக்களினாலாகும். சிலவேளைகளில் மானசீக இயல் நிகழ்ச்சிகள் அதற்கு காரணமாக அமைய முடியும். அவ்வாறு இல்லாவிடின் கலாசார, மத, மொழி ரீதியான, நிர்வாக, சட்ட அல்லது அரசியல் போன்ற பல்வேறு காரணங்கள் அடிப்படையாக முடியும். முழு சமூக முறைமையும் நபர்களும் பல்வேறு குணாம்சங்களுடன் இருப்பதாலும், நபர் ஒருவர் உணர்ச்சி வசத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதனாலும் சிக்கல்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. சிக்கல்களின் உருவாக்கத்திற்கும் அவற்றை பேணுவதற்கும் அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கும் தொடர்பாடல் பயன்படுகிறது. சிக்கலுடன் தொடர்புடைய முதலாவது மற்றும் இரண்டாவது சாராரிடையே முன்வைக்கப்படும் மூன்றாம், சாரார்கள் தலையீட்டாளர்களாவர். சிக்கலொன்று தொடர்பாக திருப்தியான தீர்வொன்றைப் பெற முடிவது வெற்றி - வெற்றி மாதிரியைப் பயன்படுத்துவதன் மூலமேயாகும். அதன்படி சிக்கலுடன் தொடர்புடைய இருசாராரும் வெற்றியை அடைவதன் மூலம் சிக்கலைத் தீர்க்க முடியும். ஆனால் அது இலகுவான காரியமன்று.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

**1. சிக்கலின் வரைவிலக்கணம் - ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் இரண்டு அல்லது கூடுதலான எண்ணிக்கைக்கிடையில் ஏற்படும் தொடர்பு சிக்கலாகும்.**

- சிக்கல் என்பது, பிரசையிடம் அல்லது பிரசைகள் இருவரிடம் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலானோர்க்கிடையில் ஏற்படும் எதிரான தொடர்புகள்
- தனிநபரின் உள்ளத்தில் ஏற்படும் முரணான அதாவது உறுதியற்ற மனநிலை சிக்கல் வகையைச் சார்ந்தது.
- சிக்கலானது தற்காலிகமான மன விரோதம் போன்ற சிறிய அளவிலான இயல் நிகழ்வொன்று அல்லது பெரிய யுத்தமொன்றாக விசாலமானதாகவும் இருக்கலாம்.
- இணக்கப்பாடு இன்மையினால் சிக்கல்கள் ஏற்படும்
- சிக்கலொன்று சாதாரண காரணமொன்றினால் ஏற்பட்டு, அதிகளவானோரை ஒன்று திரட்டி விசாலமாகவும் அல்லது படிப்படியே சமாதானமாகி முடிவடையலாம்
- சிக்கல்களின் மூலங்கள் எல்லா இடங்களிலும் எந்நேரமும் பல்வேறு வடிவங்களில் காணப்படும்.

கெல்டுங் அவர்களின் சிக்கல்
முக்கோணத்தின் கட்டமைப்பு (Structure)



உளப்பாங்கு (Attitude)    பழக்க வழக்கங்கள்/ நடத்தைகள் (Behaviour)

(அமெரிக்க ஹாவர்ட் பல்கலைக்கழகத்தின், பேராசிரியர் ஜோஹான் கெல்டுங் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது)

கட்டமைப்பு : சிக்கலுடன் மற்றும் தொடர்புடைய விடயங்களின் மூலகாரணிகள்
உளப்பாங்கு: சிக்கல்கள் உருவாக்கப்படும் உளவியல் சார்ந்த காரணிகள் மற்றும் நடவடிக்கைகள் இதில் உள்ளடங்கும். எதிர்பார்ப்புக்களை வீணடித்தல், விருப்பமின்மை, குரோதம் என்பன இதற்கு உதாரணங்களாகும்.
பழக்க வழக்கங்கள் : நபர்களினால் ஒவ்வொருவருக்குமிடையில் பாதிப்பை ஏற்படுத்த ஆரம்பிக்கையில் சிக்கல்களின் பழக்க வழக்கங்கள் மேலோங்கிக் காணப்படும்.

**2. சிக்கல்களின் உருவாக்கம், நபர்கள் மற்றும் சிக்கல்களின் நடைமுறை**

- ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் - எண்ணங்கள், அபிலாஷைகளுக்கிடையில் ஒருமைப்பாட்டிற்கு வர முடியாமையினால் சிக்கலொன்று உருவாகிறது.
- இருசாரார் ஒரு காரணத்தைக் கொண்டு உருவாக்கிக்கொள்ளும் முரணான தொடர்புகளினால் சிக்கலொன்று உருவாகிறது.
- தீர்மானங்களை எடுப்பதற்குப் போதுமான தகவல்கள் இன்மை, புரிந்துணர்வு இன்மை, சுயநலம் மற்றும் தமது கருத்தில் உறுதியாக இருத்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் சிக்கல்கள் உருவாகும்.
- சிக்கலுடன் தெடர்புடையவர்களைத் தெளிவாக இனங்கண்டு கொள்ள முடியும்.
- சிக்கல்களுடன் நேரடியாகத் தொடர்புபடுவோர் நேரடி கட்சிதாரர்களாவர்.

- சிக்கலை மேலும் பேணுவதற்கு, நேரடிக் கட்சிதாரர்கள் தமது விருப்பங்கள் அல்லது வேறு நபர்களின் விருப்பப்படி நடவடிக்கைகள் மேற்கொள்வர்
- ஏதேனும் இரு கட்சிகளுக்கிடையில் ஏற்படும் சிக்கல்களின் போது இடை இலாபங்களை பெறும் மறைமுகமானோர் இருக்கக் கூடும்.
- மறைமுக கட்சிக்கார்களினால் சிக்கல்களை மேலும் தொடர்ச்சியாக பேணுவதற்கு நேரடி கட்சிதாரர்கள் தூண்டுவர்.

**நபர்களுக்கிடையில் ஏற்படும் சிக்கல்கள்**

1. நபர்களுக்கிடையிலான சிக்கல்கள்:

   நபர்களின் தொடர்புகள் இல்லாது போதல், பாதிப்படைதல், நட்பு இல்லாது போதல், நம்பிக்கை இழக்கப்படல், திருமண வாழ்க்கை சிதைதல், தனிப்பட்ட வாழ்க்கை சிதைதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

   இதற்கு காரணம் தவறான புரிந்துணர்வு, தொடர்பாடலின்மை மற்றும் தவறான நபர்களின் பழக்க வழக்கங்கள் போன்றவைகள்

   - தவறான புரிந்துணர்வு:
     வேறொருவரைத் தவறாக நோக்கல், தவறான முன்கூட்டிய தீர்ப்பு, அதிக நம்பிக்கை, புரிந்து கொள்ளாமை, தவறாகப் புரிந்து கொள்ளல் போன்றன.
   - தவறான நபரின் பழக்க வழக்கங்கள்:
     தொல்லையான நடத்தைகள், நம்பிக்கையைச் சிதைத்தல், கவனமின்மை, சுயநலதன்மை, கொள்கையின்மை போன்றன நபர்களுக்கிடையிலான சிக்கல்களின் போது பெரும்பாலும் காணக்கூடிய அம்சம் மிகுந்த உள ஆவேசமேயாகும்.
2. தகவல்களின் சிக்கல்கள்: ஏதேனும் நபர்களிடம் சரியான தகவல்கள் இன்மையால் தீர்மானம் எடுப்பதற்கு ஏற்படும் சிக்கல்கள்
3. விழுமிய சிக்கல்கள்: இரு கட்சியினர் இரு வகையில் விழுமியங்களை ஏற்றுக் கொள்ளல்.
4. கட்டமைக்கப்பட்ட சிக்கல்கள்: நபர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவன அல்லது சூழல் கட்டமைப்பில் உள்ள தவறுகளினால் ஏற்படும் சிக்கல்கள்
5. தேவைப்பாட்டுச் சிக்கல்கள்: நபர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முடியாமையால் ஏற்படும் சிக்கல்கள் இதில் உள்ளடங்கும். இதற்காக மாஸ்லோவின் தேவைப்பாட்டு பிரமிட்டை விமர்சிக்க முடியும்.

**மாஸ்லோவின் தேவைப்பாடு பிரமிட்**




- அந்தந்த மட்டங்களிலே நபர்களின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்ய முடியாமையினால் சிக்கல்கள் உருவாகின்றன
- சிக்கலையுடையோரின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வரை சிக்கல்கள் காணப்படும்
- சிக்கல்களை உரியமுறையில் முகாமைத்துவம் செய்யாவிடின் முதல் காரணத்தினால் வெளிவாரியாகச் சிக்கல்கள் ஏற்படக்கூடும்.

**3. சிக்கல்களின் முகாமைத்துவம் மற்றும் தலையீட்டாளர்கள்**
**சிக்கல்களின் முகாமைத்துவம்**

- சிக்கலொன்றைப் பாதகமான பக்கத்திற்கு செல்ல விடாது அதனை உற்பத்தித் திறனான முறையில் நடாத்தல் சிக்கல்களின் முகாமைத்துவமாகும்.
- சிக்கல்களின் முகாமைத்துவம் என்பது சிக்கல்களைத் தீர்த்தல் என்பதல்ல.
- சிக்கல்களின் முகாமைத்துவத்தில் சிக்கல்களின் தீர்வுக்கான அடிப்படையை கட்டியெழுப்ப முடியும்.
- சிக்கல்களுடன் தொடர்புபட்ட கட்சிதாரர்களின் ஆக்கபூர்வமான பழக்கவழக்கங்களின் வேறுபாடுகளினூடாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வன்செயல்களைக் கட்டப்படுத்துவதனால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய வன்செயல்களைக் கடடுப்படுத்தல் மற்றும் திசைதிருப்புதல் என்பவற்றை சிக்கல்களின் முகாமைத்துவம் மூலம் செய்ய முடியும்.
- சிக்கல்களின் முகாமைத்துவம் என்பது சிலவேளைகளில் ஆக்கபூர்வமாக ஒழுங்கமைப்பது தொடர்பாக முழுவதையும் உள்ளடக்கிய பொதுவான சொல்லாகப் பயன்படுதல்.
- சிக்கல்களின் முகாமைத்துவத்தினூடாக முயற்சி செய்வது
  1. சிக்கல்களின் வன்செயல்கள் மற்றும் அழிவு மட்டங்களைக் குறைத்தல்
  2. சிக்கல்களின் தீவிரம் மற்றும் பரம்பலடைவதைத் தடுத்தல்
  3. வேறு திசைகளுக்குக் கிடையானதாக பரவுவதைத் தடுத்தல்

- சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான எல்லைக்குள் சிக்கலை உட்படுத்தலானது சிக்கல்களின் முகாமைத்துவத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.
- சிக்கல்களின் முகாமைத்துவத்தில் சிக்கலுடன் தொடர்பானவர்களை ஒரு உள்ளக செயல்பாட்டு மாதிரிக்கு கொண்டு வருவதற்கு முயற்சி செய்தல்.

**தலையீட்டாளர்கள்**

- சிக்கல்களின் முகாமைத்துவத்திற்கு மற்றும் தீர்வுக்கு ஒன்றுபடும் மூன்றாவது நபரொருவர்
- சிக்கலுக்கு வெளியே காணப்படுவோர்.
- தலையீட்டாளர், நபரொருவராக, குழுவொன்றாக அல்லது அமைப்பொன்றாக அல்லது நாடொன்றாக இருக்க முடியும்.
- பக்கச்சார்பற்றதாக இருபாலாருக்கும் உதவுதல்
- தலையீட்டாளர்களின் கலந்து கொள்ளலானது சுயாதீனமாக அல்லது அழைப்பின் பேரில் நடக்கக் கூடும்
- கருத்துக்கள் மற்றும் செய்திகளை அனுப்புதல், இரு சாராருடன் வேறு வேறாக கலந்துரையாடல் தலையீட்டாளர்களின் பணியாகும்.
- இரு சாராரும் சந்திக்கும்போது அவர்களின் துக்கத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்துவதற்கு இடமளித்தல் தலையீட்டாளர்களின் கடமையாகும்.
- சிக்கலைப் பகுத்தாய்தல் மற்றும் பரீட்சித்தல் அந்தந்தக் கட்சிதாரர்களின் ஒத்துழைப்போடு மூன்றாவது கட்சிதாரரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**4. வெற்றி - வெற்றி மாதிரி/ பிரவேசம் (Win - Win model/ Approach)**

- சிக்கலுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினரும் முயற்சி செய்வது வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்காகவே, அனைத்து தரப்பினருக்கும் வெற்றியைப் பெற்றுத்தருவதற்காகப் பயன்படுத்தப்படும் அணுகுமுறையாகும்.
- சிக்கலொன்றைத் தீர்க்கும் அணுகுமுறை நான்கில் மிகச் சிறந்தது வெற்றி - வெற்றி அணுகுமுறையாகும்.

| 1 ஆம் தரப்பினர் | 2 ஆம் தரப்பினர் |
|---|---|
| வெற்றி | தோல்வி |
| தோல்வி | வெற்றி |
| தோல்வி | தோல்வி |
| வெற்றி | வெற்றி |

- வெற்றி - தோல்வி அல்லது தோல்வி - வெற்றி மாதிரியில் ஒரு தரப்பினருக்கு நட்டத்தை அனுபவிப்பதனால் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அது பொருத்தமற்றதாக உள்ளது.
- தோல்வி - தோல்வி மாதிரியில் இரு தரப்பினரும் அழிவைச் சந்திப்பதோடு அவை அர்த்தமற்றது
- வெற்றி - வெற்றி மாதிரியில் இருசாராரும் ஏதாவதோர் விதத்தில் இணக்கமாவதற்கு முடியுமான வெற்றியை அடைதல்
- வெற்றி - வெற்றி மாதிரியை வெற்றியடையச் செய்ய முடிவது இருசாராரும் ஏதாவதோர் விதத்தில் நட்டத்தை அனுபவித்த வண்ணமேயாகும்.
- வெற்றி - வெற்றி மாதிரியைப் பயன்படுத்தி சிக்கலைத் தீர்ப்பது மூன்றாவது தரப்பினர் இல்லாவிடில் தலையீட்டாளர் ஒருவரின் பொறுப்பாகும்.
- வெற்றி - வெற்றி மாதிரியை வெற்றி கொள்வதற்கு தலையீட்டாளர் ஒருவரினால் பொறுமையாகவும் பக்கச் சார்ப்பற்றதாகவும் போதியளவு காலம் திட்டங்கள் மற்றும் உபாய வழிமுறைகளுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **அலகு 9.0** | :- | சகவாழ்விற்கான தொடர்பாடல் (பாடவேளைகள் 50) |
| **தேர்ச்சி** | :- | பொறுப்புக் கூறவேண்டிய பிரசையொருவராகச் சகவாழ்வுடன் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தொடர்பாடலை பயன்படுத்தும் தேர்ச்சியை வெளிப்படுத்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 9.2 அதிவிசேட நபர்களின் பழக்கவழக்கங்களிற்காக உளவியல் சமாதானத்தை ஏற்படுத்தும் உள்ளார்ந்த பிரசைகளின் தொடர்பாடல் விதிமுறைகள் மற்றும் பல்வேறு உபாய வழிகளைப் பரீட்சித்துப் பார்த்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- மன அமைதி மற்றும் நபர்களின் பழக்க வழக்கங்கள்

1. மனம் மற்றும் பழக்கவழக்கங்களுக்கிடையிலான தொடர்பு
2. உளவியல் செயற்பாடுகளின் தன்மை
3. எளிய உளவியல் தாக்கங்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளல்
4. மன அமைதி இல்லாமல் போதல் மற்றும் பண்பற்ற பழக்கவழக்கங்கள்
5. மன அமைதி தொடர்பான சமயஞ் சார்ந்த கலந்துரையாடி ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்கள்
6. மானிட சமாதானம் மற்றும் மானிட தர்மங்களின் அபிவிருத்தி

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- மனம் மற்றும் நடத்தைகளுக்கிடையிலான தொடர்பைப் பகுத்தாய்வு செய்தல்
- உளவியற் செயற்பாடுகளின் தன்மையைத் தெளிவுபடுத்தல்
- எளிய உளவியற் தாக்கங்களின் தன்மையை பகுப்பாய்வு செய்வதோடு அவற்றிற்கு முகங் கொடுக்கும் முறையை ஆராய்தல்
- உளவியற் சமாதானம் வீழ்ச்சியடைதல் மற்றும் பண்பற்ற நடத்தைகளின் தன்மையையும் தொடர்பையும் பகுத்தாய்வு செய்தல்
- உளவியற் சமாதானம் குறித்து மத ரீதியாகக் கலந்துரையாடி ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்களை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வு செய்தல்
- மானிட சமாதானம் மற்றும் மானிட தர்மங்களின் அபிவிருத்தியின் முக்கியத்துவத் தன்மை மற்றும் அதனை பேணுவது தொடர்பாக விமர்ச்சித்தல்

## அறிமுகம்

உள்வாரியான நபர்களின் தொடர்பாடல் என்ற வகையிலேயே நபரொருவரின் உளவியற் செயற்பாடானது தொடர்பாடல் கண்ணோட்டத்தில் பகுத்தாய்வு செய்யப்படுகிறது. அதன்படி நபரொருவரின் மன அமைதியைப் பேணுவதானது உள்வாரியான நபர்களின் தொடர்பாடலின் அதிவிசேட மட்டமாகும். சிக்கல்கள் இல்லாது காணப்படும் இனிமையான நிலைமையே சமாதானம் எனப்படுகிறது. பிரசையொருவரின் நடத்தைகள் ஊடாக வெளிப்படும். அதன்படி பண்பற்ற மன நிலையானது பண்பற்ற நடத்தைகள் வெளிப்படுவதோடு பண்புள்ள மனநிலை காணப்படுகையில் அதாவது மன அமைதி காணப்படுகையில் அதுவும் நடத்தை மூலம் வெளிப்படும் என்பது தெளிவான ஓர் விடயமாகும். ஆனால் யாராலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிறந்த மன நிலையைக் கொண்டிருக்க முடியும். அதற்கு காரணம்

மனிதனின் இயற்கையான நிலையில் பல்வேறு உளவியற் தாக்கங்களுக்கு அனைவரும் முகங் கொடுக்க நேரிடுவதேயாகும். நாளாந்த வாழ்க்கையில் இந்த முறையில் ஏற்படுவது ஒருவர் அவ்வாறான எளிய உளவியல் தாக்கத்திற்கு உள்ளாகும் போது ஏற்படும் ஏனைய மனநிலைத் தாக்கமாகும். அவை ஒருவர் நடத்தைகள் மூலம் வெளிப்படும் உளவியற் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்வது இவ்வாறான நடத்தைகளினாலாகும். புத்திசாலித்தனமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மூலமும் அவசியமான உளவியல் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதனாலும் எளிய மனரீதியான பாதிப்புக்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியும். அவற்றை இல்லாதொழிக்க முடியும். ஆனால் எளிய மனரீதியான தாக்கங்களைக் கவனிக்காது செயற்பட்டால் உளவியல் நோய்கள் ஏற்படுவது மட்டுமன்றி, அழிவை ஏற்படுத்தக்கூடிய பழக்க வழக்கங்கள் உருவாக முடியும். நபர்களின் மன அமைதி தொடர்பாக அனைத்து மத எழுத்தாளர்களும் கவனத்தைச் செலுத்தியுள்ளனர். அது தொடர்பான கற்கைகளை தர்ம உபதேசம், பைபிள், குர்ஆன் மற்றும் பகவத்கீதை போன்ற சமய நூல்களில் பெற்றுக் கொள்ளலாம். இதன்படி நோக்குமிடத்து உலகம் சிறந்த இடமாவது மானிட சமாதானம் மற்றும் மானிட தர்மத்தின் அபிவிருத்தியினால் என்பது உறுதியாகும். மானிட சமாதானம் மற்றும் மானிட தர்ம அபிவிருத்தி ஏற்படுவது நபர்களின் உளவியற் சமாதானம் மற்றும் நபர்களின் தர்மங்களின் அபிவிருத்தியினாலாகும். அது உள்வாரியான தொர்பாடலுடன் தொடர்புடைய செயற்பாடொன்றாகும். தத்தமது உள்ரீதியான நபர்களின் தொடர்பாடலைச் சிறப்பாகவும் சமாதானமாகவும் பேண முடியுமாயின், அதன் மூலம் சமூகத்தை மிகச் சிறந்த இடமாக்குவதற்கு முடியும். மற்றவர்கள் சமாதானத்தை முறியடிக்கின்றனரா? என்பதை ஆராய்ந்து நாம் சமாதானத்தை பாதுகாக்கின்றோமா? என்பது தொடர்பாக நபர்கள் தனித்தனியே சிந்திப்பார்களாயின் இச்செயற்பாடு கடினமானதொன்றல்ல.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைக்கோப்பு

**1. மனம் மற்றும் பழக்க வழக்கங்களுக்கிடையிலான தொடர்பு**

- நபரொருவரின் மனநிலையானது பழக்க வழக்கங்களினால் வெளிப்படும்
- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
- மனத்தில் தோன்றும் உணர்வுகள் மற்றும் எண்ணங்களானது பழக்க வழக்கங்களாகின்றன.
- மனதை ஒரு நிலைப்படுத்துவதினால் பழக்கவழக்கங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியும்.
- மனமே அனைத்து பழக்க வழக்கங்களுக்கும் அடிப்படையாகிறது.
- பழக்க வழக்கங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதனால் மானசீக வேகத்தையும் ஒருநிலைப்படுத்த முடிதல்.
- சில மனநிலைகளுடன் தொடர்புடைய உடல்ரீதியான பழக்க வழக்கங்கள் உண்டு.
- நபரொருவரின் மனநிலைக்கேற்ப புலனுணர்வு ஏற்படுகிறது மற்றும் அது பழக்க வழக்கங்களில் தாக்கம் செலுத்துகிறது.
- மனத்தில் பல்வேறு உணர்ச்சி வேகங்கள் எற்படுவதோடு, அதன்படி பழக்க வழக்கம் வெளிப்படுகிறது.
- நேர் சிந்தனை மற்றும் மறைசிந்தனை என உணர்ச்சி வேகங்களை வகைப்படுத்தலாம்.
- நேர் சிந்தனை மற்றும் மறை சிந்தனையின் அடிப்படையில் பழக்க வழக்கங்களை தெளிவாக வேறுபடுத்தி இனங்கண்டு கொள்ள முடியும்.
- ஒருவரிடம் நேர்மறையான நடத்தைகள் பெருமளவில் காணப்படுமாயின் அவரது மனம் ஆரோக்கியமாகவுள்ளது.
- ஒருவரினுள் மறைசிந்தனை பழக்க வழக்கங்கள் பரந்து காணப்படுமாயின் அவர் ஓர் மனநோயாளி ஆவார்.

## 2. உளவியல் செயற்பாடுகளின் தன்மை

- மனம் என்பது உடல் முறைமையினால் உருவாக்கப்படும் சக்தியாகும்
- ஆரோக்கியமான உடல் மற்றும் ஆரோக்கியமான மனதிற்குமிடையே தொடர்புகள் காணப்படுகின்றன.
- உளவியல் செயற்பாடுகளின் தன்மையைத் தீர்மானிக்கும் காரணியாக சூழலைச் சுட்டிக்காட்ட முடியும்.
- நபரொருவரின் மத்திய நாள முறைமை மற்றும் உளவியல் செயற்பாடுகளுக்கிடையிலும் தொடர்புகள் உள்ளன.
- உளவியல் செயற்பாடானது மிகச் சிறந்த முறையில் வரைவிலக்கணப்படுத்தப் பட்டிருப்பது சிக்மன்ட் ப்ரோய்ட்டின் உளவியல் பகுப்பாய்வு படிவத்தின் மூலமாகும். (இது தொடர்பான விரிவான விளக்கங்கள் அவசியம் இல்லை)
- மனக் கடடமைப்பு மூன்று வகையானது (உன்னதமான உள்ளம், தூய உள்ளம், ஆழ்ந்த உள்ளம்)
  - உன்னதமான உள்ளம் உன்னத நோக்கத்திற்காக தோன்றுதல்
  - தூய உள்ளம் நபரொருவரின் நாளாந்த நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துகிறது.
  - ஆழ்ந்த உள்ளம் நபரொருவரின் பரம்பரை சுபாவமாக தோன்றல்
- இம்மூன்றிலும் ஒன்றோடொன்று பரஸ்பரமான எண்ணங்கள் காணப்படுவதினால் உளவியல் சிக்கல்கள் ஏற்பட முடியும்.
- இச் சிக்கல்களை நிர்மாண வடிவில் வெளிப்படுத்தக்கூடிய வழிகள் உண்டு.

## 3. எளிய உளவியற் துன்பங்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளல்

- எளிய உளவியற் துன்பங்கள் ஏற்படுதலானது நாளாந்த வாழ்க்கையில நாம் அனைவரும் அனுபவிக்கும் இயற்கையான உளவியல் இயல்நிகழ்வாகும்.
- அந்தந்த நபர்களின் உள சக்தியின்படி எளிய உளவியற் துன்பங்களை எதிர்கொள்ளுதல் சமமற்றதாயிருத்தல்.
- எளிய உளவியல் துன்பங்களை முறையாக வகைப்படுத்த முடியும் மற்றும் அதற்கு சிகிச்சையாக உளவியல் ஆலோசனைகளைப் பயன்படுத்த முடியும்.
- எளிய உளவியல் துன்பங்களானது உள்வாரியான நபர்களின் தொடர்பாடலின் வடிவமாகும்.
- சில உளவியல் துன்பங்கள் நாளாந்த வாழ்க்கையின் பகுதியாகக் காணப்படல்
- சில உளவியல் துன்பங்கள் ஒருவரின் வாழ்க்கை வெற்றியடைய காரணமாக அமைகிறது.
- எளிய உளவியல் துன்பங்களைக் கவனிக்காதுவிடின் அதனால் தீவிர ஆவேசம் ஏற்பட்டு நபரொருவரின் வாழ்க்கை சிக்கலாகக்கூடும்.
- வெளியிலிருந்து ஏற்படும் துன்பங்களினால் உளவியல் ரீதியில் உண்டாகும் மனத்திகைப்பானது சமுதாயத்தில் பரந்து காணப்படும் உளவியல் துன்புறுத்தலாகும்.
- எதிர்பாராத மாற்றங்களுக்கு உள்ளாகுவதனால் மனத்தாக்கம் ஏற்படும்.
- தீவிர ஆவேசத்தின் பெறுபேறாக மன உளைச்சல் ஏற்படுதல்.
- எதிர்பார்ப்புகள் நனவாகாத போது ஏற்படும் தோல்வி மனப்பாங்கினால் உளச்சோர்வு ஏற்படுதல்.

### 1. தகைப்பு

உத்வேகத்தினால் உள்ளத்தில் ஏற்படும் துன்பங்களாகும். அதிகமான வேலைகளில் ஈடுபடுதல், வேலைகளின் இலக்கை பூர்த்தி செய்வதற்கு முடியாது போதல், கட்டுப்படுத்துவதற்கு முடியாத விதத்தில் நடத்தைகளில் சிக்குதல் முதலானவற்றால் ஏற்படும் மனத்தாக்கத்தினால் அழுத்தம் ஏற்படும். பரீட்சையொன்று நெருங்கும்போது ஏற்படும் உளவியல் நிலைமைகளும் இதுவே. இது உளவியல் தாக்கமெனிலும் அழுத்தத்தில் நீரிழிவு, அதிக இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றதென வைத்திய ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**2. உள அமிழ்வு:**
நபர்கள் மாற்றங்களுக்கு உள்ளாதலே இந்நிலை ஏற்படுவதற்கு காரணமாகும். ஓர் கோர்வையாக பல மாற்றங்கள் ஏற்படுதல் அல்லது கடும் வேறுபாடுகள் ஏற்படுவதன் பெறுபேறாக இருப்பது ஆபத்தான உளவியல் துன்பங்கள் ஏற்படுதலேயாகும்.

- நபர்களை இழத்தல் (அன்பு செலுத்தியவர்கள் இறந்து போதல், நெருங்கிய நண்பர்களை இழத்தல், பிரிதல் மற்றும் திருமண வாழ்க்கை பாதிப்படைதல் போன்றன)
- தொழில் மாற்றங்கள் (பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் இடையூறுகள், கோபமடைதல் அல்லது புதிய தொழிலுக்கு செல்லல் போன்ற பெறுபேறுகள்)
- நிதிப் பிரச்சினைகள் (செலவிலும் பார்க்க வரவு குறைதல், பாரியளவிலான கடன் தொல்லைகள், வருமான வழிகள் தடைப்படுதல் போன்றன)
- நோய் வாய்ப்படுதல்/ விபத்துக்கள் நேரிடும் போது (பாரதூரமான நோய் ஏற்படல்/ விபத்துக்களினால் ஏற்படும் காயங்களினால் நோயாளி மற்றும் அவரின் குடும்ப அங்கத்தினர்களும் மனத்தாக்கங்களுக்கு உள்ளாவர்.)
- வாழ்க்கை வட்டத்தில் ஏற்படும் மாற்றங்களினால் (உதாரணமாக எதிர்பாராத விதத்தில் கிடைக்கப்பெறும் பணம், உயர் பதவியொன்றை பெறுதல் போன்ற மகிழ்ச்சியைக் கொண்டு வரும் நிகழ்வுகள் போன்றன)
- குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் (குடும்பத்தின் பொறுப்புக்கள் அதிகரித்தல், குடும்ப கட்டமைப்பு மாற்றமடைதல், புதிய வீடொன்றைக் கட்ட ஆரம்பித்தல் போன்ற காரணங்கள்)
- இயல்பான வாழ்க்கை மாற்றமடைதல் (பாடசாலை செல்வது முடிவடைதல், தொழிலில் ஓய்வு பெறல், விளையாட்டுப் பயிற்சிகளை கைவிட நேரிடுதல் போன்றவை)
- பரீட்சையில் சித்தியடையாமல் போதல்

**3. மன உளைச்சல்:**
அதிக ஆவேசத்தின் பெறுபேறாக மன உளைச்சல் ஏற்படுகிறது. இது எளிய மனத்தாக்கத்தின் அதிகரித்த நிலையாகும். எந்தவொரு காரணமும் இல்லாமல் ஏதேனும் கெட்டது அல்லது விருப்பற்ற ஒன்று நிகழும் போன்ற காரணமில்லாத எண்ணங்கள் இதற்குக் காரணமாகும். எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது ஒப்புக்கொள்ள முடியாத அல்லது நாம் செய்ய விருப்பமில்லாத அல்லது எம்மால் நிறைவேற்றப்பட வேண்டியவற்றிற்கிடையே காணப்படும் பரஸ்பர முரண்பாட்டினால் எங்களில் மன உளைச்சல் ஏற்படக்கூடும். உளைச்சலின் பொதுவான அம்சங்கள் சில வருமாறு,

- உடல் தளர்ச்சி/ சோர்வு
- நடுக்கம்
- தலைச்சுற்று
- இதயத்துடிப்பு அதிகரித்தல்
- அமைதியின்மை
- ஓய்வின்மை
- அசாதாரண உணவு பழக்கம்
- சுவாசிக்கக் கடினமாதல்

எந்தவொரு நபருக்கும் உளைச்சல் ஓரளவில் காணப்படல் இயல்பாகும். ஆனால் நீண்டகாலமாகக் காணப்படுவதனால் பல்வேறு வகையிலான பாரதூரமான பிச்சினைகள் ஏற்படக் கூடும். உதாரணங்களாக இரைப்பை சம்பந்தமான நோய்கள், அதிக இரத்த அழுத்தம், வாழ்க்கை மற்றும் உலகம் பற்றிய திருப்தியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**4. உளச்சோர்வு:**
தெளிவானதொரு விடயம் இல்லாமல் ஒருவர் துயரமான எண்ணங்களைக் கொண்டிருத்தல் அல்லது எதிர்பார்ப்பற்ற நிலை காரணமாக உளச்சோர்வு ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமை (விரக்தி நிலை ஏற்படுதல், தோல்வியான இயல்பு) எதிர்பார்க்கப்படும்

மட்டங்களில் வாழ்வதற்கு முடியாமை போன்றவைகளினால் ஏற்படும் உளச்சோர்வின் பொதுவான அம்சங்கள் பலவற்றை இவ்வாறு குறிப்பிடலாம்.

- களைப்பு மற்றும் தூக்கம்
- அவதானத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளல் கடினமானது
- ஓய்வின்மை மற்றும் கழிவிரக்கம்
- உணவின் மீதான வெறுப்பு
- உடல் ரீதியான மாற்றங்கள்
- பொதுவாக முழு வாழ்க்கையைப் பற்றிய வெறுப்பு
- வாழ்க்கையில் பெறுமதி ஒன்று இல்லாத தன்மை
- எதிர்பார்ப்புக்கள் இல்லாது போதல்

நீண்டகாலமாக காணப்படும் உளச்சோர்வினால் ஒருவர் கெட்ட பழக்க வழக்கங்களுக்கு பழக்கப்பட முடியும்.

எளிய மனத் தாக்கங்களினால் ஏற்படும் மனநிலைகள் சிலவற்றை இவ்வாறு காண்பிக்க முடியும்.

1. திகைப்படைதல்
   உள்ளத்தின் குழப்பநிலையை கட்டுப்படுத்த முடியாதவாறு எண்ணங்கள் தோன்றுதல், ஒரேவிதமான எண்ணங்கள் மீண்டும் மீண்டும் எழுதல்
2. ஆன்மாவின் அனுதாபம்
   தம்மைப் பற்றி ஏற்படும் கவலை மற்றும் வெறுப்பு
3. குரோதம்
   மற்றவர் மீது அதிக கோபம், அவரை அழிக்கும் வெறி, பழி வாங்கும் எண்ணம் ஏற்படுதல்
4. பாதுகாப்பற்ற உணர்வு
   தாம் பாதுகாப்பற்றிருப்பதோடு எழும் சந்தேகம் மற்றும் துணை இல்லை என்ற எண்ணம் ஏற்படுதல்
5. தான் செய்வதே சரி என்ற உணர்வு
   தான் சரி மற்றவர்கள் பிழை என்ற எண்ணம் தோன்றுதல்
6. உயர்வு நவிற்சி
   சிறியதோர் விடயத்தையும் பெரிதாக எண்ணுதல்
7. காரணங் காட்டல்
   தன்னால் செய்யப்பட்ட பிழையை ஏற்றுக்கொள்ளாமல், அதனை நியாயமானதாக காட்டுவதற்கு தர்க்கம் செய்தல்
8. உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளல்
   சிக்கல்களினால் தமக்குள் ஏற்படும் உணர்வுகளைத் தம்மால் ஏற்றுக் கொள்வதற்கு முடியாமை

- எளிய மனத்தாக்கங்களுக்கு முகங்கொடுத்தலுக்காகத் தம்முள் ஏற்படும் எளிய மனத் தாக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.
- எளிய மனத்தாக்கங்களை எதிர்கொள்வற்காகப் பல்வேறு செயல்முறைகள் உள்ளன.
- உளவியல் ஆலோசகர் அல்லது மனோதத்துவ வைத்தியர் ஒருவரை சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது பொருத்தமானது.
- மனத்தாக்கங்களினால் ஏற்படும் இயல்பான விடயத்தினால் சரியான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தயங்காதிருத்தல்.

**எளிய மன அழுத்தங்களை எதிர்கொள்ளல்**

1. உளவியல் ஆலோசகர் அல்லது வைத்தியர் ஒருவரை சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல்
2. உங்களின் பிரச்சினைகள் மற்றும் அழுத்தங்களை மறைத்து வைக்காமல் நெருங்கியவர்களுடன் அல்லது ஆசிரியர்களுடன் கலந்துரையாடுங்கள்.

3. உடற்பயிற்சிகளில் ஈடுபடவும்
4. வேலைகளை உரிய திட்டமிடலுடன் மேற்கொள்ளுங்கள்
5. போதியளவு ஓய்வு எடுக்கவும்.
6. போதியளவு உறங்கவும்
7. உள்ளத்தை இலேசாக வைத்துக் கொள்வதற்குப் பழகவும்
8. அடையக்கூடிய இலக்கை உருவாக்கிக் கொள்ளவும்
9. அழுத்தங்களை ஏற்படுத்தும் நிகழ்வுகளிலிருந்து முடியுமானவரை விலகியிருத்தல்
10. தோல்வியடைதல் அல்லது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத பட்சத்தில் அவற்றை ஏற்றுக்கொள்வதற்குத் தயார்நிலையில் இருக்கவும்.

**4. மன அமைதி கெடுதல் மற்றும் பண்பற்ற பழக்கவழக்கங்கள்**

- மன அமைதி இல்லாது போதல் மற்றும் பண்பற்ற பழக்க வழக்கங்களுக்கிடையில் நேரடியான தொடர்பு உண்டு.
- மன அமைதி இழந்தவர் மகிழ்ச்சியாக இல்லாமலும் மற்றவர்களுடன் கடுமையாகவும் நடந்து கொள்வார்.
- மன அமைதி இல்லாதவர் சிக்கலான நபரொருவராகச் செயற்படுவார்.
- மன அமைதி இல்லாததால் நாளாந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செய்வதற்கு கடினமாதல்
- அழிவை ஏற்படுத்தும் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாவதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகமாக உண்டு.
- சூழலின் மற்றும் சமூகத்தின் இயல்பு நடைமுறைக்கு இடையூறுகளை ஏற்படுத்தல்.
- பிறருடைய அனுதாபங்கள் அல்லது மறுதலித்தல் என்பவற்றை அனுபவிப்பதற்கு நேரிடும்.

**பண்பற்ற பழக்கவழக்கங்கள்**

- ஒழுங்கற்ற தன்மை
- குணங்கள் குழப்படைதல்
- சமூகத்துடன் ஒன்றாது இருத்தல்
- சந்தோஷம் இன்மை
- குரோதம்/ கோபம்
- சந்தேகம்
- ஒழுங்கற்ற முறையில் உடைகளை உடுத்தல்
- துக்கம்
- அமைதியின்மை
- குழப்பநிலை
- ஆலோசனைகளை மறுத்தல்
- ஏற்றுக்கொள்ளப்படாத அலங்காரங்களுக்கு உட்படல்

**5. மன அமைதி தொடர்பான சமயஞ்சார்பானவைகள்**

- அனைத்துச் சமயங்களினாலும் நபரின் உளவியல் அமைதி குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.
- அந்தந்தச் சமயங்களினால் பல்வேறு முறைகளில் மன அமைதி தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் ஒன்றே.
- தமது சமயத்தை ஒழுங்காகப் பின்பற்றுவாரேயானால் மன அமைதியை உருவாக்கிக்கொள்ளவும் அல்லது மன அமைதி இழத்தலை தடுத்துக் கொள்ளவும் முடியும்.

**பௌத்த பிரவேசம்**

1. பௌத்த கண்ணோட்டத்தின் பிரகாரம் சுதந்திரம் மூன்று வகையானது, அவை எண்ணும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் செயற்படும் சுதந்திரம் என்பனவாகும். எண்ணும் சுதந்திரமானது புத்த தர்மத்தில் கூறப்படும் இயற்கை நியதி தர்மங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எண்ணங்கள் தொடர் ஒழுங்காகப் பேசுதல் மற்றும் செயற்படுவதில் ஈடுபடுத்தும், பேச்சு மற்றும் செயற்படும் சுதந்திரத்தை உயிருள்ளவற்றிற்கு வாய்மொழி மூலம் அல்லது உடம்பினால் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தலானது பௌத்த தர்மங்களுக்கு எதிரானது.

2. புத்த தர்மத்தில் இல்லறத்தாருக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ள முதலாவது அறிவுரையை பகுத்தாய்வு செய்து பார்த்தால் அனைத்து விலங்குகளிடமும் நட்புடன் மற்றும் அனுதாபத்துடன் வாழ வேண்டும். இதன்படி நபரொருவருக்கு எந்தவொரு இம்சையோ அல்லது துன்பமோ செய்யாது இருத்தல் வேண்டும்.

3. பௌத்த தர்மத்தின்படி உடல் மற்றும் உள வதைகளானது கொடூரமானது, கீழ்த்தரமானது மனித தன்மையற்றது, அவசியமற்ற முறையிலோ அல்லது நிந்தித்தல் முறையிலோ வதைத்தல், உடல், உள நல்லொழுக்கவியல் அல்லது ஆன்மீக வளர்ச்சியை தடுக்கும் இம்சை செய்தல் மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் நடாத்துதல் மனிதரின் தவறான செயற்பாடுகளுக்குத் தீர்வல்ல.

4. பௌத்த தர்மத்தின்படி பாவமன்னிப்பு செய்வதன் மூலம் மனம் இலேசாவதால் புத்த தர்மம் பாவமன்னிப்பை மனத்திற்கான சிகிச்சையாக கருதுகிறது. வெளிப்படுத்தியவை இலேசாவதோடு வெளிப்படுத்தாதவையினால் பாரமும் உண்டாகும். அதனால் பாவமன்னிப்பானது நபர்களின் மன சமத்துவத்தை ஏற்படுத்துவதோடு நபர்களுக்கு உண்மையை அடிப்படையாகக் கொண்டு வாழ்வதற்கு உபயோகமாகிறது.

5. புத்த தர்மத்தின் பிரதான இரண்டு மூல தர்மங்களான கருணை மற்றும் அகிம்சை என்பவற்றைக் காட்டுதல் வேண்டும். ஆண் அல்லது பெண் மட்டுமல்லாது அனைத்து சீவராசிகளுக்கும் காட்டுதல் வேண்டும்.

6. ஒருவரின் கௌரவத்திற்கு அல்லது பிரபல்யத்திற்கு பங்கம் விளைவிக்கையில் விசேடமாக ஒருவரின் பொருளாதார இலாபங்களின் நன்மையை அல்லது சமூகத்தில் பெற்றுள்ள கௌரவத்தை இல்லாது ஒழிப்பதற்கு வேண்டுமென்றே கொடூர முயற்சியாயின் மேற்கொள்ளப்படும் புத்த தர்மம் அவற்றைக் கீழ்தரமாகக் கருதுகிறது. ஒருவரின் கௌரவத்திற்கு அல்லது பிரபல்யத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பாக பௌத்த எண்ணங்கள், அதன் மூலம் பாதிப்படைந்த நபரின் எதிர்த் தாக்குதலைத் தடுப்பதற்கு உதவி புரியும். தாக்குதல் மேற்கொள்வது அஹிம்சை மற்றும் கருணைக்கு எதிரானதாகும்.

7. புத்த தர்மத்தினால் அனைவரினதும் சுதந்திர சிந்தனைகளுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகிறது.

8. மனச்சாட்சி என்பது நல்லது கெட்டதை காணும் அறிவாகும். புத்த தர்மமும் அதை அவ்வாறே ஏற்றுக் கொள்கிறது. செயற்பாடொன்றில் வெற்றியைத் தீர்மானிக்கும் பொறுப்பு மனத்தினுடையது. புத்த தர்ம செயற்பாட்டில் நல்லது கெட்டதை அளவீடு செய்வது அதன் பெறுபேற்றின்படியாகும். அதனால் ஒருவரின் செயலில் அனைத்து தீயவிளைவுகளையும் கவனத்தில் கொள்வதற்கு மனச்சாட்சி சுதந்திரமாக காணப்படல் வேண்டும்.

9. காலாமயர்கள் கோசல பேரரசில் வாழ்ந்த மிகுந்த அறிவு ஞானம் பெற்றவர்களாவர். அவர்களுக்கு சமயம் மற்றும் தத்துவ கருத்துக்களை மனச்சாட்சி ஏற்றுக் கொள்ளுமா? என்பதை மிக அவதானத்தடன் ஆராய்தல் வேண்டும். புத்த தர்மத்தில் இவ்வாறு கூறப்பட்டது. காலாமயெனி, அறிக்கைகளில் காணப்படுபவற்றை அடிப்படியே மாத்திரம் ஏற்றுக்கொள்ளாதீர்கள். சம்பிரதாயமானவற்றையோ அல்லது கண்டவுடனோ,

கேட்டவுடனோ அல்லது பேச்சில் இருப்பதினாலோ அல்லது சமயநூல்களில் இருப்பதாலோ மட்டும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். விமர்சனம் மற்றும் திறனாய்வு அடிப்படையான அறிவு மற்றும் சத்தியத்தின்படி மட்டும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். மேலும் ஒருவரின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டோ அல்லது ஆசிரியரிடம் காணப்படும் கௌரவத்தினாலோ ஏற்றுக் கொள்ளாதீர்கள். ஆனாலும் காலாமயெனி, ஏதேனுமோர் விடயம் நாட்டமுடையதாக, நிந்தனையாக, துக்கத்திற்கு மற்றும் அழிவுக்கு காரணமாக இருப்பதாக தான் அறிந்து கொள்ளுமிடத்து அவற்றை நிச்சயமாக மறுத்தல் வேண்டும். ஆனால் காலாமயெனி, அவ்வாறான விடயங்கள் இலாபமுடையது. நிந்தனைக்குரியதல்ல இலாபம் மற்றும் நன்மைக்காக காணப்படுபவை என்பதை அறிந்தவுடன் அவற்றை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அதன்படி ஒழுகுதல் வேண்டும்.

10. ஒருவரின் எண்ணங்கள் தம்மை பாதிப்பதனாலும், அவ் எண்ணங்களைச் செயற்படுத்துகையில் மற்றவர்களையும் அவை பாதிப்பதால் ஒருவர் கொண்டுள்ள எண்ணங்கள் அனைத்தையும் ஆராய்ந்து அவதானத்துடன் தயாரித்தல் வேண்டும். அத்தோடு கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை தனக்கு அல்லது பிறருக்கு பாதிப்பு ஏற்படுத்தாதவாறு பொறுப்புடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

11. அனைத்து விலங்குகளிடமும் பரந்து காணப்படும் கருணை மற்றும் அஹிம்சை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைப் பௌத்த அம்சங்கள் உள்ளடக்குவது உன்னதமான எட்டு வழிகளாகும். (Noble Eightfold path)

| |
|---|
| சரியான கோணம், சரியான எண்ணம், சரியான சொல், சரியான செயற்பாடு, சரியான வாழ்க்கை, சரியான முயற்சி, சரியான நினைவு, சரியான சமாதி |

12. தர்ம சாஸ்திரத்தில் இவ்வாறு காட்டப்படுகிறது.

| |
|---|
| குரோதத்தினால் குரோதம் தணிக்கப்படமாட்டாது, குரோதமற்ற செயலினால் குரோதம் தணிக்கப்படும். |

**கிறிஸ்தவ பிரவேசம்**

1. கிறிஸ்தவம் தர்மத்தில் அடிப்படையாக அமைந்துள்ளது, அனைத்து வேறுபாடுகளும் மற்றும் இனங்களுமற்ற மற்றும் பக்கச்சார்பின்றி அனைத்து மனிதர்களும் இறைவனின் குழந்தையாகும் எனும் நம்பிக்கையாகும்.

2. சுகத்தை தானம் செய்கையில் இயேசு நாதர் தன்னிடம் சுகத்தை வேண்டிய யாரையும் வேறுபாட்டுடன் நோக்கவில்லை. உரோம அதிபதியின் சேவையாளனுக்கும் வழியில் தொழு நோயாளிக்கும் ஒரே மாதிரியாக சுகத்தை பெறுவதற்கான வரத்தை வழங்கினார்.

3. வாழ்க்கை குறித்து பைபிள் வெளிக்காட்டும் கருத்தாவது, வாழ்க்கையை உருவாக்கியவர் கடவுள் என்பதுவும், அதனால் வாழ்க்கையானது இறைவனுக்குச் சொந்தமானது என்பதுவுமேயாகும். அதனால் வாழ்க்கையை அழிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. ஒரு காலத்தில் தெய்ய சட்டம் மற்றும் உயர்ந்த பெறுமதிக்காக வாழ்க்கையை ஒருவர் அர்ப்பணித்தாலும் தற்கொலைக்கு யாருக்கும் உரிமை இல்லை.

4. கொலை செய்தல் மற்றும் காயங்களை ஏற்படுத்துதல் கிறிஸ்தவர்களுக்கு தடை செய்யப்பட்ட நியமமாகும். அத்தோடு சகோதரருக்கும் எதிராக கோபங்களுடன் கூடிய உள்ளத்தை ஏற்படுத்திக் கொள்வதும் அதற்கு நிகரான நியமமாகும்.

5. செயல்கள் உருவாகுவது நோக்கங்களுடனாகும். மனிதனுடைய வாழ்க்கை உரிமை, சுதந்திரம் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு அழிவடையக்கூடிய நிலைமைக்கு அடிப்படையாவது நோக்கங்களேயாகும்.

6. கிறிஸ்தவ பத்துக்கட்டளை சட்டத்தின் முக்கிய அம்சம் ஏதாவது பொய்பேசக் கூடாது என்பதாகும். அதில் இவ்வாறும் காட்டப்படுகிறது அயலவர்களுக்கு எதிராக முக்கிய காரணம் ஒன்று இல்லாமல் சாட்சியாக இருத்தல் கூடாது. உங்களது வாக்கினால் மற்றவர்களை ஏமாற்றாது இருக்கவும்.

7. பைபிள் சம்பிராயத்தின்படி மனிதனை உருவாக்கிய பின்பு அவன் தனியாக இருப்பது பொருத்தமானதல்ல என்று ஆண்டவர் எண்ணினார். அவனுக்கு துணையாக பெண்ணை உருவாக்கி மனிதனின் சதை மற்றும் எலும்புகளினால் பெண்ணைப் படைத்தார். திருமணம் செய்தலும், குடும்பங்களை உருவாக்கலும் கடவுளினால் அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய பொறுப்புக்களும் உரிமைகளுமாகும்.

8. ஒருவருக்கும் தமது சொத்தின்மீது நிரந்தரமான உரிமை இல்லை. ஒருவரின் மரணத்தின் போது தமது சொத்துக்களை பிறருக்கு உரித்தாக்கல் வேண்டும். அறிவுடையவரும் மரணத்திற்கு உள்ளாகுவர். முட்டாள் மற்றும் மந்த புத்தியுடையவரும் அவ்வாறே. அவர்கள் தமது சொத்துக்களை மற்றவர்களுக்கு உரிமையாக்கி விட்டு மரணிப்பர்.

9. சமூக பாதுகாப்பிற்காக காணப்படும் உரிமையானது பைபிள் சம்பிரதாயத்தில் தீவிரமான முன்னிலையாக உள்ளது. தமது சகோதர மனிதர்களிடம் காணப்படும் பொறுப்புக்கள், தாம் தொடர்பான பொறுப்புக்கள் மற்றும் அவர்களுடன் நெருக்கமானது தொடர்பு இருப்பதினாலாகும். இவ் இணைப்பானது எந்தளவிற்கு நெருங்கியது என்றால் நாணயக்குற்றியின் இரு பக்கங்களைப் போன்றதாகும்.

10. உங்களைப் போன்றே உங்களது அயலவர்களையும் நேசியுங்கள் என்று பைபிளில் கூறப்படுகிறது. அது மேலும் இவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது.

> நான் இறைவனை நேசிக்கின்றேன் என ஒருவர் கூறுவாராயின், அது பொய்யான கூற்றாகும்.
>
> தாம் காணும் சகோதரரை நேசிக்காத ஒருவர் காணமுடியாத கடவுளை நேசிக்க முடியாது.

11. தமது அயலவர்களின் சுபகாரியங்களில் உள்ள பொறுப்புக்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் இயேசு ஆண்டவர் அவற்றில் சமாந்தரத்தை இவ்வாறு காட்டுகிறார்.

> மனிதர்களே, உங்களுக்கு ஏதாவது செய்வதை நீங்கள் விரும்புவீர்களா? அதனையே மற்றவர்களுக்கும் செய்யுங்கள். சட்டமும் வேதவாக்கும் அதுவே.

12. தங்களினால் மனிதர்களின் பிழைகள் மன்னிக்கப்படுமாயின், உங்களது சுவர்க்கப் பிதா அவர்கள் உங்களை மன்னிப்பார் என பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இஸ்லாம் பிரவேசம்**

1. படைக்கப்பட்டுள்ள அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர். இறைவனால் படைக்கப் பட்டவர்களிடம் அன்பு செலுத்துவோரிடம் இறைவனும் அன்பு செலுத்துவார் என்பது முகம்மது நபி (ஸல்) அவர்களின் உபதேசத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மேலும் உறுதியாகும் வகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இறைவனே, எமது வாழ்க்கைக்கும் உலகின் அனைத்து செல்வங்களுக்கும் அதிபதியே, அனைத்து மனிதர்களும் ஒருவருக்கொருவர் சகோதரர் ஆவார்கள் என்பது சத்தியமானது.

2. இஸ்லாம் சமயத்தினால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சகோதரத்துவம் தொடர்பான உணர்வுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இறைவனால் உங்களது இதயம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு அவரின் ஆசிர்வாதத்தால் உங்களை சகோதரர்கள் என்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மேலும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடிமைகளே, ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள், ஒருவரோடொருவர் சகோதரத்துவத்துடன் வாழுங்கள்.

3. ஒன்றாக வாழுங்கள். ஒருவருக்கொருவர் எதிராக சதி செய்யாதீர்கள். மற்றவர்களுக்கு வசதிகளை வழங்குவதன்றி அவர்களின் பயணத்தில் குறுக்கிடாதீர்கள் என்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

4. ஆடவர்கள், வேறு ஆடவர்களுக்கு நிந்தனை செய்யாதீர்கள். இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கக்கூடும். அவ்வாறே பெண்கள் வேறு பெண்களுக்கு அவமரியாதை செய்யாதிருத்தல். அவர்கள் உங்களை விட மேலானவர்களாக இருக்கக்கூடும். மேலும் ஒருவருக்கொருவர் கேலிப் பெயர்களால் நிந்தனை செய்யாதீர்கள் என குர்ஆனில் கூறப்படுகிறது.

5. உங்கள் செயற்பாடுகள் உங்களுக்கே. எனது நடவடிக்கைகளுக்கு நீங்கள் பொறுப்புக் கூற வேண்டியதில்லை. உங்களின் செயற்பாடுகளுக்கு நான் பொறுப்புக்கூற வேண்டியதில்லை என குர்ஆனில் காட்டப்பட்டுள்ளது.

**இந்துசமய பிரவேசம்**

1. சமாதானம் பற்றி தியானம் செய்யுங்கள். சமாதான மந்திரத்தை செபியுங்கள்.

   **சமாதானத்தின் மந்திரம்**
   பூமியில் சமாதானம்
   ஆகாயத்தில் சமாதானம்
   வனாந்திரத்தில் சமாதானம்
   நீரோடைகளில் சமாதானம்
   பிரபஞ்சத்தில் சமதானம்
   எனக்குள்ளும் சமாதானம்

2. அனைத்து மனிதர்களும் பிறப்பில் சமனானவர்கள். அவர்களுக்கிடையில் காணக்கூடிய வேறுபாடுகள் அவர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் அந்தந்த தொழிலை அடிப்படையாகக் கொண்டு கைப்பற்றப்பட்ட பெறுபேறேயன்றி வேறொன்றுமில்லை.

   (திருக்குறள்)

3. மனித வர்க்கம் அந்நியோன்னியமாக ஒருவருக்கொருவர் இடையில் சகோதர எண்ணங்களோடு இருத்தல் வேண்டுமென இந்து சமய இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

4. அடுத்தவர் மீது பொய்யான குற்றங்களை சுமத்துபவர் பாவச் செயலை செய்வது மட்டுமல்லாது, எதிராளிக்கு சாற்றிய குற்றத்தின் பாவத்தை தமதாக்கிக் கொள்கின்றார் என்று யாக்ஞவல்லிகய மிருதி நூற்தொடர் மூலம் காட்டப்படுகிறது.

5. எந்தவொரு நன்மையையும் செய்யாதிருப்பினும், தீய சொற்களால் மற்றவர்களை வஞ்சிக்காமல் இருப்பது போதுமானது. (திருக்குறள்) அதன்படி நபரொருவரின் நற்பெயரை அவரின் வாழ்க்கையிலும் பார்க்க மதிக்கப்படுகிறதென இந்து சமயத்தவர் ஏற்றுக்கொள்கின்றனர்.

6. இவர்கள் நம் மனிதர்கள், இவர்கள் பிற மனிதர்கள் என்ற பேதமின்றி கொடுப்பவற்றை அனைவருக்கும் இரக்கத்துடன் கொடுங்கள். உலோபத்தனத்தினால் தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம் போன்றவற்றை சேர்த்து வைப்பதனால் ஆயிரக் கணக்கானோர் பசியினால் வாழும் போது தான் மட்டும் உணவை உண்பதால் பயன் உள்ளதா? சிறுஅளவு உணவை கூட்டமாக ஒன்று சேர்த்து பகிர்ந்து உண்ணும் காகங்களை நோக்கி கற்றுக் கொள்ளுங்கள். (திருமந்திரம்)

7. யாதும் ஊரே. யாவரும் கேளீர் (புறநானூறு)

8. ஒன்றே குலம், ஒருவனே தேவன். அதாவது மனித குடும்பம். (திருமந்திரம்)

9. நீங்கள் ஒருவருக்கு நன்மை செய்வீர்களாயின், அதற்கான பிரதி உபகாரம் உங்களுக்கு எப்போது கிடைக்கும் என கேட்க வேண்டாம் தமிழ் இலக்கியத்தில் கூறப்படுகிறது.

10. எந்தவொரு இலாபமும் எதிர்பார்க்காமல் ஒருவருக்கு செய்யப்படும் நன்மைக்காக வானம் மற்றும் பூமி இரண்டையும் கொடுத்தாலும் ஈடாகாது. (திருக்குறள்)

11. பிரதி உபகாரம் பாராமல் செய்யும் தானங்கள் தராசில் நிறுக்கப்படுமாயின், பாரத்தில் சமுத்திரத்தை விட அப்பாற்பட்டதாக காணப்படும். (திருவள்ளுவர்)

12. ஒழுக்க பண்புள்ள மனிதன் என்பது, மற்றவர்களுக்கு தன்னால் நிறைவேற்றப்படக்கூடிய அனைத்து கடமைகளும் எந்தவொரு பிரதி உபகாரங்களையும் எதிர்பாராமல் முழுமையாக நிறைவேற்றுபவரே ஒழுக்கமுள்ள மனிதராவார். உலகம் இந்தளவிற்கு சமாதனமாக செயற்படுவதும் இவ்வாறான மனிதர்களினாலாகும். (பண்புடையர்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல், மாண்புக்கு மாய்வது மன்) (திருக்குறள்)

13. இந்து மத புதினத் தலங்களிலும் இந்து சமயிகளின் வீடுகளிலும் பாடப்படும் தோத்திரமொன்று இவ்வாறு காட்டப்படுகிறது.

| |
|---|
| உரிய காலத்திற்கு மழை பொழியட்டும்<br>உற்பத்திகள் வளர்ச்சி அடைய வேண்டும்<br>ஆட்சியாளர்கள் உன்னத ஆட்சி நடத்த வேண்டும்<br>அனைவரும் நிறைவான வளத்தைப் பெற வேண்டும்<br>நான்கு வேதங்கள் மற்றும் தர்மங்கள் பரந்து காணப்பட வேண்டும்<br>பரிசுத்தமான தர்மங்களும் யாகங்கள் முன்னேற்றத்திற்கு நடத்த வேண்டும்<br>புனிதமான சைவ தர்மமானது உலகம் பூராகவும் பரவ வேண்டும். |

## 5. மனித சமாதானம் மற்றும் மனித தர்மங்களின் அபிவிருத்தி

- மனித சமாதானத்தை பேணுவதற்கு மனித தர்ம அபிவிருத்தி முக்கியமான தொன்றாகும்.
- சமூகத்தில் பல்வேறு வேற்றுமை சக்திகள் மனித சமாதானம் மற்றும் மனித தர்ம அபிவிருத்திக்கு எதிராகச் செயற்படுகின்றன.
- மனிதர்களில் சமாதானம் ஏற்படுவது அந்தந்த நபர்களின் மனரீதியான அமைதியுடன் வாழ்வதன் மூலமேயாகும்.
- மனித தர்மம் என்பது மனிதர்களின் நற்தர்மங்களாகவும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

**மனித தர்மம்/ மனித நற்தர்மம்**

- இரக்கம், கருணை
- மனித சேவை
- திருப்தியடைதல்
- மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- எளிமை
- பகிர்வு
- உதவி செய்தல்
- ஒற்றுமை
- மகிழ்ச்சி
- பிறர்நலம் விரும்புதல்
- துன்பங்களைப் பகிர்தல்
- சுமூகமான தன்மை
- பொறுமை
- உண்மையைக் கடைபிடித்தல்
- ஆடம்பரமின்மை
- உணர்ச்சிபூர்வமாக இருத்தல்

- மனித தர்மங்கள் அபிவிருத்தியடைந்த சமூகமொன்றில் வாழும் நபர்கள் சந்தோசமாக வாழ்கின்றனர்.
- மனித தர்மங்களினூடாக மனித சமாதானத்தைப் பாதுகாப்பாக பேணுவதற்கே அனைத்து மதப் பெரியார்களும் முயற்சிக்கின்றனர்.

**இலங்கையின் இணக்கப்பாடு**

1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க இணக்கப்பாட்டு குழுச் சட்டத்திற்கு அமைவாக இணக்கப்பாட்டு குழுக்களுக்கு பிரச்சினைகள் மூன்று வழிகளில் ஏற்படலாம்.

1. தனிப்பட்டவையாக:
   இணக்கப்பாட்டுச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் பிரச்சினையொன்றில் ஒருவருக்கு தனிப்பட்ட ரீதியாக தமது பிரதேசத்தில் இணக்கப்பாட்டு அடிப்படை குழு தலைவரிடம் முன்வைக்கப்படும் எழுத்து மூலமான முறையீட்டு மூலம் அப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் படி வேண்டுகோள் விடுக்க முடியும். அவ் எழுத்துமூலமான முறையீட்டிற்கு ஐந்து ரூபா முத்திரையொன்றை ஒட்டி கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும். பிரச்சினையுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களும் விபரமாக இம்முறையீட்டில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

2. பொலிஸ் ஊடாக:
   ஏதேனுமொரு சிவில் பிரச்சினையொன்று அல்லது இணக்கபாட்டுக்கு குழு சட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கும் குற்றமொன்று தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் செய்யப்படும் முறையீடொன்றை இணக்கப்பாட்டுக் குழுவினூடாக தீர்ப்பதற்காக பிரதேச இணக்கப்பாட்டுக் குழுவிடம் முன்வைப்பதற்குப் பொலிஸிற்கு அதிகாரம் உண்டு.

3. நீதிமன்றத்தின் ஊடாக:
   ஏதேனும் சிவில் நீதிமன்றத்தில் முறையிடப்படும் ஏதேனுமொரு பிரச்சினையொன்று இணக்கப்பாட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுமாயின் மற்றும் அதனை கட்சிதாரர்களும் விரும்புவார்களாயின் அப்பிரதேச இணக்கப்பாட்டு குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு நீதிமன்றமானது நடவடிககைகளை மேற்கொள்ளும்.

**இணக்கப்பாட்டுக் குழுவினால் கட்சிதாரர்களுக்கு கிடைக்கப்பெறும் பயன்கள்**

1. காலம் மீதியாகும். கிழமைக்கு ஒரு முறை நடைபெறும் இணக்கப்பாட்டுக்குழுவானது 60 நாட்களில் பிரச்சினைகளை தீர்வுக்கு கொண்டு வருவதற்கு முயற்சிப்பதோடு, 30 நாட்களில் சிறு குற்றமொன்று தொடர்பில் செயல்படுகின்றது.
2. பணத்தை சேமிக்கலாம். தனிப்பட்ட ரீதியில் ஈடுபடுவாராயின் மட்டும் எழுத்து மூல ஆவணத்தின் செல்லுபடியாகும் தன்மைக்காக ரூ. 5.00 இற்கு முத்திரை ஒன்றை ஒட்டுதல் வேண்டும். முழுமையான இணக்கப்பாட்டிற்கும் செயற்பாட்டிற்கும் செலவாகும் பணம் இது மாத்திரமேயாகும்.
3. தனக்கான பிரதிநிதிகள் எவரும் இல்லாது தானே விடயங்களை முன்வைக்க முடியும். வழக்காளர் ஒருவர் அவசியமில்லை என்பதே இதன் மூலம் கருதப்படுகிறது.
4. கட்சிதாரர்கள் மற்றும் வளவாளர்களின் (சாட்சியாளர்களின்) கூற்றுக்களினதும் பிரச்சினையினதும் இரகசிய தன்மை பாதுகாக்கப்படும்.
5. கட்சிதாரர்களுக்கிடையில் தொடர்புகள் முறிவடையாதிருப்பதற்கன்றி கட்டியெழுப்பு வதற்காகவே இணக்கப்பாட்டுக் குழுவின் செயற்பாடுகள் உதவும்.

| | | |
|---|---|---|
| **அலகு 9.0** | :- | சகவாழ்விற்கான தொடர்பாடல் (பாடவேளைகள் 50) |
| **தேர்ச்சி** | :- | பொறுப்புக் கூறவேண்டிய பிரசை என்ற வகையில் சகவாழ்வுடன் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தொடர்பாடலைப் பயன்படுத்தும் தேர்ச்சியை வெளிப்படுத்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 9.3 சமாதானம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய இல்லமொன்றை நடாத்திச் செல்வதற்காக பொறுப்புக்கூற வேண்டிய பிரசையொருவருக்கு உரித்தான தொடர்பாடல் தேர்ச்சியை அபிவிருத்தி செய்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம் :-** வீட்டில் சமாதானம் மற்றும் சகவாழ்வு

1. வீட்டின் சமாதானத்தின் மற்றும் சகவாழ்வின் இயல்பு, பெறுமதி மற்றும் முக்கியத்துவம்
2. வீட்டின் சமாதானம், சகவாழ்வு மற்றும் தொடர்பாடல்
3. வீட்டின் சமாதானம் இழக்கப்படல் மற்றும் முறையற்ற பெறுபேறுகள்
4. வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வின் முகாமைத்துவம்
5. ஓய்வு, உல்லாசம் மற்றும் இளைப்பாறுதல்

**உத்தேச கற்றற் பேறுகள் :-**

- வீட்டின் சமாதானத்தின் இயல்பு, பெறுமதி மற்றும் முக்கியத்துவத்தைப் பகுத்தாய்வு செய்தல்.
- வீட்டின் சமாதானம், சகவாழ்வு மற்றும் தொடர்பாடலுக்கிடையில் காணப்படும் உள்ரீதியான தொடர்புகளைப் பகுத்தாய்வு செய்தல்.
- வீட்டின் சமாதானம் இழக்கப்படல் மற்றும் முறையற்ற பெறுபேறுகளை விமர்சித்தல்.
- வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வின் முகாமைத்துவத்திற்கு இடையில் காணப்படும் தொடர்பும் சகவாழ்வை முகாமைத்துவம் செய்யும் விதம் தொடர்பான அனுபவங்களைப் பகுப்பாய்வு செய்தல்.
- ஓய்வு, உல்லாசம் மற்றும் இளைப்பாறுதல் தொடர்பான அனுபவங்களைப் பகுப்பாய்வு செய்தல்

## அறிமுகம்

குடும்பம் என்பது சமூக அமைப்பொன்றாகும். அது உறவுகளை அடிப்படையாக கொண்டே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. சமூகத்தின் சிறிய மற்றும் முக்கியத்துவமிக்க அமைப்பே குடும்ப அலகாகும். அது பல உறவினர்களை கொண்டமைந்த சம்பிரதாய ரீதியிலான கூட்டு குடும்பமொன்றாக முடியும். அவ்வாறில்லாவிடின் அது நவீன - நாகரிக வடிவில் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் மட்டும் வாழும் தனிக் குடும்பமொன்றாக முடியும். கூட்டு குடும்பம் மற்றும் தனிக் குடும்பமொன்றின் கட்டமைப்பும், அதில் தொடர்பாடல் பயன்படுத்தப்படும் விதமும் தெளிவான வேறுபாடுகளை உடையன. அதன்படி குடும்பமொன்றில் தொடர்பாடல் கலாசாரமொன்று காணப்படுகிறது. கூட்டு குடும்பத்தில் உப அலகு ஒன்றிற்கும் மேற்பட்டதாக காணப்படும். ஆனாலும் தனிக் குடும்பத்தில் உப அலகுகள் இல்லை. உப அலகுகளுடன் கூடியவிடத்து அவ்வீட்டின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளிலும் பழக்கவழக்கங்களிலும் வேறுபாடுகள் ஏற்படும். உப அலகுகள் இல்லாவிடத்து அவ்வீட்டின் பிரதான நோக்கங்களிலும்

செயற்பாடுகளிலும் நடத்தைத் தொடர்புகளிலும் ஒருமைப்பாட்டுடன் கூடிய வடிவத்தைக் காணலாம். ஆனாலும் முழுமையாக நோக்குகையில் எந்தவொரு வீட்டிலும் அந்தந்த நபர்களின் நோக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் மற்றும் பழக்க வழக்கங்களில் வேறுபாடுகள் காணப்படும். இதன்படி வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்த முடிவது வீட்டின் அங்கத்தவர்களுக்கிடையில் பல்வேறு காரணிகளினால் காணப்படும் வேறுபாடுகளை கவனத்தில் கொள்ளாது, சமமாக்கக் கூடிய மற்றும் இணங்கக்கூடிய காரணங்களை ஒன்று திரட்டலின் மூலமாகும். வேறுபாடுகள் தொடர்பாகக் கவனத்தைச் செலுத்துமிடத்து வீட்டின் சமாதானமானது முறிவடைந்து சகவாழ்வும் இல்லாமல் போவதோடு வீடு பிரச்சினைகளுடன் கூடிய மற்றும் சிக்கலுடைய நிலைமைக்கு தள்ளப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுக்கு முன்னுரிமை வழங்கி (வேறுபாடுகளுடன்கூடிய காரணங்களைக் கவனத்தில் கொள்ளாது) நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு மற்றும் நடாத்திச் செல்வதற்கு முடியும். அதன்போது வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை நடாத்திச் செல்வதற்கும், அல்லது வீழ்ச்சியடைவதற்கும் பிரயோகிக்கப்படும் பிரதானமான உபகரணம் தொடர்பாடலாகும். இலங்கைச் சமூகத்தில் ஏற்படும் பல்வேறு வீடுகளில் சமாதானம் இழக்கப்படுவதை ஆராய்கையில் காணக்கூடிய முக்கிய விடயம் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் நல்லதொரு தொடர்பாடல் வீழ்ச்சியடைந்துள்ளமையே யாகும். அத்தோடு கணவனும் மனைவியும் திருமணம் முடித்த ஆரம்ப காலத்தில் கவனத்தில் கொள்ளாத வேறுபாடுகளுடன் கூடிய விடயங்களைப் பிற்காலத்தில் அவதானம் செலுத்தியுள்ளனர். அதனால் வீட்டு வாழ்க்கையில் சமாதானம் மற்றும் சகாவாழ்வைப் பேணுவதற்கு கணவனின் அல்லது மனைவியின் அந்நியோன்ய பொறுப்புக்கள் மற்றும் பணிகளை இலகுவானதாகக் கொள்ளலாகாது. குடும்பமொன்று ஒற்றுமையாக சமாதானத்தோடு - சகவாழ்வுடன் வாழ்தல், அக்குடும்பத்தின் முன்னேற்றத்துக்குக் காரணமாகும். கணவன் மற்றும் மனைவிக்கிடையிலும் பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கிடையிலும் ஏற்படும் ஒருமைப்பாட்டினூடாக ஒவ்வொருவருக்குமிடையில் பேணப்பட வேண்டிய தொடர்பாடல் தொடர்புகளானது நிலையானதாகும். இதனால் வீட்டில் ஏற்படும் தொடர்பாடல் கலாசாரமானது வீட்டிற்கு வீடு வேறுபடும். ஏதேனும் ஒரு வீட்டில் சமாதானம் சிதைவடைவது, அதன் அங்கத்தவர்களின் பண்பற்ற பழக்கவழக்கங்களினாலாகும். அவ்வாறு நடைபெறுவது அந்தந்த நபர்களின் மன அமைதி கெடுவதினாலாகும். அது முதலில் ஒருவரிலிருந்து ஆரம்பமாகக் கூடும். அதாவது கணவன் அல்லது மனைவியைப் போன்ற குழந்தைகளும் இந்த விதத்தில் வீட்டின் சமாதனத்தை முறியடிப்பவராக இருக்க முடியும். அந்தப் பண்பற்ற நிலையைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்யாதுவிடின், அது முழு வீட்டினதும் தொடர்புகள் பிளவுபடுவதற்குக் காரணமாகும். இதனால் வீட்டில் ஒற்றுமையின்மை, மகிழ்ச்சியின்மை மற்றும் சிக்கல் நிலை உண்டாகும். வீட்டின் அனைவரினதும் மன அமைதி சிதைவடையும். வீட்டின் மனிதாபிமானத் தன்மை அழிந்து போவதே அதன் முடிவாகும். இதனால் வீட்டின் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதும், பேணுவதும் சகவாழ்வை முகாமைத்துவம் செய்தலும் அனைவரினதும் கடமையாகும். அதை இலகுவாக சிதைக்க முடியும். எவ்வாறாயினும் அனைவரும் ஒரே மாதிரியாக பொறுப்புடன் செயற்படுகின்றனர் என எண்ண முடியாது. அந்தந்த அங்கத்தவர்களின் பாத்திரம் மற்றும் வயதும் அவர்களது தனிப்பட்ட நோக்கங்களும் அபிலாசைகளும் வேறுபட்டிருப்பதே அதற்குக் காரணமாகும். அதன் பெறுபேறாக வீட்டின் அமைதி மற்றும் சகவாழ்வை பேணுவது தொடர்பான அதிக பொறுப்பானது வீட்டின் பெரியோர்களுக்கு உரித்தாகும். வீட்டை நிர்மாணிப்பவர்கள் அவர்கள் என்பதே அதற்குக் காரணமாகும். ஆனாலும் இதனால் மற்றவர்களின் கடமைகள் குறைவடைவதில்லை. அவர்களின் வாழ்க்கை நடைபெறுவது வீட்டிலேயே என்பதே அதற்குக் காரணமாகும். அதனால் வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை பாதுகாப்பதோடு தாமும் அதில் சந்தோசமான வாழ்க்கையை நடாத்துவது அனைவரதும் கடமையாகும். இங்கு வீட்டில் ஓய்வையும் உரிய முறையில் பேணுவதும் அவசியமாகும். ஓய்வு என்பது வேலையற்று இருப்பது அல்ல. அது எந்நேரமும் வேலையுடன் தொடர்புபட்டதாக காணப்படுகிறது. ஓய்வானது பெறுமதியுடையதாக காணப்படுவது அது வேலை செய்யும் போது கிடைக்கும் இடைவேளை என்பதனாலாகும். அதனால் ஓய்வை விளைதிறனுடையதாக கழிப்பது

அவசியமாகும். அது தனியே எளிய உல்லாசம் மட்டுமல்ல உயர்ந்த இரசனையை பெற்றுக் கொள்ளக் கூடியதும் வீட்டில் அனைவருக்கும் மகிழ்வூட்டக்கூடிய நடவடிக்கை யொன்றாகவும் இருத்தல் வேண்டும். அது உல்லாசத்தையும் தாண்டிய மிகச் சிறந்த இரசனையாதல் வேண்டும். மாலை வேளைகளில் அனைவரும் தொலைக்காட்சியின் முன்னால் உட்கார்ந்து எளிய உல்லாசத்தை பெற்றுக்கொள்கின்றனர். அது சில வேளைகளில் அனைவருக்கும் பொருந்தாது. எளிய உல்லாசமும் முக்கியமானதாகும். அத்தோடு உயர்ந்த இரசனையைப் பெற்றுக்கொள்ளும் முறைகளை வீட்டில் பிரயோகிப்பதால் ஓய்வை சந்தோசமாகக் கழிப்பதற்கு வாய்ப்புக் கிட்டும். உலகில் தொலைக்காட்சி வசதி இல்லாத காலப்பகுதியில் வீட்டின் உறுப்பினர்கள் உல்லாசமாகவும் மற்றும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தார்கள் எனபதை நாம் மறத்தலாகாது. வீட்டில் உள்ள நபர்களிடம் தொடர்பாடலும், ஒவ்வொருவருக்கிடையிலான தொடர்பாடலும், சமூக தொடர்பாடலும், வெகுசன தொடர்பாடலும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் வீட்டின் அனைத்து அங்கத்தவர்களும் தொடர்பாடலில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் அவசியம். இதன்படி வீட்டில் தொடர்பாடல் கலாசாரம் கட்டியெழுப்பப்படுவது பெற்றோர்களினாலேயே என்பதை மறக்கக்கூடாது. பெற்றோர்கள் தமது கடமைகளைச் செய்யத் தவறும் பட்சத்தில் குழந்தைகளுக்கும் தொடர்பாடல் கலாசாரமொன்று இல்லாது போகும். ஆனால் குழந்தைகளின் பொறுப்புக்களாவது அச்சீரற்ற தன்மையைப் புரிந்து கொண்டு தமது தொடர்பாடல் தேர்ச்சியை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து கொள்வதாகும். தமது புலனுணர்வில் ஏற்படும் தவறானது தொடர்ந்தும் வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைவதற்குக் காரணமாக அமையும். வீட்டில் திறந்த தொடர்பாடல் சலாசாரமொன்றை கட்டியெழுப்புவது அங்குள்ள அங்கத்தவர்கள் அனைவரினதும் பொறுப்பாகும். அதிலிருந்து ஒருவராலும் விலகியிருக்க முடியாது.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

**1. வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வின் தன்மையும் முக்கியத்துவமும்**

- வீட்டின் அங்கத்தவர்கள் தங்களுக்குள்ளும் வீட்டுடன் சம்பந்தப்பட்ட உள்வாரியான மற்றும் வெளிவாரியான அனைத்துத் தரப்பினர்களுடனும் ஒற்றுமையாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சமாதானம் பிறக்கிறது.
- வீட்டின் அங்கத்தவர்கள் ஒருவருக்கொருவர் மறறும் வீட்டுடன் தொடர்புடைய அனைவரிடமும் அன்பாகவும் - கருணையாகவும் - கௌரவத்துடனும் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் சகவாழ்வு பிறக்கிறது.
- வீடென்பது நபர்கள் வாழும் பௌதீக கட்டிடம் அல்ல அங்கு வாழும் நெருங்கிய உறவினர்களுடன் ஏற்படும் தொடர்புகளே ஆகும் என்பதால் சமாதானம் மற்றும் சகவாழ்வானது வீட்டின் நடைமுறைக்கு முக்கியமானதாகும்.
- வீட்டின் அங்கத்தவர்களுக்கிடையில் சமாதானம் மற்றும் சகவாழ்வு இல்லையென்றால் அதனை வீடொன்றாகக் கருதுவது பெயரளவில் மாத்திரமேயாகும்.
- வீட்டின் உறவானது ஒவ்வொருவரிடமும் தொடர்புபட்டுள்ளதால் வீட்டில் எவரேனும் சமாதானத்திற்கு மற்றும் சகவாழ்விற்கு இடையூறுகள் ஏற்படுத்துவாராயின் அது மனித தர்மத்திற்கு ஏற்புடையதாகாது.
- சமூகத்தில் காணப்படும் பல்வேறு நாசகார மற்றும் விஷம சக்திகளால் உலகில் காணப்படும் வீடுகளின் சமாதானத்திற்கும் சகவாழ்விற்கும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.
- இலங்கையில் வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வானது தேசிய கலாசாரத்தினால் மதிக்கப்படும் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

**சமாதான மாதிரி**




**2. வீட்டின் சமாதானம், சகவாழ்வு மற்றும் தொடர்பாடல்**

- வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வைப் பேணும் உபகரணம் தொடர்பாடலாகும்.
- வீட்டின் அனைவருக்கும் போதுமான தொடர்பாடல் தேர்ச்சி இருத்தல் வேண்டும்
    - உள்ளார்ந்த நபர்களின் தொடர்பாடல்
    - நபர்களுக்கிடையிலான தொடர்பாடல்
    - கூட்டுத் தொடர்பாடல்
    - வெகுசன பாவனை
    - உயர்ந்த புலனுணர்வு
    - உயர்ந்த பிரதிபலிப்பு
    - மேலான குறிப்பு, அசைவுகள்/ வெளிப்பாடுகள் மற்றும் நடத்தைகள்
    - உற்பத்தித்திறனுடைய பேச்சு
- உயர் புலனுணர்வு, உயர் கூற்றுக்கள், உயர் பிரதிபலிப்பு முதலானவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வைப் பேண முடியும்.
- வீட்டில் அதிவிசேடமான தொடர்பாடல் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதானது நீண்டகால செயற்பாடொன்றாகும்.
- வீட்டில் தொடர்பாடல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவது பெற்றோரின் பொறுப்பாகும்.
- வீட்டில் தொடர்பாடல் கலாசாரத்தைப் பேணுவது பெற்றோரினதும் குழந்தைகளினதும் கடமையாகும்.
- வீட்டின் தொடர்பாடல் கலாசாரத்தின் அங்கங்களானது வீட்டிற்கு வீடு வேறுபடக் கூடியதாயினும், அதன் அடிப்படை வடிவம் சமமானதாகும்.
- வாய்மொழி மற்றும் வாய்மொழியற்ற தொடர்பாடல் தேர்ச்சிகள் வீட்டின் தொடர்பாடல் கலாசாரத்தின் பிரதான அங்கங்களாகும்.
- வீட்டின் தொடர்பாடல் கலாசாரம் சிறப்பானதாக அமைகையில் அதன் மூலம் சிக்கல்கள், கலகங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவானதாகும்.
- பொறுமை, உணர்வு பூர்வமான நிலை, பொது அனுமானம் (Common inference) இனிய வார்த்தைகளை பேசுதல் மற்றும் இனிமையாக நடந்து கொள்ளலானது வீட்டின் தொடர்பாடல் கலாசாரத்தின் வடிவங்கள் மற்றும் குணாதிசயங்களாகும்.
- ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்தலே வீட்டின் தொடர்பாடல் கலாசாரத்தினது முக்கிய அங்கமாகும்.

**3. வீட்டின் சமாதானம் சிதைவடைதலும் பெறுபேறுகளும்**

- வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை முறையற்ற ஒரு அங்கத்தவராலும் சிதைக்க முடியும்.
- வீட்டின் அங்கத்தவர்கள் தனிப்பட்ட முறையில் ஏற்படுத்திக் கொள்ளும் எதிர்பாரப்புக்களால், வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்விற்கு இடையூறாக முடியும்.
- நவீன ரீதியில் நுகரப்படும் பல்வேறு பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பழக்க வழக்கங்களினால் ஏற்படும் பண்பற்ற தொடர்பாடலானது வீட்டின் சமதானம் மற்றும் சகவாழ்வு சிதைவதற்குக் காரணமாக அமையும்.

- தூரநோக்குடைய திட்டமொன்று இல்லாமல் வீட்டின் வரவு செலவை மேற்கொள்வதனால் ஏற்படும் பண்பற்ற தொடர்பாடலானது வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவதற்குக் காரணமாக அமையும்.
- பல்வேறு நிகழ்வுகளினால் ஏற்படும் சீரற்ற நிலைமைகள் வீட்டில் பண்பற்ற தொடர்பாடல் ஏற்பட்டு சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவதற்கு காரணமாக அமையும்.
- வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைவது பல்வேறு விதங்களில் வீட்டில் நிகழ்கிறது.
    - ஒருவர் மீது ஒருவரான வெறுப்பு
    - தவறான வார்த்தைப் பிரயோகங்கள்
    - பேச்சுவார்த்தை குறைவடைதல்
    - கோபத்தில் பேசுதல்
    - ஒருவரையொருவர் சந்தேகித்தல்
    - ஒன்றாக உணவு அருந்தாமை
    - ஒருவருக்கொருவர் மதிப்பளிக்காமை
    - வீட்டிலிருக்கும் காலம் குறைதல்
- வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைவதன் பெறுபேறாக அமைவது, வீட்டின் அங்கத்தவர்களின் வாழ்வும் இறுதியில் வீடும் அழிவடைவதாகும்.
    - வீட்டின் தொடர்புகள் சிதைவடைதல்
    - வீட்டிலிருந்து வெளியேறல்
    - பிள்ளைகளின் கல்வி சிதைவடைதல்
    - மகிழ்ச்சியின்மை
    - வீட்டின் எதிர்பார்ப்புக்கள் வீணாதல்
    - வீட்டின் முன்னேற்றம் தடைப்படல்
    - ஒருவருக்கொருவர் சுயநலவாதிகளாக மாறுதல்
    - பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**4. வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வின் முகாமைத்துவம்**

- வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை முகாமைத்துவம் செய்தலானது வீட்டு அங்கத்தவர்கள் அனைவரினதும் கூட்டான கடமையாகும்.
- வீட்டின் அனைத்து அங்கத்தவர்களும் மனித தர்மத்திற்குக் கட்டுப்பட்ட சரியான, சிக்கலற்ற மற்றும் சாதாரணமான வாழ்க்கையை நடாத்தல் வேண்டும்.
- வீட்டை இன்னுமொரு வீட்டுடன் அல்லது வீட்டின் அங்கத்தவர்களை வேறு வீட்டின் அங்கத்தவர்களுடன் ஒப்பிடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வின் முகாமைத்துவத்தின் பிரதான பொறுப்புக்கள் பெற்றோருக்கும், இடைப்பொறுப்புக்கள் பிள்ளைகளுக்கும் உரித்தாவதோடு அவர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.
- வீட்டின் அல்லது வீட்டின் அங்கத்தவர்களின் தவறுகள் அல்லது குறைபாடுகளை மேலாகக் கொள்வதற்குப் பதிலாக பாராட்டக்கூடிய விடயங்களையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கவனத்தில் கொள்ளல் அவசியமாகும்.
- வீட்டில் அல்லது வீட்டின் அங்கத்தவர்களின் தவறுகள் அல்லது குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு ஒருவருக்கொருவர் உதவி புரிதல் வேண்டும.
- தமது தவறுகள் மற்றும் குறைபாடுகளை இனங்கண்டு செயற்படுதல் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.
- வீட்டின் அங்கத்தவர்களை எந்த விதத்திலும் அவமானத்திற்கு, இழிவுபடுத்தலுக்கு, கேலிகளுக்கு உட்படுத்தக் கூடாது.
- வீட்டுடன் தொடர்புடைய அல்லது தொடர்பற்ற வெளி தரப்பினரின் தவறுகள் மற்றும் குறைபாடுகள் இருந்த போதும், அதனைக் காரணமாகக் கொண்டு அவர்களை அவமானத்திற்கு இழிவுபடுத்தலுக்கு உட்படுத்துவது வீட்டுத் தொடர்பாடல் கலாசாரத்தின் அங்கமாகக் கூடாது.

- இயற்கைச் சூழலுக்கு அன்பு செலுத்தும் கலாசாரமொன்றை வீட்டில் கட்டியெழுப்பல், வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு முகாமைத்துவத்திற்கு உதவுகிறது.
- வீட்டில் சிக்கலான தன்மை உருவாவதற்கான வாய்ப்புக்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஏற்படும் சிக்கல்களை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தல் அனைவரினதும் கடமையாகும்.
- வினைத்திறன் மிக்க தொடர்பாடல் தேர்ச்சியை பிரயோகிப்பதால் அந்நியோன்ய புரிந்துணர்வுடன், ஒத்துழைப்புடன், நட்புடன் கூடியதாக வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை நடாத்திச் செல்லல் வேண்டும்.
- குறைந்த பட்சம் இரவு போசனத்தையாவது அனைவரும் ஒன்றாக உண்ணும்போது ஏற்படும் இனிய கலந்துரையாடல் மூலமாக சமாதானம் மற்றும் சகவாழ்வு முகாமைத்துவத்திற்கான சிறந்த பிரவேசமொன்று கிடைக்கின்றது.
- குடும்ப அங்கத்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவி புரிவதோடு, கலந்துரையாடி, மதிப்பளித்து, ஒற்றுமையுடன் வாழ்தலின் மூலம் வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை முகாமைத்துவம் செய்ய முடிகின்றது.
- வீட்டின் பெரியவர்களும் குழந்தைகளும் முன்மாதிரியாகவும் மரியாதையுடனும் வாழ்வதன் மூலம் வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை முகாமைத்துவம் செய்யலாம்.

**5. ஓய்வு, உல்லாசம் மற்றும் இளைப்பாறுதல்**

- ஓய்வு என்பது வேலையற்று இருத்தல் அல்ல, வேலைகளை செய்யும்போது பெற்றுக் கொள்ளப்படும் இடைவெளியாகும்.
- ஓய்விற்கு பெறுமதி ஏற்படுவது, அது வேலைகளைச் செய்வதோடு இணைந்து காணப்படுவதால் ஆகும்.
- ஓய்வை பயனுடையதாக கழிப்பதன் மூலம் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படும்.
- எளிய உல்லாசமும் உயர் இரசனையும் அனைவருக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தேவையாகும்.
- நவீன காலத்தில் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் ஊடாக பரந்தளவில் வழங்குவது வளமற்ற மணித்தியால கணக்கிலான உல்லாசமேயன்றி உயர் இரசனையை அல்ல.
- உயர் இரசனைக்கு அல்லது இளைப்பாற்றலுக்கு வழக்கப்படுவதானது ஒருவரின் வாழ்க்கையை பரிபூரணமாக்கிக் கொள்வதற்கான பிரவேசமாகும்.
- ஓய்வைக் கழிப்பதற்கு உல்லாசம் மற்றும் இளைப்பாறுதலை பிரயோகிக்க முடியும்.
- வீட்டில் ஓய்வு மற்றும் உல்லாசத்தைப் பெற்றுக் கொள்வதை அங்கத்தினர்கள் வேறு வேறாக உருவாக்கிக் கொள்கின்றனர்.
- கூட்டாக ஓய்வைக் கழிப்பதற்கான பிரவேசங்களும் வீட்டிலிருப்பவருக்கு முக்கியமானதாகும்.
- குடும்பத்தில் அனைவரும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு ஒருமுறை பேணும் திட்டமிடப்பட்ட சுற்றுலாவை மேற்கொள்வதன் மூலம் உல்லாசமான தொடர்பாடலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.
- குடும்பத்தில் அனைவரும் தமது உல்லாசங்களையும் இளைப்பாறும் பிரவேசங்களையும் மற்றவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் மேற்கொள்ளல் வேண்டும்.

| | |
|---|---|
| **அலகு 9.0** | :- சகவாழ்விற்கான தொடர்பாடல் (பாடவேளைகள் 50) |
| **தேர்ச்சி** | :- பொறுப்புக் கூறவேண்டிய பிரசை என்ற வகையில் சகவாழ்வுடன் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான தொடர்பாடலை பயன்படுத்தும் தேர்ச்சியை வெளிப்படுத்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- 9.4 சமாதானம் மற்றும் தொடர்பாடலுடன் கூடிய சமூகமொன்றை நிர்மாணித்தல் மற்றும் பேணுவதற்காக பொறுப்புக்கூற வேண்டிய பிரசையொருவரிடம் காணப்பட வேண்டிய தேர்ச்சியை அபிவிருத்தி செய்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு

1. சமூகத்தின் பல்வகைத் தன்மை மற்றும் சகவாழ்வின் தேவை
2. குடியுரிமையும் செயற்பணியும்
3. சமூக சமாதானம், சகவாழ்வு மற்றும் தொடர்பாடல்
4. சமூக சமாதானம் சிதைவடைதல் மற்றும் முறையற்ற பெறுபேறுகள்
5. அர்ப்பணிப்பு, தாங்கிக்கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- சமூகத்தின் பல்வகை தன்மையைப் பகுத்தாய்வு செய்தல்.
- சமூக சகவாழ்வின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தல்
- சகல பிரசைகளுக்கும் உரித்தான சமூக சமாதானம் குறித்த பொறுப்புக்கள் மற்றும் செயற்பணிகளைப் பகுப்பாய்வு செய்தல்
- சமூக சமாதானம், சகவாழ்வு மற்றும் தொடர்பாடல்களுக் கிடையிலான தொடர்புகள் மற்றும் அந்நியோன்ய செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
- சமூக சமாதானம் சிதைவடையும் விதம் மற்றும் அதனால் ஏற்படும் பெறுபேறுகளைப் பகுத்தாய்தல்
- சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வைப் பேணுவதற்காக அனைத்து பிரசைகளும் ஏதேனும் அரப்பணிப்பு, தாங்கிக் கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதைப் பகுப்பாய்வு செய்தல்.

## அறிமுகம்

சமூகம் என்பது பல்வகைமையின் கூட்டாகும். மொழி, சமயம், இனம், வர்க்கம், கலாசாரம், பெண் பால் வேறுபாடு ஆண் தன்மை, கல்வி, நகரம்/ கிராமம், தொழில் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பல்வகைமை காணப்படுகிறது. எந்தவொரு சமூகமொன்றிற்கும் இப்பல்வகைமையை தவிர்க்க முடியாது. அதனால் சமூகத்தை நடாத்திச் செல்ல முடிவது, இந்த பல்வகைமையை ஏற்று அதற்கிடையே அந்நியோன்னிய சகவாழ்வைக் கட்டியெழுப்புவதினாலாகும். அதன் எளிய கருத்தாவது, சமூகத்தில் வாழும் நபர்கள் ஏதேனும் பொதுவான காரணிகளின் அடிப்படையில் தாபிக்கப்பட்டு வாழவேண்டும் என்பதாகும். இங்கு சமூகத்தில் அனைத்து பிரசைகளும் தமது செயற்பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். நாட்டின் பிரசை என்பதனால் கருதப்படுபவர் சமூகத்தின் பங்காளர் ஒருவர் ஆவார். அதனால் பிரசையின் பிரதான செயற்பணியாவது சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மற்றும்

நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். வீட்டைப் போன்றே, சமூக அடிப்படையிலும் சமாதானம் மற்றும் சகவாழ்விற்காக பிரசித்தமான உபகரணமாக பிரயோகிக்கப்படுவது தொடர்பாடலாகும். சமூகம் நிர்மாணிக்கப்பட்டிருப்பதும் அது பேணப்படுவதும் தொடர்பாடலினாலாகும். வீட்டினுள் காணப்படும் பல்வகைமைக்கும் மேலாக சமூகத்தில் காணப்படும் பல்வகைமை வேறுபடுவதால் சமூக தொடர்பாடலுக்கு பொதுவான மொழியொன்றிற்கான அவசியம் தோன்றும். பன்மொழிச் சமூகமொன்றில் சமாதானம் மற்றும் சகவாழ்வைப் பாதுகாப்பது இப்பொதுவான மொழியினூடாகத் தொடர்பாடல் மேற்கொள்வதன் மூலமாகும். அவ்வாறான பொதுவான மொழியொன்று இல்லாத பட்சத்தில் சமூக அங்கத்தினருக்கிடையே கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு தடைகள் ஏற்படும். இதனால் ஒருவருக்கொருவர் இடையிலே சந்தேகம் மற்றும் அவநம்பிக்கைகள் ஏற்படும். நாடொன்றின் அனைத்துப் பிரசைகளும் பொதுவாகக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான பொதுவான மொழியொன்றைப் பிரயோகிப்பதன் மூலம் இதனைத் தடுத்துக் கொள்வதற்கு முடியும். சமூக சமாதானம் சிதைவடைவதனால் ஏற்படும் முறையற்ற பெறுபேறுகள் மிகத் துயரமானவையாகும். மக்கள் மரணத்திற்கு உள்ளாகுதல், அங்கவீனர்களாதல், அவயவங்களை இழத்தல், பௌதீகச் சொத்துக்கள் அழிவடைதல், நபர்களின் தொடர்புகள் முறிவடைதல் என்பன மேலோட்டமாக ஏற்படும் விபத்துக்களாகும். அது இச்சமுதாயம் சிறு சிறு துண்டங்களாக உடைந்து செல்வதற்குக் காரணமாக அமையலாம். இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குச் சமூகத்தின் அந்தந்த குழுக்களுக்கும் அத்தோடு நபர்களுக்கும் குடும்பங்களுக்கும் அர்ப்பணிப்பு செய்வதற்கு, நட்டங்களைத் தாங்கிக் கொள்வதற்கு மற்றும் கிடைக்கும் எந்தவொரு பெறுபேற்றையும் ஏற்றுக் கொள்வதற்கு நேரிடும். அர்ப்பணிப்புச் செய்கையில் தாம் எதிர்பார்க்கும் இலாபங்களை இழக்க நேரிடலாம். அதனை வேறொருவருக்கு வழங்க நேரிடும். அதனால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் நட்டங்களை தாங்கிக்கொள்ளும் சக்தி இருத்தல் மிகச் சிறந்ததொன்றாகும். இவ்வகையில், அர்ப்பணிப்பு இன்மையால் மற்றும் எதனையும் தாங்கிக் கொள்ளும் சக்தி இன்மையினாலேயே சமூகத்தில் பல சமாதான சிதைவுகள் இடம் பெறுகின்றன. தாங்கிக்கொள்ளும் சக்தி ஒருவருக்கு காணப்படுமாயின் தமக்கு கிடைக்கப்பெறும் எந்தவொரு பெறுபேற்றையும் தாங்கிக் கொள்ளும் திறன் காணப்படும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

**1. சமூக பல்வகைமை மற்றும் சமதானத்தினதும் சக வாழ்வினதும் அவசியம்**

- சமூகம் என்பது பல்வகைமையின் கூட்டாகும்.
- மொழி, சமயம், கலாசாரம், தொழில், கல்வி போன்ற பல்வேறு மூல காரணிகளின் அடிப்படைகளில் பல்வகைமை கட்டியெழுப்பப்படுகிறது.
- மொழி மற்றும் சமயம் என்பன எந்தவொரு சமூகத்திற்கும் மிகுந்த உணர்ச்சிபூர்வமான காரணிகளாகும்.
- பல்வகைமையைச் சமூகமாக பேணுவதற்கு சகவாழ்வு அவசியமாகும்.
- சமூகத்தின் பல்வகைமைக்கு அந்த சமூகத்தின் அனைவரும் மதிப்பளித்தல் வேண்டும்.
- பல்வகைமையில் காணப்பட வேண்டிய பொதுக் காரணிகளை மேலோங்கச் செய்து அந்நியோன்ய கௌரவத்துடன் நம்பிக்கையுடன் வாழ்வதன் மூலம் சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு ஏற்படும்.

**2. குடியுரிமை மற்றும் செயற்பணி**

- குடியுரிமை என்பது சகல சமூகத்திலும் முக்கியமான எண்ணக்கருவாகும்.
- தாம் வாழும் சமூகத்திற்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புக்களே பிரசையின் செயற்பணியாகும்.
- அனைவரும் சிறு பிராயத்திலிருந்து தம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய குடியுரிமை செயற்பணிகள் பற்றிக் கற்றல் வேண்டும்.
- குழந்தை பிரசை, முதுமையடைந்த பிரசை, சிரேஷ்ட பிரசை என்றவாறு ஒவ்வொரு மட்டங்களில் பிரசைகளின் செயற்பணிகள் மாறுபடும்.

- தாம் வாழும் சமூகத்தைப் பாதுகாப்பதும், அதன் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்பு செய்வதும் சகல பிரசைககளினதும் சமூக செயற்பணியில் உள்ளடங்கும்.
- அந்தந்தச் சமூகத்தின் தன்மைக்கு அமைவாக பிரசையின் வடிவமும் அதன் செயற்பணியும் ஓரளவு வேறுபாடுகளுடன் கூடியதாயினும் அதன் அடிப்படை சமமானதாகும்.
- அடுத்துவரும் சந்ததியினருக்கு சமூகத்தைப் பாதுகாப்புடன் வழங்குதல் மற்றும் அச் சமூகத்தை நடாத்திச் செல்வதற்கு அடுத்துவரும் சந்ததியைப் பழக்கப்படுத்துவதும் அனைத்து பிரசைகளினதும் செயற்பணியாகும்.
- ஜனநாயகம், சமூக சமத்துவம், மனித உரிமைகள், பெண்/ ஆண் பெறுமானங்கள் என்பவற்றைப் பாதுகாத்தல் சகல பிரசைகளினதும் சமூக செயற்பணியாகும்.

3. **சமூக சமாதானம், சகவாழ்வு மற்றும் தொடர்பாடல்**
   - அனைவருக்கும் சமூகமயமாதல், சமூக சமாதானம் மற்றும் சகவாழ்விற்கு அவசியமானதாகும்.
   - சமூகத்தின் பிரசைகளுக்கிடையில் சிறந்த முறையில் கருத்துக்களை பரிமாறிக்கொள்வது சமூக சமாதானம் மற்றும் சகவாழ்விற்கு அவசியம் என்பதால் அனைத்து சமூகத்திற்கும் பொதுவான மொழியொன்று இருத்தல் வேண்டும்.
   - பொதுவான மொழியொன்று இன்மையினால் சமூகத்தின் தொடர்பாடல் சிதைவடைவதனால் அந்தந்தப் பகுதியினருக்கிடையில் சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையும் தவறான புரிந்துணர்வுகளும் ஏற்படுவதனால் சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைகின்றது.
   - சமூக தொடர்பாடலின் ஊடாகச் சமாதானம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு தேசிய விழாக்கள் மற்றும் கலாசாரச் சந்தர்ப்பங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்திச் சகல மக்களிடமும் ஒற்றுமையான தொடர்பாடலொன்றை ஏற்படுத்த முடியும்.
   - அரசியல் தொடர்பாடலானது சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வைப் பேணுவதற்கு இயைந்ததாக இருத்தல் வேண்டும்.
   - சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வைப் பேணுவதற்கு ஊடகங்களுக்கு பாரிய பொறுப்புக்களும் பணிகளும் காணப்படுகிறது.
   - சமூக தொடர்பாடல் நடவடிக்கைகளில் சமூக குழுக்கள் மறைந்துள்ள நிகழ்ச்சி நிரலுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் சமாதானம் மற்றும் சகவாழ்வை பேணும் எதிர்பார்ப்புக்கள் சிதைவடைகின்றது.

4. **சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைதல் மற்றும் முறையற்ற பெறுபேறுகள்**
   - சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைவதனால் மக்களுக்கிடையில் காணப்படும் பல்வகைமை மேலோங்கி பல்வேறு பேதங்கள் உருவாகும்.
   - சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைவதற்காக உதவி புரியும் உள் நோக்கங்களுடன் பலர் சமூகத்தில் காணப்படுதல்.
   - சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு சிதைவடைவதனால் சமூகத்தின் நன்மைக்கு எதிரான பல்வேறு நாசகார சக்திகள் மேலோங்குகின்றமை
   - சமூகத்தின் பல்வேறு சாதாரண குழுக்கள் உருவாகி அவர்களுக்கிடையில் மோதல்கள் ஏற்படுவதனால் சமூகத்தின் இயல்பு தன்மை பிளவுபடல்.
   - மோதல்களுடன் தொடர்புபட்டவர்கள் மற்றும் தொடர்புபடாதவர்களின் தனிப்பட்ட பொதுச் சொத்துக்கள் அழிவடைவதோடு உயிர் இழப்புக்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.
   - முழு அரசியல் செயற்பாடுகளும் பாதிப்படைதல்
   - சட்டம் மற்றும் நீதியும், ஜனநாயகமும் பாதிப்படைதல்
   - பொருளாதார மாற்றங்கள் உருவாதல்

- சமூக நல்லொழுக்கம் வீழ்ச்சியடைதல்
- மனிதர்களின் உரிமைகள் வீழ்ச்சியடைதல்
- பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் வீழ்ச்சியடைதல்

5. **அரப்பணிப்பு, தாங்கிக் கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்**
   - சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வைப் பேணுவதற்கு அர்ப்பணித்தல், தாங்கிக் கொள்ளல், ஏற்றுக்கொள்ளல் அவசியமாகும்.
   - அர்ப்பணிப்பு என்பதால் கருதப்படுவது ஏதேனும் சமூக நிகழ்வுகளில் பொது நன்மைக்காக தமது தனிப்பட்ட இலாபம் - இலாப பயன்களைக் கைவிடல் என்பதாகும்.
   - தாங்கிக் கொள்வதனால் கருதப்படுவது அவ்வாறான தனிப்பட்ட இலாபங்கள் - இலாப பயன்கள் அல்லது சந்தர்ப்பமொன்றை பொது நன்மைக்காக பொறுத்துக் கொள்ளல் என்பதாகும்.
   - ஏற்றுக்கொள்ளல் என்பதனால் கருதப்படுவது, அதே விதத்திலான ஏதேனும் நிகழ்வுகளின் பெறுபேறாக தனக்கு ஏற்படும் தீர்வுகளை ஏற்பது என்பதாகும்.
   - அர்ப்பணிப்புக்கும், தாங்கிக் கொள்வதற்கும் மற்றும் ஏற்றுக் கொள்வதற்கும் பழக்கப்பட்ட, பயிற்சி பெற்ற பிரசைகளைக் கொண்ட சமூகமே சிக்கல்கள் குறைந்த சமாதானம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய சமூகமாகும்.
   - பிள்ளைப்பருவத்திலிருந்தே ஒருவர் அர்ப்பணிப்பு, தாங்கிக் கொள்ளல், ஏற்றுக் கொள்ளல் என்பவற்றிற்குப் பழக்கப்படவும் பயிற்சியைப் பெறவும் ஆரம்பித்தல் வேண்டும்.

**அலகு 9.0** :- சகவாழ்விற்கான தொடர்பாடல் (பாடவேளைகள் 50)

**தேர்ச்சி** :- பொறுப்புக் கூறவேண்டிய பிரசை என்ற வகையில் சகவாழ்வுடன் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தொடர்பாடலை பயன்படுத்தப்படும் தேர்ச்சியை வெளிப்படுத்தல்

**தேர்ச்சி மட்டம்** :- 9.5 ஊடக வன்செயல்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அதனை எதிர்கொள்வதற்கான விதிமுறைகள் மற்றும் உபாய வழிகளைப் பரீட்சித்துப்பார்த்தல்.

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- ஊடகங்கள் மற்றும் வன்செயல்கள்

1. வன்செயல்களுக்கு பொருள் கொள்ளல்
2. ஊடகத்தில் வன்செயல்களின் சுயரூபம்
3. வன்செயல்களின் ஈர்ப்பு
4. ஊடக வன்செயலின் சமூக மற்றும் வீட்டுத் தாக்கம்
5. ஊடக வன்செயலைப் பகுத்தாய்தல் மற்றும் நிர்வகித்தல்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- வன்செயல்களின் வடிவத்தைப் பகுத்தாய்தல்.
- ஊடகத்தில் வன்செயல்களின் சுயரூபத்தைப் பகுத்தாய்தல்
- வன்செயல்களின் ஈர்ப்பு மற்றும் ஊடகத்தில் அதற்கு உரித்தான இடத்தை விமர்ச்சித்தல்
- ஊடக வன்செயல்களினால் சமூகத்திற்கு மற்றும் வீட்டிற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை விமர்ச்சித்தல்
- ஊடக வன்செயல்களின் உண்மையான சுயரூபத்தைப் பகுத்தாய்வு செய்து, அதனை நிர்வகிக்கும் தந்திரோபாயங்களை மதிப்பீடு செய்தல்

## அறிமுகம்

நபர்களுக்கு அல்லது சொத்துக்களுக்கு உடல் ரீதியாக அல்லது உள்ளத்தால் பலாத்காரம் செய்வதனூடாக பகைமை அல்லது குரோதத்தை வெளிப்படுத்துவதை வன்செயலாக குறிப்பிடலாம். இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடாவதோடு அவ்வாறு அல்லாத செயற்பாடாகவும் இருக்கலாம். வன்செயல் என்பது மனித தர்மத்திற்கு பொருந்தக்கூடிய நல்ல நிகழ்வாகாது. ஆனாலும் மனித நாகரிகத்தின் வரலாற்றில் வன்செயல் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. மனித சமூகத்தில் அதிகாரத்தை கைப்பற்றுகையில் உபகரணமாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது வன்செயல்களாகும். பெரும்பாலான மக்கள் வன்செயல்களில் ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனாலும் சமூகத்தின் பரம்பரையான அங்கமொன்றாக வன்செயல்கள் ஏற்படுகின்றன. அதனால் மக்களின் மனத்தில் அது குறித்த ஏதோவொரு அவதானமொன்று காணப்படுவதாக தோன்றுகிறது. அது சிலவேளைகளில் மனிதன் குரங்கின் வாழ்க்கையின்போது கற்ற பழக்கவழக்கமாக இருக்கலாம். ஏதேனும் பேரிடரான நிகழ்வொன்று நிகழ்கையில் அதனைப் பார்ப்பதற்கு மனிதர்கள் ஒன்று கூடுவதும் இந்த இயல்பான குணாதிசயத்தினாலாகும். அதனால் வன்செயல் மனித சமூகத்திற்கு ஈர்ப்பான நிகழ்வாகியிருப்பதைக் காணலாம். வீட்டாரின் அவதானத்தைத் தமது ஊடகத்தின் பால் பெற்றுக் கொள்வதற்காக வெகுசன ஊடகத்தினால் வன்செயல் சக்திமிக்க உபகரணமாக பயன்படுத்தப்படுவது இதனாலேயாகும். பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் இவற்றுள் முதலிடத்தைப் பெறுகின்றன. வானொலியும் தமது பொழுதுபோக்கான மாதிரியில்

வன்செயலைப் பிரயோகிப்பது செய்திகள் மற்றும் வேறு விசேட நிகழ்வுகளினூடாகவேயாகும். இதன்படி முழுமையான வகையில் அனைத்து வெகுசன ஊடகங்களும் மிக இலகுவான ஈர்ப்புக்குரிய உபகரணமாக வன்செயலை உபயோகப்படுத்துகின்றன. பத்திரிகைகளின் முன்பக்கத்திலிருந்தே பரவிக் காணப்படுவது வன்செயல்கள் தொடர்பான செய்திகளாகும். பெரும்பாலான தொலைக்காட்சிகளின் பிரதான நிகழ்வாக காணப்படுவதும் பலவாறாக முன்வைக்கப்படும் வன்செயல்களை உடைய நடத்தைகள் மற்றும் சந்தர்ப்பங்களேயாகும். தொலைக்காட்சி மற்றும் வானொலிச் செய்திகள் பரந்தளவில் வன்செயல்களைப் பிரவேசமாக பின்பற்றுகின்றன. வானொலி நாடகங்கள் மற்றும் வேறு விசேட அங்கங்கள் என்பவற்றிலும் காணப்படும் பிரதான உபகரணமாக வன்செயல்களைக் குறிப்பிடலாம். பொதுமக்களுக்கு முன்வைக்கப்படும் வன்செயல் பிரவேசமானது வெகுசன ஊடகங்களினால் கற்ற, உயர் சமூகத்திற்கு முன்வைக்கப்படுவதில்லை என்பதே இதில் காணக்கூடிய விசேட அம்சமாகும். உதாரணமாக சிங்கள அல்லது தமிழ் பத்திரிகைகள் முதல் பக்க பிரதான செய்தியிலிருந்து பத்திரிகையில் காணப்படும் செய்திகளின் விசேட அங்கங்கள் மூலம் வன்செயல்கள் உருவாக்கப்பட்ட செய்திகள் விபரமாக மற்றும் இரசனையுடன் கூடியதாக முன்வைக்கப்படுகிறது. ஆனாலும் அத்தினத்திலேயே அந்த பத்திரிகை நிறுவனங்களினது ஆங்கில பத்திரிகைகளின் நிகழ்ச்சி நிரலில் அவ்வாறான செய்திகளுக்கு முதலிடம் வழங்கப்படவில்லை. மக்களுக்கு நாளாந்த வாழ்க்கையை சந்தோசமாக கழிப்பதற்கு முடியாத, பயத்துடன், மனக்கவலையுடன் மற்றும் துக்கமாகக் கழிப்பதற்கு நேரிடும் நிலைமையொன்றை இந்த வெகுசன ஊடகங்களினால் உருவாக்கப்படுகின்றது. இங்கு அச்சு ஊடகங்களினால் தினமும் காலையில் மக்கள் உள்ளங்களைத் துன்பத்திற்கும் அழுத்தத்திற்கும் மனக்கவலைக்கும் உள்ளாக்கப்படுகிறது. பத்திரிகையினால் மக்களுக்கு உருவாக்கப்படும் நாளாந்த நிகழ்ச்சி நிரலின் பிரதான காரணமாவது வன்செயல்களாகும். மாலை வீட்டிற்குச் சென்று தொலைக்காட்சிச் செய்திகள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்க்கும் போது வன்செயல் மேலும் மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிகிறது. அது மட்டுமன்றி மேலோட்டமாக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாக இருக்கும் தொலைக்காட்சி கார்ட்டூன் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கமானது வன்செயலில் நிரம்பிக் காணப்படுகிறது என விளங்குவது அதனை கவனமாக ஆய்வு செய்யும் போதேயாகும். இதன்படி சிறுகுழந்தைகள் சிறு பராயம் முதலே வன்செயலைத் தமது நாளாந்த வாழ்க்கையின் அங்கமொன்றாகக் கொண்டுள்ளனர். இந்த யதார்த்தம் பெற்றோருக்கும் விளங்குவதில்லை. கார்ட்டூனை முன்வைப்பது சிறுவர் நிகழ்ச்சி என்ற தலைப்பின் கீழ் என்பதனால் அவற்றைப் பார்ப்பதற்கு சிறுவர்களுக்கு இடமளிப்பவர்கள் பெரியோர்களேயாவர். இது எந்தளவிற்கு பேரழிவான நிலைக்கு உள்ளாகியுள்ளது என்பதை சிறு பிள்ளைகளுக்கு சோறூட்டுவதற்கு அல்லது அவர்களைத் தாலாட்டுவதற்கு காட்டூன் நிகழ்ச்சிகளை காட்டுவதற்கு வீட்டில் தாய்மார்கள் தூண்டப்பட்டுள்ளனர். வன்முறையைத் தொடர்ந்தும் வெகுசன, ஊடகங்களினூடாக உள்வாங்கிக் கொள்வதனால் அது சாதாரணமாகியுள்ளது. அதன் பெறுபேறாக சமூகமும் அத்தோடு வீடும் வன்முறை குறித்து உணர்ச்சியற்ற நிலைமைக்கு உள்ளாகியுள்ளது. இது நல்லதோர் சமூகமொன்றை நடாத்திச் செல்வதற்கு எந்த வகையிலும் பொருத்தமற்றதாகும். பல்வேறு முறைகளில் இடம்பெறும் கொலைகள், அழிவுகள் போன்ற பேரழிவுகளை இரசிப்பதற்கு மக்களைப் பயிற்றுவிப்பது மானிட தர்மங்களுக்கு ஏற்புடையதாகாது. இருப்பினும் வெகுசன ஊடகங்கள் தமக்கு உரித்தான உரிமையைப் பரந்த சுதந்திரத்தோடு பயன்படுத்தி மக்களுக்கு பயங்கரமானவற்றை முன்வைப்பதற்குத் தூண்டப்பட்டுள்ளார்கள். வெகுசன ஊடகங்களின் வரலாறுகளில் இது தொடர்பாகக் காட்டப்படும் வரைவிலக்கணமானது, மனித சமூகத்தைக் கைப்பற்றுவதற்கு எந்தவொரு செயன்முறையையும் பிரயோகிப்பதற்கு அவர்கள் தயாராக உள்ளார்கள் என்பதேயாகும். கல்வியினூடாக இதற்கு எதிரான கற்கையைக் கையாண்டு எதிர்திசையை நோக்கி நீந்துவதற்கு முயற்சிக்கின்றனர். ஊடக வன்முறையானது உண்மையில் சமூக சமாதானம் மற்றும் சகவாழ்வு வீழ்ச்சியடைய தாக்கம் ஏற்படுத்தும். அதுமட்டுமன்றி மக்களின் குடும்ப வாழ்க்கையையும் பிரச்சினைக்குள்ளாக்கும். அதற்குக் காரணம் சமூகத்தின் மற்றும் குடும்பத்தின் நன்மைக்குப் பாதிப்பை விளைவிக்கும் அழிவுகளை ஏற்படுத்தும் நிகழ்வுகள் மற்றும் நிலைகளை சமூகம் மற்றும் வீட்டில் கட்டியெழுப்புவதாகும். குடும்பத்தின் மற்றும்

சமூகத்தின் நடப்பிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நிலைமைகளைக் கொண்டு வருதல், பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுதல், சந்தேகம், அவநம்பிக்கை, விரக்தி வெறுப்பு மேம்படுதல் என்பவற்றைப் போன்றே மொழி மற்றும் கலாசார அழிவிற்கு உள்ளாதல், பொருத்தமற்ற அல்லது மாறுதல்களையுடைய வாழ்க்கை முறைக்கு தள்ளப்படுதல், குடும்பத்திலும் சமூகத்திலும் ஒவ்வொருவருக்குமிடையிலான தொடர்புகள் அற்றுப் போதல் போன்றன இதனால் நேரிடக்கூடும். துவேசத்துடன் தவறான வார்த்தைகளைப் பிரயோகித்தல், அவதூறு செய்தல், சொத்துக்களுக்குத் தீ வைத்தல், தாக்குதல், கொள்ளையிடல், காயங்களை ஏற்படுத்தல், பெண்களைப் பலாத்காரம் செய்தல், களவு போன்றவை ஊடக வன்முறைகளின் பிரபல்யமான அங்கங்களாகும். அவற்றை ஆக்கபூர்வமாக முன்வைத்தலின் மூலம் சமூகத்தினதும் மற்றும் பிரசைகளினதும் பொதுவான நடப்புப் பாதிப்படையும். இதனால் ஊடக வன்முறையின் இயல்பான வடிவத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கும், அதனைக் கட்டுப்படுத்தும் செயல் முறைகளாகப் பொருத்தமான முறையில் ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கு மக்களை விழிப்பூட்டுவதும் கல்வியின் பணியாகும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

1. **வன்முறைக்கு பொருள் கோடல்**
    - மனிதனின் அல்லது பௌதீக சூழலின் சிறந்த நடப்பினை அழிக்கும் ஏதாயினும் நிகழ்வு ஒன்று வன்முறையாகும்.
    - வன்முறையானது மானிட சமூகத்தின் வரலாறு முழுதும் இடம்பெறும் அங்கமொன்றாகும்.
    - கலாசாரத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தில் வன்முறை குறைந்து சமாதானம் மற்றும் சகவாழ்வு மேலோங்கும்.
    - மனித தர்மத்தில், சமய கற்கைகளில், சட்டங்களில் வன்செயல்களை அனுமதிப்பதில்லை.
    - மனிதனின் வன்முறையான நடத்தைகள் பெருமைக்கும், மதிப்பளித்தலுக்கும் காரணமாக அமையாது.
    - நபரொருவரின் வன்முறை மூலம் புலப்படுவது அந் நபரின் விசேட தன்மையோ, பலமோ அல்ல மனநிலையின் பலவீனங்கள் மற்றும் நல்லொழுக்கம் இன்மையேயாகும்.

2. **ஊடகத்தின் வன்செயல்களின் வடிவம்**
    - ஊடகம் வன்முறையற்றது எனினும், அதன் உள்ளடக்கத்தில் வன்முறையைப் புகுத்த முடியும்.
    - மக்களுக்கு பல்வேறு செய்திகளை கொண்டு செல்வதற்கு ஊடகத்தினால் உபயோகப்படுத்தும் பல்வேறு முறைகள் வன்முறைகளில் உள்ளடங்குகின்றன.
    - நூதனமான ஊடக கலாசாரத்தில் ஊடகத்தின் வன்முறை வடிவமானது அவ் ஊடகத்தின் நடப்பிற்கு அவசியமானதொன்றாகக் காணப்படுகிறது.
    - ஊடகத்தில் வன்முறைகளானது சாதாரணமாகப் பார்க்குமிடத்து வன்முறையாக தோன்றாது இருக்கலாம்.
    - சில ஊடகங்களின் மாதிரிகளின் உள்ளடக்கம் தெளிவாக மற்றும் தீவிரமாக வன்முறை சார்ந்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

3. **ஊடக வன்முறையின் ஈர்ப்பு**
    - வன்செயலானது மனிதனுக்குக் கவர்ச்சியுடையதாக/ ஈர்ப்புடையதாக இருத்தல்
    - வன்செயல்களை முன்வைப்பதனால், வீட்டாரை அச்சத்திற்கு உள்ளாக்கி மக்களை ஊடகத்தை நோக்கி தங்கவைப்பதற்கு முடியுமாதல்.
    - தொலைக்காட்சி நாடகங்கள், அரசியல் உரையாடல்கள், வேறு விசேட நிகழ்ச்சிகள், செய்திகள் மற்றும் செய்தி அறிக்கைகள் போன்ற நிகழ்ச்சிகளிலும் வன்முறை செயற்பாடுகளை முதன்மைப்படுத்தி வழங்கப்படுவது அது ஈர்ப்பு மிக்கது என்பதனாலேயாகும்.

- வானொலியில் பொழுதுபோக்கு வடிவங்கள் மேலான மட்டத்தில் காணப்படுவதால் இவ் ஊடகம் மூலம் வன்செயல்களை முன்வைத்தலானது ஒப்பீட்டளவில் குறைவாகும்.
- பத்திரிகையின் முதல் பக்கத்தில் பிரதான செய்தியிலிருந்து உட்பக்கம் பிரதேச செய்திகள் வரை பல்வேறு குற்றங்கள், விபத்துக்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான செய்திகள், அவ்வாறான புகைப்படங்களுடன் பல்வேறு விசேடமான ஆக்கங்களும் முன்வைக்கப்படுவது வன்முறையின் ஈர்ப்பினாலாகும்.
- ஊடக வன்முறையின் ஈர்ப்பினை ஊடக விற்பனையின் உபாய வழியாக ஊடகவியலாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

**4. ஊடக வனசெயல்களின் சமூக மற்றும் வீட்டுத் தாக்கம்**

- ஊடகத்தினூடாக வீட்டிற்கு கொண்டுவரப்படும் வன்செயல்களினால் வீட்டில் வன்முறையான மன நிலையொன்று உருவாக்கப்படுவதோடு, வன்முறையான சமூகமொன்று உருவாவதற்கு அது காரணமாக அமைகிறது.
- வீட்டின் மற்றும் சமூகத்தின் சிக்கல்களுக்கான தீர்வுகள் ஊடகங்களின் வன்முறையினூடாக மீள நிர்மாணிக்கப்படுகிறது.
- வன்செயல்கள் தொடர்ந்தும் ஊடகத்தில் பயன்படுத்துவதால் வீட்டு மற்றும் சமூக சிக்கல்கள் பிரச்சினைகள் மீது மக்களை உணர்ச்சியற்ற நிலைமைக்கு உருவாக்குதல்.
- ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் வீட்டு மற்றும் சமூக சிக்கல்களை தீர்ப்பதற்கு தூண்டப்படாத நிலைமையொன்று சமூகத்தில் உருவாக்குவதற்கு ஊடக வன்செயலுக்கு முடியுமாதல்.
- வீட்டு மற்றும் சமூக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஊடகத்தின் வன்செயல் செய்திகள் மற்றும் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்காததால் சமூகமும் வீடும் முழுமையான வகையில் வன்முறை கூட்டுத்தாபனங்களாதல்.
- வன்முறையான குடும்பத்தில் பிள்ளைக்கு நல்லதொரு நிலைமை இல்லாமல் போதல்
- சமூகம் மற்றும் வீட்டு ரீதியில் மனித பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் இரண்டிற்கும் ஊடக வன்செயல்கள் தாக்கம் ஏற்படுத்துதல்.

**5. ஊடக வன்செயல்களின் பகுப்பாய்வு மற்றும் நிர்வாகம்**

- ஊடக வன்செயல்கள் எவ்வாறானவை என்பது பற்றிப் பகுத்தாய்வு செய்யும் ஆற்றலை வீட்டின் உறுப்பினர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- ஊடக வன்செயல்களின் வியாபார நோக்கங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் வீட்டு உறுப்பினருக்கு இருத்தல் வேண்டும்.
- ஊடக வன்முறைகளை முன்வைப்பது ஊடகத்தின் பணியாவதோடு, அதனை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் வீட்டு உறுப்பினர்களின் பணியாகும்.
- ஊடக வன்செயல்களை இரசிக்கும் மனநிலைக்கு அப்பால் செல்லக்கூடிய வகையில் வீட்டு உறுப்பினரின் பகுத்தாய்வு திறன் மற்றும் இரசனைத் தன்மையை உயர்த்துதல் வேண்டும்.
- ஊடகத்தினால் வன்செயல் முன்வைக்கப்படுவது, வீட்டின் உறுப்பினரால் அது ஏற்றுக்கொள்ளப்படுகின்றமையினாலாகும்.
- வீட்டின் உறுப்பினர் ஊடக வனசெயல்களுக்கு விருப்பை வெளிப்படுத்தாவிடின், வன்செயல் நிகழ்ச்சிகளை ஊடகத்தில் மேலும் மேலும் முன்வைப்பதனால் ஊடகங்களுக்குப் பயனேதுமில்லை.
- மிகவும் உயர்ந்த இரசனைக்குப் பழகிய சமூகமொன்றை உருவாக்குவதின் மூலம் ஊடக வன்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

| | |
|---|---|
| **அலகு 10** | :- ஊடகக் கல்வியறிவு (பாடவேளைகள் 30) |
| **தேர்ச்சி 10.0** | :- ஊடகக் கல்வியறிவானது பல்வேறான பாகங்களிலும் விமர்சனம் செய்யப்படுவதனால் ஆராயப்படக்கூடிய தேர்ச்சியைப் பிரபல்யப்படுத்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- 10.1 ஊடகக் கல்வியறிவின் சுபாவம், அவசியம் மற்றும் அங்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த ஊடகக் கல்வியுடன் கூடிய தொடர்பினைப் பகுப்பாய்வு செய்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம் :- ஊடகக் கல்வியறிவின் அறிமுகம்**

1. ஊடகக் கல்வியறிவின் வரைவிலக்கணம்
2. ஊடகக் கல்வியறிவின் அவசியம்
3. ஊடகக் கல்வியறிவின் எல்லைகள் மற்றும் அங்கங்கள்
4. ஊடகக் கல்வியறிவு மற்றும் ஊடகக் கல்வி

**உத்தேச கற்றற் பேறுகள் :-**

- ஊடகக் கல்வியறிவு என்பதனால் கருதப்படுவது யாதென்பதை தர்க்க ரீதியாகப் பகுத்தாய்தல்
- நிகழ்கால ஊடக கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வியறிவின் அவசியத்தைத் தெளிவுபடுத்தல்
- ஊடகக் கல்வியறிவின் எல்லைகள் மற்றும் அங்கங்கள் எவ்வாறானவை என்பதை விமர்சித்தல்
- ஊடகக் கல்வியறிவின் திட்டமிடுதலுக்கான ஊடகக் கல்வியைப் பெற்றுக்கொடுத்தலின் முறைகளை நுணுக்கமாகப் பகுத்தாய்தல்.

## அறிமுகம்

ஊடகக் கல்வியறிவு என்பதை நிகழ்காலத்தில் பயன்படுத்துவோர் தொடர்பான தகவல்கள் சமூகத்தில் நிகழும் புதிய தொடர்பாடல் மற்றும் ஊடகச் சூழலில் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட மற்றும் சுயாதீனமாக அபிவிருத்தி செய்வதற்கு தேவையான தனிப்பட்ட திறமைகள் மற்றும் ஆற்றல்களை விவரப்படுத்தவதற்காகும். ஊடக கல்வியறிவு ஊடகக் கல்வியின் பெறுபேறாகும். ஊடகக் கல்வியறிவு என்பதினால் கருதப்படுவது ஊடகச் செய்திகளை ஆராய்ந்து கூறுவதும் அதனைப் பயன்படுத்தும் ஆற்றலுமாகும். ஊடகக் கல்வியில் ஆரம்ப காலத்தில் அவதானத்தைச் செலுத்துவது இரண்டு காரணங்களினாலாகும். ஒனறு பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் சினிமா போன்ற வெகுசன ஊடகங்கள் உருவாகியமையினால் அவற்றின் முக்கியத்துவத்திற்காக அவ் ஊடகங்கள் தொடர்பாகக் கற்பது அவசியமாகும். இரண்டாவதாக அவ் ஊடகங்களினூடாக சமூகமயப்படுத்தப்பட்ட பல்வேறு செய்திகளினூடாக ஏற்படும் அழுத்தங்களை வரைவிலக்கணப் படுத்துவதற்காக அச்செய்திகள் தொடர்பாக கற்றலானது அவசியமாகும். ஊடகக் கல்வியறிவு உருவாக்கப்படுவது இவ்விரண்டையும் மத்தியப்படுத்துவதன் மூலமாகும். பல்வகை ஊடகங்கள் உருவாக்கப்பட்ட வெளிநாடுகளில் முதலாவதாக ஊடகம் கல்வியறிவு தொடர்பான கருத்துக்கள் எழுந்தது. அதற்கான ஒரு காரணம் ஊடகத்திற்குக் காணப்படும் ஜனநாயக சுதந்திரம் மற்றும் கருத்துக்களை வெளியிடுவது தொடர்பான மனித உரிமைகளைக் காரணமாகக் கொண்டு பல நிர்வாகங்கள் கடினமாக இருந்தமை. இதனால் ஊடகத்தினை நிர்வாகம் செய்வதற்குப் பதிலாக ஊடகத்தைப் பற்றிக் கொள்வதற்கு மற்றும் ஊடக நன்மையுடையதாக நிர்மாணிக்கப்படுவதற்கு ஒழுக்கங்களை கற்பிக்கும் முக்கியத்தவம் காணப்படுகிறது. ஊடகக்கல்வியறிவு தொடர்பாக

சர்வதேச மட்டத்தில் அவதானம் செலுத்தப்படுகின்றது. யுனெஸ்கோ, ஐரோப்பாவின் ஆணைக்குழு போன்ற சர்வதேச மட்டத்திலான அமைப்புக்கள் இதனுடன் தொடர்புபட்டுள்ளது. நிகழ்காலத்தில் ஊடகக்கல்வி சர்வதேச ரீதியில் ஆர்வமுடையதாக உள்ளது. அத்தோடு ஊடகக் கல்வியறிவானது பல்வேறு கல்விப் பாடநெறிகளில் இதுவும் ஒரு பாடநெறியானதாக காணப்படுகின்றது. அத்தோடு ஊடகக்கல்வியறிவை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு குறுங்கால நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன. இதில் காணப்படும் சக்தியானது முன்பு காணப்படாத விதத்தில் சமூகமயப்படும் ஊடகங்கள் மற்றும் தகவல் தொழினுட்பங்களை நுகர்வதற்கான அவசியமான தேர்ச்சிகளை சமூகத்திற்குப் பெற்றுக்கொடுக்கின்றது. ஊடக ஆராய்வானது ஊடகக் கல்வியறிவின் கல்விப் போசாக்கை ஏற்படுத்துகிறது. ஆனாலும் ஊடகக் கல்விக்காக அங்கு பெறப்படுவது மட்டுப்படத்தப்பட்ட உதவியாகும். அதற்குக் காரணம் ஊடகக் கல்வியறிவு என்ற பாடப்பரப்புத் துறையில் ஊடாக ஆராய்வானது மிக விசாலமானது. ஊடகக் கல்வியறிவில் பிரதான எல்லையாவது அது ஊடகவியலாளர்களை உருவாக்குதலில் பங்கு கொள்ளாமையாகும். ஆனால் ஊடகவியலாளர்களை உருவாக்குவது தொடர்பாக ஊடகக் கல்வியறிவைப் பயன்படுத்தமுடியும். நிகழ்காலத்தில் பிரபல்யமான வீட்டு ஊடகங்ளை நகர்வதற்கு உண்மையாக வரைவிலக்கணப்படுத்த முடிவது ஊடகக் கல்வியறிவின் மூலமாகும். இலங்கையை உதாரணமாக எடுத்துக் கொண்டால், இது இன்றைக்கு ஊடகக் கலாசாரமானது எவ்வாறானது என்பதை விளங்கிக் கொள்ள முடியாதளவிற்கு அதனை நன்கு பித்தளையினால் அலங்கரிக்கப்பட்ட அலங்காரமாகக் காணப்படுகிறது. வீட்டு உறுப்பினர் அவ்வலங்காரங்களுக்குக் கண்களை ஒன்றுபடுத்தி தொலைக்காட்சியின் முன்பு உட்கார்ந்து அவற்றை இரசிக்கின்றார்கள். இறுதியில் தான் பெற்றுக் கொண்டவை எவை என்பதை புரிந்து கொள்வது அவர்களுக்குக் கடினமாகிறது. இவ்வாறான விதத்தில் பார்க்கும்போது ஊடகத்தில் காணப்படுவது வீட்டினை ஆக்கிரமிப்பு செய்வதாகும். என்றாலும் அது நேரிடுவது மிகவும் இன்பமான வகையினாலாகும். இந்த நிலைமையின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ள முடியுமானால் அதனூடாக ஊடங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் வீட்டு உறுப்பினர்களுக்குக் கிடைக்கும். ஆனால் இன்று நடைபெறுவது என்ன? ஊடகங்களினால் வீட்டு உறுப்பினர்கள் குரங்கு நடனத்தை பிடித்துக் கொண்ட மாதிரியாக உள்ளது. நாம் பார்ப்பது இந்த தொலைக்காட்சியே, நான் அதில் விரும்பிப் பார்ப்பது இந்த நாடகமே என வீட்டின் முன்னால் காட்சிப்பலகை தொங்கவிடுமளவுக்கு வீட்டினை மோகமயமாக்கி உள்ளனர். இது இந்த ஊடகங்களினாலேயாகும். அதனால் அவர்களுக்கு உண்மையைப் புரிந்துகொள்வதற்கு கடினமாகவிருக்கும். தேசிய ரீதியில் ஊடக கல்வியறிவு தொடர்பான நிகழ்ச்சித் திட்டமொன்று அவசியமாவது இதனாலேயாகும். புத்திசாலித்தனமாக செயற்படுவதற்கு ஊடகங்களை மிகவும் பெறுமதியான கற்கையாக பிரயோகிக்க முடியும். ஆனால் அது அவ்வாறு நடைபெற மாட்டாது. மக்களின் ஊடகத்தினால் நபர்களின் நாளாந்த நிகழச்சி நிரல் உருவாக்கப்படுவதோடு, அதனூடாக நபர்கள் வெகுசனத்துடன் பிணைந்து காணப்படுவர். அதிலிருந்து வெளியே வருவதிலும் பார்க்க அதில் தொங்கிக் கொண்டிருப்பதற்கே மக்கள் மிகவும் விரும்புகின்றனர். மக்களை விழிப்பூட்டுவதன் சந்தர்ப்பமாகப் பிரபல்யமான கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதினாலாகும். ஊடகச் சந்தையின் அனுசரணையினால் தமது விருப்பத்தின்படி கலாச்சார அங்கங்கள் ஊடகத்தினூடாக மக்களுக்கு முன்வைக்கப்படும். அதனை மக்கள் வெகு விரைவாகப் பற்றிக் கொள்வர். பல்சன கலாச்சாரத்தின் சொரூபமானது அதனை அவ்வாறே ஏற்றுக் கொள்வதற்கு மக்கள் தூண்டப்பட முடிவதனாலாகும். இதற்கிடையில் பிள்ளைகள், பெண்கள் மற்றும் இளம் வயதினர் பிரதான இடத்தை வகிக்கின்றனர். பிரபல்யமன கலாசாரத்தின் அழுத்தங்கள் தேசிய கலாசாரத்தைக் கடந்து சென்று பிரதான இடத்தை வகிக்கின்றது. அதற்குப் பிரயோகித்துள்ள உபகரணமானது ஜனநாயகமானதும் மற்றும் கருத்துக்களை வெளியிடும் உரிமையுமாகும். அங்கு ஏதேனும் நிர்வாகம் செய்வதற்கு அரசினால் தலையீடு செய்ய முடியாது. அவ்வாறு செய்யின் அது மனித உரிமைகள் மீறல் என்பதற்குள் அடங்கும். அதனால் செய்ய வேண்டியது நபரே நிர்வாகப்படுத்திக் கொள்வதாகும். இதனூடாக ஊடகத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்வதற்கு அவர்களினால் முடிவது மட்டுமன்றி, ஊடகத்தைப் பொறுப்பாக அளவாக

நுகர்வதற்கு ஆயத்தப்படுவார். வெகுசன ஊடக நிறுவனங்களின் உண்மையான நோக்கங்கள் தென்படாததோடு, அது உள்ளது திரையின் பின்னாலேயாகும். ஆராய்ந்து செயற்படுவோருக்கு இத்திரையின் பின்னாலிருக்கும் உண்மையான அர்த்தத்தையும் ஊடகச் செய்திகளையும் பகுத்தாய்ந்து இனங்கண்டு கொள்வதற்கு முடிவதனால் நபர்களின் வீட்டு உறுப்பினர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வது நூதன ஊடக கலாசாரத்தின் முக்கிய பணியாகும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. ஊடகக் கல்வியறிவின் வரைவிலக்கணம்

- ஊடகக் கல்வியறிவு என்பது குறித்து பல்வேறு எழுத்தாளர்களினால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படை விடயம் சமமானதாகும்.

  ஊடகக் கல்வியறிவு என்பது ஊடகத்தினால் சகல விதங்களிலும் முன்வைக்கப்படும் செய்திகளை நுகர்வதற்கு, பகுத்தாய்வதற்கு, மதிப்பிடுவதற்கு மற்றும் நிர்மாணிப்பதற்கு பெற்றுக்கொள்ளப்படும் ஆற்றலாகும்.

- ஊடகக் கல்வியறிவில் ஊடகங்களாக தொலைக்காட்சி, திரைப்படம், வானொலி, ஒலி ஆவணம், அச்சு ஊடகம், இணையத்தளம் மற்றும் புதிய டிஜிட்டல் (Digital) தொடர்பாடல் தொழினுட்பம் போன்ற அனைத்தும் உள்ளடக்கப்படும்.
- ஊடகக் கல்வியறிவிற்கான திறன்கள் நான்கு உள்ளன.
  1. உபயோகிக்கும் திறன்
  2. பகுத்தாய்வு செய்யப்படும் திறன்
  3. மதிப்பீடு செய்யும் திறன்
  4. நிர்மாணிக்கும் திறன்
- ஊடகக் கல்வியறிவுடன் ஒருவரின் தனிப்பட்ட அபிவிருத்தியானது பல வழிகளில் தொடர்புபடுகிறது.
  - சமிக்ஞைகள்
  - ஆராயும் சிந்தனை
  - சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல்
- ஊடகத்தைப் பிரயோகிக்கும் திறமைகளாக, ஊடகச் செய்திகளை கிரகிப்பதற்காக காணப்படும் ஆற்றல்
- பகுத்தாய்வு செய்யும் திறன் என்பதற்கு ஏதாவது ஊடக செய்தியொன்றின் உள்ளார்த்தத்தை பார்ப்பதற்கும் அதனை வாசித்து ஊகிப்பதற்கும் அதன் ஒப்பீட்டு ரீதியான வேறுபாடுகளை இனங்கண்டு கொள்வதற்குமான ஆற்றல் என்பதாகும்.
- மதிப்பீட்டு திறன் என்பதனால் கருதப்படுவது அந்தந்த ஊடகம் குறித்த செய்திகளின் உண்மையான சொரூபத்தை மதிப்பீடு செய்வதற்குக் காணப்படும் ஆற்றலாகும்
- நிர்மாணிக்கும் திறன் என்பதனால் கருதப்படுவது ஊடகம் குறித்த சரியான புரிந்துணர்வுடன் கூடிய மற்றும் பொறுப்புடன் கூடிய ஊடக செய்திகளை நிர்மாணிப்பதற்கான ஆற்றல் என்பதாகும்.

### 2. ஊடகக் கல்வியறிவின் முக்கியத்துவம்

- ஜனநாயக சமூகத்தில் பிரசையொருவர் என்ற வகையில் வாழ்வதற்காக ஊடகக் கல்வியறிவானது முக்கியமானதாகும்.
- தமது நாளாந்த வாழ்க்கையில் மனத்தை சீரமைத்து கொள்வதற்காக ஊடகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு ஊடகக் கல்வியறிவானது முக்கியமானதாகும்.
- தமது கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமைகள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டுமாயின் அனைவரும் ஊடகக் கல்வியறிவினையுடையவராக இருத்தல் வேண்டும்.

- நபர்களின் மற்றும் சமூகத்தின் நாளாந்த நிகழ்ச்சி நிரல்களை யதார்த்தமானதாக உருவாக்கிக் கொள்வதற்கு ஊடகக் கல்வியறிவு அவசியமாகும்.
- நபர்களின் நாளாந்த வாழ்க்கையும் வீட்டினதும் நடப்பாடு மிகவும் உற்பத்தித் திறனுடையதாக வாழ்வதற்கு ஊடகக் கல்வியறிவானது அவசியமாகும்.
- தேசிய அபிவிருத்திக்காக ஊடகத்தைச் சரியானமுறையில் பயன்படுத்திக் கொள்வதற்கான சமூக தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்ய ஊடகக்கல்வியறிவு அவசியமாகும்.
- வியாபார அனுசரணையாளர்களினால் கட்டியெழுப்பப்படும் நுகர்வோருக்கான உத்திகளை பிரபல்யமடைந்த கலாசாரத்தினூடாக நடைபெறும் குறைபாடுகளை அறிந்து கொள்வதற்காக ஊடகக் கல்வியறிவு அவசியம் என்பதாகும்.

## 3. ஊடகக் கல்வியறிவின் எல்லைகள் மற்றும் அங்கங்கள்

- ஊடகக் கல்வியறிவினூடாக முயற்சி செய்யப்படுவது ஊடகவியலாளர்களை உருவாக்குவது அல்ல.
- ஊடகக் கல்வியறிவானது ஊடகக் கல்வியின் ஒரு பகுதியாகும்
- ஊடகக் கல்வியறிவை அவை தொடர்பான பாட விடயங்களைக் கற்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியாது, அதனுடன் தொடர்புபட்ட பல்வேறான பகுதிகளில் பகுத்தாய்வு செய்வதன் மூலமே பெற்றுக் கொள்ள முடியும்.
- ஊடகக் கல்வியறிவினூடாக இறுதியாக நேரிடுவது பிரசையின் பழக்கவழக்கங்களில் மாறுதல்களாகும்.
- ஊடகக் கல்வியறிவின் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வாறான 7 தேர்ச்சிகளை பின்வருமாறு காட்டலாம்.
    1. நபர்களின் அல்லது பிரசைகளின் அவசியம் மற்றும் நட்பு பொருந்தக்கூடிய விதத்தில் உள்ளடக்கங்களை சேர்த்து வைத்துக் கொள்வதற்கு, மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் பகிர்ந்து கொள்வதற்கு ஊடகத் தொழினுட்பத்தை திறனுடையதாக பயன்படுத்தப்படுதல்
    2. பல்வேறு கலாசாரங்கள் மற்றும் நிறுவனத்தின் தலைவரிடம் பெறப்படும் பரந்த இடத்தில் காணப்படும் ஊடக சொரூபம் மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல்.
    3. ஊடக உள்ளடக்கங்களை உற்பத்தி செய்வது எவ்வாறு? மற்றும் எதற்காக? என்பதை விளங்கிக் கொள்ளுதல்
    4. ஊடகங்களினால் புதிய செய்திகளை கொண்டு வருவதற்காகப் பயன்படுத்தப்படும் தொழினுட்பம், மொழி மற்றும் சம்பிரதாய முறைகளை விபரமாக பகுத்தாய்தல்
    5. கருத்துக்கள், தகவல்கள் மற்றும் எண்ணங்களின் தொடர்பாடல் மற்றும் வெளிப்படுத்துவதற்காக ஊடகங்களை/ படைப்புக்களை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தல்
    6. அழைக்கப்படாத ஆக்கிரமிப்புடையதாக மற்றும் வதை கொடுப்பதாக ஊடக உள்ளடக்கங்கள் அல்லது சேவைகளை இனங்காணுதல், அதனை தவிர்த்தல் மற்றும் அவற்றுக்கு சவால் விடுத்தல்
    7. பொதுமக்களின் பொறுப்புக்கள் மற்றும் ஜனநாயக உரிமைகளில் பயன்படுத்தப்படுவனவாக ஊடகத்தை உற்பத்தி திறனுடையதாகப் பயன்படுத்தல்.
- ஊடகக் கல்வியறிவினூடாக வீட்டு உறுப்பினர் ஊடகத்திலிருந்து விலகுவதற்கு முயற்சிக்காமல் விடுவதோடு பொறுப்புக்களுடன் கூடிய ஊடக நுகர்வுக்கு வழிகாட்டுதல்
- ஊடகக் கல்வியறிவு என்பது தனிப்பட்ட திறமைகளின்றி, வாசிப்பு மற்றும் எழுத்து கல்வியறிவு, கேட்டல் - பார்த்தல் கல்வியறிவு, தகவல்கள் கல்வியறிவு என்பது துறைகளோடு இணைந்து நடைபெறுகின்றது.

4. **ஊடகக் கல்வியறிவு மற்றும் கல்வி**

- ஊடகக் கல்வி என்பது ஊடகச் செய்திகளை ஆராய்ந்து மதிப்பிடுதல் அங்கு அழுத்தத்தை பகுத்தாய்வு செய்வதற்கு படைப்புக்களை உருவாக்கக்கூடியதான ஊடகச் செய்திகளை தயாரிப்பதுடன் தொடர்பான ஊடகக் கல்வியறிவை பெற்றுக் கொள்வதற்கான கற்கும் கற்பிக்கும் செயற்பாடுகள் என்பதாகும்.
- ஊடக உற்பத்திகளின் பெறுநர்கள் யார்?
- அவர்கள் ஊடக பெறுநர்களாவது எதற்காக?
- ஊடகங்களினால் சக்தி மிக்க செய்திகள் முன்வைக்கப்படுவது எவ்வாறு?
- பார்க்கும், கேட்கும் அல்லது வாசிக்கும் யாதாயினும் அல்லது செய்தியொன்றிற்காக பொருத்தமான ஊடகமொழி எது?
- ஒரே மாதிரியான ஊடகச் செய்திகளை வெவ்வேறு பெறுநர்களினால் புலனுணர்வு செய்யப்படுவது எவ்வாறு?
- ஊடகக் கல்வியினால் சரியான விடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மிகவும் சரியான கேள்வியைக் கேட்பதற்கு தூண்டப்படுகின்றனர்.
- ஊடகக் கல்வியறிவில் பிரதான எண்ணக்கருக்கள் 4 உள்ளன.
    1. ஊடகச் செய்தி என்பது கட்டியெழுப்பப்பட வேண்டும்.
    2. ஊடகச் செய்திக்கு பொருள் கூறும் நபர் என்ற கருத்தில் நிலைத்திருத்தல்
    3. ஊடகம் என்பது வியாபார கைத்தொழிலாகும்
    4. ஊடகத்தின் செய்திகளினால் கருத்துக்களை உரித்தாக்கிக் கொள்ளல்
- ஊடகக் கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கான 10 காரணங்களைக் காட்ட முடியும்.
    1. ஊடகக் கல்வியினூடாக பிள்ளைகளுக்கு தமது ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கு கேள்விகளை கேட்டல், மதிப்பீட்டிற்கு, புரிந்து கொள்வதற்கு மற்றும் மரியாதை செலுத்துவதற்கு கற்பிக்கப்படும்.
    2. ஊடகக் கல்வியினூடாக உலகத்தையே வகுப்பறையினுள் கொண்டு வருதல். அதனை வேறு பாடங்களுடன் இணைந்து செயற்படுத்துதல்.
    3. ஊடகக் கல்வியானது மாணவர்களின் கேந்திரத்தை கற்ற குழுவொன்றாக நிர்மாணித்தல்
    4. ஊடகக் கல்வியினூடாக குழந்தைகளுக்கு சிறு பராயத்திலிருந்து தமது ஊடகக் கலாசாரத்தை புரிந்து கொள்வதற்கு வழிகாட்டும்.
    5. ஊடகக் கல்வியினூடாக இளைஞனான பிள்ளைகளுக்கு ஊடகங்களை நுகர்வதற்கு தைரியப்படுத்தும்
    6. ஊடகக் கல்வியில் வாலிபனான பிள்ளைகளுக்கு உண்மையான உலகத்தை ஆராய்ந்து கற்பதற்கு வழிகாட்டும்
    7. ஊடகக் கல்வியினூடாக பல்வர்க்க சமூகமொன்றில் நபரின் வாழ்வை பொருளுடையதாக்கும்.
    8. ஊடகக் கல்வியினூடாக இள வயதிலான பிள்ளைகளுக்கு சமூகம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கும்.
    9. ஊடகக் கல்வியினூடாக பிள்ளைகளுக்கு ஊடகத்தை விமர்ச்சிப்பதற்கு தூண்டுதல் ஏற்படும்.
    10. ஊடகக் கல்வியினூடாக பிள்ளைகளின் தர்க்கங்கள் மற்றும் படைப்பாற்றல் போன்றவற்றை முன்னேற்றுதல்
- ஊடகக் கல்வியானது இலகுவாகப் பரந்தளவில் வியாபித்துக் செல்லல்
- ஊடகக் கல்வி நபரின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

| | | |
|---|---|---|
| **அலகு 10.0** | :- | ஊடகக் கல்வியறிவு (பாடவேளைகள் 30) |
| **தேர்ச்சி** | :- | ஊடகக் கல்வியறிவானது பல்வேறான பாகங்களிலும் விமர்சனம் செய்யப்படுவதனால் ஆராயப்படக்கூடிய தேர்ச்சியை பிரபல்யப்படுத்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 10.2 வீட்டை முழுமையாக சமூகத்தின் நடப்பின் மீது வெகுசன ஊடகம் செல்வாக்கு செலுத்தும் தன்மையைப் பகுத்தாய்தல் |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- வீடு, சமூகம் மற்றும் வெகுசன ஊடகம்

1. இலத்திரனியல் ஊடகத்தின் உள்ளக ஆக்கிரமிப்பு
2. உள்ளக கலாசாரம் மீது மின் ஊடகத்தின் தாக்கம்
3. கற்றல் கருவியாக வெகுசன ஊடகம்
4. வெகுசன ஊடகம் மற்றும் சமூக மற்றும் தனிநபர் நிகழ்ச்சி நிரல்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- மின் ஊடகம் மூலம் வீடு ஆக்கிரமிக்கப்படும் முறையைப் பகுத்தாய்வு செய்தல்
- உள்ளக கலாச்சாரம் மீது மின் ஊடகங்கள் நல்ல முறையில் மற்றும் தீய முறையில் தாக்கம் செலுத்தும் முறையைப் பகுத்தாய்வு செய்தல்
- கற்றல் கருவியாக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தும் திறனை மதிப்பீடு செய்தல்
- வெகுசன ஊடகம் மூலம் தனிநபரின் மற்றும் சமூகத்தின் நிகழ்ச்சி நிரலை ஆக்கும் முறையைப் பகுத்தாய்வு செய்தல்

## அறிமுகம்

தற்போது வீட்டின் நிலையான மற்றும் அத்தியாவசிய உறுப்பினராக இலத்திரனியல் ஊடகம் மாறியுள்ளது. அவற்றுள்ளும் தொலைக்காட்சி அதிக அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இருப்பினும் வானொலியும் இறுவட்டு இயங்கும் இயந்திரமும் ஒலிப் பெருக்கி சாதனமும் தொலைக்காட்சியின் பரிவார உபகரணங்களாகியுள்ளன. அதன் புதியஉறுப்பினர் கணனியாகும். சில வீடுகளில் இவ் உபகரணம் ஓர் முறைமையாக காணப்படுகிறது. அவ்வாறே இதில் காணப்படும் விசேட விடயம் என்னவெனில் வீட்டின் மிகச் சிறந்த இடமானது இவ் இலத்திரனியல் ஊடகங்களினால் கைப்பற்றப்பட்டுள்ளமையேயாகும். இதனால் இலத்திரனியல் ஊடகத்தின் தாக்கத்திலிருந்து வீட்டிலுள்ள எவராலும் விலகியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வீட்டு ஊடக கலாசாரமொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இலங்கை வீடுகளில் இன்னமும் இருப்பது ஒரு தொலைக்காட்சியும் அதனுடன் இணைந்த வேறு ஊடக உபகரண முறைமையுமேயாகும். தொலைக்காட்சி மூலம் கிடைக்கும் அலைவரிசைகள் போதாது என்பதால் மாதாந்தம் கட்டணம் செலுத்தப்பட்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அலைவரிசைகளும் வீட்டினுள் பெறப்பட்டுள்ளன. வீட்டின் நபர்களது சுகத்தைப் போன்றே வாழ்க்கையும் இவ் இலத்திரனியல் ஊடக உபகரணங்களினால் கைப்பற்றப்பட்டுள்ளது. வீட்டு கலாசாரத்தில் உணவு உட்கொள்ளல், உறங்குதல், படித்தல், இளைப்பாறுதல், உரையாடுதல் முதலான அனைத்து பணிகளையும் இலத்திரனியல் ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளது. இலத்திரனியல்

ஊடகத்தை கற்றல் உபகரணமாக மிகப்பலமிக்கதாக பயன்படுத்த முடியும் என்பதே உண்மை நிலைமையாகும். இருப்பினும் அவ்வாறானதோர் நோக்கோ அல்லது அவ்வாறானதோர் தூண்டலோ வீட்டில் இல்லை. வீட்டின் உறுப்பினர்களால் இலத்திரனியல் ஊடகங்களை பயன்படுத்த வேண்டிய முறையையும் அவ் ஊடகங்களே கட்டளையிடுகின்றன. ஆகையால் தனது கலாசாரத்தைக் கட்டியெழுப்பக் கடினமானதோர் நிலை உருவாகியுள்ளது. விசேடமாக மாலை நேரங்களில் வீட்டில் காணப்பட்ட இனிமையான சம்பாஷணை இல்லாமற் போய் விட்டது. அது நல்லதோர் பணிக்காக ஒதுக்கப்படவில்லை. தனியாக செழிப்பற்ற மகிழ்ச்சியை பெறுவதற்காகக் குடும்பத்தில் அனைவரும் ஒன்றிணைந்து தொலைக்காட்சி முன்னால் உட்காருவது தற்போது அனேகமான வீடுகளில் மாலை நேரத்தில் வழக்கமாக மாறியுள்ளது. அம்முறையிலேயே ஊடகங்கள் மூலமே வீட்டு நபர்களினதும் சமூகத்தினதும் நிகழ்ச்சி நிரல் ஆக்கப்படுகிறது அதைத்தாண்டி நினைக்கவோ பேசவோ முடியாத ஓர் நிலை சமூகத்தில் உருவாகியுள்ளது.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. இலத்திரனியல் ஊடகத்தின் வீட்டு ஆக்கிரமிப்பு

- இலத்திரனியல் ஊடகங்கள் என்பதில் தொலைக்காட்சியும் வானொலியும் பிரதானமாக உள்ளடங்குவது குறித்து
- அவற்றிற்கு மீதியாக குரல் மற்றும் உருவங்கள் பயணிக்கும் இயந்திரங்கள், ஒலிப் பெருக்கி சாதனங்களும் கணனி மற்றும் இணையமும் இதன் கீழ் கருத்தில் கொள்ளப்படும் என்பது குறித்து
- நவீன ஊடகமான கைத்தொலைபேசியும் இங்கு கருத்தில் கொள்ளப்படுவது குறித்து
- இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் வீட்டிற்கு கொண்டு வரப்படுவது உபகரணம் மாத்திரமன்று, நேரடி தொடர்பாடல் புரிபவர் என்பது குறித்து
- இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் வீட்டிற்கு கொண்டு வரப்படும் செய்தி கொண்டு வரப்படுவது உறுப்பினர்களுக்கு உள ரீதியான அத்துமீறலை புரிவதன் மூலம் என்பது குறித்து
- இவ் அத்துமீறலானது வீட்டின் உறுப்பினர்களுக்கு புரியாதமை குறித்து
- வீட்டின் உறுப்பினர்களும் வீட்டிற்குள் வரும் இவ் ஆக்கிரமிப்பாளனை அன்போடு வரவேற்க தயாராயுள்ளமை குறித்து

### 2. வீட்டு கலாச்சாரத்தின் மீதான மின் ஊடக தாக்கம்

- வீட்டின் கலாசாரமானது உள்ளக இலத்திரனியல் ஊடகங்களினால் ஒழுங்கமைக்கப்படுகின்றது.
- வீட்டின் உறுப்பினர்கள் இடையே மனித தொடர்புகள் வீழ்ச்சியடைவதற்கு இவ் ஊடகங்கள் காரணமாகியுள்ளன.
- சில உறுப்பினர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்படுவதற்கு இவ் ஊடகங்கள் காரணமாகின்றன.
- உணவு உட்கொள்ளல், உறங்குதல், உரையாடுதல், படித்தல் முதலான பல நடத்தைகள் இலத்திரனியல் ஊடகங்களுடன் திட்டமிடப்பட்டுள்ளன.
- செழிப்பற்ற சிந்தனைகள் மேம்படுவதற்கு இலத்திரனியல் ஊடகங்களினால் உள்ளார்நத ரீதியில் துணை புரிகின்றன.
- வாழ்வின் உரிய எதிர்பார்ப்புக்களுக்குப் பதிலாக போலியான மற்றும் மாறுபட்ட எதிர்பார்ப்புக்கள் இவ் ஊடகங்களினால் கட்டியெழுப்பப்படுகின்றன.
- நபர்களின் சுயாதீன தன்மை இல்லாமற்போய், அனைத்து சிந்தனைகளும் இவ் ஊடக செய்திகளுடன் தொடர்புபடும் நிலை உருவாகின்றது.
- ஊடக செய்தியானது ஒரே சந்தர்ப்பத்தில் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பொருந்தாது என்பதால் உள்ளக கலாசாரம் புலப்படாத சிக்கலான நிலைக்கு மாறுகின்றது.

- வீட்டினுள் பாலியல் மற்றும் வன்செயல் என்பன இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக ஊற்றெடுப்பதனால் வீட்டு உறுப்பினர்களின் உள நடப்பு மற்றும் நடத்தைகள் நிம்மதியற்ற நிலைக்கு உள்ளாகின்றன.
- இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக கொண்டு வரப்படும் செய்திகளுக்கு ஏற்ப தங்களது வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வுகளை தேடுவதற்கு வீட்டு உறுப்பினர்கள் பழக்கப்படுகின்றனர்.

3. **கற்றல் கருவியாக வெகுசன ஊடகம்**
   - அறிவுடன் பயன்படுத்தினால் பயனுள்ள கற்றல் கருவியாக வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்த முடிகிறது
   - வெகுசன ஊடகத்திடம் கற்றல் கருவியாக பாரியதோர் சக்தி காணப்படுகிறது
   - வெகுசன ஊடகவியலாளர்களினால் வெகுசன ஊடகத்தின் கற்றல் பெறுமதி அழிக்கப்பட்டுள்ளது
   - மொழியைக் கற்கும் பிரபலமான கருவியாக வெகுசன ஊடகத்தின் கற்றல் பெறுமதி அழிக்கப்பட்டுள்ளது
   - நபரொருவரது சமுதாயத்துடன் ஒன்றுதலின் பிரபல கருவியாக வெகுசன ஊடகத்தை பயன்படுத்த முடிகிறது
   - நபர் ஒருவருக்கு முறைசாராக் கல்வி மூலம் சுயமாக கற்பதற்கு அவகாசம் வெகுசன ஊடகம் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது
   - நபர் ஒருவருக்கு முறைசார் கல்விக்குத் தேவையான பல தகவல்கள், சொற்கள், குரல் அல்லது உருவம் என்ற ரீதியில் வெகுசன ஊடகத்தினரால் முன்வைக்கப்படுகின்றது
   - வெகுசன ஊடகத்தினால் முன்வைக்கப்படும் பல்வேறு வடிவிலான செய்திகள் மூலம் பல்வேறு வடிவிலான கல்வியைப் பெற முடிகிறது.
     1. **வழிகாட்டல் செய்தி:**
        இதனால் கருதப்படுவது, நேயருக்கு புதிய புரிந்துணர்வையும் அறிவையும் வழங்குவதற்கு முன்வைக்கப்படும் செய்திகள் என்பதாகும். இதன் மூலம் கட்டளையிடல், அறிவுரை வழங்கல், ஆலோசனை வழங்கல், தூண்டல் மற்றும் கடுமையாக எச்சரித்தல் என்பவற்றை மேற்கொள்ள முடியும்.
     2. **பராமரிப்பு செய்தி**
        மக்களின் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு தேவையான தகவல்களை செய்தி மூலம் பெறலாம். உதாரணமாக வங்கியிடமிருந்து கடன் பெறல், வீடுகளைக் கட்டுதல், உணவுகளை பெற்றுக் கொள்ளல், நாடகமொன்றைப் பார்த்தல் முதலானவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் வெகுசன ஊடகம் மூலம் வழங்கப்படுகின்றன.

4. **வெகுசன ஊடகம் மற்றும் சமூக மற்றும் நபர் நிகழ்ச்சி நிரல்**
   - வெகுசன ஊடக பாவனை உள்ளக கலாசாரத்தின் ஒரு பகுதியாவதால் அதன் மூலம் கொண்டு வரப்படும் செய்திகளிலிருந்து நபர்கள் மூலம் தமது நாளாந்த நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுகின்றது
   - நபர்களுக்கோ சமூகத்திற்கோ பயனற்ற செழிப்பற்ற பகுதிகளினால் நபர்களினதும் சமூகத்தினதும் நிகழ்ச்சி நிரலில் கட்டியெழுப்ப வெகுசன ஊடகங்களுக்கு முடியும்
   - சமூக மற்றும் நபர் நிகழ்ச்சி நிரல் வெகுசன ஊடகத்தினால் கட்டியெழுப்பப்படுவது அரசியல் செயற்பாட்டின் ஒரு பகுதியாக முடியும்
   - நபரின் சுயாதீன தன்மை இல்லாமற் போவதால் வெகுசன ஊடகத்திற்கு இந்த வகையில் நபர் நிகழ்ச்சி நிரல் மீது தாக்கம் ஏற்படுத்த முடிந்துள்ளது
   - நபர்களினாலான சமூகம் இதனால் யதார்த்தவாதமாகாத நிகழ்ச்சி நிரலுடன் நாளாந்தம் செயற்பட முடிதல்
   - வெகுசன ஊடகத்தின் நிகழ்ச்சி நிரல் காரணமாக நபர்களுக்கும் சமூகத்திற்கும் யதார்த்தவாதமாக சமூகத்தை ஊடுருவிக் காண அவகாசம் இல்லாமற் போதல்

| | |
|---|---|
| **அலகு 10.0** | :- ஊடகக் கல்வியறிவு (பாடவேளைகள் 30) |
| **தேர்ச்சி** | :- ஊடகக் கல்வியறிவானது பல்வேறு பாகங்களிலும் விமர்சனம் செய்யப்படுவதனால் ஆராயப்படக்கூடிய தேர்ச்சியைப் பிரபல்யப்படுத்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- 10.3 பிரசித்தி பெற்ற கலாசாரத் தன்மையை பல்வேறு பக்கங்களின் ஊடாக விமர்சித்து அதன் தாக்கத்தின் தன்மையை பகுத்தாய்தல் |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- பிரசித்தி பெற்ற கலாசாரம்

1. பிரசித்தி பெற்ற கலாசாரத்தை அறிமுகஞ் செய்தல்
2. ஊடக சந்தையின் செயற்பாடு
3. பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் உறுப்புக்கள்
4. பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் செயற்பாடு மற்றும் கட்சியினர்
5. பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் தாக்கம்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- பிரசித்தி பெற்ற கலாசாரம் என்பது எத்தகையதோர் பொருள்? எவ்வாறு உருவானது? என்பது குறித்துப் பகுத்தாய்தல்
- ஊடக சந்தையின் செயற்பாட்டின் தன்மை மற்றும் அதன் அதிகாரம் கைப்பற்றப்படும் தன்மையைப் பகுத்தாய்தல்
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் உறுப்புக்களை ஒப்பீட்டு ரீதியில் விளக்குதல்
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் செயற்பாடு மற்றும் அதன் கட்சியினருக்கிடையேயான தொடர்பை தெளிவுபடுத்தல்
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் தாக்கத்தைச் சமநிலையில் பகுத்தாய்தல்

## அறிமுகம்

பிரசித்தி பெற்ற கலாசாரம் உருவானமை வெகுசன ஊடகச் செயற்பாட்டின் பெறுபேறாகும். தற்போது வெகுசன ஊடக நடவடிக்கைகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளளப்படுகின்றன. அவ்வாறே அடிப்படையில் மேலைத்தேய நாடுகளே வெகுசன ஊடகத்தின் செல்வாக்கை கைப்பற்றியுள்ளன. இவ் வெகுசன ஊடக செல்வாக்கு வழி நடாத்தப்படுவது செல்வாக்கினாலேயேயாகும். இதனால் சர்வதேச மட்டத்தில் வியாபார நோக்கங்களுடன் முன்வைக்கப்படும் பொருட்கள், சேவைகள் மற்றும் நடத்தைகள் ஒன்றிணைவதால் பிரசித்தி பெற்ற கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் மட்டத்தில் ஏதேனும் ஓர் முறையில் பிரதேச உறுப்புக்களும் இப்பிரசித்தி பெற்ற கலாசாரத்தில் இணைய முடியும். இங்கு தெளிவாக தெரியும் விடயம் என்னவெனில் பிரசித்தி பெற்ற கலாசாரமானது வர்த்தக உற்பத்திகளுடன் தொடர்புபட்டுக் காணப்படுவதாகும். அவற்றின் மட்டமானது சர்வதேச மட்டத்திலிருந்து பிரதேச மற்றும் தேசிய மட்டத்திற்குப் பரவியுள்ளது. தேசிய மட்டத்திலான பிரசித்தி பெற்ற கலாசாரமானது சில நாடுகளுக்கு அவ்வளவு பாதிப்பானதல்ல. அந்நாட்டினது கலாசாரம் சுற்றுப்புறத்துடன் கட்டியெழுப்பப்படுவதே அதற்கான காரணமாகும். இருப்பினும் சர்வதேச மட்டத்தில் பிரசித்தி பெற்ற கலாசாரத்துடன் இணைந்து கட்டியெழுப்பப்படும் தேசிய மட்டத்திலான பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் ஊடாக தேசிய கலாசார அங்கங்கள் பிரதிபலிக்கப்படாது. பிரசித்தி பெற்ற கலாசாரத்துடன் கட்டியெழுப்பப்படுவது நுகர்வோர்

வாதமேயாகும். பிரசித்திபெற்ற கலாசாரப் பின்னணி கட்டியெழுப்பும் வியாபார நிறுவனங்கள் முக்கியமாக தமது பொருட்களையும் சேவைகளையும் விற்பனை செய்து கொள்வதையே நோக்காகக் கொண்டிருப்பதே அதற்குக் காரணமாகும். அதற்காக ஏதேனுமொரு நாட்டிலுள்ள நபர்களிடையே அப்பொருட்களினதும் சேவைகளினதும் நுகர்விற்குரிய நடத்தைகள் உபாயமான முறையில் கட்டியெழுப்பப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான நேரடிச் செய்தியை ஊடக விளம்பரங்கள் ஊடாக முன்வைப்பதோடு மறைமுக செய்தி ஊடக ஆக்கங்கள் ஊடாகவே முன்வைக்கப்படுகின்றன. உதாரணமாக சங்கீத நிகழ்ச்சிகள், நாடகங்கள் முதலானவை இவற்றுள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. அவ்வாறே பல்வேறு நேரடி (ரியாலிட்டி) நிகழ்ச்சிகளும் இதில் உள்ளடங்கும். இவை மக்களுக்குப் பாரிய சேவையாற்றும் மற்றும் மக்களுக்கு இதுவரை கிடைக்காத சந்தர்ப்பத்தை வழங்கும் நிகழ்ச்சிகளாகவே வெளித்தோற்றத்திற்கு தெரியும். ஆனால் வியாபார கலாசாரத்திற்கு மக்களின் நடத்தைகளை கட்டியெழுப்புவதே அதன் யதார்த்தமாகும். மக்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தோடு ஒப்பிடுகையில் அவர்களுக்கு புதிதாக பழக்கும் நடத்தைகளினால் ஏற்படும் பாதிப்பானது மிக அதிகமாகும். இது புலப்படாததோடு, மக்கள் அவ்வாறான நடத்தைகளை மிக விருப்பத்துடன் தழுவிக் கொள்கின்றனர். உலகில் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திகள் நாளுக்கு நாள் மாறுபடுவதோடு, அதற்கு இணையாக பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் உறுப்புக்களும் மாறுபடும். பிரசித்தபெற்ற கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக வியாபார அனுசரணையாளர்களினால் சமூகத்தின் பிரசித்திபெற்ற பிரதி ரூபங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட ஓர் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற நபர்கள் எப்போதும் வியாபாரிகளின் பிரதிநிதிகளாக, தமது பிரபலத்தை பயன்படுத்தி வியாபாரிகளின் பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். இதன் ஊடாக அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவு பணத்தை ஈட்டுகின்றனர். தமது நாட்டின் மக்களுக்கு இம்முறையிலேயே புதிய நுகர்வு நடத்தைகளை பழக்குகின்றனர். ஆடை அணிகலன்கள், அலங்காரங்கள், ஆகாரங்கள், வாகனங்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள், கல்வி, வீடு முதலான எந்தவொரு துறையும் இப்பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுவதில்லை. அதனால் இறுதியில் நோக்குகையில் முழு சமூகமும் வியாபாரிகளின் நுகர்வுற்பத்தியில் இரையாக்குவதற்கு அவகாசம் கிட்டும். மக்களும் இம்முறையில் பிரசித்தி பெற்ற கலாசாரத்திற்கு ஏற்ப இருத்தல் தமக்கு மிகவும் பெருமையானது என்று எண்ணுகின்றனர். அவர்கள் இம்முறையில் உடுத்துகின்றனர். அணிகின்றனர். பிரயாணங்கள் செல்கின்றனர். வீடுகளைக் கட்டுகின்றனர். வீட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்துகின்றனர். பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொள்கின்றனர். பல்வேறு ஆகாரங்களை உட்கொள்கின்றனர். இத்தாக்கமானது இன்று சர்வதேச மட்டத்தில் பெரியதோர் செயற்பாடாக மாறியுள்ளது. வெகுசன ஊடக உலகமயமாக்கல் இதற்குப் பிரதான காரணமாகும். தமது சுயமான ஆளுமையைக் கட்டியெழுப்பியுள்ள ஒருவரால் மாத்திரமே இந்நிலையிலிருந்து விடுபட்டுச் செயற்பட முடியும். ஏனையோர் பிரசித்தி பெற்ற கலாசாரத்துடன் ஒன்றிப் போகாமையை தமது பாரிய தோல்வியாக அல்லது வீழ்ச்சியாகக் கருதுகின்றனர். பிரசித்தி பெற்ற கலாசாரத்தைக் கொண்டுள்ள வியாபார அனுசரணையாளர்களுக்கும் மற்றும் வெகுசன ஊடகங்களுக்கும் இம்முறையிலான தோல்வி எண்ணத்தை சமூகத்தில் கட்டியெழுப்ப முடிவதனாலேயே பலனுள்ள நிலை உருவாகின்றது.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

**1. பிரசித்தி பெற்ற கலாசாரத்தை அறிமுகஞ் செய்தல்**

- பிரசித்தி பெற்ற கலாசாரம் என்பது உலகத்தினரால் பகிர்ந்து கொள்ளப்பட்ட செயற்பாடுகளினதும் நம்பிக்கைகளினதும் சமூகம்
- பிரசித்தி பெற்ற கலாசாரமானது வர்த்தக உற்பத்திகளுடன் தொடர்புபடுகின்றது
- பிரசித்தி பெற்ற கலாசாரம் என்பது வெகுசன ஊடகத்தின் மூலம் சமூக மயப்படுத்தும் பொருட்கள், சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடத்தைகள் ஒன்றிணைந்ததால் உருவான சமூக கலாசாரத்தின் வடிவம்

- பிரசித்தி பெற்ற கலாசாரம் என்பது ஒரு புறம் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியாளர்களும் மற்றுமோர் புறத்தில் வெகுசன ஊடகங்களும் இன்னுமொரு புறத்தில் நுகர்வோரும் ஒன்றிணைவதால் உருவான செயற்பாடு
- வெகுசன கலாசாரத்தின் உச்ச நிலை பிரசித்தி பெற்ற கலாசாரம்
- தொடர்பாடல் தொழினுட்பத்துடன் இணைந்த கலாசாரம்
- பிரசித்தி பெற்ற கலாசாரம் ஆக்கத்தை விடவும் உற்பத்தி அதிகம்
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தை இலகுவில் பயன்படுத்த முடியும்

**2. ஊடக சந்தையின் தொழிற்பாடு**

- வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் இடையிலான கொடுக்கல் வாங்கலை செயற்றிறனுடையதாக்குவதன் பொருட்டே ஊடக சந்தை செயற்படுகின்றது
- ஊடக சந்தை தனியாக இலாப நோக்குடன் செயற்படுவதோடு நல்லொழுக்கம் அல்லது நற்குணம் அல்லது பழக்க வழக்கங்கள் அதற்கு முக்கியமானவை அல்ல
- ஊடக சந்தையானது விஞ்ஞான ஆய்வு முறைகளையும் மனோவியல் சித்தாந்தங்களையும் பயன்படுத்திச் செயற்படுகின்றது
- ஊடக சந்தை எவ்வளவு மென்மையாக செயற்படுகின்றது? என்றாலும் அதில் சிக்கிய ஒருவருக்கு அதிலிருந்து விடுபடுவது கடினமானது
- ஊடக சந்தையின் செயற்பாட்டிற்குப் பாதுகாப்பை வழங்குவது சனநாயகவாதம் மற்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் மனித உரிமைகள்
- ஊடக சந்தையின் செயற்பாட்டிற்கு இடையூறு விளைவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அரசாங்கமொன்றிற்கு குறைவடைவதோடு நுகர்வோருக்கு நிகழும் நேரடி மற்றும் மறைமுக முறையில் நிகழும் துன்பங்கள் குறித்து ஊடகசந்தையோ அரசாங்கமோ பொறுப்புக் கூறாது
- ஊடக சந்தையுடன் உயர்ந்த நிலையில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்கு நுகர்வோருக்கு மிகச் சிறந்த காட்சியொன்று இருத்தல் வேண்டும்

**3. பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் உறுப்புக்கள்**

- பிரசித்தி பெற்ற கலாசாரத்தில் பல்வேறு உறுப்புக்கள் உள்ளடங்குகின்றன.
- ஏதேனுமோர் புதிய உறுப்பை உள்ளடக்குவதற்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இடமுண்டு.
- வியாபாரிகளின் விருப்பத்திற்கேற்ப ஊடக சந்தைக்குப் புதிய உறுப்பை உள்ளடக்கும் பணியை வெகுசன ஊடகவியலாளர்களே நிறைவேற்றல் வேண்டும்
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் ஒவ்வொரு உறுப்பும் நுகர்வோனைக் கவரும் நோக்கிலேயே உருவாகியுள்ளது
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் பல்வேறு உறுப்புக்களைப் புரிந்து கொள்வது கூட நுகர்வோருக்கு கடினம்
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் பல்வேறு உறுப்புக்கள் வியாபாரிகள் மற்றும் வெகுசன ஊடகங்களினால் உருவாக்கப்படுவதோடு நுகர்வோர் அவற்றை ஏற்றுக் கொள்வர்

| | | | |
|---|---|---|---|
| • ஆகாரம் | • ஆடையணிகலன்கள் | • அலங்காரங்கள் | • சங்கீதம் |
| • வாகனங்கள் | • வீட்டுப் பொருட்கள் | • கல்வி | • வீடு |
| • எண்ணங்கள் | • தொலைக்காட்சி | • நாடகம் | • அரசியல் |

**4. பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் செயற்பாடு மற்றும் கட்சியினர்**

- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் அன்னியோன்யம் செயற்பாட்டுடன் கூடியது
- புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் வியாபாரிகளினால் உற்பத்தி செய்யப்படுவதோடு அவற்றைப் பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் உறுப்புக்களாக்குவது வெகுசன ஊடகவியலாளர்கள்
- வியாபாரிகள், வெகுசன ஊடகங்கள் மற்றும் நுகர்வோர் பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் பங்குதாரர்கள்

- பிரசித்தி பெற்ற கலாசாரமானது நுகர்வோர் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது
- வியாபாரிகளும் வெகுசன ஊடகங்களுமே பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் நன்மையைப் பெறுகின்றனர்
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் இருப்பு ஒரே மாதிரியாக காணப்படாததோடு, வியாபாரிகளுடைய தேவைகளுக்கேற்ப அது பல்வேறு வடிவங்களைப் பெறுகிறது
- பிரசித்தி பெற்ற கலாசாரத்திற்குக் காலத்திற்கேற்ப வடிவங்கள் வெகுசன ஊடகங்கள் மூலமே வழங்கப்படுகின்றன
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தில் ஏற்படுத்தப்படும் பல்வேறு வடிவம் வழங்கலை விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ள நுகர்வோர் தயாராக இக்கின்றனர்.
- விசேடமாக குழந்தைகள், பெண்கள் மற்றும் இளையோரே பிரசித்தி பெற்ற கலாசாரத்தினை உச்ச அளவில் அனுபவிப்போராவர்

**5. பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் தாக்கம்**

- பிரசித்தி பெற்ற கலாசாரமானது முழு சமூகத்தினதும் நடத்தை மீது தாக்கம் செலுத்துகின்றது
- பிரசித்தி பெற்ற கலாசாரமானது ஏதேனுமோர் சமூகத்தின் மக்களது பொருளாதார நடப்புக்கள் மீது அதிக தாக்கம் செலுத்துகின்றது
- பிரசித்தி பெற்ற கலாசாரம் மூலம் மக்களின் முக்கிய எதிர்பார்ப்புக்களை அடக்கி அவர்களைச் செழிப்பற்ற மற்றும் வெற்று எதிர்பார்ப்புக்களை நோக்கி ஈடுபடுத்துகிறது.
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தினால் வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளும் வெகுசன ஊடக நிறுவனங்களின் வருமானம் மற்றும் நடப்பும் உயர் மட்டத்திற்கு உயர்த்தப்படுகின்றது
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தினால் நுகர்வோர் தமக்குப் பொருத்தமற்ற நுகர்வு முறைக்கு பழக்கப்பட்டு இறுதியில் பொருளாதார மற்றும் சமூக ரீதியிலும் உளவியல் ரீதியிலும் விசன நிலைக்கு முகம் கொடுக்கின்றது
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தில் காணப்படும் கவர்ச்சி மற்றும் அழகு காரணமாக நுகர்வோருக்கு தாம் பிரசித்தி பெற்ற கலாசாரத்தின் இரையாகியிருக்கின்றமை புரியாமல் இருக்கின்றது
- பிரசித்தி பெற்ற கலாசாரத்தினால் மனித நடத்தைகள் சிந்தனைகள் மற்றும் மதிப்புக்களின் தொகுதி, உணர்ச்சி மற்றும் அறிவு மட்டம் கூட மாற்றியமைக்கப் படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலகு 11.0** | :- | ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் (பாடவேளைகள் 40) |
| **தேர்ச்சி** | :- | ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, கோட்பாடுகள் மற்றும் பாவனை வடிவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுக் கதைகள் மற்றும் வெளியீட்டு முறைகள் குறித்து விமர்சிக்கிறது. |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 11.1 ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, மூலங்களின் வகைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகளை விமர்சித்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- ஆக்கபூர்வமான தொடர்பாடல் பிரவேசம்

1. ஆக்கபூர்வமான தொடர்பாடலை அறிமுகஞ் செய்தல்
2. ஆக்கபூர்வமான தொடர்பாடல் மூலங்களின் கல்வி
3. ஆக்கபூர்வமான தொடர்பாடலை வகைப்படுத்தல்
4. ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆராய்ச்சி

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- ஆக்கபூர்வமான தொடர்பாடலை பகுத்தாய்தல்
- ஆக்கபூர்வமான தொடர்பாடலுக்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு மூலங்களைப் பகுத்தாய்தல்
- ஆக்கபூர்வமான தொடர்பாடலின் பல்வேறு வகைகளை ஒப்பீட்டு ரீதியில் முன்வைத்தல்.
- ஆக்கபூர்வமான தொடர்பாடல் துறையை ஆராய்ச்சி செய்து பெற்றுக் கொள்ளும் அனுபவங்களை வெளிப்படுத்தல்

## அறிமுகம்

தொடர்பாடல் என்பது ஆக்கபூர்வமானதோர் பணி என்றே பார்த்தவுடன் தோன்றும். ஆனால் அதை நுணுக்கமாக கற்கையில், தொடர்பாடலில் நேரடி வெளிப்பாட்டு பணி எனவும் ஆக்கபூர்வமான பணி எனவும் வேறுபடுத்த முடியும் என்பது புலனாகும். தொடர்பாடல் ஆரம்பமான முற் காலப்பகுதியிலிருந்தே இவ்வேறுபடுத்தலை இனங்காண முடியும். உதாரணமாக கோத்திர சமூகமொன்றின் தலைவரால் கோத்திரத்தின் உறுப்பினர் ஒருவருக்கு விடுக்கப்படும் கட்டளை நேரடி கூற்றாகும். அதில் உறுதியான அர்த்தம் உண்டு. அத்தோடு மிருகங்களை வேட்டையாடி திரும்பி வந்த கோத்திரத்தைச் சார்ந்த ஒருவரினால் தான் மிருகத்தை வேட்டையாடிய விதம் குறித்து கோத்திரத்தின் ஏனையோருக்கு கூறப்படும் முறை ஆக்கபூர்வமானது. அதில் அனுபவிப்பதற்கு ஏதும் உண்டு. இரசிப்பதற்கு ஏதேனும் உண்டு. இம்முறையில் அரச முரசறையுடன் வெளிப்படுத்தப்பட்டது நேரடிக் கூற்றாகும். ஒவ்வொரு மக்களுக்கும் அதை ஒவ்வொரு முறையில் புரிந்து கொள்ளும் திறன் இல்லை. ஆனால் அரசர்களால் காவிய நூல்கள் இயற்றப்படும் போது அல்லது முன்னேற்பாடின்றி கவிதைகளைக் கூறுகையில் அதனுள் இருப்பது ஆக்கபூர்வமான கூற்றே. மேலும் இவ்விடயத்தை எளிமையாக நோக்கினால் எமது அன்றாட வாழ்வில் ஆக்கபூர்வமான தொடர்பாடலை தொடர்ந்தும் பயன்படுத்தும் முறைக்கு பல உதாரணங்களைக் காட்டலாம். தெருவில் உள்ள பாதுகாப்பு சாவடி ஒன்றில் இவ்வாறானதோர் அறிவித்தல் இருக்கலாம். "நிறுத்தவும், வாகனத்திலிருந்து இறங்கி முன்னால் வரவும்" இக்கூற்றின் பொருளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் மாலையில் விளையாடச் செல்லும் ஒரு பிள்ளைக்கு தாய் இவ்வாறு கூறலாம். இரவாகி வந்தால்

இரவில் சாப்பாடு தர மாட்டேன். இக்கூற்றினால் கூறப்படுவது இரவாகும் முன்னர் வீட்டிற்கு வருமாறு கூறுதலாகும். ஆனால் வெளிப்படுத்தப்பட்ட பொருள் அது அல்ல. இம்முறையில் விரிவாக கற்கையில் ஆக்கபூர்வமான தொடர்பாடல் என்பது முழு தொடர்பாடல் செயற்பாட்டினதும் அத்தியாவசியமான உறுப்பு என்பது புலனாகிறது. இதற்காக பல்வேறு தொடர்பாடல் வடிவங்களைப் பயன்படுத்த முடியும். எல்லா தொடர்பாடல் வகையிலும் தொடர்பாடலை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்த முடியும். தொடர்பாடல் பணி மிகவும் பயனுடையதாவதற்கு ஆக்கபூர்வமான முறைகளைப் பயன்படுத்தலாம். ஏதேனும் அனுபவம், உணர்வு, தகவல், எண்ணம் ஆக்கபூர்வமாக அல்லது புதுமையாக முன்வைப்பது ஆக்கபூர்வமான தொடர்பாடலின் அபிப்பிராயமாகும். அப்போது அதன் பிரபலம் அதிகரிப்பதோடு, அலங்காரமானதாகும். அதன் பிரகாரம் நோக்குகையில் தொடர்பாடல் புரிபவரால் தனது செய்தியை ஆக்கபூர்வமாக முன்வைப்பதன் மூலம் புதுமையாக்கப்படும். இது தனியே மனித வர்க்கத்திற்கு மட்டுப்படுத்தப்படுவதோடு, ஏனைய எந்தவொரு உயிரினத்திற்கும் ஆக்கபூர்வமாக எண்ணங்களை வெளிப்படுத்தும் திறன் கிடையாது. மனிதன் உயர்ந்த மனத்துடன் இருப்பதால் அவனால் தனது எண்ணத்தை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தலாம். மனித பரிணாமத்துடன் மனிதனின் மொழிப் பாவனையைப்போன்றே சைகைகளின் பாவனையும் அவற்றிற்கான கருவிகளைப் பயன்படுத்தலும் காரணமாக தொடர்பாடல் வளர்ச்சியடைந்தது. இது ஆக்கபூர்வமான தொடர்பாடலுக்குத் தாக்கம் செலுத்திய பிரதான விடயமாகும். தனது தொடர்பாடலின்போது பாவனையாளரிடம் அதிக தூண்டலையும் கவர்ச்சியையும் ஏற்படுத்துவதும் தொடர்பாடல் இணைப்பை மிகவும் மகிழ்ச்சிகரமான தொன்றாக்குவதும் தொடர்பாடல் மேற்கொள்பவரின் எதிர்பார்ப்பாகியது. மக்களிடம் காணப்படும் அறிவு, மனப்பாங்கு மற்றும் நடத்தைகளை மாற்றுவதற்கு ஆக்கபூர்வமான தொடர்பாடலிடமுள்ள திறமை விசேடமானது. அது சமூக நற்குணத்தின் பாதுகாப்பிற்கும் களிப்பை அர்த்தமுள்ளதாக்குவதற்கும் சமுதாயத்துடன் ஒன்றுதலுக்கும் பாரிய பங்களிப்பை வழங்குகிறது. தற்போதும் பயன்படுத்தக்கூடியவாறு சமூக விஞ்ஞானங்களிலிருந்து வழங்கப்பெற்ற விஞ்ஞானங்கள் வரை ஆக்கபூர்வமான தொடர்பாடல் பயன்படுத்தப்படுகின்றமை புலனாகிறது. சமூகத்திற்கு கலை உறுப்புக்கள் துணை புரிவதே ஆக்கபூர்வமான தொடர்பாடலின் மிக விசேடமான பெறுபேறாகும். பல்வேறு இலக்கிய ஆக்கங்கள், சித்திரம், சிற்பம், பாடல், நாடகம் முதலானவையும் தொழிநுட்ப பாவனையினால் மேற்கொள்ளப்படும் புகைப்படங்கள், வானொலி நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி ஆக்கங்கள் முதலானவையும் ஆக்கபூர்வமான தொடர்பாடலின் விசேடமான பெறுபேறுகளாகும். ஆக்கபூர்வமான தொடர்பாடல் மற்றும் சமூக கட்டமைப்புகளுக்கிடையிலான தொடர்பும் தெளிவாகத் தெரிபவையாகும். பண்டைய வரலாற்று யுகத்திலிருந்து தற்போது வரை சமூக பரிணாமத்தில் ஆக்கபூர்வமான தொடர்பாடலின் பரிமாணத்தை ஆராய்கையில் அவ்வவ் யுகங்களின் விசேட தன்மைகளை இனங்காண முடியும் சமூகத்தினால் தொடர்பாடலுக்கும் தொடர்பாடலினால் சமூகத்திற்கும் அன்னியோன்ய முறையில் மாபெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பது அதன் மூலம் தெரிகிறது. இராசகாரியவாதம், சமூக வாதம் முதலான எண்ணக்கருக்கள் அந்த ரீதியிலேயே ஆக்கபூர்வமான தொடர்பாடலுடன் தொடர்புபடுகின்றன. சமூக விஞ்ஞானங்களில் ஏற்பட்ட பல்வேறு அபிவிருத்திகளும் ஆக்கபூர்வமான தொடர்பாடலுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. சமூக ரீதியில் ஆக்கபூர்வமான தொடர்பாடல் வழக்கத்திற்கு உள்ளான பிரதான துறைகள் வரலாற்றுக்கதைகளும் நாட்டுப்புறக்கலைகளுமேயாகும். நாட்டுப்புறக்கதைகள், நாட்டுப்புறக்கவிதைகள் மற்றும் பாடல்கள், பேய் ஓட்டுதல், சூனியம், சாந்திச் சடங்கு முதலான பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் ஆக்கபூர்வமான தொடர்பாடல் பாவனையினாலேயே உருவாகின. அவ்வாறே தற்போது ஆக்கபூர்வமான தொடர்பாடலைக் கற்பதற்கு பயன்படுத்தக்கூடிய சிறந்த மூலம் அந்நாட்டுப்புறக் கலைகளேயாகும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. ஆக்கபூர்வமான தொடர்பாடல் அறிமுகம்

- நேரடி கூற்றாகவும் ஆக்கபூர்வமான கூற்றாகவும் தொடர்பாடலைப் பயன்படுத்த முடிகின்றது
- ஆக்கபூர்வமாக கருத்துக்களை வெளியிடல் மற்றும் ஆக்கபூர்வமாகக் கிரகித்துக் கொள்ளல் முதலான தொழிற்பாடுகள் இரண்டின் மூலம் ஆக்கபூர்வமான தொடர்பாடல் செயற்படுகின்றது
- ஆக்கம் நபரைச் சார்ந்ததோடு, அதை கிரகித்துக் கொள்ளலும் நபரைச் சார்ந்ததாகும்.
- மக்களின் அன்றாட தனிப்பட்ட வாழ்க்கையைப் போன்றே சமூக வாழ்வை மேற்கொள்ளவும் ஆக்கபூர்வமான தொடர்பாடல் அத்தியாவசியமானது
- ஆக்கபூர்வமான தொடர்பாடலின் விசேட பலனாக பல்வேறு வரலாற்றுக் கதைகள் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் தோன்றியுள்ளன
- மக்கள் மூலம் சமூக பிரவேசங்கள் விவரிக்கப்படும் முறை மற்றும் சமூகம் மீது அவர்கள் கொண்டுள்ள மனப்பாங்கும் வரலாற்றுக் கதைககள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளில் ஆக்கபூர்வமாக முன்வைக்கப்படுகின்றன
- தற்கால பல்வேறு கலை ஆக்கங்கள் மற்றும் தொழினுட்பக் கலைகள் நாட்டுப்புறக் கலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆக்கபூர்வமான ஆக்கங்களை உருவாக்கியது
- அவ்வவ் நாடுகளின் கலாசாரம், அங்கீகரிப்புக்கள், சமயம் மற்றும் நம்பிக்கைகள் முதலானவை அவ்வவ் நாடுகளின் ஆக்கபூர்வமான தொடர்பாடலில் பிரதிபலிக்கப் படுகின்றது
- சில ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆக்கங்கள் அகிலம் முழுவதும் பரவிக் காணப்படுவதோடு, மேலும் சில தேசிய ரீதியில் மற்றும் பிரதேச ரீதியில் காணப்படுகின்றது
- சமூக மேம்பாட்டுடனும் ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆக்கபூர்வமானதாக அபிவிருத்தியடைகின்றது

### 2. ஆக்கபூர்வமான தொடர்பாடல் மூலங்களின் கல்வி

- ஆக்கபூர்வமான தொடர்பாடல் எவ்வாறு உருவாகி அபிவிருத்தி அடைந்தது என்பதை இனங்காண முடிவது அதன் மூலங்களை அடைந்தது என்பதை இனங்காண முடிவது அதன் மூலங்களை கற்பதன் மூலமாகும்.
- சமூகத்திற்குரிய உரிமைகளாகக் கருதப்படும் பல்வேறு ஆக்கபூர்வமான தொடர்பாடல்களை மூலங்களாகக் காட்ட முடியும்
- மூலங்களின் கல்வி என்பதனால் கருதப்படுவது அவ்வவ் ஆக்கங்கள் உருவாதல், பாவனை மற்றும் நடப்பும் மாற்றங்களுக்கு உள்ளாதலும் முதலானவை கற்றலாகும்
- ஆக்கபூர்வமான தொடர்பாடல் மூலங்களைக் கற்பதனால் அவை சமூகத்துடன் தொடர்புபட்டுள்ள முறையை இனங்காண முடியும்

### 3. ஆக்கபூர்வமான தொடர்பாடலை வகைப்படுத்தல்

- ஆக்கபூர்வமான தொடர்பாடலின் வடிவம் மற்றும் அதன் உற்பத்திக்கேற்ப அதை வகைப்படுத்த முடியும்
- ஆக்கபூர்வமான தொடர்பாடலின் உற்பத்திக்கேற்ப அதைப் பாரம்பரிய மற்றும் நவீன எனும் ரீதியில் இரண்டு வகைகளாகப் பிரிக்க முடியும்
- பாரம்பரிய ஆக்கபூர்வமான தொடர்பாடலில் வரலாற்றுக் கதைகள், நாட்டுப்புறக் கலைகள், பொது மக்கள் வழக்கு, இலக்கியம், சைகைகள், வீட்டு நிர்மாணக்கலை, பல்வேறு வணக்க சமாச்சார முறைகள், பழக்க வழக்கங்கள் என்ற வகையில் மக்களால் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த மற்றும் அவர்களது அன்றாட வாழ்வுடன் தொடர்புபட்டுள்ள பல்வேறு ஆக்க வடிவங்கள் உள்ளடங்குகின்றன

- நவீன ஆக்கபூர்வமான தொடர்பாடலில் உள்ளடங்குபவை புதிய விஞ்ஞான மற்றும் தொழிநுட்பக் கருவிகள் மற்றும் முறைகள் என்பவற்றின் துணையுடன் மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் பணிகள்
- நவீன ஆக்கபூர்வமான தொடர்பாடலில் வெகுசன ஊடக ஆக்கங்களும் புதிய ஊடக ஆக்கங்களும் உள்ளடங்குகின்றன

**4. ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆராய்ச்சி**

- ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆாய்ச்சியானது சமூக, விஞ்ஞான, ஆராய்ச்சி ரீதியான பணி
- ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆய்வாளருக்கு சமூக விஞ்ஞான ஆராய்ச்சி குறித்த தேர்ச்சி இருத்தல் வேண்டும்
- ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆராய்ச்சியின்போது அதன் பிறப்பு அதன் இறப்பு மற்றும் அதன் சமூக தொடர்புகள், அதன் அமைப்பும் அதன் ஆக்கபூர்வமான முறைகளின் தொடர்புகள் சமூக பிதிபலிப்புக்கள் என்பவற்றை தெளிவுபடுத்தலாம்
- ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆராய்ச்சியின்போது அதை உரிய முறையில் திட்டமிடுதலும் உரிய முறையில் அறிக்கையிடுதலும் திட்டமிடலோடு நடைமுறைப்படுத்தலும் அத்தியாவசியமானதாகும்
- புதிய ஆக்கபூர்வமான தொடர்பாடல் பிரவேசங்களை இனங்காண்பதற்கு தொடர்பாடல் ஆராய்ச்சி பயன்படுகின்றது

| | |
|---|---|
| **அலகு 11.0** | :- ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் (பாடவேளைகள் 40) |
| **தேர்ச்சி** | :- ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, கோட்பாடுகள் மற்றும் பாவனை வடிவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுக் கதைகள் மற்றும் வெளியீட்டு முறைகள் குறித்து விமர்சிக்கிறது. |
| **தேர்ச்சி மட்டம்** | :- 11.2 ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, மூலங்களின் வகைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகளை விமர்சித்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- ஆக்கம் (கோட்பாடு மற்றும் பாவனை)

1. ஆக்கபூர்வமான சிந்தனை மற்றும் அவதானிப்புக்கள்
2. ஆக்கபூர்வமான கட்டுரை
3. ஆக்கபூர்வ நடிப்பு மற்றும் பேச்சு
4. ஆக்கபூர்வமான வாசிப்பு
5. ஆக்கபூர்வமான சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் கிராபிக் ஆக்கங்கள்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- சிந்தனையின் ஆக்கபூர்வமான வடிவத்தை விமர்சித்தல்
- ஆக்கபூர்வமான அவதானிப்புக்கள் தொடர்பான அனுபவங்களை வெளிப்படுத்தல்
- ஆக்கபூர்வமான கட்டுரையின் விசேட தன்மைகள் மற்றும் தன்மையை சமநிலையில் காட்டுதல்
- ஆக்கபூர்வமான சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் கிராபிக் ஆக்க கலைகளின் தன்மையைச் சமநிலையில் காட்டுதல்
- ஆக்கபூர்வமான கட்டுரையின், நடிப்பின், பேச்சின் மற்றும் வாசிப்பின் அனுபவங்களைப் பகுத்தாய்தல்

## அறிமுகம்

ஆக்கம் என்பது அபூர்வமானதோர் விடயமாகும். அதன் ஊடாக மனித சமூகத்திற்கு முன்வைக்கப்படுவது முன்னர் இடம்பெறாத ஒரு விடயமாகும். இருப்பினும் அதை நுணுக்கமாக பகுத்தாய்ந்து பார்த்தால் எல்லா ஆக்கங்களுக்குள்ளும் இருப்பது உண்மையான உலகத்திற்குப் பொருத்தமானதே என்பது புலனாகும். அது தனியே உண்மையானது மட்டுமன்றி தனியே பொய்யானதும் அல்ல. அதனால் ஆக்கம் மூலம் மனிதரின் வாழ்க்கையே மீளவும் விவரிக்கப்படுகின்றமை புலனாகும். மனிதன் மற்றும் வேறு மிருகங்களினால் ஆக்கத்தில் ஈடுபடுவதில் ஒற்றுமைகளைப் போன்றே வேற்றுமைகளும் உண்டு. வீடு கட்டுதலானது மிருங்களின் உலகில் அபூர்வமானதோர் பணியாகும். பறவைகள் பல்வேறு வடிவிலான கூடுகளைக் கட்டுகின்றன. அவற்றுள் தச்சன் குருவியின் கூடு உலகின் அபூர்வமானதோர் படைப்பாகும். கறையான்கள் புற்றுகளை கட்டுகின்றன. தேனீக்களும் குளவிகளும் மிகச் சரியாக கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தி கூடுகளைக் கட்டுகின்றன. செங்குளவிகள் மண்ணினால் மிகச் சிறிய வீட்டை கட்டுகின்றன. இவை எத்தனை அற்புதமான படைப்புக்கள் இருப்பினும் திட்டம் ஒன்றேயாகும். மனிதனின் ஆக்கத்திறன் அவற்றை விட வித்தியாசமானது தனது படைப்புக்கள் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான முறையில் சமமாகாத முறையில் அபூர்வமாக முன்வைக்கும் திறன் மனிதனுக்கு உண்டு. அவ்வாறே அப்படைப்புக்களுக்கு கோட்பாடுகளைக் கட்டியெழுப்பவும், அவற்றைப் பல்வேறு முறைகளில் பயன்படுத்தவும்

மனிதன் பழக்கப்பட்டுள்ளான். அதனால் மனிதனின் ஆக்கபூர்வமான வழக்கமானது மிகவும் உயர்ந்ததும் விசேடமானதுமாகும். ஆக்கபூர்வமான சிந்தனையின் அடிப்படையாவது மனிதனிடம் காணப்படும் ஆற்றல் கற்பனையாகும். அதனால் உலகை அபூர்வமானதாகக் காண அவர்களுக்கு திறன் கிட்டும். ஆனால் ஆற்றல் மற்றும் கற்பனையுடன் அதிர்ஷ்ட குணம் படைப்பாளிக்கு அவசியமானது என்பதை ஏற்றுக் கொள்ளலாகும். அவ்வாறானதொரு அதிர்ஷ்ட குணமுள்ள ஒருவர் நிரந்தரமாக தனது ஆற்றலைப் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆக்கங்கள் உருவாகின்றன. உலகில் அனைவருக்கும் படைப்பாளிகளாக முடியாது என்பதே இதிலிருந்து தெரிகிறது. உலகில் இலட்சக்கணக்கான கோடிக் கணக்கானோர் வாழந்தனர் மற்றும் வாழ்கின்றனர் என்பது உண்மையானாலும் ஆக்கத்தில் ஈடுபடுவோர் அதில் மிகச் சிறு தொகையினரே அச்சிறு தொகையினரால் படைக்கப்படும் ஆக்கங்களை இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்துகின்றனர். நாட்டுப்புறக் கலைகள் அல்லது புதிய கலைகளானாலும் அவ்வாறே இருப்பினும் நாட்புறக்கலைகள் தொடர்பில் காணப்படும் விசேடம் என்னவெனில் அதில் உறுதியான படைப்பாளி ஒருவர் இன்மையே ஆகும். குறிப்பிட்டதொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஒருவரால் அல்லது சிலரால் ஆக்கப்பட்ட முதல் படைப்பு ஏனையோரால் தமது விருப்பத்திற்கேற்ப மாற்றஞ் செய்து மற்றும் புதிய விடயங்களைச் சேர்த்து பயன்படுத்துவதைக் காணலாம். அவ்வாறே அது பல்வேறு மாற்றங்களிற்கு உட்பட்டு தொடர்ச்சியாக சமூகத்தில் காணப்படுகிறது. இங்கு ஒரே ஆக்க மூலம் ஒவ்வொரு பிரதேசங்களில் வேறு விதத்தில் காணப்படுகின்றமை தெரிகிறது.

ஆக்கத்தின்போது அதிகமாகப் பயன்படுத்தப்படும் உபகரணம் மொழியேயாகும். மக்களின் தொடர்பாடல் கருவி மொழியாவதே அதற்குக் காரணமாகும். அதன் பிரகாரம் பேச்சு, கட்டுரை, வாசிப்பு மற்றும் நடிப்பு என்ற ரீதியில் ஆக்க வடிவங்கள் நான்கைக் காட்டலாம். இதற்கு மொழி தொடர்பான விசேட தேர்ச்சி தேவை. நபரிடம் காணப்படும் கற்பனைத் திறனைப் பயன்படுத்தித் தொடர்ச்சியான பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் ஆக்கத்தில் ஈடுபட முடியும். பேச்சு, கட்டுரை, வாசிப்பு மற்றும் நடிப்பு எனும் நான்கு வடிவங்களும் நபரின் ஆக்கபூர்வமான சக்தியாகும். அது வெகுசன ஊடகத்திலும் மற்றும் புதிய ஊடகங்களிலும் இந்நான்கு வடிவங்களையும் நபரின் ஆக்கபூர்வமான சக்தியெனலாம். அது நபரினால் சமூகத்தில் தனியாக செயற்படுத்தப்படும். அவ்வாறே வெகுசன ஊடகத்திலும் மற்றும் புதிய ஊடகங்களிலும் இந்நான்கு வடிவங்களையும் அபூர்வமாகப் பயன்படுத்துவர். அவ்வாறே சித்திர ஆக்கமும் மிகப் புராதனமான ஆக்க வடிவமாகும். புதிய தொழினுட்பத்தின் பெறுபேறாக மொழியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதன் மூலம் முன்னோக்கிச் சென்று பல்வேறு ஏனைய வடிவங்களையும் பயன்படுத்துவர். புகைப்படம் மற்றும் கிராபிக் ஆக்கங்கள் இங்கு முக்கியமானவையாகும். தொழினுட்ப கருவிகள் மற்றும் தொழினுட்பச் செயற்பாடுகள் மூலம் முன்னர் இடம் பெற்றிராத முறையிலான ஆக்கங்கள் உருவாகும். அதன் பிரகாரம் அவ்வவ் எல்லா ஆக்க வடிவங்களுக்குமேற்ப ஆக்கபூர்வமான கோட்பாடுகளை கலை, அறிவிப்புக்கலை, பேச்சு மற்றும் வாசிப்புக் கலைகள், புகைப்படக் கலை மற்றும் கிராபிக் கலை என்பன இம் முறையில் வெவ்வேறான ஆக்கபூர்வமான கோட்பாடுகளைப் பயன்படுத்துகின்றன. ஒரு ஆக்கபூர்வமான வடிவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கோட்பாட்டை இன்னொரு ஆக்கபூர்வமான வடிவத்திற்குப் பயன்படுத்த முடியாது என்பதே அதன் பொருளாகும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. ஆக்கபூர்வமான சிந்தனை மற்றும் அவதானிப்புக்கள்

- ஆக்கபூர்வமான சிந்தனை என்பது உலகை அபூர்வமாக காணவும் மனித தொடர்புகள் மற்றும் சூழற் செயற்பாடுகளை அபூர்வமாக மறு ஆக்கம் செய்வதற்கும் பயன்படுத்தும் உளவியல் சக்தியாகும்
- தான் வாழும் உலகை பல்வேறு முறையில் அவதானிப்பதற்கான திறமையானது ஆக்கபூர்வமான சிந்தனையின் அடிப்படையாகும்.

- அனைவருக்கும் எப்போதும் தெரியும், காணும், உணரும் விடயங்களை அபூர்வமானதாக முன்வைக்கும் ஆற்றல் உலகின் சிறு பிரிவினருக்கு மட்டுமே உண்டு
- நபர் ஒருவரிடமுள்ள கற்பனைத்திறன் ஆக்கபூர்வமான சிந்தனையின் உச்சப் பக்கமாகும்
- ஆக்கபூர்வமான நபரினால் உலகம் அவதானிக்கப்பட வேண்டியது மற்றும் கற்பனை செய்ய வேண்டியது மனித நேயத்துடனேயாகும்.

**2. ஆக்கபூர்வமான கட்டுரை**

- ஏதேனுமோர் மொழியை விசேடமான முறையில் பயன்படுத்தும் திறன் ஆக்கபூர்வமான தொடர்பாடலின் அடிப்படை
- ஆக்கபூர்வமான கட்டுரை தொடர்பான ஆற்றல் அடிப்படை அறிவின் பெறுபேறு
- பலவேறு ஆக்கபூர்வமான மாதிரிகளுக்கேற்ப ஆக்கபூர்வமான கட்டுரையை எழுத நேர்தல்

| |
|---|
| நாவல் - சிறுகதை - செய்யுள் - மேடை நாடக வரிசை - வானொலி நாடக பிரதிகள் - பாடல்கள் .... |

- ஆக்கபூர்வமாக எழுதும் ஆற்றலை அபிவிருத்தி செய்து கொண்ட அவ்வவ் மாதிரிகளின் விதிகளுக்கேற்ப எழுத நேரிடும்
- அவ்வவ் ஆக்கபூர்வமான மாதிரிகளுக்கேற்ப ஆக்கபூர்வமான விதிகள் காணப்படுதல்

**3. ஆக்கபூர்வமான எடுத்துக்காட்டுடனான விளக்கம் மற்றும் பேச்சு**

- பாரம்பரிய மற்றும் நவீன ஆக்கபூர்வமான கலைகளில் பல்வேறு மாதிரிகளுக்கேற்ப ஆக்கபூர்வமான நடிப்பு மற்றும் பேச்சைப் பயன்படுத்தலாம்
- எழுத்து மற்றும் வாசிப்பு திறன் இல்லாவிட்டாலும் ஆக்கபூர்வமாக நடிக்க மற்றும் பேச முடியும்
- நடிப்பின் பல்வேறு சம்பிரதாயங்கள் இருக்கின்றன

| |
|---|
| யதார்த்த - உரைநடை சார்ந்த - பாதி உரைநடை சார்ந்த - விகாரரூபமுடைய - கலைகளில் உள் உணர்வுகளை வெளிக்கொண்டுவரும் போக்கு முதலானவை ரீதியில் |

- நடிப்பில் உள்ளடங்கும் நான்கு அபிநயங்களை தொடர்பாடல் கோணத்திலும் ஆக்கபூர்வமான கோணத்திலும் பகுத்தாய முடியும்

| | |
|---|---|
| ஆங்கீக அபிநயம் | (உடலின் உறுப்புக்களைப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளிப்படுத்தல்) |
| சாத்வீக அபிநயம் | (முக பாவனைகளைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்தல்) |
| ஆகார்ய அபிநயம் | (ஆடை அணிகலன்களைப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளிப்படுத்தல்) |
| வாச்சீக அபிநயம் | (குரல் மற்றும் மொழியைப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளிப்படுத்தல்) |

- பேச்சு உள்ளடங்குவது வாச்சீக அபிநயத்தில் என்பதோடு, அது வாய்மொழி மற்றும் வாய்மொழியற்ற தொடர்பாடலிலும் உள்ளடங்கும்
- சைகை மற்றும் தோரணை முதலானவை ஆங்கீக அபிநயத்தில் உள்ளடங்குவதோடு அது வாய்மொழியற்ற தொடர்பாடலிலும் உள்ளடங்குகிறது
- முகத்தின் சைகைகள், கண்கள் மற்றும் வாய் உட்பட முகத்திற்குரிய உறுப்புக்கள் மூலம் கருத்துக்களை வெளியிடுவது சாத்வீக அபிநயத்தில் உள்ளடங்குவதோடு, அது வாய்மொழியற்ற தொடர்பாடலின் உடல் மொழியிலும் உள்ளடங்கல்
- நபரொருவரின் ஆடை அணிகலன்கள் மூலம் கருத்துக்கள் வெளிப்படுததப்படும் முறை ஆகார்ய அபிநயத்தில் உள்ளடங்குவதோடு, அது வாய்மொழியற்ற

தொடர்பாடலின் உடல் மொழியிலும் உள்ளடங்கல்

- மேற்குறித்த அபிநயங்களைப் பயன்படுத்துகையில் ஆக்கபூர்வமான பணியும் அதில் சேர்கின்றது.
- ஆக்கபூர்வமான பேச்சை வாய்மொழி அபிநயத்திற்குப் புறம்பாக பல்வேறு ஊடகங்களுக்கு மற்றும் மாதிரிகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்புடையதாக பயன்படுத்த முடியும்
- ஆக்கபூர்வமான பேச்சு தற்காலத்தில் நபரொருவருக்கு அத்தியாவசியமான ஆற்றல்
- பாவனையின் மற்றும் பேச்சின் சைகை அர்த்தங்கள் சமூக கலாச்சார சந்தர்ப்பத்திற்கேற்ப மாறுபடுதல்

| |
|---|
| மக்கள் வழக்கு - உப கலாசாரங்கள் - பிரதேச விசேடங்கள் - தொழில்கள் - பணிகள் - சமூக தொடர்புகள் |

- ஆக்கபூர்வமான பாவனையைப் போன்றே பேச்சும் மனித சமூகத்தின் தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது

### 4. ஆக்கபூர்வமான வாசிப்பு

- வாசிப்பு என்பது பொதுவாக அச்சு ஊடகம் அல்லது ஆவணத்துடன் தொடர்புடையது எனினும் இங்கு வாசிப்பு என்பது எந்தவொரு ஊடகத்தின் மூலமும் கிடைக்கும் செய்திகளை ஆக்கபூர்வமாகக் கிரகித்துக் கொள்ளல் எனும் பொருளைத் தருகிறது

| |
|---|
| புத்தகங்கள் வாசித்தல் - பத்திரிகைகள் வாசித்தல் - சஞ்சிகைகள் வாசித்தல் - தொலைக்காட்சியை வாசித்தல் - இணைய வாசிப்பு - திரைப்பட வாசிப்பு - புகைப்படமொன்றை வாசித்தல் - பாடலொன்றை வாசித்தல் |

- ஆக்கபூர்வமான வாசிப்பிற்கு அவ்வவ் ஊடகங்கள் தொடர்பான சிறந்த பாவனை ஒருவரிடம் இருத்தல் வேண்டும்
- பல்வேறு ஊடக செய்திகளை ஆக்கபூர்வமாக வாசிப்பதன் மூலம் அந்தந்தச் செய்திகளில் வெளித்தோற்றத்திற்குப் புலப்படும் பொருளை விட மேலதிகமான ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளும் திறன் கிடைக்கும்
- ஆக்கபூர்வமான வாசிப்பு நபரின் அனுபவங்களுடன் தொடர்புபடுகிறது
- ஆக்கபூர்வமான வாசிப்பில் கலை பல்தன்மை காணப்படுகின்றது
- ஆக்கபூர்வமான வாசிப்பிற்கு ஊடக அறிவு தேவைப்படுவதோடு அது ஒவ்வொருவராலும் விருத்தி செய்யப்படல் வேண்டும்

### 5. ஆக்கபூர்வமான சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் கிராபிக் ஆக்கங்கள்

- ஆக்கபூர்வமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் கிராபிக் ஆக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன
- சித்திரங்கள் மூலம் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஆக்கபூர்வமான கலையில் மிக நீண்ட கால வரலாறொன்று இருத்தல்
- புகைப்படங்கள் மற்றும் கிராபிக் ஆக்கங்கள் மூலம் ஆக்கபூர்வமாகக் கருத்துக்களை தெரிவித்தலானது புதிய மின் தொழிநுட்ப சம்பிரதாய சித்திர கலையுடனான ஒன்றிணைதல்
- சித்திர - புகைப்பட மற்றும் கிராபிக் கலைகள் தொடர்பாக தனித்தனியாக ஆக்கபூர்வமான கோட்பாடுகள் கட்டியெழுப்பபட்டுள்ளன
- தற்காலத்தில் சித்திர - புகைப்பட மற்றும் கிராபிக் கலைகளைத் தனித் தனியாகவும் வேறு ஆக்கபூர்வமான வடிவங்களுடன் இணைத்தும் பன்படுத்தப்படுகின்றமை
- சித்திரம் - புகைப்படம் மற்றும் கிராபிக் கலைகள் கட்புலக்கலைகளுக்குரியன
- சித்திரங்களை ஆக்கும் திறனானது அனேகமாக பிறப்பிலேயே வரும் ஆற்றலாகக் கொள்ளப்படுவதோடு, புகைப்படம் மற்றும் கிராபிக் ஆற்றல் பயிற்சி பெற்ற ஆக்கபூர்வமான ஆற்றலாகக் கொள்ளப்படுதல் மிகத் தேவையானது
- ஆக்கபூர்வமான சித்திர - புகைப்பட - கிராபிக் ஆக்கங்களை இரசிப்பதற்கு பாவனையாளருக்கும் விசேட இரசனை இருத்தல் வேண்டும்

| | | |
|---|---|---|
| **அலகு 11.0** | :- | ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் (பாடவேளைகள் 40) |
| **தேர்ச்சி 11.0** | :- | ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, கோட்பாடுகள் மற்றும் பாவனை வடிவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுக் கதைகள் மற்றும் வெளியீட்டு முறைகள் குறித்து விமர்சிக்கிறது. |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 11.3 ஆக்கபூர்வமான தொடர்பாடலுக்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வரலாற்றுக் கதைகள் தொடர்பான தேர்ச்சிகளை மேம்படுத்தல். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- ஆக்கபூர்வமான தொடர்பாடல் மற்றும் வரலாற்றுக் கதை

1. நாட்டுப்புறக் கதைகள்
2. நாட்டுப்புறப் பாடல்கள்
3. சமயங்கள், வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள்
4. பாரம்பரிய விளையாட்டுக்கள்
5. பாரம்பரிய நாடகங்கள்
6. சாந்தி சடங்கு
7. பாரம்பரிய நடனங்கள்
8. பழமொழிகள்
9. விடுகதைகள்
10. பாரம்பரிய வைத்தியம்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- வரலாற்றுக் கதைகளின் அந்நிய அடையாளங்களைச் சமநிலையில் பகுத்தாய்தல்
- வரலாற்றுக்கதைகளின் ஆக்கபூர்வமான பின்னணி மற்றும் அதன் ஆக்கபூர்வமான வெளியீட்டு முறைகளை முன்வைத்தல்
- ஆக்கபூர்வமான தொடர்பாடல் வடிவமாகவும், மூலமாகவும் வரலாற்றுக் கதைகளைப் பயன்படுத்தக்கூடிய முறையைப் பரீட்சித்துப் பார்த்தல்
- சமூக இதயத் துடிப்பின் ஓர் அங்கமாக வரலாற்றுக் கதைகளுக்குரிய இடத்தைப் பகுத்தாய்தல்

## அறிமுகம்

வரலாற்றுக்கதைகள் என்பது எந்தவொரு சமூகத்திற்கும் உரித்தான மற்றும் அச்சமூகத்தின் அந்நிய அடையாளங்களுடனான கலாச்சாரத்தின் அங்கமாகும். அது தொடர்பான பகுப்பாய்வுகளுக்கு ஏற்ப வரலாற்றுக் கதைகள் என்பது வாய்மொழி வழியாக நிலவும் கலாச்சார அங்கமாகும். இது தொடர்பாக மிகச் சிறந்த பகுத்தாய்வை மேற்கொள்ளும் இலங்கையைச் சார்ந்த சிரேஷ்ட கல்விமானான பேராசிரியர் ஆனந்த கே. குமாரசுவாமி அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று ஆய்வுகளுக்கு உள்ளான யுகங்களுக்கு முன்னரிருந்தே புத்தகங்கள் மூலம் அன்றி வாய்மொழி வழியாக மற்றும் மனித நடத்தைகளினால் நிலவி வரும் பரம்பரைக்கதைகள், தேவதைக் கதைகள், செய்யுட் கதைகள், விளையாட்டுக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய பொருட்கள் முதலான பரிபூரணமான தொடர்ச்சியான கலாச்சார தொடர்பு வரலாற்றுக்கதைகளாகும்.

இந்த ரீதியில் நோக்குகையில் நாட்டுப்புறக்கதைகள், நாட்டுப்புற செய்யுள்கள், பாரம்பரிய வழிபாடுகள், நாட்டுப்புற நாடகங்கள், பாரம்பரிய சமயங்கள், விடுகதைகள் மற்றும் பழமொழிகள், உவமைக்கதைகள் முதலான பல அங்கங்கள் வரலாற்றுக் கதைகளில் உள்ளடங்கும். அவை அனைத்தும் மனித சமூகத்தினாலேயே உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கலாசார அங்கங்களாகும். ஏதேனுமோர் கலாசாரத்தின் தன்மையை கற்றல் என்பது அச் சமூகத்திற்குரிய வரலாற்றுக் கதைகளைக் கற்றலாகும். வேறு ஒரு முறையில் கூறுவதாயின் ஏதேனுமோர் சமூகத்தைக் கற்க வேண்டுமாயின் அதன் வரலாற்றுக் கதைகளைக் கற்றல் வேண்டும் என்பதைக் குறிப்பிடலாம். எந்த வெளியீட்டு வடிவம் என்று கூற முடியாத அளவிற்கு அவ்வெல்லாச் சமூகங்களுடன் மற்றும் அதன் உறுப்பினர்களின் அன்றாட வாழ்வுடன் பொருத்தியிருப்பதே வரலாற்றுக்கதைகளில் மிகப் பிரதானமானதாகும். மனித சமூகத்தின் ஒவ்வொரு நபர்களினாலும் தமது வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தெரிந்தோ தெரியாமலோ வரலாற்றுக் கதைகளுடன் இணைந்து செயற்படுவது புலனாகிறது. நபர்களின் இருப்பையும் குடும்பங்களின் இருப்பையும் சமூக இருப்பையும் செயற்றினாகக் கொண்டு செல்வதற்கு வரலாற்றுக் கதைககள் நிரந்தரமாகவே தொடர்புபட்டுள்ளன. ஒருவரின் பிறப்பிலிருந்து இறப்பு வரையும் இறப்பின் பின்னரும் வரலாற்றுக் கதைகள் சந்தர்ப்பங்களுக்கேற்பத் தொடர்புபடுகின்றன.

வரலாற்றுக் கதைகளில் காணப்படும் மிக விசேடமான அங்கம் என்னவெனில் அதற்கு குறிப்பிட்டதோர் படைப்பாளி இன்மையே ஆகும். ஏதேனுமோர் ஆக்கபூர்வமான மூலம் வாய்மொழியாக வளர்க்கப்பட்டு வாய்மொழி வழியில் நிலவி வருவது வரலாற்றுக் கதைகளின் அடையாளமாகும். அதன் பிரகாரம் ஒரே ஆக்கபூர்வமான மூலமொன்று ஒவ்வொரு நாடுகளில் மாத்திரமன்றி ஒரே நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் வேறுபட்ட முறையில் வளர்ச்சியடைய முடியும். அதனால் அந்தந்த நாடுகளில் வேறு வேறான அந்நிய அடையாளங்களுடன் வரலாற்றுக் கதைகளின் அங்கங்கள் வளர்ச்சியடையும். வரலாற்றுக் கதைகள் வளர்ச்சியடைவது மக்களுடன் தொடர்புபட்டது என்பதால் மக்களின் அன்றாட வாழ்வுடன் எப்பொழுதும் வரலாற்றுக் கதைகளின் பல்வேறு அங்கங்கள் தொடர்புபடுகின்றன.

வரலாற்றுக் கதைகளில் காணப்படுபவை உண்மையானவையோ அல்லது உண்மையின் வடிவமாகவோ அல்லது பொய்யானவையாகவோ இருக்கலாம். இருப்பினும் அவற்றை விலக்க மக்கள் விரும்புவதில்லை. இந்தத் தொடர்புகள் காரணமாக வரலாற்றுக் கதைகளின் பல அடையாளங்களை நவீன படைப்புக்களிலும் பயன்படுத்துவதைக் காணலாம். உதாரணமாக மக்களைத் தூண்டும் அபிலாஷையுடன் பயன்படுத்தப்படும் விளம்பரப்படுத்தலின்போது வரலாற்றுக் கதைகள் மிகச் சிறிய அளவில் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு வடிவிலான புதிய படைப்புக்கள் உலகில் தோன்றினாலும் அவ் எல்லா படைப்புக்களிலும் வரலாற்றுக்கதைகள் மறைந்து கிடப்பதைக் காணலாம். ஆக்கபூர்வமான தொடர்பாடலின் போது வரலாற்றுக் கதைகள் பிரபல அங்கமாவதே அதற்குக் காரணமாகும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. நாட்டுப்புறக் கதைகள்

- ஏதேனுமோர் புராணக்கதையிலிருந்து உருவாகி வாய்மொழியாக வளர்ந்து வந்த கதை அங்கமாகக் காட்ட முடியும்.
- ஆரம்பம் - இடை - இறுதி என்பன உரியவாறு பொருத்தமுடைய கதை உள்ளடக்கத்துடனானது.
- பல்வேறு நோக்கங்கள் மற்றும் மூலங்களுக்கேற்ப நாட்டுப்புறக் கதைகள் உருவாகியுள்ளமை.
- நாட்டுப்புறக் கதைகள் மூலம் சமூக கல்விப் பணியொன்று இடம்பெறுகின்றமை
- பல்வேறு வடிவங்களிலான நாட்டுப்புறக் கதைகள் காணப்படுகின்றமை

| |
|---|
| ஜாதகக் கதைகள் - பேய்க்கதைகள் - தேவ கதைகள் - தேவதைக் கதைகள் - விலங்குக் கதைகள் - அவதாரக் கதைகள் - விகட கதைகள் - உவமைக் கதைகள் - வீரக் கதைகள் முதலானவை ரீதியில் |

- மூத்தோரால் குழந்தைகளுக்கு நாட்டுப்புறக் கதைகளைச் சொல்லிக் கொடுப்பதன் மூலம் தலைமுறை தலைமுறையாக நாட்டுப் புறக் கதைக்கலைகளைக் கொண்டு செல்லல்
- நாட்டுப்புறக் கதைகள் மிகவும் மகிழ்ச்சிகரமானது ஆவதோடு, அவற்றை பேச்சு மற்றும் பாவனைகளுடன் பயன்படுத்த முடியும்
- நாட்டுப்புறக் கதைகளில் கிராம மக்களிடம் காணப்படும் பல்வேறு நம்பிக்கைகள், வழிபாடுகள், சிறந்த தருமங்கள், பழக்க வழக்கங்கள் முதலானவை உள்ளடங்குகின்றன
- நாட்டுப்புறக் கதைகளில் நகைச்சுவை, ஏளனம் மற்றும் உல்லாசம் அத்தோடு திகில், காதல் என்ற ரீதியில் பல்வேறு சுவைகள் காணப்படுகின்றமை
- மக்கரா - போதிலிமா - கருடன் - எந்கந்த லிஹினியா எனும் ஒருவகை பறவை - கழுகு முதலான கற்பனை விலங்குப் பாத்திரங்கள் நாட்டுப்புறக் கதைகளில் காணப்படுகின்றன
- இராமர் சீதை காதல் கதை - ஈசாப்பின் உவமைக் கதைகள் - அந்தரே - வேதாளம் - தெனாலிராமன் - பஞ்சதந்திரம் - கமரால - மஹதெனமுத்தா முதலான பல்வேறு கதைகள் நாட்டுப்புறக் கதைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன

**2. நாட்டுப்புறப் பாடல்கள்**

- நாட்டுப்புறப்பாடல்கள் என்பவை நாட்டுப்புறக் கவிதைகள் என்றும் அறியப்படுகின்றன
- மக்களின் அழகியல் சிந்தனை நாட்டுப்புறப் பாடல்களில் சிறப்பாக சித்தரிக்கப்படுகின்றது
- மக்களின் பல்வேறு பணிகள் மற்றும் சந்தர்ப்பங்களுடன் இணைந்து நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றியுள்ளன
- நாட்டுப்புறப் பாடல்களில் பாடும் முறைகளும் அவ்வப் பணிகள் மற்றும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புபட்டுள்ளன
- உலகில் நாட்டுப்புறப் பாடல்களின் சுரங்களின் முறைகள் வரையறுக்கப்பட்ட இடைவெளியில் காணப்படுகின்றன
- நாட்டுப்புறப் பாடல்களில் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் மனித செயற்பாடுகள் மற்றும் சூழற் தொடர்புகள் பிரகாசிக்கின்றன
- நாட்டுப்புறப்பாடல் இசைத்தல் முறைகள் பிற்காலத்தில் பல்வேறு ஊடகக் கலைப் படைப்புக்களுடன் கலந்துள்ளன
- நாட்டுப்புறப்பாடல் சந்தமானது அந்தந்த சமூகங்களினதும் மக்களின் இதயத் துடிப்பின் சந்தமாகியுள்ளது
- பல்வேறு வடிவிலான நாட்டுப்புறப்பாடல்கள் மற்றும் பாடல் முறைகள் காணப்படுகின்றன

| |
|---|
| அறுவடைப்பாட்டு - சுரங்கப்பாடல்கள் - உழவர்கள் தாம் விழிப்பாய் இருப்பதை உணர்த்தவும் விலங்குகளை விரட்டவும் பாடும் பாடல் - வண்டிப்பாட்டு - விளையாட்டுப் பாடல் - விகடப்பாடல்கள் - தடைப்பாடல்கள் - வண்ண நடனம் முதலானவை |

- சாந்திப்பாடல்களைப் போன்றே வசைப்பாடல்களும் நாட்டுப் புறப்பாடல்களுக்கே உரிய வேறு இரண்டு வடிவங்களாகும்
- யாத்திரைகளின் போதும், மரண வீடுகளிலும், திருமண வீடுகளிலும் நாட்டுப்புறப் பாடல்கள் பாடப்படுகின்றன
- எந்தவொரு கலாசாரமானாலும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் ஆக்க கலாசாரத்தின் சந்தம் பிரதிபலிக்கப்படுகின்றது

3. பாரம்பரிய சமயங்கள், வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள்

- மக்களால் பின்பற்றப்படும் சமயங்களைப் பாரம்பரிய சமயங்களாகவும் அவர்களின் பல்வேறு வழிபாடுகளைப் பாரம்பரிய வழிபாடுகளாகவும் அவற்றுடன் இணைந்த பல்வேறு நம்பிக்கைகளைப் பாரம்பரிய நம்பிக்கைகளாகவும் குறிப்பிடலாம்
- சமயங்களில் கற்பிக்கப்படும் விடயங்களுடன் மக்களின் பல்வேறு வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் ஒன்றிணைந்துள்ளன
- சில வேளைகளில் சமயங்களுக்கு அப்பால் மக்களின் வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் காணப்படுகின்றன
- சமயங்கள், வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் மூலம் மக்களின் எண்ணங்கள் மற்றும் நடத்தைகள் உட்பட முழு வாழ்க்கையும் ஒழுங்கமைக்கப்படுகின்றன
- தெய்வங்கள், நகரங்கள், பூதங்கள் என்பவற்றைப் போன்றே பேய்களும் மந்திரவாதிகளும் பாரம்பரிய வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகளில் உள்ளடங்குகின்றனர்
- பாரம்பரிய சமயங்கள், பாரம்பரிய வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு அப்பால் மேற்காட்டப்பட்டவற்றைக் காண முடியாது
- தம்மால் கட்டுப்படுத்த முடியாத பல்வேறு அழிவுகள் மற்றும் இடர்களுடன் இணைந்து பாரம்பரிய வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் மக்களால் மேற்கொள்ளப்படுகின்றது
- பாரம்பரிய வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் எப்போதும் யதார்த்தமானவை அல்லது விஞ்ஞான ரீதியானவை அல்ல என்பதோ சமூக விஞ்ஞான யதார்த்தத்துடனானது
- கிழக்கு நாடுகளில் வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் அதிகம்
- மேற்கு நாடுகளிலும் ஒப்பீட்டளவில் வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் குறைவு என்றாலும் பல்வேறுபட்ட வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் காணப்படுகின்றன
- பாரம்பரிய சமயங்கள் - வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் மக்கள் கண்ணோட்டத்திலேயே வரைவிலக்கணப்படுத்தப்படல் வேண்டும்
- கல்வி வளர்ச்சியினால் பாரம்பரிய வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் மாற்றமடைந்து வருகின்றன என்றாலும் மக்களால் அவை இன்னமும் மேற்கொள்ளப்படுகின்றது
- பாரம்பரிய சமயங்களினால் மக்கள் இசைவாக்கப்படுவதோடு பாரம்பரிய வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகளும் தமது வாழ்விற்கு அத்தியாவசியமானவை என்பது மக்களால் கருத்திற் கொள்ளப்படுகின்றது
- சில வேளைகளில் பாரம்பரிய சமயங்களை விட பாரம்பரிய வழிபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் மேலோங்கியிருக்கின்றன
- கண்திருஷ்டி மற்றும் நாவூறு என்பனவும் பாரம்பரிய நம்பிக்கைகளின் அடிப்படையில் காணப்படுகின்றது

4. பாரம்பரிய விளையாட்டுக்கள்

- மக்களின் பொருளாதார மற்றும் சமூக வாழ்வுடன் இணைந்து பாரம்பரிய விளையாட்டுக்கள் உருவாகியுள்ளன.
- பாரம்பரிய விளையாட்டுக்கள் மூலம் அந்தந்தச் சமூகங்களின் மக்களது பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கை பிரதிபலிக்கப்படுகின்றன.
- உல்லாசம் - ஓய்வு - மகிழ்ச்சி என்பவற்றிற்காக விளையாட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- பாரம்பரிய விளையாட்டுக்களுடனும் வழிபாடுகள் - நம்பிக்கைகள் நாட்டுப்புறப்பாடல்கள் - நாட்டுப்புற நடனங்கள் என்பன தொடர்புபடுகின்றது.
- விசேடமாக விவசாய சமூகங்களின் விவசாய நடவடிக்கைகளுடன் இணைந்து பாரம்பரிய விளையாட்டுக்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.
- செலவு குறைந்த கூட்டாக விளையாடக் கூடிய ஆண்களுக்காக சக்தியை அதிகம் பயன்படுத்தும் மற்றும் பெண்களுக்கு மிகவும் மென்மையான பாரம்பரிய விளையாட்டுக்கள் காணப்படுகின்றன.
- உள்ளக மற்றும் திறந்தவெளி பாரம்பரிய விளையாட்டுக்கள் காணப்படுகின்றன.

- பல்வேறு விசேட வைபவங்கள் மற்றும் விசேட கால எல்லைகளுடன் சில பாரம்பரிய விளையாட்டுக்கள் காணப்படுகின்றன
- பாரம்பரிய விளையாட்டுக்கள் இயற்கையோடு தொடர்புபடுவதோடு விஞ்ஞான ரீதியான அடிப்படையுடனும் கூடியது
- இறை பிரார்த்தனையுடன் பாரம்பரிய விளையாட்டு விழாக்கள் ஆரம்பமாகின்றன
- மக்களின் கூட்டு வாழ்க்கைக்குப் போன்றே உடல் மற்றும் உள ஆரோக்கியத்திற்கும் பாரம்பரிய விளையாட்டுக்கள் காரணமாகின்றன
- பல பாரம்பரிய விளையாட்டுக்களில் உல்லாசம் பிறந்தாலும் சமய அல்லது பின்பற்றல் சார் அர்த்தங்களும் உள்ளடங்குகின்றன

**5. பாரம்பரிய நாடகங்கள்**

- பாரம்பரிய நாடகங்களுக்கு பாரம்பரியமானதோர் நீண்ட வரலாறு உள்ளது
- ஏதேனுமோர் கதை செய்தி அல்லது சம்பவம் அல்லது சம்பவத்தொடர் மூலம் பாரம்பரிய நாடகங்கள் உருவாகின்றன
- பாரம்பரிய நாடகக் கலைகளில் பிரதேச மற்றும் கலாசார வேறுபாடுகள் உள்ளன
- பாரம்பரிய நாடகக் கலைகள் மூலம் தனியே உல்லாச நயத்தை மீறிய சமூக தொடர்பாடலொன்று இடம் பெறுகின்றது
- பல பாரம்பரிய நாடகக் கலைகள் பிற்காலத்தில் தரமான நாடகக் கலை மீது தாக்கம் செலுத்தியுள்ளது
- மக்களின் பல்வேறு படைப்புக்கள் நாடகங்களாக முன்வைத்தல் பாரம்பரிய நாடகங்களில் இடம்பெறுகின்றன
- அனேகமாக புராணக் கதைககள்/ பாரம்பரியக் கதைககள் முதலியவற்றை பாரம்பரிய நாடகங்களுக்கு கருப்பொருளாகக் கொள்கின்றன
- பாரம்பரிய நாடகங்கள் அந்தந்த கலாசாரங்களினால் பல்வேறு முறைகளில் வடிவமைக்கப்பட்டுள்ளன
- பாரம்பரிய நாடகங்கள் அந்தந்த கலாசாரங்களினால் ஓர் அங்கமாக கருதப்படுகின்றன.
- பாரம்பரிய நாடகங்கள் மூலமும் மக்கள் தமது கருத்துக்களை சமூகத்திற்கு வெளியிடுகின்றனர்.
- பாரம்பரிய நடனங்கள் மற்றும் நாடகங்கள் என்பவற்றுடன் நாட்டுப்புற பாடல்களும் பாரம்பரிய சங்கீதமும் இணைகின்றமை
- பாரம்பரிய நாடகங்கள் மற்றும் பாரம்பரிய நடனங்கள் அந்தந்த நாடுகளில் பல்வேறு முறைகளில் வடிவமைக்கப்பட்டுள்ளமையால் அவற்றுக்குப் பல்வேறு பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன
- விவசாய சமூகத்தைப் போன்றே தொழினுட்ப சமூகங்களிலும் பாரம்பரிய நாடகங்கள் முன் வைக்கப்படுகின்றன
- பாரம்பரிய நடனங்கள் மக்களுக்கு தமது வாழ்வை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கு தேவையான அழகியல் சிந்தனையைத் தருகிறது
- தமது சமூகத்திலுள்ள பல்றேு அணுகுமுறைகள் பல்வேறு சாயல்களில் முன்வைத்தலானது பாரம்பரிய நாடகங்களுடாக இடம்பெறுகின்றன (நடனம் - நாடகங்கள் - நாடகம் - நிருத்திய என்ற ரீதியில்)

**6. கிரியைகள்**

- புராதன யுகத்திலிருந்தே மனிதன் சம்பிரதாயபூர்வமாக பல்வேறு கிரியைகளில் ஈடுபடுகின்றான்
- சூழல் மற்றும் அதன் சக்திகளைப் புரிந்து கொள்ள முடியாமை, அவற்றிற்கு முகங்கொடுக்க முடியாமை முதலியவை காரணமாக கிரியைகள் தோன்றின
- மறைபொருளான மற்றும் கண்ணுக்குப் புலப்படாத நம்பிக்கைகளின் அடிப்படையில் கிரியைகள் காணப்படுகின்றன
- கிரியைகளை பல்வேறு விதமாக வகைப்படுத்த முடியும்

- நலனுக்காகப் பரிகாரங்கள், காணிக்கை மற்றும் சாந்திச்சடங்குகள் நடாத்தப்படுகின்றன.
- கெடுதலுக்காக சூனியம், செய்வினை, கொடுவினை நடாத்தப்படுகின்றன.
- தனிப்பட்ட தேவைகளுக்காக காணிக்கை, சாந்திச்சடங்குகள் முதலானவை நடாத்தப்படுகின்றன.
- பொதுத் தேவைகளுக்காக கொஹொம்பா கங்காரி, பேய் நடனம், முதல் அறுவடைத் திருவிழா முதலானவை நடாத்தப்படுகின்றன.
- கிரியைகள் தொடர்பான இலக்கியமொன்று காணப்படுகின்றது.
- கிரியைகளானது முன்னேற்றமடைந்த, முன்னேற்றமடையாத மற்றும் கற்ற, பாமர மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. **பழமொழிகள் மற்றும் உவமைகள்**

- பழமொழிகள் மற்றும் உவமைகள் மக்களால் பயன்படுத்தப்படும் சிறப்பான தொடர்பாடல் வடிவமாகும்.
- அனேகமான பழமொழிகள் மற்றும் உவமைகள் நாடோடிக்கதைகளுடன் தொடர்புடையன.
- சமயம், வரலாறு, அரச செய்திகள், விலங்குகள் மற்றும் சூழலை அடிப்படையாகக் கொண்டு பழமொழிகள் மற்றும் உவமைகள் உருவாகியுள்ளன.
- அனேகமாக பழமொழிகளுடனும் உவமைகளுடனும் தொடர்புடைய நாடோடிக் கதையொன்றும் இருக்க முடியும்.
- ஏதேனுமோர் ஆலோசனையை, கருத்தை அல்லது எண்ணத்தை மிகச் சுருக்கமாகவும் ஆணித்தரமாகவும் வெளிப்படுத்தும் ஆற்றல் பழமொழிகளுக்கும் உவமைகளுக்கும் உண்டு.
- மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் தொடர்பாடலின் போது பழமொழிகளையும் உவமைகளையும் பயன்படுத்துகின்றனர்.
- ஆக்கபூர்வமாக எண்ணங்களை வெளிப்படுத்துகையில் பழமொழிகளையும் உவமைகளையும் மிக வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும்.
- பழமொழிகளும் உவமைகளும் சமூகத்தின் பல்வேறு இயல் நிகழ்ச்சிகளுக்கேற்ப புதிதாக உருவாகி அவை சமூகத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

8. **புதிர்கள்**

- சிறு குழந்தைகளினது மாத்திரமன்றி பெரியோரதும் அறிவாற்றல் மற்றும் அறிவை வெளிப்படுத்துவதற்காக புதிர்களைப் பயன்படுத்துவது மனித நடத்தையில் காணப்படும் ஓர் வழக்கம்
- புதிர்கவிதைகள், சொல் மாற்றி வைப்பு, பெரும் புதிர் முதலான பல்வேறு வடிவங்களில் புதிர்கள் காணப்படுகின்றன.
- மக்கள் மூலம் வேறு ஒரு வடிவிலான புதிர்கள் உருவாக்கப்படுகின்றன.
- மூத்தோரால் முன்வைக்கப்படும் புதிர்களை விடுவிக்கச் சிறு குழந்தைகள் அதிகம் விரும்புவர்.
- திருமண வைபவம் போன்ற சந்தர்ப்பங்களில் அதன் ஓர் அங்கமாக புதிர்களை முன்வைத்தல் இடம்பெறுகின்றன.
- புதிர்களை முன்வைத்தலைப் போன்றே தெரிவு செய்தலும் மகிழ்ச்சியானதோர் பணியாகும்.
- புதிர்களை முன்வைத்தலை மிகவும் மனங்கவர்ந்த நடிப்பாக முன்வைக்க முடியும்
- வரலாற்றுக்கதையின் ஓர் அங்கமாக புதிர்களுக்கு விசேடமானதோர் இடம் உரித்தாகின்றது.

9. பாரம்பரிய வைத்தியம்

- உள்நாட்டு வைத்தியமாக அறியப்படுவது பாரம்பரிய வைத்தியமாகும்
- எந்த ஒரு நாடானாலும் அங்கு குறைந்த அளவிலோ அதிகளவிலோ பாரம்பரிய வைத்தியம் காணப்படுகின்றது
- பாரம்பரிய வைத்தியமானது மக்களின் சமூக மற்றும் சூழல்சார் வாழ்வின் ஓர் அங்கமாகும்
- பாரம்பரிய வைத்தியத்திற்கு பல்வேறு பழக்கவழக்கங்கள், பின்பற்றல்கள், சமய நடத்தைகள் மற்றும் வைத்திய முறைகள் அடிப்படையாக அமைந்துள்ளன
- சுப சாத்திரங்கள், சோதிடம் முதலானவை பாரம்பரிய வைத்தியத்துடன் தொடர்புபட்டுள்ளன
- தெய்வ நம்பிக்கைகள் மற்றும் பல்வேறு மூட நம்பிக்கைகளும் பாரம்பரிய வைத்தியத்துடன் தொடர்புபடுகின்றன
- சூழலைப் புரிந்து கொள்ள முடியாத கால கட்டத்தில் மக்களால் பொருள் கற்பிக்கப்பட்ட பல்வேறு நம்ப முடியாத சக்திகளுடன் பாரம்பரிய வைத்தியம் தொடர்புபடுகின்றது
- பாரம்பரிய வைத்தியம் என்பது ஏதேனுமோர் மருந்தை அல்லது சிகிச்சையை வழங்குதல் என்பதால் சிகிச்சை வழங்குதலின் கலாசாரமாக காணப்படுகின்றது
- கோள்களின் தாக்கமும் பாரம்பரிய வைத்தியத்துடன் இணைந்து செயல்படுகின்றன
- அனேகமான மக்கள் பாரம்பரிய வைத்தியத்திலுள்ள கலாசார அங்கங்களை அறிவார்

| | | |
|---|---|---|
| **அலகு 11.0** | :- | ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் (பாடவேளைகள் 40) |
| **தேர்ச்சி** | :- | ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, கோட்பாடுகள் மற்றும் பாவனை வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுக் கதைகள் மற்றும் வெளியீட்டு முறைகள் குறித்து விமர்சிக்கிறது. |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 11.4 ஆக்கபூர்வமான தொடர்பாடலின் பல்வேறு ஆக்கபூர்வமான வெளியீட்டு முறைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம்** :- ஆக்கபூர்வமான வெளியீட்டு முறைகள்

1. ஆக்கபூர்வமான ஆளுமை
2. பெறுநர் கேந்திர ஆக்கபூர்வமான செய்திப்படுத்தல்
3. ஆக்கபூர்வமான முன்வைத்தலின் முறைகள்
4. முன்பயிற்சி மற்றும் முன் மதிப்பீடு
5. முன்வைத்தல்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- ஆக்கபூர்வமான ஆளுமையின் அந்நியமற்ற இயல்புகள் மற்றும் அதைக் கட்டியெழுப்பும் முறை என்பவற்றை விமர்சித்தல்
- பெறுநர் கேந்திரமாக ஆக்கபூர்வமான செய்திப்படுத்தலின் அனுபவங்களை வெளியிடுதல்
- செய்திகளை ஆக்கபூர்வமாக முன்வைத்தலின் முறைகளைப் பரீட்சித்துப் பார்த்தல்
- பொருத்தமான முன்பயிற்சி மற்றும் முன் மதிப்பீடு தொடர்பாக அனுபவத்தைப் பெறுவதோடு ஆக்கபூர்வமான செய்தியொன்றை முன்வைத்தல்

## அறிமுகம்

ஆக்கத்தின் போது பாவனை மற்றும் முன்னைய ஆக்கங்களைக் கற்றலும் படைப்பாளிக்கு சுய அடையாளமொன்றும் இருத்தல் வேண்டும். அது படைப்பாளியிடமுள்ள ஆற்றல் மற்றும் கற்பனையின் அடிப்படையில் எழுதுவதாகும். ஆக்கத்தினுள் தமது அடையாளத்தை உள்ளடக்குவது குறித்தே அனைத்துப் படைப்பாளிகளும் சிந்தித்தல் வேண்டும். உலகப் புகழ்பெற்ற பல படைப்பாளிகள் பல்வேறு ஆக்க மாதிரிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இலங்கையிலும் அவ்வாறே இடம்பெற்றுள்ளது. ஆக்கங்களைப் பயன்படுத்துவோரான மக்கள் சமூகத்தின் உறுப்பினர்களுக்கு இப் பல்வேறான ஆக்கங்களைப் பார்த்தவுடன் அல்லது வாசித்தவுடன் அல்லது கேட்டவுடன் அது யாருடைய ஆக்கம் என்பதைக் கூற முடியுமாயின் அவ் ஆக்கத்தில் படைப்பாளி வாழ்கின்றார் என்றே அர்த்தமாகும். அவ் ஆக்கத்தில் ஆக்கபூர்வமான ஆளுமை காணப்படுகின்றது. தொடர்ச்சியான பயிற்சியின் ஊடாக ஆக்கபூர்வமான ஆளுமையைக் கட்டியெழுப்ப முடியும். அதன் மூலம் ஆக்கத்தை தன்னுடையதாக்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டும். வேறு ஒரு ஆக்கத்தைப் பயன்படுத்தும் பொழுதும் அதில் சுய ஆக்கபூர்வமான அடையாளமொன்றைக் கட்டியெழுப்ப முடியுமாயின் அது படைப்பாளியின் திறனாகும்.

ஆக்கமொன்றைச் செய்தியாகக் கருதினால் பெறுநரை மையமாகக் கொண்ட செய்தியை உருவாக்குதல் குறித்தே கவனஞ் செலுத்தல் வேண்டும். அவ்வாறு அல்லாதவிடத்து அவ் ஆக்கத்தை பெறுநரால் தொடர்பாடலின் போது பெறுநர் குறித்து எப்போதும் கவனஞ்

செலுத்த நேரிடும். குறிப்பிட்ட சில பெறுநர்களின் குணாம்சங்களுக்கு பொருத்தமான முறையில் செய்தி ஆக்கப்படாவிட்டால் அதன் மூலம் எதிர்பார்த்த பெறுபேறைப் பெற முடியாது போகும். பெறுநரின் புலனுணர்வு ஆற்றல் வேறுபட்ட மட்டங்களால் காணப்படுவதோடு, அவர்களது பல்வேறு உளவியல் நடத்தைகளும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதன் காரணமாக பெறுநரை மையமாகக் கொண்ட செய்திகளை ஆக்குதல் மிகப் பாரதூரமான பணியாகும்.

ஆக்கம் மற்றும் முன்வைப்பு என்பன இரு வேறுபட்ட பணிகளாகும். செய்தியை எவ்வாறு முன்வைத்தல் வேண்டும் என்ற முன் தீர்மானத்துடனேயே செய்திகளை உருவாக்குதல் வேண்டும்.ஆக்கத்தின் வடிவம் அதற்கேற்பவே முடிவு செய்யப்படும். ஆக்கத்தை முன் வைப்பதாயின், அதனை பெறுநருக்கு முன் வைக்கும் முறை குறித்து தந்திரரோபாய முறையில் திட்டமிடல் வேண்டும். பெறுநர் செய்தியை ஏற்றுக்கொள்ளத் தயாராதலும் அதை ஏற்றுக் கொள்ளலும், அதற்கு எதிர்பார்த்த பிரதிபலிப்பைக் காட்டலும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். முன் வைத்தலின் முறைகளை முடிவு செய்ததன் பின்னர் அதைப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். முன் பயிற்சி ஒன்றை மேற்கொண்டு அதன் பெறுபேறுகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தல் வேண்டும் என்பது அதனூடாக பொருள்படுகிறது. உண்மையான முன்வைத்தலை அதன் பின்னரே செய்தல் வேண்டும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

1. **ஆக்கபூர்வமான ஆளுமை**
    - படைப்பாளியின் அடையாளத்தை ஆக்கத்தில் பிரதிபலிக்கும் ஆற்றல் ஊடாக ஆக்கபூர்வமான ஆளுமை பிரதிபலிக்கப்படுகின்றது.
    - ஆக்கத்தின்போது பாவனை மற்றும் வேறு ஆக்கங்கள் பயன்படுத்தப்பட்டாலும் அதிலிருந்து பெறப்படும் ஆக்கபூர்வமான பண்புகளை தமது ஆக்கபூர்வமான திறனுடன் இணைத்துக் கொண்டு தனக்கேயுரிய ஆக்கபூர்வமான அடையாளத்தைக் கட்டியெழுப்ப முடியும்.
    - ஏதேனுமோர் ஆக்கத்தில் படைப்பாளியின் ஆக்கபூர்வமான ஆளுமை காணப்பட்டால் அது பெறுநர்கள் மூலம் இலகுவாக கண்டறியப்படுகின்றது.
    - ஆக்கத்தில் படைப்பாளியின் ஆளுமை பிரதிபலிக்கப்பட்டால் எந்தவொரு ஆக்கத்திற்கும் மதிப்புக் கிட்டும்.
    - ஆவணம், சித்திரம், நாடகம் அல்லது வேறு ஏதேனும் முறையிலான ஆக்கபூர்வமான வடிவத்திலும் படைப்பாளியின் ஆளுமையைக் காண முடியும்.
    - படைப்பாளியின் ஆளுமை உள்ளடங்கிய ஆக்கங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் உதாரணங் காட்ட முடியும்.

2. **பெறுநரை மையமாகக் கொண்ட ஆக்கபூர்வமான செய்திப்படுத்தல்**
    - தொடர்பாடல் பணியானது வெற்றிகரமான பலனைத் தருவது அது பெறுநரை மையமாகக் கொண்டிருப்பதன் மூலமேயாகும்.
    - செய்தியை ஆக்க வேண்டியது உரிய இலக்கு பெறுநர் குழு தொடர்பான சரியான கற்றலின் பின்னர் அப்பெறுநர்களுக்கு பொருத்தமான முறையிலாகும்
    - பெறுநரின் புலனுணர்வு ஆற்றல், அவர்களின் அடிப்படைக் கல்வியறிவு, மக்கள் இருக்கும் கலாசாரத்தின் தாக்கம், அவர்களது வாழ்க்கை முறை மற்றும் வாழ்க்கைத் தேவைகள் அவர்களது சமூக மற்றம் பிரத்தியேக வாழ்க்கை என்ற ரீதியில் பல இயல்புகளைப் பெறுநர் தொடர்பில் கற்றல் வேண்டும்
    - ஆக்கபூர்வமான செய்திப் பெறுநரை மையப்படுத்தியதாக அமையாவிடின் அதன் காரணமாக எதிர்பார்க்கப்படும் இலக்கு நிறைவேறாது
    - பெறுநர் ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பெறுநரின் வடிவம் மற்றும் தேவைகளை இனங்காண முடியும்
    - படைப்பாளிக்கு தமது ஆக்கத்திற்கு உரிய கலை நுணுக்கங்களைப் போன்றே பெறுநர் குறித்தும் சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்

3. **ஆக்கபூர்வமான முன்வைத்தலின் முறைகள்**
   - ஆக்கபூர்வமான முன்வைத்தலுக்கான முறைகளை எதிர்பார்க்கும் பெறுபேறுகளுக் கேற்பவே முடிவு செய்தல் வேண்டும்.
   - செய்தியின் ஆக்கபூர்வமான வடிவத்திற்கேற்பப் பயன்படுத்தும் முறைகளை முடிவு செய்யலாம்.
   - முறைகளை முடிவு செய்கையில் பல்வேறு காரணிகள் மீது அவதானஞ் செலுத்தல் வேண்டும்.

| |
|---|
| • பெறுநருக்கு இலகுவாகப் புலனுணர்வு செய்ய முடியும்.<br>• பொருளை அனைவராலும் சமமான முறையில் உள்வாங்க முடியும்.<br>• உளவியல் ரீதியில் மலர்ச்சியொன்றை ஏற்படுத்த முடியும்.<br>• பெறுநர்களுக்குப் பரிச்சயமான மாதிரியொன்றைப் பயன்படுத்த வேண்டும்.<br>• உயர் நம்பகத்தன்மை உருவாதல் வேண்டும்.<br>• இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய மற்றும் பெறுநர்களுக்கு நெருக்கமான கருவிகளைப் பயன்படுத்தல் வேண்டும்.<br>• பெறுநர்களின் கல்வியறிவிற்குப் பொருத்தமாதல் வேண்டும். |

4. **முன் பயிற்சி மற்றும் முன் மதிப்பீடு**
   - செய்தியை உருவாக்குதல் மற்றும் முன் வைத்தல் என்பன இரு வேறு பணிகள் என்பதால் அதற்காக முன் பயிற்சியொன்று அவசியம்
   - முன் பயிற்சி ஊடாக பொருத்தமான முறைகள் தொடர்பான இறுதி முடிவிற்கு வர முடியும்
   - முன் பயிற்சியோடு இணைந்து முறைகள் மற்றும் செய்தியை முன் மதிப்பீட்டிற்கு உள்ளாக்க முடியும்
   - முன் மதிப்பீட்டின் பெறுபேறாக முறைகள் மற்றும் செய்தி என்பவற்றை ஏதேனுமோர் வழியில் திருத்தஞ் செய்ய முடியும்
   - முன் பயிற்சி மற்றும் முன் மதிப்பீடு மூலம் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு ஆக்கபூர்வமான மற்றும் செய்தியை முன்வைப்போரின் குழு நெகிழ்ச்சியுடையோராதல் வேண்டும்.

5. **முன்வைத்தல்**
   - செய்தியை முன்வைப்பது ஆக்கபூர்வமான குழுவாவதற்கு அல்லது ஆகாதிருப்பதற்கு முடியும்
   - முன்வைப்போர் ஆக்கபூர்வமான குழுவிற்கு வெளியே உள்ளோர் எனில், ஆக்கபூர்வமான உத்திகள் குறித்து சிறந்த அறிவைப் பெறல் வேண்டும்
   - ஆக்கபூர்வமான செய்தி உருவாக்ககப்பட்டது அச் செய்தியின் பணிக்கு உரியோர் அல்லர் எனில், செய்தியின் எதிர்பார்க்கப்படும் பணி குறித்துச் சிறந்த அறிவைப் பெறுவதற்கு முன்வைப்போர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
   - முன்வைத்தலும் ஆக்கபூர்வமான பணியாகும்
   - செய்தியின் வடிவம், அதற்குரிய ஊடகம், பெறுநரின் தன்மை, செய்தியின் நோக்கங்கள் முதலானவை குறித்து சிறந்த தேர்ச்சியுடன் செய்தியை முன்வைத்தல் வேண்டும்
   - முன்வைத்தலின் கால எல்லையைச் சிறந்த முறையில் திட்டமிடல் வேண்டும்
   - முன்வைத்தலின் முறைகள் முன்வைப்போர் மிகுந்த நம்பிக்கையோடு செயற்படல் வேண்டும்
   - முன்வைத்தலின்போது எழக்கூடிய எதிர்பாராத சந்தரப்பங்களுக்கு நெகிழ்வுடைய ஏற்பாட்டுடன் முன்வைப்பவர்/ வைப்போர் இருத்தல் வேண்டும்
   - செய்தியானது எவ்வளவு சிறப்பாக ஆக்கப்பட்டாலும் அதை பெறுநரிடம் சேர்த்தலும் எதிர்பார்க்கும் பிரதிபலிப்புக்களைப் பெறலும் செய்தியை முன்வைப்பதன் அடிப்படையிலேயே மேற்கொள்ள முடியும் என்பதால் அதற்காக மிகத் திறமையான முன்வைப்போன் ஈடுபடுத்துதல் குறித்துக் கவனஞ் செலுத்துதல் வேண்டும்

| | | |
|---|---|---|
| **அலகு 12.0** | :- | ஊடக விமர்சனம் (பாடவேளைகள் 40) |
| **தேர்ச்சி** | :- | ஊடக விமர்சனத்தின் தன்மை, உள்ளடக்கம் மற்றும் பிரவேசம் என்பவற்றைச் சமநிலையில் பகுத்தாய்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 12.1 ஊடக விமர்சனத்தின் தன்மை, அதன் அடிப்படை உறுப்புக்கள், சமூக தேவைகள் ஆகியவையை ஊடக விமர்சகர் ஆராய்வார். |

**பாடவேளைகள்** :- 10

**விடய உள்ளடக்கம் :-** ஊடக விமர்சனத்தை இனங்காணல்

1. ஊடக விமர்சனத்தின் தன்மை
2. ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவை
3. ஊடக விமர்சனத்தின் அடிப்படை உறுப்புக்கள்
4. ஊடக விமர்சகர்

**உத்தேச கற்றற் பேறுகள் :-**

- ஊடக விமர்சனத்தின் தன்மையை விமர்சித்தல்
- ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவையை விளக்குதல்
- ஊடக விமர்சனத்தின் அடிப்படை உறுப்புக்களை விமர்சிப்பதோடு விளக்குதல்
- ஊடக விமர்சகரின் பாத்திரத்தைப் பகுத்தாய்தல்

## அறிமுகம்

ஏதேனுமொன்றை தேடலுடன் விசாரித்தல் என்று விமர்சனத்தை எளிமையாகக் காட்டலாம். மனித சமூகம் உருவான ஆரம்ப காலப்பகுதியிலிருந்தே தமது சூழற் தொடர்புகள், மனித தொடர்புகள் மற்றும் உளவியல் செயற்பாடுகளைப் பல்வேறு வழிகளில் ஆராய்வதற்கு மனிதன் பழகியுள்ளான் என்பது தெரிகிறது. இங்கு விசேடமாவது சமூக படைப்பாளிகளால் படைக்கப்பட்ட பல்வேறு ஆக்கங்களை ஆராய்வதற்கு மக்கள் பழக்கப்படுதலேயாகும். மக்களிடையே இருந்த அற்புதமான சிந்தனைகளைக் கொண்டோர் இவ் ஆக்கங்களை சாதாரண மக்களை விட வேறுபட்ட விதத்தில் ஆராயப் பழக்கப்பட்டனர். நாடகம், இலக்கியம், சித்திரம் முதலான பல்வேறு ஆக்கங்கள் இந்த ரீதியில் ஆராய்வதற்கு உள்ளாகின. அது மாத்திரமன்றி அந்தந்த ஆக்கங்களின் வடிவத்திற்கு ஏற்ப பல்வேறு விமர்சன கோட்பாடுகளும் தோன்றியமையை வரலாற்றை நோக்குகையில் காணலாம். அதன் பிரகாரம் நாடக விமர்சனம், கவிதை விமர்சனம், இலக்கிய விமர்சனம் என்ற ரீதியில் பல்வேறு வடிவிலான விமர்சன முறைகள் உருவாகின.

இந்த ரீதியில் பல்வேறு ஊடக மாதிரிகளைப் பயன்டுத்தி ஆக்கங்களை ஆய்விற்கு உட்படுத்தலே ஊடக விமர்சனமாகும். விசேடமாக திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி முதலான ஊடக ஆக்கங்கள் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்திய வேளையில் சமூகமானது அவற்றை விமர்சிப்பதற்கு பல்வேறு கோட்பாடுகளைக் கட்டியெழுப்பியது. இவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட விமர்சன பிரவேசங்கள் மற்றும் கேட்பாடுகள் மூலம் அவ் ஊடக ஆக்கங்களின் தன்மை ஆய்விற்கு உட்படுத்தப்பட்டதோடு, அவ் ஊடக ஆக்கங்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பும் ஆராயப்பட்டன.

ஊடக விமர்சனத்தின் போது ஊடக மொழி, அதன் உள்ளடக்கம் அதன் சமூகக் கருத்து, சைகைப் பொருள் மற்றும் அவற்றின் மூலம் முன் வைக்கப்படும் உளவியல் பகுப்பாய்வு

முதலான பல்வேறு கண்ணோட்டங்களில் பார்க்க நேரிடும். சமூகத்தை வரைவிலக்கணப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு சமூகவிஞ்ஞான ரீதியான கோட்பாடுகளும் அரசியற் கோட்பாடுகளும் உளவியல் கோட்பாடுகளும் தொடர்பாடலுக்கு பயன்படுத்தப்படும் சைகைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களும் மொழி ரீதியான கண்ணோட்டங்களும் அழகியலும் பல்வேறு விமர்சகர்களால் ஊடாக விமர்சனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை புலனாகிறது. இவற்றுள் மிகப் பொருத்தமானது எந்தப் பிரவேசம் எந்தக்கோட்பாடு என்று பிரித்தறிவது கடினம் கலைகலைக்காகவே எனும் அழகியல் விளக்கம், கலை சமூகத்திற்காவே எனும் மாக்ஸ்சியவாத விமர்சனம் ஆகிய இரண்டின் மூலமும் ஒரே கலைப் படைப்பானது இரு முறைகளில் விளக்கத்திற்கு உட்படுத்தலே அதற்கு காரணமாகும். அவற்றோடு பின் நவீன வாதம் முதலான புதிய விமர்சனப் பிரவேசங்களும் சமூக மயப்படுத்தப்பட்டுள்ளன. ஒரே ஊடக ஆக்கத்தை இவ் ஒவ்வொரு பிரவேசங்கள் மூலம் விளக்குகையில் அதற்கான பெறுமதி மாற்றமடைவதே இதன் சிறப்பாகும். உதாரணமாக அழகியல்வாத ரீதியல் உயர் பெறுமதியுடையதாகக் கருதப்படும் ஓர் ஊடக ஆக்கமானது மாக்ஸ்சியவாத கண்ணோட்டத்தில் எவ்வித முக்கியத்துவமும் அற்ற ஓர் ஆக்கமாகக் கருதப்படலாம்.

ஊடகப் படைப்பாளிகளும் விமர்சகர்களே பெறுநரும் விமர்சகரே இருப்பினும் ஊடக கலாசாரத்தில் ஊடக விமர்சகர் என இனங்காணக்கூடிய உத்தியோகத்தரும் இருக்கின்றனர் என்பது புலனாகிறது. அதாவது ஊடகத்தை விளக்கும் பல்வேறு முறைகள், கலைகள், கோட்பாடுகள் மற்றும் பிரவேசங்கள் என்பவற்றை சமநிலையில் பயின்று, விமர்சனத்தில் தனக்கென ஓர் அடையாளத்தைத் தானே உருவாக்கிக் கொண்டவரே ஊடக விமர்சகராவார். ஒரு விமர்சகரது கருத்து இன்னுமொரு விமர்சகரது கருத்துடன் முரண்படக்கூடும் என்பதை நாம் இங்கு மறத்தலாகாது. அவ்வாறு நிகழ்வது ஊடக ஆக்கங்களின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமாகும். பல்வேறு கண்ணோட்டங்களில் ஊடக விமர்சனத்தை மேற்கொள்கையில் அதற்கேற்ப தமது உள்வாங்கல் நடத்தையை திட்டமிட பெறுநருக்கு முடிவதோடு, தமது ஆக்கங்களின் அளவுகோலை கணக்கிட்டு மீளவும் அவதானஞ் செலுத்தும் வாய்ப்பு படைப்பாளிகளுக்குக் கிட்டும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

### 1. ஊடக விமர்சனத்தின் தன்மை

- புராதன நாடக விமர்சனம், இலக்கிய விமர்சனம், கவிதை விமர்சனம் முதலான பல்வேறு விமர்சன முறைகளை அடிப்படையாகக் கொண்டு ஊடக விமர்சனம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது
- பிற்காலத்தில் ஊடக விமர்சனத்திற்கான அந்நியமற்ற இயல்புகளுடனான விமர்சன முறைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன
- ஊடக விமர்சனத்திற்கு புதிய அளவுகோலைப் பயன்படுத்த நேரிட்டுள்ளது
- ஊடக விமர்சகரிடமிருந்து எழும் ஊடக விமர்சனம் சுய அடையாளத்துடன் கூடியது
- ஊடகத்தின் விசேடமான இயல்புகளின் அடிப்படையிலான ஊடக மொழியை வரைவிலக்கணப்படுத்துவதோடு அவ் ஊடக ஆக்கங்கள் சமூகத்துடன் உருவாக்கிக் கொண்ட கொடுக்கல் வாங்கலை ஊடக விமர்சனம் மூலம் வெளிப்படுத்துகின்றது
- ஏதேனுமொரு ஊடக ஆக்கம் அவ் ஊடக விமர்சகரின் சுய அடையாளத்தின் அடிப்படையிலேயே விளக்கப்படல் வேண்டும்
- ஊடக ஆக்கம் தொடர்பாக பகுத்தாய்வு மற்றும் கருத்துக் கூட்டாக்கமும் ஊடக விமர்சனம் ஊடாக நிகழ்கின்றது
- ஊடக விமர்சனம் என்பது படைப்பாளியின் ஆக்கபூர்வமான கண்ணோட்டம் மற்றும் ஆக்கப்பணி ஆக்கத்திற்கு தொடர்புபடாத வெளிப் பிரிவினர் மூலம் பொருள் வழங்கப்படுதலாகும்
- ஊடக விமர்சனம் என்பது அவ் ஊடகத்தின் விசேட அம்சங்களின் அடிப்படையில் அவ் ஊடக ஆக்கத்தின் வடிவத்தை மீளவும் தீர்ப்பொன்றிற்கு உட்படுத்தலாகும்

**2. ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவை**

- ஊடகத்தை உள்வாங்கும் சாதாரண மக்களுக்கு அதை ஊடுருவிப் பார்ப்பதற்கான ஆற்றல் குறைவு என்பதால் அதற்காக விமர்சனத்தின் துணை தேவையாகும்.
- புலனுணர்வை உயர் மட்டத்தில் வைப்பதற்காக ஊடக விமர்சகரின் விளக்கம் பெறுநருக்குத் தேவையாகும்.
- ஊடக விமர்சனம் மூலம் ஊடகத்தை விளக்குவதால் படைப்பாளிகளுக்கு தமது ஆக்கங்களை விரிவாக விமர்சிக்கும் ஆற்றல் கிடைக்கின்றது
- ஊடக விமர்சனம் மூலம் பெறுநரின் உள்வாங்கும் திறன் உயர்வடைவதால் அதன் மூலம் பெறுநர் மற்றும் ஊடகத்திற்கு இடையிலான கொடுக்கல் வாங்கல் உயர் மட்டத்தை அடைகிறது
- புதிய ஆக்கங்களை உருவாக்குவதற்கு தமது சிந்தனையை வழிநடாத்துவதற்கு ஊடக விமர்சனம் மூலம் படைப்பாளிகளுக்கு வழிகாட்டலொன்று கிடைக்கின்றது
- சமூக வேகத்திற்கு இணையாக ஊடக ஆக்கங்களை அமைப்பதற்குத் தேவையான வழிகாட்டல் ஊடக விமர்சனம் மூலம் கிடைக்கின்றது

**3. ஊடக விமர்சனத்தின் அடிப்படை உறுப்புக்கள்**

- ஊடகவியலாளர்களினால் ஊடக ஆக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும்
- ஊடக ஆக்கங்கள் ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படல் வேண்டும்
- ஊடக ஆக்கப் பெறுநர்கள் இருத்தல் வேண்டும்
- ஊடக ஆக்க விமர்சனம் மூலம் ஊடக ஆக்கங்கள் மற்றும் பெறுநருக்கு இடையிலான உறவை விளக்குகிறது
- அதன் பிரகாரம் ஊடக விமர்சனத்தின் அடிப்படை உறுப்புக்களாக ஊடகவியலாளர்கள் - ஊடக ஆக்கம் - ஊடகம் - பெறுநர் மற்றும் ஊடக விமர்சகர் என்பவற்றை காட்டலாம்
- ஊடகவியலாளர்களாக பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்கள் முதலான வெகுசன ஊடகங்களின் ஒன்றியிருப்போரை மாத்திரம் இக்கற்கைக்காக இணைத்துக் கொள்ளல்



## 4. ஊடக விமர்சகர்

- ஊடகவியலாளர் மற்றும் பெறுநர் என்ற வகையில் ஊடக விமர்சகரது தன்மை விசேடமானது
- ஊடக விமர்சகர் ஊடகத் தொழில் குறித்து சிறந்த அறிவுடையவராதல் வேண்டும்
- ஊடகவியலாளர் அறிவுசார் பெறுநர் என்ற வகையில் சாதாரண பெறுநர்களை விட வேறுபட்ட விதத்தில் ஊடகவிமர்சனம் செய்யக்கூடிய திறமையை கொண்டிருத்தல் வேண்டும்
- அசாதாரணமான முறையில் உலகை ஊடுருவிக் காணும் சிந்தனையுடையவராதல் வேண்டும்
- ஊடக விமர்சகர் பல்வேறு ஊடக விமர்சன கோட்பாடுகள் மற்றும் கண்ணோட்டங்கள் குறித்து தேர்ச்சியுடன் தனக்கேயான அடையாளத்துடன் ஊடக விமர்சனக் கலையை கட்டியெழுப்பியவராதல் வேண்டும்
- எதிர்பார்ப்பவராக இருத்தல் வேண்டும்
- ஊடக விமர்சகர் ஊடகவியலாளர்களுக்கு - ஊடகத்திற்கு - ஊடக ஆக்கங்களுக்கு தாக்குதல் நடத்துபவராக அன்றி, நற்சிந்தனையுடன் வழிகாட்டியாக இருத்தல் வேண்டும்
- ஊடக விமர்சகர் ஊடகத் தொழிலைக் கொண்டு செல்வதற்கு துணைபுரிபவராதல் வேண்டும்

| | | |
|---|---|---|
| **அலகு 12.0** | :- | ஊடக விமர்சனம் (பாடவேளைகள் 40) |
| **தேர்ச்சி** | :- | ஊடக விமர்சனத்தின் தன்மை, உள்ளடக்கம் மற்றும் பிரவேசம் என்பவற்றைச் சமநிலையில் பகுத்தாய்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 12.2 ஊடக விமர்சனத்தின் போது வெகுசன ஊடக உள்ளடக்கம் தொடர்பான காரணிகளை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்தல். |

**பாடவேளைகள்** :- 15

**விடய உள்ளடக்கம்** :- ஊடக விமர்சனத்தின் உள்ளடக்கம்

1. வெகுசன ஊடகத்தின் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்
2. அச்சு ஊடக விதி
3. வானொலி ஊடக விதி
4. தொலைக்காட்சி ஊடக விதி
5. சலன ஊடக விதி
6. கலைசார், நுணுக்க மற்றும் உள்ளடக்க விளக்கம்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- வெகுசன ஊடகத்தின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஒப்பீட்டு ரீதியில் காட்டுதல்
- அச்சு ஊடக விமர்சனத்தோடு அச்சு ஊடக விதி தொடர்புபடும் முறையைப் பரீட்சித்துப் பார்த்தல்
- வானொலி ஊடக விமர்சனத்தோடு வானொலி ஊடக விதி தொடர்புபடும் முறையைப் பரீட்சித்துப் பார்த்தல்
- தொலைக்காட்சி ஊடக விமர்சனத்தோடு தொலைக்காட்சி ஊடக விதி தொடர்புபடும் முறையைப் பரீட்சித்துப் பார்த்தல்
- சலன ஊடக விமர்சனத்தோடு சலன ஊடக விதி தொடர்புபடும் முறையைப் பரீட்சித்துப் பார்த்தல்
- ஊடக விமர்சனத்தின்போது கலைசார், நுணுக்க மற்றும் உள்ளடக்கம் விளக்கப்படும் முறையை விமர்ச்சிப்பதோடு பரீட்சித்துப்பார்த்தல்

## அறிமுகம்

ஊடக விமர்சனமானது அதற்கு முன்னர் நீண்டகாலமாக நிலவிய நாடக விமர்சனம் - கவிதை விமர்சனம் மற்றும் இலக்கிய விமர்சனம் என்பவற்றிற்குப் பின்னரே ஆரம்பமாகிறது. இலக்கியத்திற்கு நீண்ட வரலாறு இருப்பதோடு, கவிதை இலக்கியத்திற்கு அந்தளவிலான நீண்ட வரலாறு இல்லை. பிற்காலத்தில் ஆக்கபூர்வமான பணிக்கு பயன்படுத்தப்படும் பல்வேறு ஊடகங்கள் தொழினுட்ப அபிவிருத்தியிலேயே உருவாகின்றன. அவ் ஊடக ஆக்கங்கள் பாரம்பரிய ஆக்கங்களை விட வேறுபட்டவை. பாரம்பரிய ஆக்கங்கள் யாரேனும் ஓர் படைப்பாளியின் பிரத்தியேக ஆக்கபூர்வமான தேவை ஒன்றின் அடிப்படையிலேயே உருவாகின. இருப்பினும் நவீன ஊடக ஆக்கங்கள் சந்தைத் தேவைக்கேற்பவே உருவாகின்றன. அதுவும் கூட்டு ஆக்கமே. எவ்வாறாயினும் ஊடக விமர்சனத்தின் போது முக்கியமான இரண்டு விடயங்கள் குறித்து அவதானஞ் செலுத்தல் வேண்டும். முதலாவது, அது அடிப்படை ரீதியில் அவ் ஊடகத்தின் நுணுக்கத்திற்கு ஏற்ப கலையியல் ரீதியில் முன்வைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தாகும். இரண்டாவது அதன் உள்ளடக்கம் மனித சமூகத்திற்கு எத்தகைய அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்பது குறித்ததாகும். எந்தவொரு ஆக்கத்திற்கும் விமர்சனமானது

வெளிச்ச வீடாகவும் தூண்டலாகவும் அமைவது, அது பகுத்தறிவுடனும் மற்றும் மனித நேயத்துடனும் செய்யப்பட்டிருந்தால் மட்டுமேயாகும். விமர்சனத்தில் போலியற்ற தன்மை - மனித நேயம் மற்றும் கலையியல் விளக்கம் உள்ளடக்கப்படல் வேண்டும் என்பதே அதன் பொருளாகும். அது பக்கச்சார்பின்றி படைப்பாளிக்கு வழிகாட்டும் வெளிச்சமாகவும் திசைகாட்டியாகவும் அமைதல் வேண்டும்.

ஊடக விமர்சனத்தின் உள்ளடக்கத்தில் அந்தந்த ஊடக விதி மற்றும் ஆக்கத்திற்கிடையிலான இணக்கம் சிறப்பாக முன்வைக்கப்படல் வேண்டும். அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் மற்றும் திரைப்பட ஊடகங்களில் அதற்குப் பொருத்தமான ஊடக மொழியைப் பயன்படுத்தி உள்ளடக்கத்தைச் சரியாக வெளிப்படுத்துவதில் படைப்பாளி எந்தளவு வெற்றி கண்டுள்ளார் என்பது ஊடக விமர்சனத்தின் போது வெளிப்படுத்தப்படல் வேண்டும் அது ஊடக விமர்சனம் மூலம் பெறுநருக்கு அல்லது மனத்திற்கினிய ரசிகர்களுக்கு தெரிந்து கொள்ளக்கூடியதாய் இருத்தல் வேண்டும். ஒரே கதை செய்தியை அந்தந்த ஊடக மாதிரிகள் ஊடாக ஆக்குகையில், அது தொடர்பான சிறந்த தேர்ச்சியுடன் படைப்பாளிகள் செயற்பட நேரிடும். அவ்வாறே ஊடக விமர்சகருக்கும், அந்தந்த ஊடகத்தின் ஆக்கபூர்வமான மொழியைச் சரியாகப் பயன்படுத்தி ரசிகர்கள் அதிர்ச்சியடையும் வகையில் முன்வைக்க நேரிடும். ஊடக விமர்சனத்தில் உள்ளடங்கும் படைப்பாளிக்கும் பொது ரசிகர்களுக்கும் மிகப் பயனுள்ளதாக அமைதல் வேண்டும் என்பதே இதனூடாகப் புலனாகிறது.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

**1. வெகுசன ஊடகத்தின் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்**

- வெகுசன ஊடகத்தில் பத்திரிகைகள் - வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன பிரதானமாகின்றன
- ஊடக விமர்சனத்திற்காக உரையாடுகையில் அச்சு ஊடகமாக பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் அவதானத்திற்கு உட்படுத்த முடியும்
- சினிமாவானது பிரதானமாக வெகுசன ஊடகத்துடன் உள்ளடங்காது எனினும், ஊடக விமர்சனத்தின் போது சினிமாவையும் விமர்சனத்திற்கு உட்படுத்த முடியும்
- புத்தகங்கள் - பத்திரிகைகள் - சஞ்சிகைகள் - வானொலி - தொலைக்காட்சி - சினிமா என்பன பொதுவாக ஊடகங்களினாலும் அவ் ஊடகங்களுக்கிடையே பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன
- எந்த ஒரு ஊடகத்தின் மூலமும் பெறுநருக்கு ஏதேனும் ஒரு வடிவில் செய்தியொன்றை முன்வைத்தலே இடம்பெறுகின்றது
- எல்லா ஊடகங்களினதும் ஒற்றுமையாவது அவற்றினூடாக தொடர்பாடல் செயற்பாடொன்று இடம்பெறுகின்றமையேயாகும்
- அந்தந்த ஊடகங்களின் வேற்றுமையாவது அந்தந்த ஊடகங்களுக்கே உரிய இயல்புகளுடன் வேறு முறைகளில் தமது தொடர்பாடல் செயற்பாட்டை மேற்கொள்கின்றமையாகும்

**2. அச்சு ஊடக விதி**

- அச்சு ஊடகமானது முழுமையாகவும் தொடர்புடையதாகவும் உதாசீன ஊடகமாகும்
- அச்சு ஊடக தொடர்பாடலுக்காக பயன்படுத்தும் பிரதான உபகரணம் மொழியாகும்
- புகைப்படங்கள் மற்றும் சித்திரங்களும் கேலிச்சித்திரங்களும் அச்சு ஊடகத்தில் பயன்படுத்தப்படுகின்றன
- உள்ளடக்கத்திற்குப் பொருத்தமானவாறு மற்றும் வாசிப்பவருக்கு ஏற்றவாறு சொற்திறனுடையதாக மொழியைப் பயன்படுத்துவது அச்சு ஊடகத்தின் விதியாகும்
- புத்தகங்கள் - சஞ்சிகைகள் - பத்திரிகைகள் முதலான அச்சு ஊடக உற்பத்தியில் பல்வேறு வடிவிலான ஆக்கங்களை முன்வைக்க முடியும்
- அச்சு ஊடகத்தின் எந்தவொரு ஆக்க வடிவமானாலும் அடிப்படையில் பெறுநரினால் வாசித்து உள்வாங்கப்படல் வேண்டும்

- விசேடமாக நோக்கங்கள் வாசிப்பவருக்கு பொருத்தமானவாறு மொழியை ஒழுங்கமைப்பது புத்தகங்களினதும் சஞ்சிகைகளினதும் விதியாவதோடு, பத்திரிகைகளில் பொது வாசிப்போரை நோக்காகக் கொண்டு மொழி அமைக்கப்படுகின்றது
- புத்தகங்கள் - சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் வாசிப்பில் வாசிப்போரது நடத்தை வேறுபட்டது என்பதால் அதற்கு ஏற்றவாறு மொழியும் மொழிச்சாயலும் மொழிப் பயன்பாடும் பயன்படுத்தப்படுகின்றது
- கவிதைப் புத்தகமொன்றை வாசிப்பதற்கும் பத்திரிகையொன்றில் கவிதைப் பக்கத்தை வாசிப்பதற்கும் இடையில் நடத்தை ரீதியான வேறுபாடு உள்ளது
- நாவல் ஒன்றிற்கு பதிலாக பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ பகுதியாக மற்றும் மொழிப் பயன்பாட்டிற்கு இடையில் தெளிவான வேறுபாடுகள் நிலவுகின்றன.

3. **வானொலி ஊடக விதி**
    - மனித குரல் - சங்கீதம் - ஒலிப் பாவனை என்பவற்றின் மூலம் தொடர்பாடல் பணியை மேற்கொள்கின்றமை வானொலி ஊடக விதியாகும்
    - வானொலி ஊடகமானது ஓர் ஒலி ஊடகம் மாத்திரமேயாகும்
    - பெறுநரிடம் கற்பனையைப் பயன்படுத்துவதே வானொலி ஊடகத்தின் பலமாகும்
    - வானொலி ஊடகம் முழுமையான ரீதியில் பொதுவாக பெறுநருக்கு ஏற்றவாறு மொழிப் பிரயோகத்தை உபயோகிக்கின்றது
    - மொழியை எளிமையாகப் பன்படுத்துவது வானொலியின் அடிப்படை விதியாகும்
    - விசேடமான பெறுநர் குழுக்களை இலக்காகக் கொண்டு முன்வைக்கப்படும் ஆக்கங்களினால் அப்பெறுநர்களுக்கு ஏற்றவாறு மொழிப்பிரயோகங்களைப் பயன்படுத்தல் வேண்டும்
    - வானொலி ஊடகத்தில் பல்வேறு வடிவிலான ஆக்கங்கள் முன்வைக்கப்படுவதோடு, அவ்வவ் ஆக்கங்களுக்கேற்ற நுணுக்க முறைகளைப் பின்பற்றல் வேண்டும்

4. **தொலைக்காட்சி ஊடக விதி**
    - தொலைக்காட்சியானது ஒலி - ஒளி ஊடகமாகும்
    - தொலைக்காட்சி பொதுவான நேயர்களை இலக்காகக் கொள்வதால், அவர்களுக்கு பொதுவில் பொருத்தமான முறையில் ஆக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும்
    - சில வேளைகளில் விசேடமான நேயர் குழுக்களுக்காகவும் தொலைக்காட்சி ஆக்கங்கள் மேற்கொள்ளப்படுவதோடு, அதன் போது அவ் விசேட நேயர் குழுவிற்கு பொருத்தமானவாறு ஆக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும்
    - ஒளி உருவங்களுக்கு முக்கியத்துவம் வழங்கலானது தொலைக்காட்சியில் இடம் பெறுகின்றது
    - தொலைக்காட்சி திரையின் அளவு சிறியது என்பதோடு ஒப்பிட்டு உருவங்களை முன்வைத்தல் வேண்டும்
    - தொலைக்காட்சியைப் பார்த்தல் வீட்டுப் பணியொன்று என்பதால் அதற்கு ஏற்றவாறு தொலைக்காட்சி ஆக்கங்களை மேற்கொள்ளல் வேண்டும்
    - அந்தந்த தொலைக்காட்சி ஆக்க வடிவங்களுக்கு ஏற்ப ஒலி - ஒளி ஊடகத்தைப் பயன்படுத்தல் வேண்டும்
    - ஊடக விமர்சகர் ஊடகத் தொழிலை கொண்டு செல்வதற்கு துணைபுரிபவராதல் வேண்டும்

5. **சலன ஊடக விதி**
    - ஒலி - ஒளி ஊடகமாகும்
    - தொலைக்காட்சியை விட வேறுபட்ட முறையில் பயன்படுத்தப்படும் ஊடகம்
    - தொலைக்காட்சியை விட பிரமாண்டமான திரை சினிமாவில் பயன்படுத்தப்படுகின்றது

- சினிமாவைப் பார்ப்பதற்காக திரையரங்கிற்கு செல்லல் வேண்டும்
- தொலைக்காட்சியைப் போலன்றி சினிமா இருளுடன் தொடர்புடைய ஊடகமாகும்
- சினிமா மூலம் மேற்கொள்ளப்படும் ஆக்கங்கள் நொடிக்கதை வடிவத்தைப் பெறுகின்றது
- பல்வேறு உள்ளடக்கங்கள், பல்வேறு மாதிரிகள் மற்றும் பல்வேறு வடிவங்கள் பாரம்பரியத்துடன் அமைகின்றது
- எவ்வாறாயினும் சினிமா மொழியானது வேறானதொரு அடையாளத்துடன் பயன்படுத்தப்படும் நுணுக்க தொகுதியுடனானதாகும்

6. **கலையியல், நுணுக்க மற்றும் உள்ளடக்க விளக்கம்**
   - எந்த ஒரு ஊடக ஆக்கத்திலும், கலையியல், அவ் ஆக்க வடிவத்திற்குரிய நுணுக்க அம்சங்கள் மற்றும் பொருத்தமான உள்ளடக்கமொன்று இருத்தல் வேண்டும்
   - கலையியல் என்பது தொடர்புபடுவதுடன், ஒவ்வொரு படைப்பாளியினாலும் பல்வேறு கலைசார் எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்பட முடியும்
   - பல்வேறு நுணுக்க முறைகளைப் பயன்படுத்திச் சினிமா ஆக்கப்படுகின்றது
   - உள்ளடக்கத்தை விமர்ச்சித்தலானது இயக்குநரின் கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்
   - கலைசார் உபாய வழிகள் மற்றும் நுணுக்க பிரயோகங்களைப் பயன்படுத்தி ரசிகர்களின் உள்ளத்தை அதிர்ச்சியடையச் செய்வது எவ்வாறு என்பது விமர்சனத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்

| | |
|---|---|
| **அலகு 12.0** | :- ஊடக விமர்சனம் (பாடவேளைகள் 40) |
| **தேர்ச்சி** | :- ஊடக விமர்சனத்தின் தன்மை, உள்ளடக்கம் மற்றும் பிரவேசம் என்பவற்றைச் சமநிலையில் பகுத்தாய்தல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- 12.3 ஊடக விமர்சனத்திற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு பிரவேசங்களைச் சமநிலையில் பரீட்சித்துப்பார்த்தல். |

**பாடவேளைகள்** :- 15

**விடய உள்ளடக்கம்** :- ஊடக விமர்சன பிரவேசம்

1. ஒப்பீடு மற்றும் பகுப்பாய்வு
2. அழகியல் சார் பிரவேசம்
3. மொழிசார் பிரவேசம்
4. நல்லொழுக்கமுடைய பிரவேசம்
5. அரசியல் பிரவேசம்
6. வரலாற்றுப் பிரவேசம்

**உத்தேச கற்றற் பேறுகள்** :-

- ஆக்கங்களை ஒப்பீடு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தலின் மூலம் அவற்றை விளக்குதல்
- ஊடக ஆக்கமொன்றின் அழகியல் அம்சங்களை விளக்குதல்
- ஊடக ஆக்கமொன்றின் மொழிசார் பிரயோகத்தை விளக்குதல்
- ஊடக ஆக்கமொன்றில் நல்லொழுக்கமுடைய பொருள்கள் பிரதிபலிக்கப்படும் முறையை விளக்குதல்
- ஊடக ஆக்கமொன்றை அரசியல் கண்ணோட்டத்தில் விளக்குதல்
- ஊடக ஆக்கமொன்று வரலாற்று இயல்நிகழ்ச்சிகளை பிரதிபலிக்கும் முறையை விளக்குதல்

## அறிமுகம்

ஊடக ஆக்கமொன்றை விவரிக்கையில் பல்வேறு கண்ணோட்டங்களில் அதனை நோக்க முடியும். முழுமையாக நோக்குகையில் அதனை ஒப்பீட்டு ரீதியில் பாரத்தலே செய்யக்கூடியதாகும். அதன் பிரகாரம் அதற்கு முன்னர் செய்யப்பட்டுள்ள பல்வேறு ஊடக ஆக்கங்களுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆக்கத்தின் உண்மையான நிலையை வெளிப்படுத்த முடியும் இருப்பினும் ஒப்பீடானது எப்போதும் பொருத்தமானதாக அமையாது. அதனால் ஒப்பீடின்றி அவ் ஆக்கத்தை வேறாகக் கொண்டு பகுத்தாய்வு செய்ய முடியும். அதன் ஊடாக அவ் ஊடக ஆக்கத்தை உருவாக்குவது தொடர்பான கலைசார் - நுட்ப - உள்ளடக்க விடயங்களை மதிப்பீடு செய்யமுடியும். ஒப்பீடு மற்றும் பகுத்தாய்வு செய்கையில் பல்வேறு பிரவேசங்களைப் பயன்படுத்த முடியும். அழகியல் பிரவேசம் அவற்றுள் ஒன்றாகும். எந்தவொரு ஊடக ஆக்கத்திலும் அழகியல் இருத்தல் வேண்டும். ஊடக ஆக்கம் ஒன்றின் மூலம் ரசிகரது உள்ளங்களை அழகியலை அடிப்படையாக கொண்டு அதிர்ச்சி உள்ளாக்கலே அதற்கான காரணமாகும். அதனால் எத்தகைய அழகியல் எண்ணக்கரு எவ்வாறு ஆக்கத்தில் பரவியுள்ளது என்பதை விளக்க முடியும். இருப்பினும் எப்போதும் அழகியலை அடிப்டையாகக் கொண்டு ஊடக ஆக்கமொன்றை விளக்க முடியாது. அதனுள் காணப்படும் எண்ணங்களைத் தொடர்பாடல் செய்வதற்காக பயன்படுத்தும் மொழியையும் விளக்க வேண்டும் என்பதே அதற்கான காரணமாகும். பொருத்தமான மொழி பொருத்தமான முறையில் பயன்படுத்தப் பட்டிராவிடில் எந்தவொரு ஊடக ஆக்கமானாலும் தோல்வியடையும். அந்தந்த ஊடக

ஆக்கத்தின் வடிவத்திற்கேற்ப மொழியைப் பயன்படுத்தும் அளவானது கூடுதலாகவோ குறைவாகவோ இருக்க முடியும். இருப்பினும் பயன்படுத்தப்படும் மொழிசார் முறைகள், நடைகள் மற்றும் வழக்குகள் ஆக்கத்துடன் ஒன்றுதல் வேண்டும்.

ஊடக ஆக்கமானது எவ்வளவு சிறப்பாக அழகியல் மற்றும் மொழியைப் பன்படுத்தி இருந்தாலும் அதில் உள்ளடங்கும் நல்லொழுக்கம் சார்ந்த பிரதிநிதித்துவமானது சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இருத்தல் வேண்டும். நல்லொழுக்கம் என்பது தொடர்புள்ள பிரயோகமாகும். ஒரு சமூகத்தால் நல்லொழுக்கமென ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் விடயம் இன்னுமொரு சமூகத்தால் நல்லொழுக்கமற்றதாக ஏற்றுக் கொள்ளப்பட இடமுண்டு. அதன் பிரகாரம் ஏதேனுமோர் ஊடக ஆக்கத்தை நல்லொழுக்கக் கண்ணோட்டத்தில் விளக்க முடியும். அதே போன்று அதில் முன் வைக்கப்படும் கதை, சம்பவத் தொடர் அல்லது காட்சிகளில் வரலாற்று யதார்த்தமானது குறைப்பாட்டுடனிருந்தால் அது சமூகத்திற்கு ஏற்புடையதாகாது. அதனால் ஊடக ஆக்கத்தின் வரலாற்று யதார்த்தத்தையும் விளக்க முடியும். அரசியல் ரீதியில் செய்யப்படும் விளக்கமே இவை எல்லாவற்றையும் விட முக்கியமான விளக்கமாகும். சமூகத் தொடர்புகள், சமூக சக்திகள் அனைத்தையும் அரசியல் சார்ந்த அர்த்தத்தில் பல்வேறு முறையில் விளக்க முடிவதே அதற்கான காரணமாகும். இதன் மூலம் ஒரே ஊடக ஆக்கத்தை நல்லதாகவோ தீயதாகவோ சுட்டிக் காட்டவும் சந்தர்ப்பம் கிட்டும். எவ்வாறாயினும் அரசியல் ரீதியில் செய்யப்படும் விளக்கத்தின் மீது சமூகத்தின் பாரிய அவதானம் ஏற்படும். அழகியலானது அனுபவித்தலாகும். இருப்பினும் அரசியல் வரைவிலக்கணமானது அனுபவிப்பதன்று ஊடக ஆக்கத்தை நோக்கிப் புதிய கண்கொண்டு மக்களைப் பார்க்கத் தூண்டுவது ஆகும்.

உலகில் பல்வேறு விளக்கங்களைச் செய்கையில் அனேகமாகப் பயன்படுத்தப்படும் பல்வேறு அரசியல் கண்ணோட்டங்கள் மீது மக்களின் அவதானம் அதிகமாகும்.

## பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஓர் கைகோப்பு

1. ஒப்பீடு மற்றும் பகுப்பாய்வு
    - ஊடக விமர்சனத்தின்போது ஏதேனுமோர் ஆக்கத்தை வேறு ஆக்கங்களுடன் ஒப்பிடுவதற்கும் அவ் ஆக்கங்களைத் தனியாகக் கொண்டு பகுத்தாய நேரிடுகிறது
    - ஒப்பீடு மூலம் ஏதேனுமோர் ஆக்கமானது வேறு ஒன்றை விடவும் சிறந்ததா? சிறப்பற்றதா? இணையானதா? இணையற்றதா? என்பது குறித்து விளக்க முடியும்
    - ஒப்பீடு மூலம் அந்தந்த ஆக்கங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு அணுகுமுறைகள் மற்றும் உள்ளடக்கம் முதலான பலவற்றை மதிப்பிட முடியும்
    - ஏதேனுமோர் ஊடக ஆக்கமானது முந்தைய ஆக்கத்தை விட சிறப்பாக ரசிகரை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறதா? என்பதை ஒப்பீடு மூலம் மதிப்பிட முடியும்
    - பகுப்பாய்வு மூலம் ஏதேனுமோர் ஊடக ஆக்கமானது அவ் ஊடகத்திற்கான எல்லைச் சட்டகம் மற்றும் நுட்ப மாதிரிகளில் எவ்வாறு செயற்பட்டுள்ளது? அதன் மூலம் ரசிகரை எத்தகைய அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளது? என்பதை மதிப்பிட முடியும்

2. அழகியல் சார்ந்த பிரவேசம்
    - அழகியல் சார்ந்த இரசனையை ரசிகருக்கு வழங்குவதே எந்தவொரு கலைசார் ஆக்கத்தினதும் பிரதானமான பணி என்பதால், எந்தவொரு ஊடக ஆக்கத்தையும் அழகியல்சார் பிரவேசத்தில் விளக்க முடியும்
    - அழகியல்சார் பிரவேசத்தின் அடிப்படையாகக் கருதப்படுவது அழகேயாகும்
    - அழகியல் குறித்த படைப்பாளியின் கொள்கை மற்றும் காட்சியை வேறாக இனங்காண்பது அழகியல் பிரவேசம் மூலம் விளக்க முடியாது
    - அழகியல் குறித்து படைப்பாளிகளிடம் பல்வேறு அபிப்பிராயங்கள் இருப்பதும் அதன் பிரகாரம் அவர்கள் தமது ஆக்கங்களை உருவாக்குவதும்

- ஊடக ஆக்கதில் உள்ளடங்கியுள்ள அழகியல் சார்ந்த பிரதிநிதித்துவம் ஏதேனுமோர் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதா? என்பதை மதிப்பிட வேண்டும்
- அழகியல் சார்ந்ததாக ஏதேனுமோர் ஊடக ஆக்கத்தை விளக்க வேண்டுமாயின், ஊடக விமர்சகருக்கு அழகியல் சார்ந்த எண்ணக்கரு குறித்த சிறந்த தேர்ச்சி இருத்தல் வேண்டும்
- ஊடக ஆக்கத்தில் உள்ளடங்கியுள்ள அழகியல் சார்ந்த பிரதிநிதித்துவம் ஏதேனுமோர் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதா? என்பதை மதிப்பிட வேண்டும்
- அழகியல் சார்ந்ததாக ஏதேனுமோர் ஊடக ஆக்கத்தை விளக்க வேண்டுமாயின், ஊடக விமர்சகருக்கு அழகியல் சார்ந்த எண்ணக்கரு குறித்த சிறந்த தேர்ச்சி இருத்தல் வேண்டும்
- அழகியல் சார்ந்ததாக ஏதேனுமோர் ஆக்கத்தை மதிப்பிடுவதன் மூலம் அவ் ஆக்கம் தொடர்பான முழுமையானதோர் விளக்கத்தைச் செய்ய முடியாது
- சில வேளைகளில் அழகியல் சார்ந்ததாக மிக உயர் மட்டத்திலுள்ள ஓர் ஊடக ஆக்கமானது உள்ளடக்க ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருக்க முடியும்
- ஏதேனுமோர் ஆக்கத்தின்பால் ரசிகரது ஈர்ப்பைப் பெறுவது அழகியல் மூலமே என்பதால், அதன் ஊடாக ஆக்கத்தை விளக்கும் ஓர் யதார்த்தம் உள்ளது

### 3. மொழி சார்ந்த பிரவேசம்

- மொழி என்பது இரட்டை வடிவம் கொண்ட ஓர் தொடர்பாடற் கருவி என்பதால் அதை ஆக்கபூர்வமாக ஊடக ஆக்கங்களில் அற்புதமாக பயன்படுத்த முடியும்
- சாதாரணமாக மொழியைப் பயன்படுத்தலுக்கும் ஊடக ஆக்கங்களின்போது மொழியைப் பயன்படுத்தலுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன
- ஊடக ஆக்கங்களின்போது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு மொழியை மிகப் பலமிக்கதோர் கருவியாக பயன்படுத்த முடியும்
- அந்தந்த ஊடக ஆக்கத்திற்கு ஏற்றவாறு மொழியைச் சரியாக எழுத்து மொழியாகவோ அல்லது அந்தந்த நபருடன் தொடர்புடைய வழக்கு மொழியாகவோ பயன்படுத்த முடியும்
- அந்தந்த ஊடகத்திற்கு ஏற்ப மொழிப் பாவனைக்கிடையே வேறுபாடுகள் மற்றும் விசேட தன்மைகள் காணப்படுகின்றன
- ஊடக விமர்சனத்தின்போது மொழி சார்ந்த பிரவேசத்திற்கு ஏற்ப அதை விளக்குவதாயின் விமர்சகருக்கு ஊடக ஆக்கங்களின் மொழிப் பாவனை குறித்த சிறந்த தேர்ச்சி இருத்தல் வேண்டும்
- இரசனையை விருத்தி செய்வதற்கு மொழியை உரிய ஊடகத்திற்கு பொருத்தமானவாறு பயன்படுத்த வேண்டும்
- ஏதேனுமொன்றின் மீள் ஆக்கத்திற்கு மொழியின் பலங்களை உச்ச அளவில் பயன்படுத்தல் வேண்டும்

### 4. நல்லொழுக்கம் சார்ந்த பிரவேசம்

- நல்லொழுக்கம் என்பது மனித சமூகத்தின் நடத்தைக்கு அத்தியாவசியமானாலும் மனித சமூகத்தாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டதெனினும் பழக்கங்கள் - நடத்தைகள் கூட்டம் என்பதால் ஊடக ஆக்கத்தில் நல்லொழுக்கத்தைப் பாதுகாப்பது தொடர்பில் படைப்பாளிக்கு பொறுப்பு உண்டு
- சம்பிரதாயங்கள் மற்றும் அங்கீகரிப்புக்கள் என்பவற்றை வீழ்த்த முடியும் எனினும், அது மனித சமூகத்தின் நன்மைக்காக இடம்பெற வேண்டியது என்பதால் மனிதநேய பண்புகளுடனே நல்லொழுக்கம் சார்ந்த விளக்கம் செய்யப்படல் வேண்டும்
- நல்லொழுக்கம் என்பது தொடர்புடையதோர் வரவேற்பாவதோடு, படைப்பாளிகள் ஏற்றுக்கொள்ளும் நல்லொழுக்கத்தைச் சமூகம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும் என்ற கட்டாயப்படுத்தல் ஊடக ஆக்கம் மூலம் இடம்பெறுகிறதா என்பதை விளக்குதல் வேண்டும்

- ஊடக ஆக்கங்கள் எப்போதும் பல்லின சமூகத்தை விளிப்பதால் நல்லாழுக்கம் சார்நத பிரவேசத்தின் கீழ் ஊடக ஆக்கத்தை விளக்குதல் பொருத்தமாகும்
- உயர் அழகியல் சார்ந்த பெறுமதியுடனும் சிறந்த மொழிப் பாவனையுடனுமானதோர் ஊடக ஆக்கமானது நல்லொழுக்கம் சார்ந்த ரீதியில் கீழான பெறுமதியுடனும் மனித சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையிலும் இருக்க முடியும்
- ஊடக ஆக்கம் மூலம் முன்வைக்கப்படும் நல்லொழுக்கம் சார்ந்த எண்ணக்கருவை பரந்த சமூகத்தினால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது விமர்சகர் மூலம் விளக்கப்படல் வேண்டும்
- சில சம்பிரதாய நல்லொழுக்க அங்கீகரிப்புக்கள் ஊடக ஆக்கத்தின்போது விமர்சன ரீதியில் ஆராயப்படல் வேண்டும்

5. **அரசியல் சார்ந்த பிரவேசம்**
    - சமூக மற்றும் சமூக தெடர்புகளை விளக்கும் பல்வேறு அரசியல் கருத்துக்கள் காணப்படுகின்றன
    - அரசியல் சிந்தனை மூலம் சமூகமானது பல திசைகளுக்கு திருப்பப்பட்டுள்ளன
    - ஊடக ஆக்கமொன்றின் மூலம் முன்வைக்கப்படும் எந்தவொரு உள்ளடக்கத்தையும் அரசியல் கண்ணோட்டத்தில் விளக்க முடியும்
    - அரசியல் எண்ணக்கருக்கள் குறித்து சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் கருத்து மோதல்கள் காணப்படுகின்றன
    - அரசியல் பிரவேசத்தின்போது வகுப்பு மோதல்கள் மற்றும் வகுப்புக்களுடனான சமூகத்தை விளக்கும் பல்வேறு அரசியல் கருத்துக்களைப் பயன்படுத்தி எந்தவொரு ஊடக ஆக்கத்தையும் மென்மையாக விளக்க முடியும்
    - அரசியல் பிரவேசம் மூலம் ஊடக ஆக்கங்கைள விளக்குகையில் மாக்ஸ்சியவாத விமர்சன எண்ணக்கருக்களை சிறந்த முறையில் பயன்படுத்த முடியும்
    - அரசியல் எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி ஊடக விமர்சனம் செய்வதற்கு விமர்சகருக்கு பல்வேறு அரசியல் எண்ணக்கருக்கள் குறித்த சிறந்த தேர்ச்சி இருத்தல் வேண்டும்

6. **வரலாற்றுப் பிரவேசம்**
    - ஊடக ஆக்கத்தில் பிரதிபலிக்கப்படும் வரலாற்றுக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன
    - வாழ்க்கைப் பாத்திரங்கள், வரலாற்றுச் சம்பவங்கள், யுகப் புரட்சிகள், ஆளுமைகள், தரவுகள், காலங்கள் விமர்ச்சிக்கப்படுகின்றன
    - வரலாற்று விமர்சனப் பிரவேசத்தில் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன
    - வரலாற்றுச் சம்பவங்களை புதிய அளவுகளில் ஆராயப்பட முடியும்
    - வரலாற்றுச் சம்பவங்கள் போலிமயப்படுத்தலிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்
    - வரலாற்று விளக்கத்தைச் செய்வதற்கு விமர்சகரிடமும் பரந்த வரலாற்று அறிவும் புரிந்துணர்வும் இருத்தல் வேண்டும்
    - வரலாற்று சம்பவங்கள் குறித்து படைப்பாளிகள் முன்வைக்கும் படைப்பு குறித்து மதிப்பீடு விமர்சகரினால் செய்யப்படல் வேண்டும்
    - நேயரின் வரலாற்று அறிவை வளர்த்தல் வேண்டும்

## கற்றல் - கற்பித்தல் தொழிற்பாட்டிற்கான மாதிரிச் செயற்பாடுகள்

**1. அடிப்படை ஆலோசனைகள்**

கற்றல் கற்பித்தல் தொழிற்பாட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய மாதிரி செயற்பாடுகள் இப்பகுதியில் காட்டப்படுகின்றன. அவற்றை அதே முறையில் பயன்படுத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட மாட்டாது. ஆசிரியருக்குத் தேவையான முறையில் அவற்றில் சில சில மாற்றங்களைச் செய்ய முடியும். அத்தோடு ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்திற்கும் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு செயற்பாடு மாத்திரம் போதுமானதன்று. மாதிரி செயற்பாடுகளைக் கற்று அந்தந்த பாடவேளைக்கு வகுப்பறையில் பயன்படுத்தக் கூடிய வேறு செயற்பாடுகளைப் பொருத்தமானவாறு முன் ஏற்பாட்டுடன் சமூகமளித்து முன் தினம் நிறைவு செய்த இடத்திலிருந்து ஆரம்பித்தல் முதலான தோல்வியான முறைகளை ஆசிரியர் பயன்படுத்தலாகாது. ஒவ்வொரு பாடவேளையின் போதும் புதிய அனுபவத்தைப் பெறுவதற்கான விருப்பத்தை மாணவரிடையே ஏற்படுத்துவதோடு அப்புதிய அனுபவத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஆசிரியர் மேற்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு பாடவேளைக்காகவும் பயன்படுத்தும் புதிய செயற்பாடுகளை முன்னரே தயார் செய்து கோப்பு ஒன்றில் வைத்திருத்தலும் அவற்றைப் பயன்படுத்தியதன் பின்னர் தேவையான மாற்றங்கள் அல்லது விருத்தி செய்யப்பட வேண்டிய இடங்கள் தொடர்பாக குறித்து வைத்து மீளவும் கோப்பில் வைப்பதன் மூலம் ஒரு வருடத்திற்குள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் தொகுதியொன்றை திரட்டுவதற்கான சந்தர்ப்பம் ஆசிரியருக்குக் கிட்டும். பிறரால் வழங்கப்பட்ட செயற்பாடுகளைச் செயற்படுத்தாது, தனது செயற்பாட்டுத் தொகுதியைக் கட்டியெழுப்பி அதை செயற்படுத்துவதன் மூலமே ஆசிரியரது அடையாளம் பாதுகாக்கப்படும். குறிப்புக்களை மனப்பாடஞ் செய்வித்தலால் அல்ல, செயற்றிறனுடன் கற்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமே இந்தப் பாடமானது மாணவருக்குப் புதிய அனுபவத்தை வழங்கும்.

**2. கற்றல் கற்பித்தல் தொழிற்பாட்டின் கோட்பாட்டு அடிப்படை**

வகுப்பறையில் பயன்படுத்தப்பட்ட ஆசிரியரை மையப்படுத்திய கல்வி முறையும் மாணவரை மையப்படுத்திய கல்வி முறையும் இப்பாடத்தை கற்பிக்கையில் விலக்கப்படும். அதற்குப் பதிலாக தகவல் ஊடகத்தை மையப்படுத்திய கற்பித்தல் முறையே பயன்படுத்தப்படும்.




TECHNOLOGY - BASED PARADIGM
Branson Model of learning - 1990

இக் கற்றல் கற்பித்தல் மாதிரிக்கேற்ப ஆசிரியரைப்போன்றே மாணவரும் தகவல் ஊடகத்தைப் பயன்படுத்துவர். சில வேளைகளில் ஆசிரியருக்கு முன்னரே ஏதேனுமோர் தகவல் மாணவருக்குக் கிடைக்கக்கூடும். இதன் பிரகாரம் ஆசிரியர் மாணவரை விட தகவல் ஊடகத்தைப் பயன்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். அத்தோடு இயன்ற வரை தகவல் ஊடகத்தைப் பயன்படுத்துவற்கு மாணவரைத் தூண்டுதல் வேண்டும்.

பல்வேறு தகவல்களைப் பெறக்கூடிய மூலங்கள் தொடர்பாக வழிகாட்டல் வேண்டும். விசேடமாக இங்கு இணையத்தை தகவல் ஊடகமாக அதிகம் பயன்படுத்த முடியும். அதற்கு மேலதிகமாக தினசரி மற்றும் வாராந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் முதலானவற்றையும், தகவல்கள் திரட்டப்பட்டுள்ள இறுவட்டுக்களையும் பொருத்தமானவாறு வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய கற்றல் கற்பித்தல் சூழலொன்றை உருவாக்கிக் கொள்ளல் ஆசிரியரின் கடமையாகும். தகவல் மூலங்களை இனங்காணவும் தகவல்களை திரட்டவும் தகவல்களைப் பகுத்தாய்வு செய்யவும் மாணவருக்கு ஆசிரியரின் உதவியும் வழிகாட்டலும் தேவை. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்விப் பாடப்பொறுப்பு ஆசிரியர் புதிதாதல் வேண்டும் என்பதே இதன் மூலம் கருதப்படுகிறது. அவ்வாறானதொரு மாற்றத்திற்கு ஆசிரியர் தயாராதல் வேண்டும். இம்மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவகமும், கல்வி அமைச்சும், குறைந்தளவிலோ அதிகமாகவோ செயற்படும். இருப்பினும் இம்மாற்றத்தை ஏற்படுத்துவற்கான தனிப்பட்ட அபிப்பிராயத்தை ஆசிரியர் தனக்குள் கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறு சுய எண்ணக்கருவை வளர்ப்பதன் மூலம் பிறரது துணை இன்றியும் தனது ஆசிரியர் எனும் பாத்திரத்தை புதுப்பிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

| | | |
|---|---|---|
| **அலகு 7.0** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 7.1 அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு, அதன் அடிப்படைப் பண்புகள், அதன் பாவனை மற்றும் மக்கள் ஊடகத்துடனான உள்ளகத் தொடர்பைப் பகுத்தாய்வு செய்கிறது. |
| **பாட இணை அலகு** | :- | 1. அபிவிருத்தித் தொடர்பாடலை அறிமுகம் செய்தல் |
| **1 ஆவது செயற்பாடு** | :- | காலம் 30 நிமிடங்கள் |

**1 ஆம் படிமுறை** :- அபிவிருத்தி என்பதால் கருதப்படுவது யாது என்பது குறித்த தமது கருத்துக்களை வெளிப்படுத்துமாறு வகுப்பிலுள்ள அனைவருக்கும் ஆலோசனை வழங்கவும். (மாணவர்களால் முன்வைக்கப்படும் பல்வேறு கருத்துக்களை கரும்பலகையில், வெள்ளைப் பலகையில் அல்லது வகுப்பின் முன்னால் காட்சிப்படுத்தப்படும் போஸ்டர் கடதாசி ஒன்றில் எழுத முடியுமானால் பொருத்தமானதாகும்.) முன்வைக்கப்பட்ட கருத்துக்களை தமது அப்பியாசக் கொப்பிகளில் குறித்துவைத்துக் கொள்வதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கவும். மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை மேலும் விருத்தி செய்ய முடியுமாயின் விருத்தி செய்யவும். (10 நிமிடங்கள்)

**2 ஆம் படிமுறை** :- வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சில குழுக்களாக பிரிக்கவும். தொடர்பாடல் குறித்து அறிந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி மற்றும் தொடர்பாடலை இணைப்பது எவ்வாறு என்பன குறித்து உரையாடுவதோடு அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த பத விளக்கம் மற்றும் சில கருத்துக்களைக் கட்டியெழுப்புவதற்கு குழுக்களுக்கு இடமளிக்கவும். அதை போஸ்ட்டர் தாளில் எழுத முடியுமானால் மிகப் பொருத்தமானதாகும். அல்லது சாதாரண தாளொன்றில் எழுதுமாறு ஆலோசனை வழங்கவும். (10 நிமிடங்கள்)

3 ஆம் படிமுறை :- குழுக்கள் மூலம் தாயரிக்கப்பட்ட கருத்துக்களைக் குழுக்களாக வகுப்பில் முன்வைக்க இடமளிக்கவும். அவற்றில் கூறப்படும் முக்கியமான விடயங்களைப் பலகையில்/ போஸ்ட்டர் தாளில்/ ஊடுருவக் கூடிய தாளில் குறிக்கச் செய்யவும். முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் ஒன்று திரட்டி அது குறித்து உரையாடுவதோடு, அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த பிரதான கருத்துக்களைக் கட்டியெழுப்பவும். அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்த அடிப்படைக் கருத்தை மாணவர்களிடையே கட்டியெழுப்பவும். (10 நிமிடங்கள்)

| | |
|---|---|
| அலகு | :- 7.0 அபிவிருத்தித் தொடர்பாடல் |
| தேர்ச்சி மட்டம் | :- 7.2 அபிவிருத்திச் செய்தியின் தன்மை மற்றும் ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றை உருவாக்கல் மற்றும் மேம்பாட்டைப் பரீட்சித்துப் பார்த்தல். |
| பாட இணை அலகு | :- 2. அபிவிருத்திச் செய்தி |
| 1 ஆவது செயற்பாடு | :- காலம் 30 நிமிடங்கள் |

1 ஆம் படிமுறை :- முன்னரே தயார் செய்து கொண்டு வந்த சுகாதாரம், பாதுகாப்பு, விவசாயம் முதலான தலைப்புக்களின் கீழ் தயாரித்துள்ள பொதுமக்கள் கருத்துக்களின் மேம்பாட்டை சில போஸ்ட்டர்கள் மூலம் வகுப்பின் முன்னால் காட்சிப்படுத்தவும். அது குறித்த கருத்துக்களைத் தெரிவிக்க மாணவருக்கு இடமளிக்கவும். அந்த போஸ்ட்டர்களுள் மிகவும் வினைத்திறனுடையது எனக் கருதும் ஒரு போஸ்ட்டரைத் தெரிவு செய்யவும் (05 நிமிடங்கள்)

2 ஆம் படிமுறை :- தெரிவு செய்த போஸ்ட்டரின் அம்சங்கள் குறித்து உரையாடவும். அதில் உள்ளடங்கியுள்ள வாசகங்களை மாற்றஞ் செய்து முன்வைக்க முடியுமாயின் முன்வைக்குமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும். அந்தந்த மாணவர்களினால் மீளவும் தயாரிக்கப்பட்ட வாசகங்களை வகுப்பறையின் முன்னாலுள்ள கரும்பலகையில் அல்லது போஸ்ட்டர் தாளில் குறிக்கவும் (05 நிமிடங்கள்)

3 ஆம் படிமுறை :- தெரிவு செய்த போஸ்ட்டரில் காட்டப்பட்டுள்ள செய்தியை வானொலி அல்லது தொலைக்காட்சிக்கு ஏற்றவாறு முன்வைப்பதற்கு தயாரிக்குமாறு மாணவர் குழுக்கள் சிலவற்றிற்கு ஆலோசனை வழங்கவும். அவர்களால் உருவாக்கப்பட்ட வாசகங்களை அவ் ஊடகங்கள் மூலம் முன்வைக்கும் முறையில் செய்து காட்டுமாறு இடமளிக்கவும். (05 நிமிடங்கள்)

4 ஆம் படிமுறை :- வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகத்திற்காக அபிவிருத்திச் செய்தியைத் தயாரிக்கையில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களால் முன்வைக்கப்பட்ட செய்திகள் குறித்து விளக்கமொன்றை வழங்கவும். (05 நிமிடங்கள்)

**அலகு 7.0** :- அபிவிருத்தித் தொடர்பாடல்

**தேர்ச்சி மட்டம்** :- 7.3 பாரம்பரிய மற்றும் நவீன தொர்பாடல் முறைகள் மற்றும் மக்கள் பங்களிப்பு முறைகளை ஆராய்ந்து முன்னுதாரணங்களை விமர்சித்தல்.

**பாட இணை அலகு** :- 3. அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள்

1 **ஆவது செயற்பாடு** :- காலம் 30 நிமிடங்கள்

1 **ஆம் படிமுறை** :- பாரம்பரிய மற்றும் நவீன தொடர்பாடல் முறைகள் எத்தகையவை என்பதை மாணவர்களுடன் உரையாடவும் (05 நிமிடங்கள்)

2 **ஆம் படிமுறை** :- வகுப்பைக் குழுக்களாகப் பிரித்து தான் விரும்பும் அபிவிருத்தித் தொடர்பாடல் முறையொன்றைத் தெரிவு செய்ய இடமளிக்கவும். (05 நிமிடங்கள்)

3 **ஆம் படிமுறை** :- தனது குழுவினால் தெரிவு செய்யப்பட்ட முறை மூலம் பொது மக்களுக்கு ஏதேனுமோர் அபிவிருத்தி சார்ந்த கருத்தை முன்வைக்கும் விதத்தில் சிறு ஆக்கமொன்றைச் செய்ய இடமளிக்கவும். (05 நிமிடங்கள்)

4 **ஆம் படிமுறை** :- மாணவர்களது சில ஆக்கங்களை அல்லது அனைத்யையும் உரிய நேரத்தில் முன்வைப்பதற்கு இடமளிக்கவும். முன்வைக்கப்பட்ட ஆக்கங்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தவும் (05 நிமிடங்கள்)

**அலகு 7.0** :- அபிவிருத்தித் தொடர்பாடல்

**தேர்ச்சி மட்டம்** :- 7.4 அபிவிருத்தித் தொடர்பாடலின் சிக்கல்கள் மற்றும் சவால்களை சமநிலையில் பகுத்தாய்தல்

**பாட இணை அலகு** :- 4. அபிவிருத்தித் தொடர்பாடற் சிக்கல்கள் மற்றும் சவால்கள்

1 **ஆவது செயற்பாடு** :- காலம் 30 நிமிடங்கள்

1 **ஆம் படிமுறை** :- அபிவிருத்தித் தொடர்பில் அரசினாலேயே நாட்டில் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதைக் கலந்துரையாடுக. (05 நிமிடங்கள்)

2 **ஆம் படிமுறை** :- தினசரி சில பத்திரிகைகளை வகுப்பில் மாணவர் குழுக்களிடையே பகிர்ந்தளிக்கவும். (05 நிமிடங்கள்)

3 **ஆம் படிமுறை** :- அந்தந்தக் குழுவிற்கு கிடைத்த பத்திரிகைகளை வாசித்து அவற்றுள் பல்வேறு செய்திகளுக்கிடையேயான அபிவிருத்தி குறித்து பல்வேறு பிரிவினர் வெளியிட்டுள்ள சில கருத்துக்களை ஆவணப்படுத்து வதற்கு ஆலோசனை வழங்கவும். (10 நிமிடங்கள்)

4 ஆம் படிமுறை :- அந்தந்தக் குழுக்களின் ஆவணங்களை முன்வைப்பதற்கு குழுக்களுக்கு இடமளிக்கவும். ஒவ்வொரு குழுவினாலும் வெளியிடப்படும் பிரதான கருத்துக்களை பலகையில் எழுதச் செய்யவும். (10 நிமிடங்கள்)

5 ஆம் படிமுறை :- முன்வைக்கப்பட்ட சில பிரதான கருத்துக்கள் குறித்து கலந்துரையாடவும். (05 நிமிடங்கள்)

அலகு 8.0 :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம்

தேர்ச்சி மட்டம் :- 8.1 அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றிற்கு பிரேரணை ஒன்றைத் தயாரிப்பதற்கு உரிய தகவல்களை திரட்டித் தீர்மானங்களிற்கு வருவதற்கான தேர்ச்சிகளை காட்சிப் படுத்தல்.

பாட இணை அலகு :- 1. அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்ட பிரவேசம்

1 ஆவது செயற்பாடு :- காலம் 30 நிமிடங்கள்

1 ஆம் படிமுறை :- வகுப்பைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரித்து தினசரி சில பத்திரிகைகளை அவர்களிடையே பகிர்ந்தளிக்கவும். அப் பத்திரிகைகளை வாசித்துப் பாதையில் பயணிக்கையில் ஏற்படும் விபத்துக்கள் உள்ளடங்கிய ஓர் செய்தி என்ற ரீதியில் தெரிவு செய்ய இடமளிக்கவும்.

2 ஆம் படிமுறை :- அச் செய்திகளுக்கு ஏற்பச் செயற்படுத்த வேண்டிய அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்று குறித்து அடிப்படைக் கருத்தொன்றை கட்டியெழுப்பவும்.

3 ஆம் படிமுறை :- அந்தந்த குழுக்களுக்குள்ளேயே கலந்துரையாடிப் பாதையில் பாதுகாப்பாக பயணிப்பது குறித்த தொடர்பாடல் நிகழ்ச்சி ஒன்றை செயற்படுத்துவதற்கு பிரேரணை ஒன்றை முன்வைப்பதன் அவசியம் மற்றும் அதன் மூலம் பெறக்கூடிய பயன்கள் யாவை என்பது குறித்து ஆவணப்படுத்தச் செய்யவும்.

4 ஆம் படிமுறை :- அந்தந்த குழுவினால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு இடமளிக்கவும்.

5 ஆம் படிமுறை :- முன்வைக்கப்பட்ட கருத்துக்களைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தவும்.

| | | |
|---|---|---|
| **அலகு 8.0** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 8.2 அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்து சிறு கருத்திட்ட ஆலோசனையொன்றைத் தயாரிக்கும் தேர்ச்சியானது காட்சிப்படுத்தப்படும். |
| **பாட இணை அலகு** | :- | 2. கருத்திட்ட பிரேரணை தயாரிப்பு |
| **1 ஆவது செயற்பாடு** | :- | காலம் 30 நிமிடங்கள் |

**1 ஆம் படிமுறை** :- பாடசாலை விளக்கத்துடன் தொடர்புடைய சில சிக்கல்களை முன்னதாகவே தயார்ப்படுத்திக் கொண்டு வந்து அவற்றை வகுப்பறையில் முன்வைக்கவும். அந்தந்த மாணவர் குழுக்களுக்குத் தமக்கு விரும்பியவாறு ஒரு சிக்கல் என்ற ரீதியில் தெரிவு செய்ய இடமளிக்கவும். (5 நிமிடங்கள்)

**2 ஆம் படிமுறை** :- தெரிவு செய்த அபிவிருத்திச் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்குப் பாடசாலை மாணவர்களை எவ்வாறு இணைத்துக் கொள்வது என்பது குறித்து முடிவு செய்து நிகழ்ச்சியொன்றைத் திட்டமிடுவது தொடர்பாகக் கலந்துரையாடக் குழுக்களுக்கு ஆலோசனை வழங்கவும். அவ்வாறு கலந்துரையாடப்படும் விடயங்கள் குறித்து சிறு குறிப்பொன்றை வைத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு குழுவிலும் ஒருவரைத் தெரிவு செய்யவும். (10 நிமிடங்கள்)

**3 ஆம் படிமுறை** :- கலந்துரையாடப்பட்ட விடயங்கள் யாவை என்பவற்றை முன்வைப்பதற்கு அந்தந்த குழுக்களின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கவும். (10 நிமிடங்கள்)

**4 ஆம் படிமுறை** :- அந்தந்த குழுவினால் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் ஊடாக பொதுக் கருத்தொன்றை கட்டியெழுப்பவும் அக் கலந்துரையாடல்களில் மேலோங்கும் விடயங்களை இறுதியில் ஆலோசனைப் பத்திரமொன்றாக முறையாக முன்வைத்தல் வேண்டும் என்பதை மாணவ மாணவியருடன் கலந்துரையாடவும். (05 நிமிடங்கள்)

| | | |
|---|---|---|
| **அலகு 8.0** | :- | அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 8.3 அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் தேர்ச்சியைக் காட்சிப்படுத்தல். |
| **பாட இணை அலகு** | :- | 3. அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டத்தைச் செயற்படுத்தல் |
| **1 ஆவது செயற்பாடு** | :- | காலம் 30 நிமிடங்கள் |

**1 ஆம் படிமுறை** :- பாடசாலைக்குள் செயற்படுத்த எதிர்பார்க்கும் அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பெயரிடவும். அந்தந்த நிகழ்ச்சிகள் குறித்த சிறு விளக்கமொன்றை வழங்கவும். அவற்றுள் மாணவர்கள் விரும்பும் ஒரு நிகழ்ச்சியைத் தெரிவு செய்யவும்.

2 ஆம் படிமுறை :- மாணவர்களோடு உரையாடி அந்நிகழ்ச்சிக்கேற்ப செயற்பட நேரிடும் பிரதான பணிகளை ஆவணப்படுத்தவும்.

3 ஆம் படிமுறை :- ஒவ்வொரு மாணவர் குழுவிற்கும் ஒவ்வொரு பணி என்ற ரீதியில் தெரிவு செய்வதற்கு இடமளிக்கவும். அதன் பின்னர் ஒவ்வொரு பணியைச் செயற்படுத்தும் முறை குறித்து அந்தந்த குழு மூலம் கலந்துரையாடப்படல் வேண்டும்.

4 ஆம் படிமுறை :- பணியைச் செயற்படுத்தும் முறை குறித்து வகுப்பில் கருத்துக்கள் முன்வைக்கப்படல் வேண்டும்.

5 ஆம் படிமுறை :- மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விமர்சிப்பதற்கு உட்படுத்தவும்.

அலகு 8.0 :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம்

தேர்ச்சி மட்டம் :- 8.4 அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இறுதி அறிக்கை தயாரிப்பின் தேர்ச்சியைக் காட்சிப்படுத்தல்.

பாட இணை அலகு :- 4. இறுதி அறிக்கை தயாரிப்பு

1 ஆவது செயற்பாடு :- காலம் 30 நிமிடங்கள்

1 ஆம் படிமுறை :- அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்ட குழு ஒன்றினால் தமது அறிக்கையை முன்வைக்கும் சந்தர்ப்பம் குறித்து பாத்திர நடிப்பொன்று முன் வைக்கப்படும் என்பதை வகுப்பிற்கு அறிவிக்கவும். அதற்காக விருப்பமுடைய சிலரை குழுவாக வகுப்பில் முன்னால் வருமாறு ஆலோசனை வழங்கவும்.

2 ஆம் படிமுறை :- முன்னதாகவே தயார்படுத்திக் கொண்டு வந்த, அபிவிருத்தித் தொடர்பாடல் இறுதி அறிக்கையின் பிரதி ஒன்றை வகுப்பில் முன்வைப்பதற்கு அக்குழுவிடம் கையளிக்கவும். அவ் அறிக்கையை செவிமடுத்து அதில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் மற்றும் செய்ய வேண்டியவை என்பவற்றைக் குறித்துக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும்.

3 ஆம் படிமுறை :- முன்வைத்தலில் ஈடுபட்டுள்ள கருத்திட்ட குழுவிடம் கேள்விகளை கேட்பதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கவும். அப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக பதில் அளிப்பதற்குக் கருத்திட்டக் குழுவிற்கு ஆலோசனை வழங்கவும்.

4 ஆம் படிமுறை :- முன்வைக்கப்பட்ட பாத்திர நடிப்பு மூலம் தோன்றும் விடயங்கள் குறித்து கலந்துரையாடவும்.

| | | |
|---|---|---|
| **அலகு 9.0** | :- | சகவாழ்விற்கான தொடர்பாடல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 9.1 சிக்கலொன்றில் அனைத்துப் பாகங்களையும் விமர்சனம் செய்வதில் சிக்கலானது பூர்த்தியடைவதற்கு பெரும் உத்திகளை கையாளும் விதத்தை ஆராய்தல். |
| **பாட இணை அலகு** | :- | 1. மோதல், மோதல்களைத் தீர்மானித்தல் மற்றும் உடன்பாட்டை ஏற்படுத்தல் |
| **1 ஆவது செயற்பாடு** | :- | காலம் 30 நிமிடங்கள் |

**1 ஆம் படிமுறை** :- வகுப்பைச் சில குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் நாளாந்தம் பத்திரிகை ஒன்று என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கவும். ஒவ்வொரு பத்திரிகையையும் வாசித்து அவற்றுள் உள்ளடங்கியுள்ள ஏதாவதொரு வழியில் கருத்து மோதல் தொடர்பான அறிக்கையொன்றைத் தெரிவு செய்ய ஆலோசனை வழங்கவும்.

**2 ஆம் படிமுறை** :- தெரிவு செய்த கருத்து மோதல் குறித்த அறிக்கையைக் கற்பதற்கு ஆலோசனை வழங்கவும். ஆவணப்படுத்தல் அவசியமன்று. அம் மோதலின் வடிவம், அது உருவாகியுள்ள முறை, அதன் கட்சியினர், மோதலுக்கான காரணம், மோதலின் பிரவாகம் மற்றும் பரவல், மோதலை தவிர்ப்பதற்கு கட்சியினருக்குள்ள தேவை, மோதலைத் தீர்ப்பதற்கு இரு சாராருக்குமே வெற்றி கிட்டும் வகையிலான வெற்றி மாதிரியை பயன்படுத்துவதற்கான அவகாசம், அதற்காக மூன்றாவது கட்சியொன்று தலையிடுவதற்குள்ள தேவை முதலானவை குறித்து கலந்துரையாடுவதற்குத் தேவையான ஆலோசனை வழங்கவும்.

**3 ஆம் படிமுறை** :- ஒவ்வொரு குழுவினரும் வகுப்பிற்கு முன்னால் வந்து தாம் தெரிவு செய்த செய்திக்கு உரிய மோதல் குறித்துத் தெளிவுபடுத்தி, அது தொடர்பான பல்வேறு கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அனைவருக்கும் வாய்ப்பு வழங்கவும்.

**4 ஆம் படிமுறை** :- முழுமையான வகையில் மாணவர்களின் முன்வைத்தல்களை மீளாய்வு செய்யவும்.

| | | |
|---|---|---|
| அலகு 9.0 | :- | சகவாழ்விற்கான தொடர்பாடல் |
| தேர்ச்சி மட்டம் | :- | 9.2 அதிவிசேட நபர்களின் பழக்கவழக்கங்களிற்காக மனரீதியாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உள்ளடங்கிய பிரசைகளின் தொடர்பாடல் விதிமுறைகள் மற்றும் பல்வேறு உபாய வழிகளைப் பரீட்சித்துப் பார்த்தல். |
| பாட இணை அலகு | :- | 2. உளவியல் சமாதானம் மற்றும் நபர்கள் நடத்தை |
| 1 ஆவது செயற்பாடு | :- | காலம் 30 நிமிடங்கள் |

1 ஆம் படிமுறை :- பல்வேறு உணர்வுகளைக் காட்டும் புகைப்படங்கள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தவும். அப் புகைப்படங்களைப் பார்த்து அந்நபரின் உளவியல் குறித்துக் குறிப்பிடக்கூடியது யாது என்பதை தெரிவிக்க மாணவ மாணவியருக்கு இடமளிக்கவும். அவர்கள் தெரிவிக்கும் கருத்துத் தொடர்பான சமதன்மையொன்று உள்ளதா என்பதைக் கலந்துரையாடவும். (10 நிமிடங்கள்)

2 ஆம் படிமுறை :- கோபத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற சம்பவம் ஒன்று உள்ளடங்கிய செய்தி அறிக்கை ஒன்றைப் பத்திரிகையொன்றிலிருந்து தெரிந்து வகுப்பில் அனைவரும் கேட்குமாறு வாசிக்கவும். அச்சம்பவம் இடம் பெறல் மற்றும் அதற்குரிய நபர்களின் உளவியல் உயர்வும் நபர்களது நடத்தைக்கும் இடையில் நிலவும் தொடர்பைக் கலந்துரையாடவும். (10 நிமிடங்கள்)

3 ஆம் படிமுறை :- அந்த துன்பகரமான சம்பவம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அவ் உரிய நபர்களுக்குப் பின்பற்றக் கூடியதாக இருந்த மாற்றுச் செயன்முறைகள் யாவை? இது குறித்த மாணவர்களது கருத்துக்களைப் பெறவும். (10 நிமிடங்கள்)

| | | |
|---|---|---|
| அலகு 9.0 | :- | சகவாழ்விற்கான தொடர்பாடல் |
| தேர்ச்சி மட்டம் | :- | 9.3 சமாதானம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய இல்லமொன்றை நடாத்திச் செல்வதற்காக பொறுப்புக்கூற வேண்டிய பிரசையொருவருக்கு உரித்தாக்கப்படும் தொடர்பாடல் தேர்ச்சியை அபிவிருத்தி செய்தல். |
| பாட இணை அலகு | :- | 3. இல்லத்து சமாதானம் மற்றும் சகவாழ்வு |
| 1 ஆவது செயற்பாடு | :- | காலம் 30 நிமிடங்கள் |

1 ஆம் படிமுறை :- இல்லமொன்றில் இரவு உணவு உட்கொள்ளும் சந்தர்ப்பமொன்றை பிரதிபலிக்கும் வகையில் பாத்திர நடிப்பொன்றை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு இடமளிக்கவும். (அச்சந்தர்ப்பத்தை மாணவர்கள் விரும்பிய எந்த முறையிலும் முன்வைக்க முடியும் என்பதோடு, குழுக்கள் சிலவற்றிற்கேனும் அதற்காக இடமளிக்கவும்.) (10 நிமிடங்கள்)

**2 ஆம் படிமுறை** :- முன்வைக்கப்பட்ட பாத்திர நடிப்பிற்கேற்ப இல்லத்தின் உறுப்பினர்களுக்கிடையேயான தொடர்பாடல் சந்தர்ப்பம் குறித்துக் கலந்துரையாடவும். (10 நிமிடங்கள்)

**3 ஆம் படிமுறை** :- அத்தொடர்பாடல் சந்தர்ப்பம் இல்லத்தின் உறுப்பினர்களிடையே எவ்வாறான தொடர்பைக் கட்டியெழுப்புகிறது என்பது குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடவும். மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விடயங்களாகப் பலகையில் குறிக்க இடமளிக்கவும். (10 நிமிடங்கள்)

| | | |
|---|---|---|
| **அலகு 11.0** | :- | ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | 11.1 ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, மூலங்களின் வகைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகளை விமர்சித்தல். |
| **பாட இணை அலகு** | :- | 1. ஆக்கபூர்வமான தொடர்பாடல் பிரவேசம் |
| **1 ஆவது செயற்பாடு** | :- | காலம் 30 நிமிடங்கள் |

**1 ஆம் படிமுறை** :- வகுப்பைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு இலக்கிய நூல் என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கவும். (சிறு குழுக்களை ஈடுபடுத்துவது பயனுடையதாகும்) சில சில கருத்துக்களை வெளிப்படுத்துகையில் மிகவும் ஆக்கபூர்வமாக அதை முன்வைப்பதற்குச் சமூகம் பழக்கப்பட்டுள்ளமை குறித்துக் கலந்துரையாடவும். அவை அன்றாட வாழ்விலும் சமய அல்லது நல்லொழுக்கம் சார்ந்த அல்லது சமூக வாழ்விலும் தேவை என்பதைத் தெரிவிக்கவும். அதன் பின்னர் தமது குழுவிற்குக் கிடைத்த புத்தகத்தைவாசித்து அதில் அடங்கியுள்ள மிகவும் ஆக்கபூர்வமாக கருத்துக்களை வெளியிட்டுள்ள வரிகள் சிலவற்றை தெரிவு செய்வதற்குக் குழுக்களுக்கு ஆலோசனை வழங்கவும். அதற்கான உதவிகளை வழங்கவும். (10 நிமிடங்கள்)

**2 ஆம் படிமுறை** :- தெரிவு செய்த பகுதியை நடித்து முன்வைப்பதற்கு இடமளிக்கவும். (10 நிமிடங்கள்)

**3 ஆம் படிமுறை** :- ஒவ்வொரு முன்வைத்தல்களினதும் உள்ளடக்கம் குறித்துக் கலந்துரையாடவும். (10 நிமிடங்கள்)

**4 ஆம் படிமுறை** :- அந்தந்தக் குழுக்களினால் முன்வைக்கப்பட்ட பகுதியை வேறு முறையில் ஆக்கபூர்வமாக எழுதுவதற்குத் தனித்தனியான பின், ஒப்படையை வழங்கவும்.

| | |
|---|---|
| அலகு 11.0 | :- ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் |
| தேர்ச்சி மட்டம் | :- 11.2 ஆக்கபூர்வமான தொடர்பாடலின் தன்மை, மூலங்களின் வகைகள் மற்றும் ஆராய்ச்சி முறைகளை விமர்சித்தல். |
| பாட இணை அலகு | :- ஆக்கம் (கோட்பாடு மற்றும் பாவனை) |
| 1 ஆவது செயற்பாடு | :- காலம் 30 நிமிடங்கள் |

**1 ஆம் படிமுறை** :- பழைய பத்திரிகையொன்றிலிருந்து வெட்டியெடுத்த (சரியாக சந்தர்ப்பம் காட்டப்படாத) வர்ண அல்லது கறுப்பு வெள்ளை புகைப்படமொன்றை வகுப்பிற்கு கொண்டு செல்லவும். அப்புகைப்படத்தை வகுப்பின் முன்னால் காட்சிப்படுதவும்.

**2 ஆம் படிமுறை** :- புகைப்படம் குறித்த கருத்துக்களை வெளியிடுவதற்கு மாணவர்களுக்கு இடமளிக்கவும்.

**3 ஆம் படிமுறை** :- புகைப்படமொன்று குறித்த தமது கருத்துக்களை ஒரு வாசகத்தில் வெளியிட அல்லது அது குறித்து ஏதேனும் சில வரிகளுடனான ஆக்கமொன்றைத் தனித்தனியாக செய்வதற்கு மாணவர்களுக்கு இடமளிக்கவும்.

**4 ஆம் படிமுறை** :- மாணவர்கள் அனைவரதும் ஆக்கங்களை அல்லது கருத்துக்களை வகுப்பில் முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு இடமளிக்கவும்.

**5 ஆம் படிமுறை** :- முன்வைக்கப்பட்ட வாசகங்கள் அல்லது ஆக்கங்கள் குறித்து பொதுவில் கலந்துரையாடி மதிப்பிடவும். (இதனூடாக தொடர்புடைய பின் ஒப்படை ஒன்றையும் வழங்க முடியும்)

| | |
|---|---|
| அலகு 11.0 | :- ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் |
| தேர்ச்சி மட்டம் | :- 11.3 ஆக்கபூர்வமான தொடர்பாடலுக்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வரலாற்றுக் கதைகள் தொடர்பான தேர்ச்சிகளை மேம்படுத்தும். |
| பாட இணை அலகு | :- ஆக்கபூர்வமான தொடர்பாடல் மற்றும் வரலாற்றுக் கதைகள் கல்வி |
| 1 ஆவது செயற்பாடு | :- காலம் 30 நிமிடங்கள் |

**1 ஆம் படிமுறை** :- வகுப்பைக் குழுக்களாக பிரிக்கவும். மக்களால் பல்வேறு கருத்துக்கள் அல்லது ஆலோசனைகள் அல்லது வழிகாட்டல்கள் சமூக மயப்படுத்துவதற்காக பல்வேறு ஆக்க முறைகள் பயன்படுத்தப் பட்டுள்ளமையை உதாரணங்களுடன் காட்டவும். (25 நிமிடங்கள்)

**2 ஆம் படிமுறை** :- அந்தந்த குழுக்களின் அபிமானத்திற்கேற்ப நாட்டுப்புறக்கதை, நாட்டுப்புறப்பாடல், உவமைக் கதை, விடுகதை முதலான ரீதியில்

ஏதேனும் பாரம்பரிய ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஆக்கமொன்றைத் தெரிவு செய்வதற்கு மற்றும் அது குறித்து கலந்துரையாட இடமளிக்கவும். கலந்துரையாடலைச் சரியான திசையில் ஈடுபடுத்துவதற்கு அவர்களுக்குத் துணை புரியவும். (10 நிமிடங்கள்)

3 ஆம் படிமுறை :- அந்தந்தக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட ஆக்கத்தை முன்வைப்பதோடு, அது குறித்து விளக்கமளிக்கவும். அந்தந்த குழுக்களுக்கு வாய்ப்பளிக்கவும். ஒவ்வொரு குழுக்களினதும் விளக்கங்களை மதிப்பிடவும். (15 நிமிடங்கள்)

| | |
|---|---|
| அலகு 11.0 | :- ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் |
| தேர்ச்சி மட்டம் | :- 11.4 ஆக்கபூர்வமான தொடர்பாடலின் பல்வேறு ஆக்கபூர்வமான வெளியீட்டு முறைகளைப் பரீட்சித்து பார்த்தல் |
| பாட இணை அலகு | :- ஆக்கபூர்வமான வெளியீட்டு முறைகள் |
| 1 ஆவது செயற்பாடு | :- காலம் 30 நிமிடங்கள் |

1 ஆம் படிமுறை :- தெரிவு செய்து, அறிவுபூர்வமாக தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கு மாணவர்களைத் தூண்டுவதற்குப் பொருத்தமான போஸ்டரொன்றை நிர்மாணிப்பதற்காக மாணவர் குழுக்களுக்குக் கையளிக்கவும். (போஸ்ட்டர் நிர்மாணிப்பிற்கு தேவையான கடதாசி மற்றும் நிறங்கள் முதலியவற்றை வழங்கவும்.) (5 நிமிடங்கள்)

2 ஆம் படிமுறை :- போஸ்ட்டரில் உள்ளடங்கும் வாசகங்கள் மற்றும் உருவங்கள் குறித்த பொதுவான வழிகாட்டலை வழங்கவும். போஸ்ட்டரில் எழுத்துமூல பிரதியொன்றை விமர்ச்சிக்கவும். (5 நிமிடங்கள்)

3 ஆம் படிமுறை :- போஸ்ட்டரை நிர்மாணிக்கச் செய்யவும் (15 நிமிடங்கள்)

4 ஆம் படிமுறை :- நிர்மாணிக்கப்பட்ட போஸ்ட்டரை வகுப்பின் முன்னால் காட்சிப்படுத்தி மதிப்பிடுக. (5 நிமிடங்கள்)

| | |
|---|---|
| அலகு 12.0 | :- ஊடக விமர்சனம் |
| தேர்ச்சி மட்டம் | :- 12.1 ஊடக விமர்சனத்தின் தன்மை, அதன் அடிப்படை உறுப்புக்கள், சமூக தேவைகளை ஊடக விமர்சகர் ஆராய்வார். |
| பாட இணை அலகு | :- ஊடக விமர்சனத்தை இனங்காணல் |
| 1 ஆவது செயற்பாடு | :- காலம் 30 நிமிடங்கள் |

1 ஆம் படிமுறை :- பல்வேறு முறைகளில் விமர்சனத்திற்கு உட்படுத்தக்கூடிய பாடலொன்றை வகுப்பின் முன்னால் இசைத்துக் கேட்கச் செய்யவும். தேவையெனின் அதைச் சில முறை இசைக்கவும். (10 நிமிடங்கள்)

**2 ஆம் படிமுறை** :- மாணவர்களைக் குழுக்களாக அப்பாடலை விமர்ச்சிக்கச் செய்யவும். (10 நிமிடங்கள்)

**3 ஆம் படிமுறை** :- ஒவ்வொரு குழுவினதும் விமர்சனத்தை வகுப்பில் முன்வைக்கவும். (15 நிமிடங்கள்)

**4 ஆம் படிமுறை** :- ஒவ்வொரு குழுவினாலும் ஒரே பாடலை நோக்கியுள்ள விதத்தில் வேறுபாடுகள் இருப்பின், அது குறித்துக் கலந்துரையாடவும். அவ்வேறுபாடுகள் ஏற்படுவதற்கான காரணிகள் யாவை என்பதை ஆராயவும். விமர்சனமானது விமர்சகரது தனிப்பட்ட கண்ணோட்டத்தில் செய்யப்படுவது என்பதைத் தெளிவுபடுத்தவும். (5 நிமிடங்கள்)

**அலகு 12.0** :- ஊடக விமர்சனம்

**தேர்ச்சி மட்டம்** :- 12.2 ஊடக விமர்சனத்தின் போது வெகுசன ஊடக உள்ளடக்கம் தொடர்பான காரணிகளை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்தல்.

**பாட இணை அலகு** :- ஊடக விமர்சனப் பிரவேசம்

**1 ஆவது செயற்பாடு** :- காலம் 30 நிமிடங்கள்

**1 ஆம் படிமுறை** :- நாடகப் பாடல் ஒன்றையும் அதற்குரிய நடிப்பையும் வகுப்பில் பாடிச் செவிமடுக்கச் செய்யவும். (5 நிமிடங்கள்)

**2 ஆம் படிமுறை** :- அப்பாடலின் முந்தைய ஆக்கம் மற்றும் பின் ஆக்கம் குறித்து தமக்கு தோன்றும் விதத்தில் சிறு விமர்சனம் ஒன்றை எழுதுவதற்கு மாணவர்களுக்கு இடமளிக்கவும். அவ் விமர்சனங்கள் சிலவற்றை வகுப்பில் முன்வைக்கவும். அவற்றின் யதார்த்தத்தை மதிப்பிடவும். (5 நிமிடங்கள்)

**3 ஆம் படிமுறை** :- இப்பாடலை விமர்சிக்கையில் விமர்சகரிடம் இருக்க வேண்டிய வரலாற்று, அழகியல் சார்ந்த, மொழி சார்ந்த, அரசியல் மற்றும் நல்லொழுக்கம் சார்ந்த பிரவேசத்தின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக. அப்பிரவேசங்களின் புரிந்துணர்வு மற்றும் அறிவு இன்றி இப்பாடலை விமர்சிக்க முடியாது என்பதைத் தெளிவு படுத்தவும். எந்த ஒரு ஆக்கம் தொடர்பாகவும் அவ்வாறான பிரவேசத்திற்குள்ள தேவையை சான்றுப்படுத்தவும். (10 நிமிடங்கள்)

## பாடசாலை அடிப்படை மதிப்பீட்டு நிகழ்ச்சி
### (குழுவொன்றின் எண்ணிக்கையை 3 முதல் 5 வரை மட்டுப்படுத்தவும்)

**7வது தேர்ச்சி** :- (பாடத்துறை: அபிவிருத்தித் தொடர்பாடல்)

**குழு ஒப்படை** :- நாளாந்தம் ஒரு பத்திரிகையைக் கொண்டு அபிவிருத்தி குறித்து அதில் உள்ளடங்கியுள்ள பல்வேறு செய்திகள் மற்றும் ஆவணங்களில் அடங்கியுள்ளவை குறித்து விமர்சன ரீதியான அறிக்கையொன்றைத் தயாரிக்கவும். செய்திகள் மற்றும் ஆவணங்களை வெட்டியெடுத்து அறிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும்.

**தனி ஒப்படை** :- பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சிகள் குறித்து மக்களது கருத்துக்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றைத் தயாரிக்கவும்.

**8வது தேர்ச்சி** :- (பாடத்துறை: அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டம்)

**குழு ஒப்படை** :- பாடசாலையை அண்டிய ஏதேனும் அபிவிருத்திச் சிக்கலொன்றை இனங்கண்டு, அதைத் தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய செயன்முறைகள் உள்ளடங்கிய பிரேரணைப்பத்திரம் ஒன்றைத் தயாரிக்கவும். (அப்பிரேரணையைச் செயற்படுத்தி அறிக்கையொன்றை முன்வைத்தல் மிகப் பொருத்தமானதாகும்.)

**தனி ஒப்படை** :- தனது ஊரில் அண்மையில் பூர்த்தியான ஏதேனும் ஓர் அபிவிருத்திக் கருத்திட்டம் (வீதியொன்றை அமைத்தல், கிணறொன்றை வெட்டுதல், கால்வாய் புனரமைப்பு முதலான) காரணமாக பிரசேத்தின் மக்களுக்கு எத்தகைய பயன் ஏற்பட்டது? என்பது குறித்து அறிக்கையொன்றைப் பிரதேச மக்களுடன் உரையாடிப் பெற்றுக் கொள்ளும் தகவல்கள் மற்றும் கண்காணிப்பின் மூலம் தயாரிக்கவும்.

**9வது தேர்ச்சி** :- (பாடத்துறை: சகவாழ்விற்காக தொடர்பாடல்)

**குழு ஒப்படை** :- பத்திரிகையில் அறிக்கையிடப்பட்டுள்ள சிறு பிரச்சினை குறித்த மோதல் ஒன்றின் அறிக்கையைத் தேடி அம்மோதல் குறித்து தொடர்பாடல் கண்ணோட்டத்தில் அறிக்கையொன்றைத் தயாரிக்கவும்.

**தனி ஒப்படை** :- பாடசாலையில் சமாதானம் மற்றும் சகவாழ்வை விருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தக் கூடிய தொடர்பாடல் உபாயங்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை, பாடசாலை மாணவ மாணவியருடனும், ஆசிரியர்களுடனும், பெற்றோருடனும் கலந்துரையாடிப் பெற்றுக்கொள்ளும் தகவல்களுக்கேற்பத் தயாரிக்கவும்.

**10வது தேர்ச்சி** :- (பாடத்துறை: ஊடக அறிவு)

**குழு ஒப்படை** :- ஒரு தொலைக்காட்சி நாடகத்தைத் தெரிவு செய்து, அதை தனித் தனியாக பார்த்து, அதில் தாம் உள்வாங்கிய விடயங்கள், தமது நடத்தைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், தமது மனப்பாங்குகளில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்துக் குறிப்புக்களை வைத்துக் கொண்டு, அவற்றைக் கலந்துரையாடிக் கூட்டு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும்.

**தனி ஒப்படை** :- ஒரே நாளில் சில பத்திரிகைகளை எடுத்து அவற்றில் முதல் பக்கத்தில் அடங்கியுள்ள செய்திகள் குறித்து ஒப்பீட்டு ரீதியான அறிக்கையொன்றைத் தயாரிக்கவும்.

**11வது தேர்ச்சி** :- (பாடத்துறை: ஆக்கபூர்வமான தொடர்பாடல்)

**குழு ஒப்படை** :- குழுவாகச் சென்று தமது ஊரிலுள்ள வயோதிப உறவினர்கள் சிலரைச் சந்தித்து ஒருவரிடமிருந்து ஒன்று என்ற ரீதியில் நாட்டுப் புறக்கதை ஒன்றை எழுதிக் கொள்ளவும். கதையை கூறும் முறையிலேயே எழுதிக் கொள்வது பொருத்தமானதாகும். முடியுமானால் அதற்காக ஒலிப்பதிவு கருவி ஒன்றைப் பயன்படுத்தவும். அந்த வகையில் சில நாட்டுப்புறக் கதைகள் உள்ளடங்கிய புத்தகமொன்றத் தயாரிக்கவும். அந்தந்த நாட்டுப்புறக் கதைக்கேற்ற சித்திரங்களையும் உள்ளடக்கவும். (முடியுமானால் இதை புத்தகமாக அச்சிடவும்)

**தனி ஒப்படை** :- ஊரில் வயோதிபர்களிடம் கேட்டு அறிந்து கொண்டு நூறு விடுகதைகள் உள்ளடங்கிய புத்தகமொன்றைத் தயாரிக்கவும்.